மந்தணம்

## பள்ளிக்கல்வித்துறை

# டாக்டர் ச. முத்துக்குமரன் குழு அறிக்கை

அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கிடும் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து பரிசீலனை செய்ய அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை

# பள்ளிக்கல்வித்துறை

# டாக்டர் ச. முத்துக்குமரன் குழு அறிக்கை

அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கிடும் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து பரிசீலனை செய்ய அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை

# பொருளடக்கம்

## தொகுதி – 1 அறிக்கை

### பகுதி – 1 பொது


பக்க எண்

**1. முன்னுரை** 1

1.1. சமச்சீர்க் கல்விக்குழு அமைப்பு

1.2. ஆய்வு வரம்பு

1.3. நடைமுறை

1.4. நன்றி, பாராட்டுகள்

**2. தமிழக பள்ளிக் கல்வி இன்றைய நிலை** 7

2.1. அறிமுகம்

2.2. கல்வியின் நிலைகளும், கல்வி கூடங்களும்.

2.3.பள்ளிக் கல்வித்துறை


### பகுதி – 2

### சமச்சீர்க் கல்விக் கூறுகள்


**3. சமச்சீர்க் கல்வி** 17

3.1. அறிமுகம்

3.2. முன் வரலாறு

3.3. பள்ளிக் கல்வியின் தரம்

3.4. சமுதாயத் தொடர்பு

3.5. கற்றலின் நோக்கம்

**4. கற்றலும், அறிவு வளர்ச்சியும்** 33

4.1. அறிமுகம்

4.2. கற்றல் சூழல்

4.3. பள்ளிக் கல்வியும் மாணவர் வளர்ச்சியும்

4.4. கலைத்திட்டம் உருவாக்கி செயற்படுத்தல்

4.5. அறிவும், அறிவைப் பெறுதலும்

4.6. பொது அறிவும், உள்ளூர் விவரங்களும்

4.7. கலைத்திட்டமும், சமுதாயமும்

4.8. கலைத்திட்டத் தரத்தை மேம்படுத்தல்

**5. பாடத்திட்டமும், பள்ளி நிலைகளும்** **43**

5.1. அறிமுகம்

5.2. பள்ளிக் கல்வி வாரியம்

5.3. மொழிப்பாடம்

5.4. கணிதம்

5.5. கணினி அறிவியல்

5.6. அறிவியல்

5.7. சமூக அறிவியல்

5.8. கலையும், கைத் தொழிலும்

5.9. உடற்பயிற்சிக் கல்வியும், உடல் நலமும்

5.10. பணி அனுபவக் கல்வி

5.11. அமைதிக்கான கல்வியும், விழுமங்களைக் கற்பித்தலும்

5.12. சுற்றுச்சூழல் கல்வி

5.13. பாடத்திட்டம்

5.14. பள்ளிக் கல்வியின் நிலைகள்

5.15. மழலையர் பள்ளி நிலை

5.16. தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி நிலைகள்

5.17. இடைநிலைப்பள்ளி நிலை

5.18. பயிற்று மொழி

5.19. மாணவர்களின் தேர்ச்சி அளவை மதிப்பிடுதலும், குறிப்பேடும்.

**6. பள்ளி, வகுப்பறைச் சூழல்** **71**

6.1. நிறைவான கற்றல் சூழலை பேணுதல்

6.2. வகுப்பறை, வகுப்பு

6.3. பள்ளி வளாகம்

6.4. பள்ளியில் ஒழுக்கம்

6.5. பெற்றோரின் பங்கும், சமுதாயத்தின் பங்கும்

6.6. பாடநூல்கள்

6.7. நூலகம்

6.8. கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு

6.9. ஆய்வகங்களும், கருவிகளும்

6.10 பள்ளிக் கல்வி நேரம், நாள்கள், காலை வழிப்பாட்டுக் கூட்டம்

6.11. பாடச்சுமை

6.12. ஆசிரியர் கடமைகள், தன்னாட்சி உரிமை

## பகுதி – 3

## தேவைப்படும் சீர்திருத்தங்கள்

**7. தேர்வுகளும், மதிப்பீடும்** **105**

7.1. அறிமுகம்

7.2. தேசிய கலைத்திட்ட வரைவு–2005ல் பரிந்துரைகள்

7.3. சமச்சீர் கல்வி குழுவிடம் தெரிவிக்கப்பட்ட கருத்துகள்

7.4. பரிந்துரைகள்

7.5. தொடக்கக் கல்வி

7.6. உயர் தொடக்கக் கல்வி

7.7. பொதுத் தேர்வு

7.8. கருத்தாய்வு

**8. ஆசிரியர் கல்வியும், பணியிடைப் பயிற்சியும்** **113**

8.1. அறிமுகம்

8.2. இன்றைய நிலை

8.3. ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகள்

8.4. பணியிடைப் பயிற்சி

8.5. பரிந்துரைகள்

**9. பள்ளி ஆய்வு** **117**

9.1. ஆய்வின் அவசியம்

9.2. ஆய்வுப் பணி

9.3. ஆய்வுக்குட்படுத்தப்படுபவை

9.4. இன்றைய நிலை

9.5. பரிந்துரைகள்

**10. கல்விச் சட்டம்** **121**

10.1. முன்னுரை

10.2. சட்டத்தின் தேவை

10.3. இன்றைய நிலை

10.4. பரிந்துரை

**11. கல்வித்துறை நிர்வாகச் சீர்திருத்தம்** **125**

11.1. பின்னணி

11.2. மாவட்ட கழகங்கள் கலைப்பு

11.3. கருத்தாய்வு

11.4. பரிந்துரைகள்

## பகுதி – 4

## அறிக்கையின் சுருக்கமும், பரிந்துரைகளும்

**12. அறிக்கையின் சுருக்கமும், பரிந்துரைகளும்** **131**

## பகுதி – 5

## இணைப்புகள்

1.1. அரசாணை : சமச்சீர்கல்விக்குழு அமைப்பு

3.1. அனைவருக்கும் கல்வித் திட்டம் 2006–2007 திட்ட விவரங்கள்

3.2. பொதுப்பள்ளி முறை – இராமமூர்த்தி குழு அறிக்கை.

5.1. தமிழ்நாடு அரசு சட்டம்–13/2006, தமிழ்மொழி கற்பது கட்டாயம்.

5.2. விளையாடுமிடமும், விளையாட்டுகளும்

5.3. உடற்பயிற்சி பாடத்திட்டம் : செய்ய வேண்டுவன.

6.1. அரசாணை : மாணவரை அடிக்கக்கூடாது.

6.2. பள்ளியில் ஒழுக்கம் . குறிப்பானச் செயல்பாடுகள்

6.3. ஆய்வகங்கள்

11.1. அரசாணை : சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தில் கிராமக்கல்விக்குழு

11.2. அரசாணை : பஞ்சாயத்து சட்டத்தின்கீழ் கிராமக் கல்விக்குழு

## தொகுதி – 2

## உட்குழு அறிக்கைகள்

பகுதி – 1 தொடக்கநிலைக் கல்வி உட்குழு அறிக்கை

பகுதி – 2 உயர் தொடக்கநிலைக்கல்வி உட்குழு அறிக்கை

பகுதி – 3 இடைநிலை வகுப்புகட்கான உட்குழுக்களின் அறிக்கைத் தொகுப்பு

பகுதி – 4 குழு உறுப்பினர், திரு. டி. கிறிஸ்துதாஸ் அவர்களின் அறிக்கை

# பகுதி – 1
# பொது

# 1. முன்னுரை

**1.1. சமச்சீர்க் கல்விக்குழு அமைப்பு**

**1.1.1.** தமிழ்நாட்டில் தற்போது ஐந்து வகையான கல்விமுறை தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறையில் உள்ளன. அவை மாநில வாரியக் கல்வி முறை, மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ இந்தியன், ஓரியண்டல் பாடத்திட்டம், நர்சரி பள்ளிக் கல்வி முறை ஆகும்.

**1.1.2.** இவ்வாறு ஒரே மாநிலத்தில், பல வகையான கல்விமுறை செயல் படுத்தப்படுவதால், மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. மேலும் ஒரே மாதிரியான கல்விமுறையில் அனைவரும் கற்க இயலாத நிலை உள்ளதால், உயர்கல்விக்கான தேர்வுகளை எழுதும் போது, மாணவர்கள் அனைவரும் இத் தேர்வினைச் சரியான முறையில் சந்திக்க இயலாத நிலை ஏற்படுகின்றது.

**1.1.3.** நர்சரி, மெட்ரிக், ஆங்கிலோ இந்திய மற்றும் அரசு நிதி உதவி பெறாத தனியார் பள்ளிகளில் கட்டணம் வசூலிக்கப்படுவதால், ஏழை/நடுத்தர மக்களால் அவர்களது குழந்தைகளை இப்பள்ளிகளில் சேர்க்க இயலாத நிலை உள்ளது.

**1.1.4.** பல்வேறு வகைக் கல்வி முறைகள் உள்ள பள்ளிகளில் காணப்படும் குறைகள் களையப் பெற்று, நிறைகளை அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒரே சீராக வழங்குவதற்கு சமச்சீர்க் கல்வி அவசியமாகும். எல்லாப் பள்ளிகளும் மேலோங்கிச் சிறப்புறச் செயல்படத் துணை செய்யும் ஒரு கருவியே சமச்சீர்க் கல்வி முறை ஆகும். தற்போது செயல்பாட்டில் உள்ள கல்வி முறைகளை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும், ஒரே தரமான கல்வி வழங்கும் சமச்சீர்க் கல்வி முறையை நடைமுறைப்படுத்த குழு ஒன்றை அமைத்து, அக்குழுவின் அறிக்கையை பரிசீலித்து முடிவெடுக்க தமிழக அரசு, அரசாணை நிலை

எண்.159, பள்ளிக் கல்வி (சி—2) துறை, நாள்.08.09.2006 அன்று, கீழ்க்காணுமாறு தலைவர் மற்றும் உறுப்பினர்களாக அமைத்து ஆணையிட்டுள்ளது. (இணைப்பு 1.1)

| | | |
|---|---|---|
| 1. | **டாக்டர் ச. முத்துக்குமரன்,**<br>முன்னாள் துணைவேந்தர்,<br>பாரதிதாசன் பல்கலைக்கழகம். | தலைவர் |
| 2. | **திரு.டி.கிருஸ்துதாஸ்,**<br>தலைவர், தமிழ்நாடு நர்ஸரி, பிரைமரி,<br>மெட்ரிக்குலேஷன் மற்றும் உயர்நிலைப்பள்ளிகள்<br>மேனேஜ்மெண்ட் அசோசியேஷன், | உறுப்பினர் |
| 3. | **சகோ. ஜார்ஜ்,**<br>மாண்ட் போர்ட் பள்ளி, ஏற்காடு,<br>சேலம் மாவட்டம். | உறுப்பினர் |
| 4. | **திரு எம்.எஸ்.காஜா முகைதீன்,**<br>தலைமை ஆசிரியர்,<br>நிஜாம் ஓரியண்டல் மேல்நிலைப்பள்ளி,<br>புதுக்கோட்டை. | உறுப்பினர் |
| 5. | **டாக்டர் எஸ்.எஸ்.இராஜகோபாலன்,**<br>தலைமை ஆசிரியர் (ஓய்வு),<br>சர்வ ஜன மேல்நிலைப்பள்ளி,<br>கோயம்புத்தூர். | உறுப்பினர் |
| 6. | **திருமதி ஜெ. உமா மகேஸ்வரி,**<br>தொடக்கக் கல்வி இயக்குநர், | அலுவல் வழி<br>உறுப்பினர். |
| 7. | **திரு தெ. ஜெகந்நாதன்.**<br>மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர். | அலுவல் வழி<br>உறுப்பினர். |
| 8. | **திருமதி வசந்தி ஜீவானந்தம்,**<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர். | அலுவல் வழி<br>உறுப்பினர். |
| 9. | **திரு இரா. கண்ணன்,**<br>பள்ளிக் கல்வி இயக்குநர். | அலுவல் வழி<br>உறுப்பினர்—செயலர்,<br>மற்றும் நடத்துபவர், |

## 1.2. ஆய்வு வரம்பு

மேற்படி குழுவின் ஆய்வு வரம்பு பின்வருமாறு. "மாநிலத்தில் தற்போது செயல்பாட்டிலுள்ள பல்வேறு கல்வி முறைகளான: (i) நர்சரி கல்வி முறை (ii) மெட்ரிகுலேஷன் கல்வி முறை (iii) ஆங்கிலோ இந்தியன் கல்வி முறை (iv) ஓரியண்டல் கல்வி முறை (v) மாநில வாரியக் கல்வி முறை ஆகியவற்றை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கும் சமச்சீர்க் கல்வி முறையை நடைமுறைப்படுத்த அறிக்கை சமர்ப்பித்தல்".

## 1.3. நடைமுறை

**1.3.1.** மேற்கண்ட அரசாணையின்படி சமச்சீர்க் கல்வியின் உயர்மட்டக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் 27.09.2006, 16.11.2006, 30.11.2006, 05.01.2007, 09.02.2007, 27.02.2007, 10.03.2007, 18.4.2007 ஆகிய தேதிகளில் சென்னை மாநில பெற்றோர் ஆசிரியர் கழக மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றன. இறுதியாக 21.4.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அறிக்கை விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**1.3.2.** சமச்சீர்க் கல்விமுறையை அமல்படுத்துவது சார்ந்து பல்வேறு மாவட்டங்களில் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தலாம் என்று குழு முடிவு செய்து, கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

- சென்னை – 28.10.2006
- மதுரை – 04.11.2006
- திருச்சி – 11.11.2006
- கோயம்புத்தூர் – 18.11.2006
- சேலம் – 25.11.2006
- திருநெல்வேலி – 02.02.2007

**1.3.3.** மேலும், பல்வேறு கல்வி முறைகளில் உள்ள பாடத்திட்டங்களை ஒப்பிடுவதும் பாடத்திட்டங்கள், வினாத்தாள்கள் மாதிரிகளை ஒப்பிட்டு அறிக்கையை அளிக்கவும் ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் தனித்தனியாக ஆசிரியர் குழுக்கள் நியமிக்கப்பட்டு பாடத்திட்டங்கள், வினாத்தாள்கள் மாதிரி ஒப்பிட்டு அறிக்கைகள் பெறப்பட்டன. இவ்வறிக்கைகள் உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்காணுமாறு உட்குழுக்கள் அமைக்கப்பட்டு அவ்வுட்குழுக்கள் துணைக் குழுக்கள் அமைத்து விரிவாக 9, 10-ம் வகுப்புக்கான பாடத்திட்டங்களை ஒப்பிட்டுக் கருத்துகளைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

- தமிழ் – முனைவர். இ. கோமதி நாயகம்.
- ஆங்கிலம் – முனைவர். சுவாமிநாதன்
- கணிதம் – முனைவர். எஸ்.எஸ்.ராஜகோபாலன்
- அறிவியல் – சகோ. கே.ஜே.ஜார்ஜ்
  திரு.எம்.எஸ்.காஜா மொகைதீன்
- சமூக அறிவியல் – முனைவர். சி.பாலகிருஷ்ணன்.

**1.3.4.** மேலும், 1 முதல் 5 வகுப்புகளுக்கும் 6 முதல் 8 வகுப்புகளுக்கும் மாநிலத்திலுள்ள ஆசிரியர் பயிற்சி மையங்களில் உள்ள தகுதி வாய்ந்த ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் கல்வியாளர்கள் மூலம் உட்குழுக்கள் அமைத்து அவர்களிடமிருந்து அறிக்கை பெறலாம் என முடிவெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் அவர்களின் உதவியுடன் கீழ்க்காணும் குழுவினரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டது.

**தொடக்க நிலை (Primary) வகுப்புகளுக்கான உட்குழு.**

டாக்டர். கே.என். இளங்கோவன், முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், பெருந்துறை..

**உயர் தொடக்க நிலை (Upper Primary) வகுப்புகளுக்கான உட்குழு.**

டாக்டர் ஆர்.வெங்கடாசலம். – முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், உத்தமசோழபுரம்.

**1.3.5.** சமச்சீர்க் கல்வி தொடர்பாக பல்வகைப் பள்ளிகளை நேரில் சென்று பார்வையிடலாம் என்று முடிவு செய்ததைத் தொடர்ந்து ஜனவரி 22, 23 தேதிகளில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள பல்வகைப் பள்ளிகளைக் குழுவினர் பார்வையிட்டனர்.

**1.4. நன்றி, பாராட்டுகள்.**

இக்குழுவுக்கு தேவையான விவரங்களை அளிப்பதிலும், கூட்டங்கள் நடத்துவதிலும் பள்ளிகளைப் பார்வையிடுவதிலும் இணை இயக்குநர்கள் திருமதி.த.உமா அவர்களும், திரு.க.அறிவொளி, அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் ஆர்வத்தையும் இக்குழு மனதாரப் பாராட்டுகிறது. மேலும், சென்னையிலும், வெளியூர்களிலும் நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டங்களை சிறப்பாக ஏற்பாடு செய்து சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் முதன்மைக் கல்வி அலுவலர்களையும், இக்கூட்டங்களில் பங்கேற்று கருத்து தெரிவித்தவர்களையும், கடிதம் மூலமாக பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தவர்களையும் இக்குழு பாராட்டுகிறது.

# 2. தமிழகப் பள்ளி கல்வி: இன்றைய நிலை

## 2.1. அறிமுகம்

தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களிலும் இன்று பள்ளிக் கூடங்கள் திறக்கப்பட்டுவிட்டன. ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் தொடக்கப் பள்ளியும், மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்குள் நடுநிலைப் பள்ளியும், ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உயர்நிலைப் பள்ளியும், 8 கிலோ மீட்டர் தொலைவில் மேல்நிலைப் பள்ளியும் இருக்கின்றன.

### 2.1.1. எல்லோரும் கல்வி பெற திட்டங்கள்:

இலவசக் கல்வி, மதிய உணவு, பள்ளிக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றிச் செல்ல அனுமதி, இலவசப் பாடப்புத்தகங்கள், சீருடைகள், இலவசப் பாடக்குறிப்பேடுகள், 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ–மாணவியர் அனைவருக்கும் மிதிவண்டி போன்றவற்றை அளித்து மாணவர்கள் கல்வி பயில ஊக்குவிக்கப்படுகிறது.. அரசின் மேற்கண்ட உதவிகளால் ஒவ்வொரு நிலையிலும் பள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவியர்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அரசின் திட்டங்கள் மூலம் பெற்றோர்களும் தம்முடைய குழந்தைகளும் கல்வியைக் கற்க பள்ளிக்கு அனுப்பி வருகின்றனர்.

<u>அட்டவணை 2.1.</u>

**தமிழ்நாடு பள்ளி மாணவர் எண்ணிக்கை வளர்ச்சி**

| ஆண்டு | தொடக்கப் பள்ளி | நடுநிலைப் பள்ளி | உயர்நிலைப் பள்ளி | மேல்நிலைப் பள்ளி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1999–2000 | 41,36,893 | 23,33,578 | 18,55,665 | 33,21,629 | 1,16,47,765 |
| 2000–2001 | 40,46,897 | 22,97,265 | 18,86,487 | 33,78,667 | 1,16,09,316 |
| 2001–2002 | 40,23,358 | 22,38,273 | 15,87,436 | 34,48,994 | 1,12,98,061 |
| 2002–2003 | 40,82,857 | 22,17,220 | 18,96,036 | 43,67,455 | 1,25,63,568 |
| 2003–2004 | 42,91,982 | 22,37,228 | 19,04,498 | 45,33,614 | 1,29,67,322 |
| 2004–2005 | 39,81,733 | 23,22,697 | 19,93,383 | 47,55,815 | 1,30,53,628 |
| 2005–2006 | 38,82,092 | 23,48,141 | 19,15,409 | 48,74,565 | 1,30,20,207 |

(பள்ளிக் கல்வி பள்ளி விவரம் 2005–06ன்படி)

**2.1.2. பெண்கல்வி:**

பெண்கள் கல்வி பயிலக்கூடாது என்ற பத்தாம் பசலிக் கொள்கைள் இன்று முற்றிலும் தகர்க்கப்பட்டுவிட்டன. ஆண்களுக்கு நிகராக பெண்களும் கல்வி பயிலத் தொடங்கிவிட்டது மட்டுமல்லாமல் பெண்கள் ஆண்களைவிட உயர்கல்வி அதிகம் படிக்கத் தொடங்கிவிட்டனர்.

**அட்டவணை 2.2**

| பள்ளிகளின் வகை | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி | 19,90,557 | 18,91,535 | 38,82,092 |
| நடுநிலைப்பள்ளி | 1190875 | 11,57,266 | 23,48,141 |
| உயர்நிலைப்பள்ளி | 9,74,934 | 9,40,475 | 19,15,409 |
| மேல்நிலைப்பள்ளி | 25,55,235 | 23,19,330 | 48,74,565 |
| **மொத்தம்** | **67,11,601** | **63,08,606** | **1,30,20,207** |

(பள்ளிக் கல்வி புள்ளி விவரம் 2005–06ன்படி)

**2.1.3. பள்ளிசாராக்கல்வி:**

இளமைக் காலத்தில் படிக்க இயலாது விட்டவர்களுக்கும் ஓரளவிற்கு உலகியல் நடைமுறைக்கல்வி அளிக்க வேண்டுமென அரசு பள்ளிசாராக்கல்வி என்னும் பெயரில் முதியோர் கல்வித் திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் கல்லாதவர்களே இல்லா நிலையை உருவாக்க அரசு பல திட்டங்களைத் தீட்டுவதுடன் அதற்கென தனித்துறையே உருவாக்கிச் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் யார் வேண்டுமானாலும் இதில் சேர முடியும். கடுமையான விதிமுறைகளும் கிடையாது. பாட அமைப்பு முறையும் எளிமையானது. எழுத்தறிவின்மையைப் போக்குவதே இதன் முக்கிய குறிக்கோள்.

**2.1.4. அனைவருக்கும் கல்வி இயக்கம்:**

'சர்வ சிக்ஷ அபியான்' என்ற அனைவருக்கும் கல்வித் திட்டமும் இன்றைய கல்வியின் ஒரு கூறுபாடாகும். இது ஒரு மைய அரசின் திட்டமாகும். இந்தியத் திருநாட்டில் கல்வி பெறாதவர்களே இருக்கக்கூடாது என்னும் நோக்கத்தில் மைய அரசு, மாநில அரசு மூலம் இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. வகுப்பறைகள் கட்டுதல், இருக்கை வசதிகள், பள்ளிக்குத் துணைக் கருவிகள் வாங்குதல், ஆசிரியர்களுக்குப் பலவிதப் பயிற்சிகள் மூலமும் கல்வியின் தரமுயரவும், எல்லோரும் சிறந்த கல்வி பெறவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.

**2.2. கல்வியின் நிலைகளும், கல்விக்கூடங்களும்:**

**2.2.1.** கல்வி, கற்கும் கால அளவைக் கொண்டு பின்வருமாறு பல நிலைகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது.

- பள்ளி முன்பருவக் கல்வி
- 1 முதல் 5ஆம் வகுப்பு வரையில் தொடக்கக்கல்வி
- 6 முதல் 8ஆம் வகுப்பு வரையில் உயர் தொடக்கக் கல்வி
- 9 மற்றும் 10ஆம் வகுப்பு வரையில் இடைநிலைக் கல்வி

2005-2006ம் ஆண்டில் தமிழ்நாட்டில் பள்ளிகளில் கற்கும் மாணவர் விவரங்கள் நிலை வாரியாக அட்டவணை 2.3. தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.3.**

**கல்வி நிலைகளில் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை**

| வ.எண் | நிலை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தொடக்க நிலை | 32,94,507 | 30,83,812 | 63,78,319 |
| 2 | உயர் தொடக்க நிலை | 18,93,095 | 17,40,521 | 36,33,616 |
| 3 | இடைநிலை | 9,99,820 | 9,25,141 | 19,24,961 |
| 4 | மேல்நிலை | 5,24,179 | 5,59,132 | 10,83,311 |
| | மொத்தம் | 67,11,601 | 63,08,606 | 1,30,20,207 |

(பள்ளிக் கல்வி புள்ளி விவரம் 2005-06ன்படி)

10ஆம் வகுப்பு இறுதியில் பொதுத்தேர்வை அரசே நடத்தி வருகிறது. இத்தேர்வில் ஆண்டுதோறும் தமிழகத்தில் 8 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். இதில் தேர்ச்சி பெறுபவர்கள் தொடர்ந்து கல்வி கற்கத் தகுதி பெற்றவர்களாவர்.

**2.2.2. தொடக்கக்கல்வி / உயர் தொடக்கக்கல்வி:**

தொடக்கக்கல்வியும், உயர் தொடக்கக்கல்வியும் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் நமது மாநில அரசு உறுதியாக இருப்பதால் 6 முதல் 14 வயதுடையவர்கள் யாவரும் கல்வி கற்கத் தேவையான வசதிகளை உருவாக்கி உள்ளது.

**அட்டவணை 2.4.**
**தொடக்க/ உயர் தொடக்கப்பள்ளிகள்**

| பள்ளிவகை | மொத்தப் பள்ளிகள் | மாணவ / மாணவிகள் எண்ணிக்கை | ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 34,208 | 38,82,092 | 1,15,568 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் | 8,017 | 23,48,141 | 62,156 |

(பள்ளிக் கல்வி புள்ளி விவரம் 2005–06ன்படி)

### 2.2.3. இடைநிலைக்கல்வி:

பத்தாம் வகுப்புக் கல்வி, பொதுக்கல்வி என்று அழைக்கப்படுகிறது. குறைந்தபட்ச கல்வியாக இக்கல்வி முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. 15 அல்லது 16 வயதுடைய ஆண், பெண்களுக்கு அடிப்படை அறிவாக, தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் என பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றில் தேர்ச்சி பெறக் குறைந்தது 35 மதிப்பெண்கள் பெற வேண்டும்.

**அட்டவணை 2.5.**
**உயர்நிலைப் பள்ளிகள்**

| வ. எண் | பள்ளிவகை | மொத்தப் பள்ளிகள் | மாணவ / மாணவிகள் எண்ணிக்கை | ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மாநிலக் கல்வி முறை | 2,918 | 12,38,121 | 33,314 |
| 2 | ஆங்கிலோஇந்தியப்பள்ளிகள் | 12 | 9,589 | 281 |
| 3 | மெட்ரிக் பள்ளிகள் | 2,053 | 6,16,812 | 38,068 |
| 4 | ஓரியண்டல் பள்ளிகள் | 15 | 4,025 | 131 |
| | மொத்தம் | 4,998 | 18,68,547 | 71,794 |

(பள்ளிக் கல்வி புள்ளி விவரம் 2005–06ன்படி)

### 2.2.4. மேல்நிலைக்கல்வி:

11, 12ஆம் வகுப்புக் கல்வி, மேல்நிலைக் கல்வி என அழைக்கப்படுகிறது. இரண்டு வகுப்புகளிலும் அரசுத் தேர்வுகள் நடத்தப் பெற்றாலும், 12ஆம் வகுப்புத் தேர்வே, பொதுத்தேர்வாக அமைந்துள்ளது. இந்தியாவின் பல மாநிலங்களில் இக்கல்வி இளநிலைக் கல்லூரி (Junior College) என்று தனித்து நடைபெற்றாலும், தமிழகத்தில் இக்கல்வி பள்ளியுடன் இணைத்தே கற்பிக்கப்படுகிறது. 10ஆம் வகுப்பில் தேர்வு பெற்றவர்கள், தன்னுடைய எதிர்கால வாழ்வினைக் கணக்கிட்டுத் தன் விருப்பத்திற்கு ஏற்ப பாடங்களை +1ல் தேர்வு செய்து படிக்கலாம். மொழிப்பாடத்துடன் அறிவியல், கணிதம், பொருளியல்,

வணிகவியல் எனப் பல பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன. இக்கல்வியில் சேர்ந்து 2 ஆண்டுகள் பயின்ற மாணவர்களுக்கு அரசே பொதுத் தேர்வை நடத்துகிறது. தமிழ், ஆங்கிலம், விருப்பப்பாடங்கள் எனப் பயின்ற இக்கல்வி முறையில் குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 70/200 என்று மதிப்பெண்கள் பெற வேண்டும். இதில் வெற்றி பெற்றவர்கள் +2 வில் பயின்ற பாடத்தை ஒட்டியே கல்லூரிக் கல்வியில் சேர்ந்து பயில வேண்டும்.

அட்டவணை 2.6.

மேல்நிலைப்பள்ளிகள்

| வ. எண் | பள்ளிவகை | மொத்தப் பள்ளிகள் | மாணவ / மாணவிகள் எண்ணிக்கை | ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மாநிலக் கல்வி முறை | 2,990 | 35,74,402 | 94,518 |
| 2 | ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் | 29 | 41,986 | 1,081 |
| 3 | மெட்ரிக் பள்ளிகள் | 1,421 | 11,26,212 | 50,740 |
| 4 | ஓரியண்டல் பள்ளிகள் | 10 | 6,205 | 170 |
| | மொத்தம் | 4,450 | 47,48,805 | 1,46,509 |

(பள்ளிக் கல்வி புள்ளி விவரம் 2005–06ன்படி)

**2.2.5. கல்வி முறை அமைப்பும், கல்விக்கூடங்களும்:**

பொதுவாக, நாம் கல்வி பயிலும் முறையை 10 + 2 + 3 என அமைத்துள்ளோம். உயர்நிலை, மேல்நிலை, கல்லூரிநிலை என்ற நிலையில் அமையும். இப்படி தொடக்கக்கல்வி, உயர்நிலைக்கல்வி, மேல்நிலைக்கல்வி என அமைந்துள்ள இப்பள்ளிக்கல்வி முறையினால், அனைத்து மக்களும் பள்ளிக்கல்வி பயில வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**2.2.6. தமிழகக் கல்வி நிலையங்கள்:**

தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசுப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நிதி உதவி பெறும் பள்ளிகள், பகுதி நிதி உதவி பெறும் பள்ளிகள், சுயநிதி பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியப்

பள்ளிகள் மற்றும் மத்திய அரசுப் பள்ளிகள் எனப் பல வகையான கல்வி நிலையங்கள் செயல்பட்டு மக்களுக்குக் கல்விச் சேவை புரிகின்றன.

**அட்டவணை 2.7**

**நிர்வாக அமைப்பு வாரியாகப் பள்ளிகள் எண்ணிக்கை**

| பள்ளி வகை | ஊராட்சி ஒன்றியம் | நகராட்சி/ மாநகராட்சி | அரசு பள்ளி கள் | நிதி உதவி | நர்சரி | பகுதி நிதி உதவி | சுய நிதி | மெட்ரிக் | ஆங் கி. இந்தி யன் | ஓரி ய ண் டல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 21,906 | 896 | 1,529 | 5,255 | 4,622 | | | | | |
| நடுநிலைப் பள்ளிகள் | 5,458 | 453 | 390 | 1,716 | | | | | | |
| உயர்நிலைப் பள்ளிகள் | | 110 | 2,016 | 371 | | 242 | 179 | 2,053 | 12 | 15 |
| மேல்நிலைப் பள்ளிகள் | | 93 | 1,696 | 797 | | 265 | 139 | 1,421 | 29 | 10 |
| மொத்தம் | 27,364 | 1,552 | 5,631 | 8,139 | 4,622 | 507 | 318 | 3,474 | 41 | 25 |

(பள்ளிக் கல்வி புள்ளி விவரம் 2005–06ன்படி)

**2.2.7. மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்:**

அடுத்து, 10ஆம் வகுப்பு வரை கல்வி கற்றுத் தரும் சுயநிதியாகச் செயல்படும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஒரு பகுதி நிதிபெற்றுச் செயல்படும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளும் தமிழகத்தில் உள்ளன. மாநில அரசின் உதவியின்றி ஆனால் கட்டுப்பாட்டில் இயங்கும் மெட்ரிக் பள்ளியில் மொழியும் மற்றையப் பாடங்களும் கற்பிக்கப்பட்டாலும், எல்லாப் பாடங்களும், ஆங்கிலம் வழியாகவே கற்பிக்கப்படுகின்றது. அப்பள்ளிகளில் பயிற்சிக் கட்டணம், வேறு பல கட்டணங்கள் வசூல் செய்யப்படுகின்றன. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலும் இதே முறை கையாளப்பட்டாலும், பாடங்களில் வித்தியாசம் உண்டு. இங்கேயும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**2.2.8. மைய அரசுப் பள்ளிகள்:**

இவை தவிர, மைய அரசு நேரிடையாக நடத்தும் பள்ளிகளும், மைய அரசின் அனுமதி பெற்றுத் தனியார் நடத்தும் பல பள்ளிகளும், தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இவை தவிர தமிழகத்தில் ஐ.சி.எஸ்.இ. பள்ளிகளும் ,பன்னாட்டுப் பள்ளிகளும் செயல்படுகின்றன.

### 2.3.1. பள்ளிக்கல்வித்துறை:

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், இக்கல்வி அமைப்பைச் செயல்படுத்த, பள்ளிக்கல்வி இயக்ககம், சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்த இயக்ககம், பள்ளிக்கல்வி இயக்குநர் ஆணையின் கீழ்ச் செயல்படுகிறது. தொடக்கக்கல்வி, பள்ளிக்கல்வி, மெட்ரிக்கல்வி, பள்ளிசாராக்கல்வி எனப் பிரிக்கப்பட்ட நிலையில் ஒவ்வொன்றின் நிர்வாகம் சிறப்பாக அமைய, மாநில அளவில் இயக்குநர்களைப் பெற்று நடைபெறுகிறது. மேலும் இயக்குநரின் கீழ், இணை இயக்குநர்கள் பல பிரிவிலும், மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்க கல்வி அலுவலர், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர், ஆங்கிலோ இந்தியப் பள்ளி ஆய்வாளர் என பல உயர் அலுவலரின் கீழ் கல்வி முறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

### 2.3.2. தேர்வு முறையும், தேர்வு இயக்ககமும்:

கல்வி முறையின் பல பிரிவுகளிலும், உயர்கல்வி பெற, தேர்வு முறைகளும், அவற்றைச் செயல்படுத்த தேர்வு இயக்குநரின் கீழ் பொதுத் தேர்வுகள் 10, 12ஆம் வகுப்புகளுக்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் மார்ச், ஏப்ரல் தேர்வுகள் தவிர தேர்வில் தோல்வி பெற்ற (2, 3 பாடங்களில் ) உடனடியாகத் தேர்வு எழுதிக் கல்வியைத் தொடரும் வகையில் உடனடித் தேர்வு ஜூலையிலும் நடத்தப்படுகிறது. அக்டோபர் தேர்வுகளும் உண்டு.

<u>அட்டவணை 2.8</u>

**பாடமொழிவாரியாக 10ஆம் வகுப்பு மொழிப்பாடம் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை**

| பாடம் | மாநில வாரியம் | மெட்ரிக் | ஆங்கிலோ இந்தியன் | ஓரியண்டல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தமிழ் | 7,28,467 | 87,499 | 3,504 | | 8,19,470 |
| பிரெஞ்சு | 226 | 1,754 | 161 | | 2,141 |
| குஜராத்தி | 14 | | | | 14 |
| இந்தி | 1,440 | 8,307 | 947 | | 10,694 |
| கன்னடம் | 448 | 15 | | | 463 |
| மலையாளம் | 2,067 | 310 | 7 | | 2,384 |
| தெலுங்கு | 3,923 | 94 | 79 | | 4,096 |
| உருது | 2,318 | 229 | | | 2,547 |
| சமஸ்கிருதம் | | 648 | | 330 | 978 |
| அரபிக் | | 167 | | 645 | 812 |
| **மொத்தம்** | **7,38,903** | **99,023** | **4,698** | **975** | **8,43,599** |

(பள்ளிக் கல்வி புள்ளி விவரம் 2005–06ன்படி)

## அட்டவணை 2.9.

### பயிற்று மொழிவாரியாக மாணவர் எண்ணிக்கை

| பாடம் | மாநில வாரியம் | மெட்ரிக் | ஆங்கிலோ இந்தியன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தமிழ் | 6,50,700 | 42 | | 6,50,742 |
| ஆங்கிலம் | 81,817 | 98,981 | 4,698 | 1,85,496 |
| குஜராத்தி | 14 | | | 14 |
| இந்தி | 179 | | | 179 |
| கன்னடம் | 397 | | | 397 |
| மலையாளம் | 1,876 | | | 1,876 |
| தெலுங்கு | 3,726 | | | 3,726 |
| உருது | 1,169 | | | 1,169 |
| **மொத்தம்** | **7,39,878** | **99,023** | **4,698** | **8,43,599** |

*(பள்ளிக் கல்வி புள்ளி விவரம் 2005–06ன்படி)*

**2.3.3.** இந்திய நாட்டின் கல்விக்குழுக்கள், இலவசக் கல்வியையே பரிந்துரை செய்கின்றன. இந்த நாட்டின் ஏழைக் கடைசிக் குடிமகனும் பயில வேண்டுமென்றே இலவசக் கல்வியைப் பரிந்துரைத்துள்ளன. இதனைக் கருத்தில்கொண்டே, கல்வியில் பல மாறுதல்கள், பாடநூல்களில் மாறுதல் என அரசு, மாற்றங்களைக் கொணர்ந்து உலக அளவில் தமிழகக் கல்வி ஒரு தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது.

# பகுதி – 2
# சமச்சீர் கல்விக் கூறுகள்

# 3. சமச்சீர்க் கல்வி

## 3.1. அறிமுகம்

**3.1.1.** இந்தக் குழு சமச்சீர்க் கல்வி எவ்வாறு அமைய வேண்டும்? அக்கல்வியை எவ்வாறு செயற்படுத்துவது? என்பனவற்றைக் குறித்து விரிவாக ஆராய்ந்து இவ்வறிக்கையை உருவாக்கியுள்ளது.

**3.1.2.** நமது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் உருவாக்கப்பட்ட பல கல்விக் குழுக்கள் பொதுப்பள்ளி முறையை வற்புறுத்தி வந்துள்ளன. எல்லாப் பள்ளிகளும் நல்ல தரமான கல்வியை அனைத்து மாணவர்க்கும் அளிக்க வேண்டும் என்பதே பொதுப்பள்ளி முறையின் அடிப்படைக் குறிக்கோள் ஆகும். ஆகவே, நமது மாநில அரசு அந்தக் குறிக்கோளினை வலியுறுத்தும் முகத்தான் சமச்சீர்க் கல்வி முறை என்று இக்கல்வி முறையைக் குறிக்கிறது. அதாவது அனைவருக்கும் சமமான தரத்தில் கல்வி அளிப்பது. சமமான தரத்தில் எனும்போது உயர்தரமான அவரவர்க்கு ஏற்ற அல்லது தேவையான கல்வியே குறிக்கப் பெறும். சமமான தரம் உருவாக்குவதும் செயற்படுத்துவதும் பாடத்திட்டம் மட்டுமல்லாது, பள்ளி வசதிகள், ஆசிரியர் எண்ணிக்கை அவர்தம் திறமை, பாடநூல்கள் தேர்வு முறைகள், பள்ளி நிர்வாகம், பள்ளிக்கல்வி நிர்வாகம் ஆகிய பள்ளிக் கல்வியின் அங்கங்கள் அவற்றின் தொடர்பான யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பெரும் திட்டம் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், கலைத்திட்டம், நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், உள்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர் மாணவர் விகிதம் இவற்றுள் ஏதாவது ஒன்று மட்டுமே சமமாக இருந்தால் மட்டும் சமச்சீர்க் கல்வியை உருவாக்க முடியாது. ஆகவே பள்ளிக் கல்வி சம்பந்தப்பட்ட யாவற்றையும் ஆராய்ந்து ஒரு மேலான, தரமான, தேவைக்கேற்ற கல்வித்திட்டத்தை உருவாக்கும் வகையில் இவ்வறிக்கை வழங்கப்படுகிறது.

## 3.2. முன் வரலாறு

### 3.2.1. கல்விக்கொள்கை

**3.2.1.1.** ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ச் சமுதாயம் கற்றறிந்ததாக இருந்தமையைக் கல்வெட்டு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்டிர் உள்பட அனைத்து மக்களும் கல்வி பெற்றிருந்தனர் என்பது வெளிப்பட்டுள்ளது. இருபது நூற்றாண்டுகளில்

ஏற்பட்ட பின்னடைவுகளுக்கான காரணங்கள் காணப்பட வேண்டும். சமுதாய முன்னேற்றமே கல்வி முன்னேற்றத்திற்கு வித்திடும் என்ற கருத்தின் மறு பக்கமே சமுதாயச் சீரழிவே கல்விச் சீரழிவிற்குக் காரணம் எனலாம்.

**3.2.1.2.** இந்திய விடுதலைப்போரில் கல்வி ஒரு பெரும் பங்கு வகித்தது. கோகலேயின் கட்டாயக் கல்விச் சட்ட முன் வரைவு அன்றைய ஆட்சியாளரால் ஏற்கப்படவில்லை. காந்தியடிகளின் ஆதாரக் கல்வித்திட்டம் அனைத்துக் குழந்தைகளுக்கும் 8 ஆண்டு கல்வி அளிக்கப்பட வழி செய்தது. நமது நாட்டு அரசமைப்புச் சட்டத்தில் அரசுக்கு வழிகாட்டுதலாகச் சொல்லப்படும் கொள்கைகள் என்ற பகுதியில் 45ஆவது பிரிவில் அரசமைப்புச் சட்டம் செயலுக்கு வந்ததிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் (அதாவது 1960 ஆம் ஆண்டுக்குள்) எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது வரை கல்வி கற்பிக்க முயல வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது, மக்களாட்சி நன்றாகச் செயல்பட நாட்டின் அனைத்து இளைஞர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட நிலைவரையிலான, தரமான கல்வி கற்க வசதி வேண்டும் என்று உணரப்பட்டது. ஆகவே நமது அரசமைப்புச் சட்டத்தில், அனைத்து இளைஞர்களுக்கும், அவர்கள் எந்தச் சாதி, வகுப்பு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நாட்டின் எப்பகுதியில் வாழ்ந்தாலும், 14 வயது வரை கட்டாயக் கல்வி அளிக்க முயல வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் நம் நாட்டு அரசமைப்புச் சட்டத்தை வரைந்தவர்களின் இந்தக் கனவை நமது மாநில அரசுகளால் நனவாக்க முடியவில்லை. இதை உணர்ந்த மைய அரசு, 1968 ஆம் ஆண்டில் உருவாக்கிய நாட்டின் கல்விக் கொள்கையில் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தியது. நாட்டின் ஒருமைப்பாடு, பொதுக்குடியுரிமைப் பண்பாடு, நாட்டின் முன்னேற்றம் இவற்றை வளர்க்கும் குறிக்கோளுடன் 10+2+3 என்ற புதிய பாடத்திட்டத்தை இக்கொள்கை தந்தது. மாநிலங்கள் இக்கொள்கையை ஏற்றுச் செயல்படுத்திப் பெருமளவு முன்னேற்றம் கண்டன. எனினும் கல்வியைப் பொறுத்தவரை மைய அரசு தன் கடமைகளை மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணி 1975 ஆம் ஆண்டில் அரசமைப்புச் சட்டத்தின் 42வது திருத்தத்தின் மூலம் கல்வியை மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் இருந்து மாநிலங்களுக்கும், மைய அரசுக்கும் பொதுவான பட்டியலுக்கு மாற்றியது. இதன் வழி எல்லாக் குடிமக்களும் தரமான கல்வி பெற அவசியமான வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்புகளை மைய அரசும் மாநில அரசும் பகிர்ந்து கொள்ளும்

நிலை உருவாகியது. மேலும், உன்னிகிருஷ்ணன் வழக்கில் , உச்ச நீதிமன்றம் அரசியல் சட்டம் 21ம் உறுப்பின்படி கல்வி ஒரு வாழ்வு உரிமை என்று அறிவுறுத்தியது. அதன் தொடர்ச்சியாக 86வது அரசியல் சட்டத்திருத்தம் கொணரப்பட்டு புதிய உறுப்பு 21–A யின்படி 6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அடிப்படை உரிமையாக்கப்பட்டது. உறுப்பு 45 திருத்தப்பட்டு 6 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பும் கல்வியும் அளிக்க அரசு முயலவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. மேலும் உறுப்பு 51–B யில் இதனைப் பெற்றோர் கடமையாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

### 3.2.2. கல்வி பரவலாக்கமும், அடிமட்டத் திட்டமிடுதலும்

நிதி உதவி கிடைத்தாலும், இலவசக் கட்டாயக் கல்வித் திட்டம் வெற்றி பெற பொதுமக்களின் ஒத்துழைப்பின் அவசியத்தை 1975ஆம் ஆண்டுக்குப் பிறகு நமது அரசு உணர்ந்தது. ஆகவே 1986ஆம் ஆண்டில் வரையப்பட்ட கல்விக் கொள்கையில் மேனிலைப் பள்ளி வரையிலான பள்ளிக் கல்வியை நிர்வகிக்க மாவட்டக் கல்வி வாரியங்கள் அமைக்க வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே இருக்கின்ற மாநில அளவிலான கல்வி வாரியங்கள் அறிவுரை வாரியங்களாகத் தொடர்ந்து செயல்படும். 1986ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையில் கிராமக் கல்விக் குழுக்கள் அமைக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேலும், தேசிய வளர்ச்சி மன்றம் (National Development Council) கல்வியில் அடிமட்டத் திட்டமிடுதலுக்காக மாநில முதலமைச்சர்கள் குழு ஒன்றை நியமித்தது. அதே வேளையில் மையஅரசு, அரசமைப்புச் சட்டத்தில் 73வது திருத்தத்தைச் செய்து கல்வி தொடர்பான கீழ்க்காணும் இனங்களான தொடக்கப்பள்ளிகள், உயர் தொடக்கப்பள்ளிகள் உள்ளடங்கலாகக் கல்வி, தொழில் நுட்பப் பயிற்சி, வாழ்க்கைத் தொழில் கல்வி, முதியோர் கல்வி, பள்ளிசாராக் கல்வி, நூலகங்கள், பண்பாட்டு நடவடிக்கைகள் போன்றவற்றை பஞ்சாயத்து ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வழிவகை செய்தது.

### 3.2.3. தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம்

அரசமைப்புச் சட்ட 73வது திருத்தத்தைத் தொடர்ந்து, 1994ஆம் ஆண்டில் தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தின்படி

பஞ்சாயத்துகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் யாவரும் பதவியை ஏற்றுக் கொண்டு சில ஆண்டுகள் ஆகிவிட்டன. தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின்படி அனைத்துப் பஞ்சாயத்துகளுக்கும் தங்கள் திட்டங்களை ஆயத்தம் செய்யும் கடமை உண்டு. ஆகவே இவற்றுக்கு தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட கிராமங்களின் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டும் கடமை உண்டு. தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்துவதும், மேம்படுத்துவதும், தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மான்யம் தருவதும் ஆகிய கடமைகள் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன (சட்டப்பிரிவு 112). 15.10.96 அன்று தமிழ்நாடு அரசு பஞ்சாயத்துக் கடமைகள் மற்றும் பொறுப்புகளை வரையறுத்து ஓர் ஆணை வெளியிட்டது. அந்த ஆணையின்படி, தொடக்கப் பள்ளிகளை ஆய்வு செய்யும் பொறுப்பும் கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாநிலச் சட்டத்தின் 108ஆவது பிரிவின்படி தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் அடிப்படைப் பணியாளர்களும் தொடர்ந்து அரசு ஊழியர்களாக இருப்பார்கள். அதாவது பஞ்சாயத்துகள் தொடக்கப் பள்ளிகளை ஆய்வு செய்யலாம்; ஆனால் பணியாளர் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது. தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்துவதும் மேம்படுத்துவதும் பஞ்சாயத்து ஒன்றியங்களின் கடமை; ஆனால் ஆசிரியர் மற்றும் இதர பணியாளர் பதவிகளை ஏற்படுத்த முடியாது; பணியாளர்களைப் பதவியில் அமர்த்த முடியாது.

### 3.2.4. தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம்

தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர், தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 45ஆவது பிரிவில் சொல்லப்பட்டவற்றைச் செயலாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம் தயாரிக்கப்பட்டது; இச்சட்டம், 14வயது வரை எல்லாக் குழந்தைகளுக்கும் ஐந்தாம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி வழங்க வகை செய்துள்ளது; குழந்தைகளின் பெற்றோர் எவரும் 14வயதுக்கு உட்பட்ட தமது குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பவில்லை எனில், அப்பெற்றோரைத் தண்டிக்க சட்டத்தில் இடமிருக்கிறது; இச்சட்டத்தைச் செயலாக்குவதற்கான பொறுப்பு மாநில அரசிடமும் மாநில அரசு அதிகாரிகளிடமும் உள்ளது.

### 3.2.5. அனைவருக்கும் கல்வி

**3.2.5.1.** அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். அது அவர்கள் உரிமை என்ற கொள்கையில் அனைவருக்கும் தரமான கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து தொக்கி நிற்கிறது. அதாவது கல்வி உரிமை என்பது தரமில்லாத கல்விக்கு உரிமை என்பதல்ல தரமான கல்வி பெறும் உரிமை. ஆகவே, இப்போது வசதிகள் குறைந்த கல்வி நிலையங்களில் வசதிகள் பெருக்கப்பட வேண்டும் என்பது நமது நோக்கமாக அமையும். நமது மாநில அரசு அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கும் சமச்சீர்ச் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த ஆர்வமுடன் உள்ளது என்பது இந்தக் குழுவை அது நியமித்ததிலிருந்து தெரிகிறது. இன்றைய சூழலில் சமுதாயத்தில் நலிந்த மக்களின் குழந்தைகளுக்குக் கிடைக்கும் கல்வியின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதும் அரசின் ஆதங்கத்திலிருந்து வெளிப்படுகிறது. மேலும், சமுதாயத்தில் மேல் தட்டில் உள்ள மக்களின் குழந்தைகள் கற்கும் பள்ளிகளில் உள்ள வசதிகள் நிறைவாக இருப்பதால் அப்பள்ளிகளில் கல்வியின் தரம் மேலானதாகவும், சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ள மக்களின் குழந்தைகள் கற்கும் பள்ளிகளில் வசதிகள் குறைவாகவும் இருப்பதால் தரம் குறைவாகவும் இருக்கின்றன. சமுதாயத்தில் பின் தங்கியவர்களுக்கு அல்லது பிற்படுத்தப் பட்டவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்கவில்லை எனில் அவர்கள் என்றென்றும் பின்தங்கியவர்களாகவே இருக்க நேரிடும். ஆகவே அனைவருக்கும் கல்வி திட்டத்தின் நோக்கம் அடித்தட்டு மக்களுக்கும் நல்ல தரமான கல்வி அளிப்பதே. நமது அரசியலமைப்பு சட்டத்தின்படி எல்லோருக்கும் எட்டு ஆண்டுகள் (அதாவது 6 முதல் 14 வயது வரை) கல்வி அளிப்பது அரசின் கடமை என்பதால் பெரும்பாலான மாணவர்கள் ஒன்று முதல் எட்டு வகுப்பு வரையில் கல்வி கற்பவர்கள். ஆகவே தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் அதுவும் முக்கியமாக கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளின் மேம்பாட்டில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். இன்று கிராமப்புற பள்ளிகளில் கட்டடங்கள் இல்லை என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. கட்டடங்கள் இருந்தால் ஆசிரியர்கள் இல்லை; ஆசிரியர்கள் இருந்தால் தேவையான கருவிகள் வசதிகள் இல்லை. வசதிகள் இருந்தால் பாடநூல்கள், நோட்டு புத்தகங்கள் இல்லை. இவையாவும் இருந்தால் ஆசிரியரோ அல்லது மாணவர்களோ வரவில்லை என்பதால், பாடங்கள் நடத்தப்படுவது இல்லை. மொத்தத்தில் அடித்தட்டு மக்களின் குழந்தைகளுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும் தரமான கல்வி கிடைக்கவில்லை. இந்தக் குழு பார்வையிட்ட ஒரு சில கிராமப்புற பள்ளிகளில் மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு

படித்துக் கொண்டிருந்தாலும் தமிழில் எழுதப் படிக்கத் தெரியவில்லை. இந்நிலையைச் சீர்திருத்த தொடக்கக்கல்வி இயக்ககம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

- பள்ளி வயதில் உள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்.
- பள்ளியில் சேர்த்த அனைத்துக் குழந்தைகளையும், இடையில் நின்று விடாமல், 8ஆம் வகுப்பு வரை அல்லது குறைந்த பட்சம் 5 ஆம் வகுப்பு வரை படிக்க வழி வகை செய்தல்.
- 5ம்வகுப்பு முடிக்கும் மாணவர்கள் குறைந்தபட்சத் திறன்களைப் பெறுவதற்கு வழிவகை செய்தல்.

மேற்கண்ட மூன்று குறிக்கோள்களையும் அடைய, தொடக்கக் கல்வித் துறையில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குதல்.
- மழலையர் பள்ளிகளுக்கு ஒப்புதல் அளித்தல்.
- இலவசப் பாட நூல்கள் வழங்குதல்.
- இலவசச் சீருடைகள் வழங்குதல்.

அனைவருக்கும் தொடக்கக் கல்வித் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் சூலை மாதம் 31ஆம் தேதி அன்று ஐந்து வயது பூர்த்தி ஆன குழந்தைகள் யாவரும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். முறையான கல்வி பெறாத மாணவர் தனிப் படிப்பு மூலம் எட்டாம் வகுப்பு வரை சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். மழலையர் பள்ளிகள் தொடங்குவதற்கு விதிகள் வகுக்கப்பட்டுத் தேவைக்கு ஏற்றபடி பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது. ஆண்டிற்கு ஒரு முறை அரசு பள்ளிகள் , அரசு உதவி பெறும் பள்ளிகள் , அரசு அங்கீகாரம் பெற்றுத் தமிழ் வழியில் கற்பிக்கும் உதவி பெறாத பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்து மாணவர்க்கும் இலவச பாடநூல்கள் வழங்கப்படுகிறது. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறை ஒரு ஜோடி சீருடை வழங்கப்படுகிறது. ஏழை எளிய மக்கள் தங்கள் வறுமையின் காரணமாகத் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப இயலாத நிலை இருப்பதால் அப்பெற்றோருக்கு உதவும் வகையில் தங்கள் குழந்தைகளை அவர்கள் பள்ளிக்கு அனுப்ப ஏதுவாக

இலவசமாகப் பாடநூல்களும், சீருடைகளும் வழங்கப்படுகின்றன. இத்திட்டங்கள் மாணவர் தொடர்ந்து பள்ளியில் படிப்பதற்கு வாய்ப்பாக அமைந்து பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்துவது பெருமளவு குறைந்து இருப்பதாகக் கருதப்படுகிறது.

**3.2.5.2.** அண்மையில் மைய அரசு "சர்வ சிக்ஷா அபியான்" என்ற பெயரில் ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. அவரவர்க்கு ஏற்ற பயனுள்ள தொடக்கக் கல்வியை ஆறு முதல் பதினான்கு வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் அளிப்பது இத்திட்டத்தின் குறிக்கோள். பள்ளிகளை நிர்வகிப்பதில் சமுதாயத்தையும் பங்கு கொள்ளச் செய்து சமுதாய மாறுபாடுகள், பெண் கல்வியில் குறைகள், ஆகியவற்றைச் சரி செய்வதும் இதன் குறிக்கோள் ஆகும். சமுதாயத்திலிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளாது சமுதாய ஒருமைப்பாட்டை வளர்க்கும் விதத்தில் ஒவ்வொரு மாணவனுக்கும் அவனுக்குத் தேவையான கல்வியைக் கற்க வாய்ப்பு அளிப்பது இத்திட்டத்தின் நோக்கம். மேலும் இக்கல்வி தான் வாழும் சூழலைப் பற்றி அறிந்து, புலமை பெற்று தனது திறன்களை முழுமையாகப் பயன்படுத்தச் செய்யும். இந்தக் கல்வி விழுமம் சார்ந்ததாக அமையும் என்பதால் இக்கல்வி பயிலும் மாணவர் சுயநலமின்றி மற்றவர் நலனில் அக்கறை கொண்டுள்ளவர்களாக மலர்வார்கள். இத்திட்டத்தின் மூலம், 2003 ஆம் ஆண்டுக்குள் எல்லாக் குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கப்படுவர். 2007க்குள் எல்லாக் குழந்தைகளும் ஐந்தாம் வகுப்பை முடித்திருப்பார்கள். 2010க்குள் எட்டு ஆண்டு படிப்பையும் முடிப்பார்கள். எல்லாக் குழந்தைகளுக்கும் சமச்சீரான கல்வி அளிக்கப்படும். ஆயுள் முழுவதும் கல்வி கற்கும் மனநிலையும் உருவாக்கப்படும். கல்வி பெறுவதில் இன்று காணப்படும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளும், பெண்கள் கல்வியில் உள்ள பின்னடைவும் அகற்றப்படும். 2010 ஆம் ஆண்டுக்குள் எல்லாக் குழந்தைகளும் பள்ளியில் இருந்து விலகாது எட்டு ஆண்டுகளாவது கல்வியைத் தொடரும் நிலை உருவாக்கப்படும். மேலும், ஒவ்வொரு மாநிலமும் தனது தேவைகட்கு ஏற்றபடி திட்டத்தில் மாற்றங்கள் செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே நமது மாநிலமும் நம் மாநிலத் தேவைக்கு ஏற்றபடி திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு (2006–07) திட்டத்தில் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டவை, இணைப்பு 3.1ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை முடிப்பதுடன் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும். மேலும் இவ்வறிக்கையில் காணப்படும் பல பரிந்துரைகளை இத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தலாம்.

### 3.2.6. மதிய உணவுத்திட்டம்

பள்ளிகளில் மாணவ, மாணவிகளை அதிகப்படியாகச் சேர்ப்பதற்கும் இடைநிற்றலைக் குறைப்பதற்கும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன்படி 1982 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1.7.1982ல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் முதலில் தொடக்கக் கல்வி பயிலும் 5–9 வயதுடைய மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கப்பட்டது. பின்னர் 15.9.1984 முதல் இத்திட்டம் 10–15 வயதுடைய பள்ளி மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது இத்திட்டத்தின் கீழ்ச் செயல்படும் மையங்கள் மூலம் பயன்பெறும் 5 முதல் 15 வயதுவரையுள்ள மாணவ, மாணவியர்களுக்கு வாரம் முழுவதும் புரதச் சத்து மிகுந்த சத்துணவுடன் 3 தினங்களில் முட்டையும் வழங்கப்படுகிறது. சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் 65,04,642 மாணவர்கள் ஆவர்.

### 3.2.7. படிப்பிலிருந்து இடைநிற்றல்.

**3.2.7.1** மாநில அரசு மேற்கொண்ட பல செயற்பாடுகளினால் படிப்பிலிருந்து இடைநிற்றல் மிகுந்த அளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1995லிருந்து 2005 வரையிலான காலத்தில் படிப்பிலிருந்து இடைநிற்றல் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது பட்டியல் 3.1–ல் இருந்து தெரிகிறது.

**பட்டியல் 3.1**

**DROP-OUT RATE IN TAMIL NADU**

| Year | upto primary stage | | | upto middle stage | | | upto high stage | | | upto Hr.Sec.Stage | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Boys | Girls | Tot. | Boys | Girls | Tot. | Boys | Girls | Tot. | Boys | Girls | Tot. |
| 1995–96 | 14.88 | 16.97 | 15.85 | 28.60 | 37.11 | 32.54 | 60.14 | 68.20 | 63.87 | 79.45 | 83.65 | 81.40 |
| 1996–97 | 14.05 | 16.20 | 15.06 | 26.38 | 34.78 | 30.27 | 58.63 | 67.05 | 62.53 | 78.21 | 83.09 | 80.48 |
| 1997–98 | 13.99 | 16.18 | 15.05 | 25.94 | 34.64 | 29.99 | 57.04 | 65.74 | 61.06 | 77.54 | 82.54 | 79.86 |
| 1998–99 | 12.98 | 16.15 | 14.52 | 36.85 | 33.37 | 35.23 | 57.72 | 58.35 | 58.01 | 82.10 | 80.61 | 81.49 |
| 1999–00 | 12.93 | 16.07 | 14.41 | 36.03 | 34.74 | 35.43 | 57.97 | 57.85 | 57.92 | 83.43 | 80.92 | 82.27 |
| 2000–01 | 12.86 | 16.03 | 14.40 | 36.00 | 35.15 | 35.59 | 57.86 | 57.91 | 57.89 | 82.15 | 82.40 | 82.30 |
| 2001–02 | 12.73 | 15.95 | 14.31 | 35.46 | 34.53 | 35.07 | 57.34 | 57.79 | 57.55 | 79.69 | 79.32 | 79.51 |
| 2002–03 | 12.20 | 15.50 | 13.85 | 34.30 | 29.99 | 32.10 | 57.24 | 57.51 | 57.37 | 77.20 | 74.22 | 75.81 |
| 2003–04 | 12.07 | 15.24 | 12.63 | 33.97 | 29.25 | 28.96 | 57.12 | 57.47 | 57.29 | 77.02 | 73.98 | 75.52 |
| 2004–05 | 11.44 | 10.41 | 10.94 | 24.62 | 23.44 | 23.96 | 55.34 | 55.68 | 55.51 | 74.95 | 70.04 | 72.72 |
| 2005–06 | •2.75 | 2.72 | 2.74 | 5.53 | 4.89 | 5.22 | 43.60 | 41.20 | •42.45 | 72.23 | 66.30 | 69.45 |

*(Source Educational Statistics of Tamilnadu Hand Book – 2005-06 by the Directorate of School Education, Chennai-6 )*

**3.2.7.2.** அனைத்து மாணவரும் தொடர்ந்து 8 ஆண்டுகள் சமச்சீர் கல்வி திட்டத்தில் கல்வி கற்பதை உறுதி செய்ய பள்ளி இடை நிற்றலுக்கான காரணிகள் கண்டறியப்பட்டு, அவற்றினை நேர்படுத்த சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தில் பல புதிய செயல்பாடுகள் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

### 3.2. 8. பொதுப் பள்ளி முறை

நமது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் அரசு நியமித்த கல்விக் குழுக்கள் யாவும் பொதுப் பள்ளி முறை உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளன. கோத்தாரி குழு (1964–66) இராமமூர்த்தி குழு (1991) யஷ்பால் குழு (1993), ஆகியவை பொதுப்பள்ளி முறையை விரைந்து கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி உள்ளன. 1986ல் வடிவமைக்கப்பட்டு 1992ல் இறுதி ஆக்கப்பட்டு பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசீய கல்விக் கொள்கை, இத்திட்டம் குறித்துப் பின்வருமாறு விளக்கம் அளிக்கிறது: சாதி, மத, இன, இட வேறுபாடு இன்றி எல்லா மாணவருக்கும் சமச்சீரான கல்வி கிடைக்கும் வாய்ப்பை உருவாக்குவது. இராமமூர்த்தி குழு பொதுப்பள்ளி முறை முழுமையாகச் செயலுக்கு வர எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்று கீழ்க்காண்பனவற்றைப் பட்டியலிட்டுள்ளது. (இணைப்பு 3.2)

- தொடக்கப் பள்ளித்துறைக்கு நிதி உதவியைப் பெருமளவு உயர்த்துதல். இதனால் அரசு, பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி, உதவிபெறும் தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் உள்கட்டமைப்பு வசதிகளின் தரம் உயர்வதால், இவை ஒவ்வொன்றையும் சுற்றி உள்ள பகுதி மாணவர் யாவரும் இப்பள்ளியில் சேர்ந்து இப்பள்ளி ஒவ்வொன்றும் மெய்யாகவே அண்மைப் பள்ளியாகத் திகழும்.
- பின்தங்கிய பகுதிகள், மாநகரக் குடிசைப் பகுதிகள், மலைப்பகுதிகள், பழங்குடி மக்கள் வாழும் பகுதிகள், பாலை நிலங்கள், சதுப்பு நிலங்கள், வெள்ளம் வரும் பகுதிகள், வறட்சிப் பகுதிகள் ஆகியவற்றில் அமைந்த பள்ளிகளுக்குச் சிறப்பாக நிதி ஒதுக்குதல்.
- தொடக்கப் பள்ளியில் எல்லா மாணவர்க்கும் தாய்மொழி அல்லது மாநில மொழி வழிக் கற்பித்தல், உயர்நிலை மேனிலைப் பள்ளிகளில் மாநில மொழிவழிக் கற்பித்தல்; மாநில மொழி/தாய் மொழி வழி கற்பிக்காத பள்ளிகளுக்குப் படிப்படியாக நிதி உதவியைக் குறைத்து நிறுத்தி விடுதல்.

- பத்து ஆண்டு கால கெடுவுக்குள் பொதுப்பள்ளி முறையை செயல்படுத்துதல். தேவைப்படும் அளவிற்கு சட்டம் மூலமாகக் கட்டணம், தலைவீதக் கட்டணம் (Capitation), பள்ளியில் சேர்க்கைக்குத் தேர்வு போன்றவற்றைக் கைவிடச் செய்தல்.
- தனிச் சலுகைகள் அளித்தல் அல்லது மறுத்தல், சட்டங்கள் இயற்றிச் செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இன்று கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகளைப் பொதுப் பள்ளி முறையில் இணைய வழி வகை செய்தல்.

எனவே, பொதுப்பள்ளி முறையில் தரம் தாழ்ந்து போகும் என்ற கருத்து உண்மைக்குப் புறம்பானது. பொதுப்பள்ளி முறை சமுதாயத்தை முழுமையாக ஊடுருவும் என்பதால், இப்பள்ளி முறை சமுதாயத்தை உயர்த்தும்.

### 3.3. பள்ளிக்கல்வியின் தரம்

**3.3.1.** கல்வி பரவலாக்கும்போது அதன் தரம் தாழாது காப்பாற்றுவது ஒரு சவாலாக அமைகிறது. தரம் சமுதாயத்தில் மேல்தட்டில் உள்ள ஒரு சிலருக்கு மட்டுமே அளிக்கப்படும் ஒரு தனிச் சலுகை என்பது ஒரு தன்னாட்சியுடன் விளங்கும் மக்களாட்சி நிலவும் சுதந்திர நாட்டில் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. சமவாய்ப்பு, உயர்தரம், எங்கும், யாவருக்கும் கிடைத்தல். என்ற மூன்று இலக்குகளையும் நோக்கிச் செல்லும்போது தரம் என்பது என்ன என்று மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. கல்வியின் நோக்கங்களைச் சிறப்பாக நிறைவேற்றும் முறையில் பாடத்திட்டம், உள்கட்டமைப்பு வசதிகள், தேவையான எண்ணிக்கையில் திறமை வாய்ந்த ஆசிரியர், கற்பதில் ஆர்வமுள்ள மாணவ சமுதாயம் இவை யாவும் ஒருங்கிணைந்து அமைந்ததே தரமான கல்வி அமைப்பு ஆகும்.

**3.3.2.** பள்ளிக்கல்வித் தரம் என்பது என்ன? சேரும் மாணவர் யாவரும் அல்லது பெரும்பாலானோர் தேர்ச்சி பெற்றால் தரம் உயர்வு என்று கூறலாமா? "Proof of the Pudding is in the eating" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அந்த வகையில் தேர்ச்சி விகிதத்தை அளவு கோலாகக் கொண்டு நாம் கல்வித்துறையின் தரத்தை நிர்ணயிக்கலாம். ஆனால் தேர்ச்சி விகிதத்தைக் கூட்டுவதற்கு கீழ்க்காணும் முறைகளைப் பயன்படுத்தக் கூடும்: பாடத் திட்டத்தைக் குறைப்பது, தேர்வுத்தாளை எளிமை ஆக்குவது, மதிப்பெண் அளிப்பதில் தாராளம், கருணை மதிப்பெண் (Grace Mark) வழங்குதல், இன்ன

பிற. இத்தகைய முறைகளாலும், தேர்ச்சி விகிதம் அதிகரிக்கும் என்பதால் தேர்ச்சி விகிதத்தை மட்டுமே அளவு கோலாகக் கொண்டு தரத்தை மதிப்பிட முடியாது. எனினும் தனிப்பட்ட பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் மாநில அளவிலான தேர்ச்சி விகிதத்தைவிடக் குறைவாக உள்ளது எனில் அந்தப் பள்ளியின் செயற்பாடுகள் ஆராயத்தக்கவை. இந்த அடிப்படையில் நமது மாநில அரசு பள்ளிக்கல்வித்துறை பின்தங்கிய மாவட்டங்களை இனங்கண்டு ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பது, காலியாக உள்ள ஆசிரியர் பணி இடங்களை நிரப்புவது போன்ற உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**3.3.3.** கட்டிட வசதிகள், பரிசோதனைக் கூடங்கள், விளையாட்டுத் திடல்கள், உடற்பயிற்சி செய்யும் இடங்கள், நூலகக் கட்டிடம், நிறைய விலையுயர்ந்த நூல்கள், சஞ்சிகைகள் இவை யாவும் நல்ல தரமான கல்வி கற்கும் சூழலை உருவாக்கலாம். ஆனால் இவையே தரமாகாது. இவற்றைப் பயன்படுத்தும் மனநிலையை மாணவர்க்கு அளிக்க வேண்டும். அதற்குத் தேவை நல்லாசிரியர், நல்ல பாடத்திட்டம்.

**3.3.4.** கல்வியின் தரம் என்பது கல்வியின் நோக்கம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பொறுத்தது. நோக்கம் சிறப்பாக நிறைவேற பாடத்திட்டம் கற்கும் மாணவர் வாழ்க்கையுடனும் சுற்றுச்சூழலுடனும் தொடர்புடையதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்க்குக் கற்பதில் ஆர்வம் உருவாகும். மேலும், ஒரு சராசரி இளைஞனுக்குத் தேவையான பொது அறிவை, தேர்ச்சி பெற்ற மாணவன் பெற்றிருக்க வேண்டும். நமது நாட்டில் அமைந்த மற்ற மாநிலங்கள் மட்டுமல்லாது முன்னேறிய நாடுகளில் வாழும் மக்களின் பொது அறிவோடு ஒத்ததாக நமது மாநில மாணவர் அறிவு இருக்க வேண்டியது அவசியம். பொது அறிவு என்பது உலக அளவில் பொது, நமது நாட்டளவில் பொது, மாநில அளவில் பொது, தவிர நமது பகுதி குறித்த அறிவு ஆகியவை அடங்கியதே பொது அறிவு. இவற்றில் எவை எவைக்கு எவ்வளவு பங்கு ? என்பது சமுதாயத்தில் பெரியோரின் கருத்துக்களைக் கேட்டு அறிந்து ஆராய்ந்து கல்வியாளர்களால் தீர்மானிக்கப்பட வேண்டியது. அடுத்து இளைஞர்கள் பொருள் ஈட்ட ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டி உள்ளது. மாணவர் விரும்பும் தொழிலில் சிறப்பான கல்வி கற்பிக்கப்படுகிறதா ? இவையாவும் இருந்தாலும் தான் வாழும் சமுதாயத்தையும் அதன் பண்பாடு மரபு ஆகியவற்றைப் புரிந்து கொண்டு ஒரு நல்ல குடிமகனாக வாழக் கற்பிக்கப்படுகிறதா ? என்ற கேள்விக்கும் ஆம் என்ற பதில் வேண்டும். சமுதாயத்தில்

உள்ள மற்ற மக்களுடன் அன்பும் இரக்கமும் மேன்மையும் தங்கிய ஒத்துப் போகும், திறமைமிக்க, விரும்பும் பயன் அளிக்கத்தக்க வகையில் வாழக் கற்றுத்தராத கல்வி கல்வியே அல்ல.

(No education is worth the name which does not inculcate the qualities necessary for living graciously harmoniously and efficiently with one's fellow men (Secondary Education Commission. 1952-53 page. 20)

**3.3.5.** கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் பாடத்திட்டத்தையோ ஆசிரியரையோ மட்டும் மையப்படுத்துவது இளைஞர்களின் வளர்ச்சிக்குப் பயன்படாது. இளைஞர்கள் முழுமையான வளர்ச்சி பெற்று, சமுதாயத்தில் நல்ல குடிமக்களாக, பயனுள்ள செயல்களைச் செய்பவராக உருவாக்கக் கூடியதாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் அமைய வேண்டும். பாடச்சுமையைக் கூட்டாது மனப்பாடம் செய்வதை முன்னிறுத்தாது, பெற்ற அறிவைப் பயன்படுத்தி வாழும் வகையில் கற்பிப்பது அவசியம்.

**3.3.6.** மாணவர் எந்த அளவுக்குப் பாடங்களைக் கற்றுப் பயன் பெற்றனர் என்பதை ஆசிரியரும் மாணவரும் தெரிந்து கொள்ள தேர்வுகள் தேவை. ஆனால் அவை மனப்பாடம் செய்தவற்றை, தேர்வு அறையில் எழுதுவதாக மட்டுமே அமையக்கூடாது. கற்றதனால் பெற்ற அறிவை, தொகுத்தும் விரித்தும் விளக்கும் திறமை பெற்று இருக்கிறாரா என்பதையும் பெற்ற அறிவை, தகுந்த முறையில் பயன்படுத்தும் திறன் பெற்றுள்ளாரா ? என்பதையும் சோதிக்கும் முறையில் அமைய வேண்டும்.

**3.3.7.** கல்வியின் தரம் என்பது ஒரு பரந்த நோக்கில் காண வேண்டிய ஒன்று. 2005ஆம் ஆண்டு கலைத்திட்ட வடிவமைப்பில் கல்வியின் தரம் பற்றி பின்வரும் கருத்து சொல்லப்படுகிறது. " கல்வியின் தரம் என்பது வாழ்க்கையின் பரிமாணங்கள் யாவற்றின் தரத்தையும் உயர்த்தும் மனப்பான்மையை உள்ளடக்கியது. ஆகவே தான் விழுமங்கள் தவிர, அமைதி காத்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமுதாய மாற்றத்தை நாடும் மனப்பான்மை ஆகியவற்றையும் தரத்தின் முக்கிய அங்கங்கள் என்று கருதப்படுகின்றது.

**3.3.8.** மாணவர் தேவைகளின் அடிப்படையில் தொடர்ந்து தரத்தை மேம்படுத்துவதுதான் தரமான கல்வி அமைப்பின் நோக்கம். குறுகிய காலப் போக்கில் பார்க்காது நீண்ட கால

அடிப்படையில் கல்வியின் தரத்தை ஒவ்வொரு பள்ளியிலும் அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், அரசு உதவி பெறாத பள்ளிகள் ஆகிய பள்ளிகள் ஒவ்வொன்றிலும் நிதானமாக ஆராய்ந்து முறையாக மேம்படுத்துவது இன்றையத் தேவை.

### 3.4. சமுதாயத் தொடர்பு

**3.4.1.** சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள் பள்ளியில் உள்ள ஆசிரியர் மாணவர் விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றுக்கு ஒரு பொதுவாக அமைந்த ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு கல்வி அமைப்பாக பள்ளிகள் உருவாகின்றன. இன்றைய உலகில் பள்ளிக் கல்வியின் மேம்பாடு குறித்த செய்திகளும் ஆராய்ச்சி முடிவுகளும் மிகப்பல. நமது நூலகங்களிலும், அரசின் குழு அறிக்கைகளிலும், இணைய தளங்களிலும் உள்ளன. பொதுமக்கள் ஊடகங்களின் மூலமாக இச் செய்திகளை அறிந்துள்ளனர். அவர்களுக்குக் கிடைக்கும் செய்திகளில் இருந்து அவர்கள் மெய்ப் பொருளை உணருவார்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் மெய்யை உணரச் செய்வது கல்வி நிறுவனங்களின் தலையாய கடமை. ஆகவே அவை கல்வியின் தரத்தை மேம்படுத்துவதோடு ஒரு முழுமையான தர மேம்பாட்டில் தங்கள் கவனத்தைச் செலுத்தினால்தான் கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள சமுதாயத்தை மேம்படுத்தி அதன் வழி தங்கள் தரத்தையும் மேம்படுத்தி ஒரு முழுமையான மேம்பாட்டை எய்த முடியும்.

**3.4.2.** சமுதாயம், பள்ளிக்கல்வித்துறை, பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர், மாணவர் ஆகியோர் இணைந்து சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வது இன்றையத் தேவை. அதுவே முழுமையான பள்ளிக்கல்வி அமைப்பின் மேம்பாட்டுக்கு வழி செய்யும்.

### 3.5 . கற்றலின் நோக்கம்

**3.5.1.** கல்வி கற்பதன் நோக்கம் என்ன ? என்பது குறித்து மாணவர், அவர்தம் பெற்றோர், ஆசிரியர், அரசு என்று ஒவ்வொருவருடைய பார்வையும் வெவ்வேறாக இருப்பது இயற்கை. மாணவர்க்கு இள வயதில் புதியவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கம் இருக்கும். வயது ஏறஏற மாணவரின் எதிர்பார்ப்புகள் மாறும். தான் விரும்பும் சிலவற்றை மட்டுமே மேலும்மேலும் அறிந்து அதில் தேர்ச்சி பெற்று வாழ வேண்டும், தனது எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது

குறித்து கனவு கண்டு அதை நோக்கிச் செல்ல விழைவது இயற்கை. பெற்றோர் தமது குழந்தை வளர்ந்து பெரியவராக வேண்டும் சான்றோர் என்று பெயர் பெற வேண்டும் என்று விரும்புவர்.

*ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே* – (புறநானூறு, 312, வரிகள் 1, 2)

தான் செய்ய முடியாததை அல்லது தான் கற்கவேண்டும் என்று எண்ணியதைத் தன்னால்தான் முடியவில்லையே தனது குழந்தையாவது அக்கல்வி பெற வேண்டும், நிறைய பொருள் ஈட்ட வேண்டும் புகழ் பெற வேண்டும் என்று என்னும் நல் ஆசிரியர் தனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் மாணவர்க்கு கற்றுத்தர வேண்டும். தான் பெற்ற இன்பம் இளைஞர்களும் பெற வேண்டும் என்று எண்ணுவார்கள். ஆகவே ஆசிரியர் பாடத்திட்டத்தில் தான் அறிந்த யாவற்றையும் சேர்த்து கற்பிப்பதை நோக்கமாகக் கொள்வார். அரசைப் பொறுத்தவரை குழந்தைகளை நாட்டுக்காக உழைக்கும் நல்ல குடிமக்களாக உருவாக்குவதே நோக்கமாக அமையும்.

"*நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே*" – ( புறநானூறு 312, வரி 4)

ஆகவே கல்வி கற்றலின் நோக்கம் இவை அனைத்தையும் ஏறத்தாழ உள்ளடக்கியதாக அமையும்.

**3.5.2.** மகாத்மா காந்தி "உடல், மனம் ஆன்மா ஆகிய மூன்றும் மனிதனின் உறுப்புகள் ஆகும். இவற்றில் ஆன்மாதான் மற்ற இரண்டையும் செயற்படச் செய்கிறது. ஆகவே ஆன்மாவின் குண நலன்களை வெளிப்படுத்துவதே கல்வி" என்றார். மேலும், அவர் "மற்றவர்களைச் சுரண்டாத அகிம்சை வழி சமுதாய பொருளாதார நிலையை உருவாக்குவது" என்பதே கற்றலின் குறிக்கோளாக வரையறுத்தார்.

**3.5.3.** நமது நாட்டு தேசீய கல்விக்கொள்கையில் (National Policy on Education 1986) கல்வியின் சாராம்சமும், நாட்டின் மேம்பாடு வளர்ச்சி ஆகியவற்றில் பங்கும் பின்வருமாறு விளக்கப்படுகிறது: *கல்வி பண்பாட்டை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கிறது. கல்வி நமது சாசனமைப்புச் சட்டத்தில் புனிதமாகக் கருதப்படும். பொதுநலக்கூட்டுடமை, மதச்சார்பின்மை, மக்களாட்சி ஆகியவற்றைப் போற்றும் வகையில், நாட்டு ஒற்றுமையையும், அறிவியல் மனோபாவத்தையும் சுயபுத்தியையும் சுதந்திரத்தாகத்தையும் அளிக்கும் உணர்வையும் உணரும் அறிவையும் சீராக்கும் பொருளாதாரத்தின் பலநிலைகளுக்கும் தேவையான மனித வளத்தைப் பெருக்கும். நாட்டின் தற்சார்புநிலையை உறுதி செய்யும்*

*ஆராய்ச்சி வளர்ச்சி ஆகியவை செய்வதற்கு ஆதாரமாக அமையும். முழுமையான கல்வி ஓர் ஒப்புயர்வற்ற முதலீடு.*

*கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை* (குறள் 400)

*யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாதவாறு* (குறள் 397)

*அறிவு அற்றம் காக்கும் கருவி செருவார்க்கும்*
*உள் அழிக்கல் ஆகா அரண்.* (குறள் 421)

என்ற குறட்பாக்கள் இங்கு ஒப்பு நோக்கத் தக்கவை.

**3.5.4.** மேலும், பொதுவாக மக்கள் பார்வையில் கல்வி குறித்த சிந்தனைகள் பின்வருமாறு: கல்வி என்பது ஞானத்தைப் பெறுவதற்காகத் தனி மனிதனின் தேடுதல், கல்வி மனிதனை அறியாமைத் தளைகளில் இருந்து விடுவிக்கும், தன்னை அறியச் செய்யும். பண்படுத்தும், யதார்த்த உலகில் உள்ள வன்முறையை எதிர்க்கும் துணிவையும், வாழும் திறனையும் கல்வி அளிக்கும், கல்வி படைப்புத் திறனையும் புத்திசாலித்தனத்தையும் வளர்க்கும், சிந்தனையைச் சீராக்கி பேச்சிலும் எழுத்திலும் தெளிவை உருவாக்கும்; கற்றவனை அறிவுடையவனாக்கும், அறிவை ஊட்டுவதுடன் சிந்தனை சக்தியைப் பெருக்கும்.

**3.5.5.** ஒவ்வொரு சமுதாயமும் தனது நாட்டின் வளர்ச்சி, நிகழ்காலத் தேவைகள் எதிர்பார்ப்புகள், தனது பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தனது கல்விக் கொள்கையை வகுக்கும். நிகழ்காலத் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் மாறும்போது கல்விக் கொள்கையும் மாறும்.

**3.5.6.** கல்விக்கொள்கையின் முக்கிய அம்சம் கற்பித்தலின் குறிக்கோள். குறிக்கோள்கள், அவற்றை எட்டுவதால் கிடைக்கும் பயன்களைப் பொறுத்து உருவாக்கப்படுகின்றன. குறிக்கோள்கள் வகுத்த பின்னர், இன்றையச் சூழல் என்ன ? குறிக்கோள்களை அடைய என்னென்ன வசதிகள் வேண்டும் ? என்ன செய்ய வேண்டும் ? என்பனவற்றை வரையறுக்க வேண்டும். குறிக்கோள்களை அடையும் முயற்சிகளுக்குத் தடைகள் யாவை ? கல்விச் சூழலில், மாணவர் நிலை என்ன ? அவர்கள் கற்கும் திறன் எவ்வாறு உள்ளது ? என்னென்ன வகையான கற்பிக்கும் முறைகள் உள்ளன ? அவற்றில் எவற்றை எவ்வாறு

கையாள்வது ? எப்படிக் கற்பித்தால் பலன் மிகுதியாக இருக்கும் ? ஆக மொத்தம் மாணவர் குறித்த முழுத் தகவல்கள் இருந்தால்தான் கற்பித்தல் பயன்தரும்.

**3.5.7.** இந்த *அடிப்படையில் பள்ளிக் கல்வியின் பயன்களைப் பின்வருமாறு சுருக்கமாக* பட்டியலிடலாம்:

- தான் அங்கம் வகிக்கும் சமுதாயத்தின் மற்ற அங்கத்தினருடன் தொடர்பு கொள்ளவும் தானாக தினசரி செயல்பாடுகளில் ஈடுபடவும் தேவையான மாநில மொழி அறிவு பெறுதல்.
- தன் சுற்றத்தாரின் , தன் சமூகத்தின் பண்பாட்டையும், மரபையும், அதற்கும் நமது நாட்டின் பண்பாடு, மரபு, ஆகியவற்றுடன் உள்ள தொடர்பையும் அறிதல், புரிந்துகொள்ளுதல். நமது நாட்டு பண்பாடு, மரபு ஆகியவற்றுக்கு உலக அளவில் மனித சமுதாய பண்பாடு மரபுகள் ஆகியவற்றுடன் உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளுதல்.
- நற்கருத்துக்களைக் கற்று சமுதாயத்திற்குப் பயனுள்ள நல்லதொரு குடிமக்களாக மலர்தல்.
- வாழ்க்கைக்குத் தேவையான பொருள் ஈட்டுவதற்காக ஒரு வாழ்க்கைத் தொழில் கல்வியும் பயிற்சியும் பெறவோ, அல்லது தொழில் நுட்பக் கல்வி கற்கத் தேவையான அறிவைப் பெறுதல்.

# 4. கற்றலும் அறிவு வளர்ச்சியும்.

## 4.1. அறிமுகம்

குழந்தைகளுக்கு இயற்கையாகவே கற்கும் திறன் உண்டு. பொதுவாக குழந்தைகள் எதைக் கண்டாலும் அதைப் பற்றி தெரிந்து கொள்ள ஆர்வமுடன் செயல்படும். புதியனவற்றைக் காண முயலும். தொடர்ந்து சிந்தித்துக் கொண்டு வினாக்களை எழுப்பி அவற்றுக்கான தீர்வுகளைக் காண முயலும். குழந்தைகள் துடிப்புடன் பலவற்றையும் புரிந்து கொள்ள முயலுவதோடு தம் சமுதாய அறிவையும் பண்பாட்டையும் புரிந்து கொள்ளும் திறனை இயற்கையாகவே பெற்றுள்ளனர். மேலும் தம் செயற்பாடுகள் மூலம் தமது அறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர். ஆகவேதான் கற்போரை முதன்மைப்படுத்திய கல்வி போற்றப்படுகிறது. இத்தகைய கல்வியில் குழந்தைகளின் அனுபவம் முக்கியமானது என்று கருதப்படுகிறது. அதாவது மாணவரின் உலகைப் புரிந்துக் கொள்ள வேண்டும் என்ற இயல்பான ஆர்வத்தை வளர்த்து அவ்வழியிலேயே அவர்கள் அறிவைப் பெருக்க வேண்டும். கற்றல் என்பது வகுப்பறையில் அமர்ந்து ஆசிரியர் சொல்வதைக் கேட்பது மட்டும் அல்ல. கற்றல் என்பது கல் என்ற வேர்ச் சொல்லில் இருந்து பிறந்தது. கல் என்றால் தோண்டுதல் என்று பொருள். கற்றல் என்பது மறைந்து இருப்பதை வெளியில் கொண்டு வருதல். ஆகவே அது தானே முயன்று ஆசிரியர், மாணவர் போன்ற மற்றவருடன் இணைந்து உலகைப் புரிந்து கொள்ளுதல் ஆகும். பொதுவாக நல்ல மாணவன் என்பவன் நன்னடத்தை உள்ளவனாகவும் ஆசிரியர்கள் தன்னைவிட மேலான கல்வி அறிவு பெற்றவர்கள் என்பதால் அவர்கள் அறிவைப் போற்றுபவனாகவும், பொதுவாக ஆசிரியர் சொற்படி நடப்பவன் என்றாலும்

*எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு* (குறள் 423)

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க எதையும் ஆராய்ந்து ஏற்றுக் கொள்பவனாகவும், பல நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ளும் ஆவல் உள்ளவனாகவும் இருப்பான்.

## 4.2. கற்றல் சூழல்

**4.2.1.** குழந்தைகள், தாங்கள் கல்வி கற்பதை மதிக்கும் சூழலில்தான் கற்பதில் ஆர்வம் கொள்வார்கள். சமுதாயம் அவர்கள் கற்பதை மதிக்கிறது எனில் பள்ளிக்காக அவர்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலை இருக்காது. இதை உணர்ந்த நமது அரசு குறிப்பிட்ட

தூரத்திற்குள் பள்ளிகள் அமைய வேண்டும் என்று நிர்ணயித்துச் செயல்படுத்தி வருகிறது. வகுப்பு நேரத்திற்குள் கற்பிக்கும் அளவுக்கே பாடத்திட்டம் வகுக்கப்படவேண்டும். அத்தகைய திட்டம் செயல்படுத்தினால் கனமான புத்தகப் பை தேவைப்படாது. கல்வி கற்கத் தேவையான தரமான பாடநூல்கள், துணை நூல்கள் , நூலகம், அடிப்படை வசதிகள் ஆகியவை இருக்க வேண்டும். கற்பதில் பின் தங்கிய மாணவர்க்குத் தண்டனை வழங்காது, அவர்களும் மற்ற மாணவர்க்கு இணையாக அறிவைப் பெற தனிக் கவனம் செலுத்த வேண்டும்; கற்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். வகுப்பறைகள் காற்றோட்டமாகவும் மாணவர் யாவரும் வசதியாக அமர்ந்து பாடம் கேட்குமாறும் அமைக்கப்பட வேண்டும். மாணவர்கள் விளையாடத் தேவையான திடல்கள் வேண்டும். விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். கழிப்பறை போன்ற மற்ற வசதிகள் யாவும் தேவையான அளவு வேண்டும். இவை யாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

**4.2.2.** நாம் சுதந்திரம் பெற்ற பின்னர் அரசு மதிய உணவுத் திட்டம், உள்கட்டமைப்பு வசதி மேம்படுத்தல், புதிய முறைகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. பாடத்திட்டத்தில் மாணவர் ஆயுள் முழுமைக்கும் தேவையான செய்திகள் யாவற்றையும் திணிக்க முயலாது, குறைந்தபட்ச அளவுக்கே பாடத்திட்டத்தை அமைத்து, அதைக் கற்பிக்கும் போது மாணவர் தொடர்ந்து தனக்கு தேவையானவற்றைத் தானே கற்கும் மனநிலையை உருவாக்க வேண்டும். கல்வி கற்க அவசியமான எல்லா வசதிகளும் உருவாக்கி அவற்றை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். தேர்வு சம்பந்தப்பட்ட மன அழுத்தம் வாராது, நம் மாணவர்கள் காக்கப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலையே இன்றையத் தேவை.

**4.3 பள்ளிக்கல்வியும் மாணவர் வளர்ச்சியும்**

**4.3.1.** மானிடப் பிறவியில் பள்ளியில் கல்வி கற்கும் காலம்தான் உடல் அளவிலும், மனஅளவிலும் வேகமாக வளரும் காலம். மாணவர் உடல், உள்ள வளர்ச்சிக்கேற்பவும் அவர்தம் தேவைக்கேற்பவும் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும்.

**4.3.2.** 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்பார் திருமூலர். (திருமந்திரம் பாடல் 708 வரி 4) உயிர் சார்ந்த வளர்ச்சி யாவற்றிற்கும் உடல் வளர்ச்சியே ஆதாரம்.. உடல்

வளர்ச்சிக்கு குழந்தைகள் உடற்பயிற்சி, விளையாட்டுகள், யோகாசனம், கலைகள், நடனங்கள் இவற்றில் பங்கேற்க வாய்ப்பு அளிக்க வேண்டும். ஆனால் எல்லோரும் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் அது சில மாணவருக்கு மன அழுத்தத்தை உருவாக்கவும் கூடும். உடற்பயிற்சி, விளையாட்டுகள் போன்றவற்றில் ஈடுபாடு உடைய மாணவர் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள விரும்பினால் அவர்களுக்குத் தேவையான வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தருவது பள்ளியின் கடமை.

**4.3.3.** சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் இருந்து வந்தாலும் அனைவரும் கற்கத் தகுந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கிடையே உள்ள மாறுபாடுகளை ஒரு சிக்கலாக நோக்காது பலதரப்பட்ட மாணவர்களுக்குக் கற்பிக்கும் வாய்ப்பாகக் கருதி எல்லாக் குழந்தைகளும் தரமான கல்வி பெறத்தக்க வகையில் கலைத்திட்டத்தை உருவாக்குவது பள்ளிக்கல்வி நிர்வாகத்தின் பொறுப்பாகும். மத, மொழி, இன, பால் வேறுபாடின்றித் தங்கள் பகுதியில் வசிக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் மாநில பள்ளிக்கல்வி வாரியம் வகுத்த கலைத் திட்டத்தை செயல்படுத்துவது அனைத்துப் பள்ளிகளின் கடமை ஆகும். பள்ளிக்கு அனுமதி அளிக்கும் ஆணையில் இக்கடமை குறிப்பிடப்பட வேண்டும்.

### 4.4. கலைத்திட்டம் உருவாக்கிச் செயற்படுத்தல்

**4.4.1.** கல்வி அமைப்பின் நோக்கங்களை நிறைவேற்ற உதவும் ஒரு கருவியே கலைத்திட்டமாகும். கல்வி நோக்கங்கள் தேசிய நோக்கங்களின்று பெறப்படுகின்றன. தேசிய நோக்கங்கள் அரசியல் சட்டத்தினால் வரையறுக்கப்படுகின்றன. சமத்துவம், சமநீதி, மக்களாட்சி, தற்சார்பு ஆகியவற்றைக் கல்வி நோக்கங்களாக தேசிய கல்விக் கொள்கை அடையாளம் காட்டியுள்ளது. அது போலவே, மாநிலக் கல்விக் கொள்கைக்கான அடிப்படைகளை முனைவர் மால்கம் ஆதிசேஷையா முதல் தமிழ்நாட்டுத் திட்டக் குழுவின் கல்வி உறுப்பினராக இருந்த பொழுது "கற்கும் சமுதாயத்தை நோக்கி" (Towards a learning society) என்ற பெயரிட்ட அறிக்கையில் விவரித்துள்ளார். தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தமிழ்நாட்டு வளர்ச்சி, தமிழர் கலை இலக்கியம் ஆகியவற்றைப் பேணுதலும் வளர்த்தலுமே தமிழ்நாட்டுக் கல்வி அமைப்பின் குறிக்கோளாகக் கூறப்பட்டுள்ளன. தேசிய, மாநிலக் கல்வி நோக்கங்களைச் செயல்படுத்தும் வகையிலும் பள்ளிக் கல்வியின் பயன்கள் பெற இயலும் வகையிலும் கலைத்திட்டம் அமையவேண்டும்.

**4.4.2.** மத்திய கல்வி ஆலோசனை வாரியம் (CABE) " பத்தாண்டு கல்வி" என்ற வெளியீட்டில் பள்ளிகல்வி அமைப்புப் பற்றி விரிவாகக் கூறியுள்ளது. பல மாற்றங்களைக் கண்ட அத்திட்டம் தற்பொழுது " தேசிய பள்ளி கல்வி வரைவு 2005" என்ற புதுப்பிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களின் கல்வித்திட்டங்கள் அதனைச் சார்ந்து இருத்தல் வேண்டும்.

**4.4.3.** பாடங்கள், பாடத்திட்டங்கள், வகுப்பறைக் கற்றல் – கற்பித்தல், செயல்பாடுகள், தேர்வும் மதிப்பீடும், பாட நூல்கள் ஆகியவை கலைத்திட்டத்தின் பகுதிகளாகும், சமச்சீர்க் கல்விக்கு வித்திடுவதும் கலைத்திட்டமே. வெவ்வேறு முறைகளிலுள்ள கல்வித்திட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு பொதுவான கலைத்திட்டம் உருவாக்குவது சமச்சீர்க் கல்வியை நடைமுறைப்படுத்த உதவும்.

**4.4.4.** மாணவர்கள் ஐயங்களை எழுப்பவும், அவர்களது சொந்த வார்த்தைகளிலேயே பதில் கூறவும் ஊக்குவிப்பது, அவர்கள் மனப்பாடம் செய்து பாடப்புத்தகத்தில் உள்ள சரியான பதிலைக் கூறுவதைவிட மேலானதாகும். இவ்வகையாகக் கற்பித்தால் மாணவர்கள் தமது வெளி உலக வாழ்க்கையோடு தாம் கற்றதைத் தொடர்புபடுத்திக் கற்றதை நன்றாக மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவும், பயன்படுத்தவும் கற்ற வழியில் வாழவும் உதவும். 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்றார் வள்ளுவர் (குறள் 351 பகுதி ).

**4.4.5.** உடன் பயிலும் மாணவருடனும், பெரியோருடனும், மற்றவர்களுடனும் கற்றதைக் குறித்துப் பேசுவதும் விவாதிப்பதும் , கலந்துரையாடுவதாலும், கல்வித்தரம் உயரும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இத்தகைய உரையாடல்கள், குழுக்களாகச் செயல்படுவது, கலைகள், கைத்தொழில்கள் ஆகியவற்றைக் கற்றுக் கொள்வது இவையாவும் கலைத்திட்டத்தின் பகுதிகளாக அமைத்து செயற்படுத்த வேண்டும்.

**4.4.6.** செயல் வழியில் கற்பித்தல் மாணவர் கற்பவற்றை முழுமையாகப் புரிந்து கொண்டு மனத்தில் பதிய வைத்துக் கொள்ளப் பெரிதும் உதவும். இயற்கை நிகழ்வுகள், விதை முளைத்தல் போன்றவற்றை நோக்குவது. தான் கண்டவற்றை நாடகமாக உருவாக்கி

நடிப்பது, அன்றாட நிகழ்ச்சிகளைக் குறித்து மாணவரிடையே விவாதிக்கத் தூண்டுவது போன்ற அனுபவங்கள் தேவை. செயல்வழிப் பயிற்சிக்குப் பின், பெற்ற அனுபவங்கள் குறித்து எழுதுவது போன்ற செயற்பாடுகள் தேவை. ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடத்தையும் மாணவர் பெற்ற அனுபவத்தையும் தொடர்புபடுத்தி மாணவர் அறிவை வளர்க்கலாம். மேலும் காலப்போக்கில் செயல் வழியாக மொழித் திறனையும் பெருக்க முடியும் என்பதால், செயல்வழிக் கல்வி முழுமையான கல்வி அறிவு பெற பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. ஆகவே செயல்வழியில் கற்பித்தலைக் கலைத்திட்டத்தில் ஒரு பகுதியாக அமைத்துச் செயற்படுத்த வேண்டும்.

**4.4.7.** வகுப்பறையில் மாணவர்கள் ஆசிரியர் சொல்வதைக் கேட்பவர்களாக மட்டுமே இருப்பது உசிதமல்ல. வகுப்பறையில் ஆசிரியர் மாணவருடன் கலந்துரையாட வேண்டும். ஒவ்வொரு மாணவரும் எடுத்துக் கொண்ட பாடத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதைப் பற்றி அவர்கள் பேச, விவாதிக்க ஊக்கப்படுத்தும் வகையில் ஆசிரியர் பாடம் நடத்த வேண்டும். இவ்வாறு பாடம் கேட்கும்போது, மாணவர்கள் பலவிதமான கண்ணோட்டங்களையும் புரிந்து கொள்வார்கள்.

**4.4.8.** சில சாதியினர், ஊனமுற்றோர், கிராமங்களில் வாழும் மக்கள் ஆகியோரும் அவர்களைப் போன்றோரும் இயற்கையிலேயே தாழ்ந்தவர்கள் என்றும், பிறவியிலேயே கல்வி கற்கும் திறமையில் வேறுபாடுகளுடனேயே மக்கள் பிறக்கிறார்கள் என்றும், ஒரு நம்பிக்கை நம் நாட்டில் ஒரு சிலருக்கு வேரூன்றி உள்ளது. எவ்வளவுதான் கல்வி கற்றாலும் அவர்களுக்கு இந்த நம்பிக்கை, அதாவது தான் உயர்ந்தவன், மற்ற சில மக்களுக்கு கற்கும் திறன் குறைவு என்ற நம்பிக்கை தொடர்கிறது. இந்த நம்பிக்கை அடிப்படை இல்லாதது. ஒவ்வொரு குழந்தையும் தனது திறமைகளை வளர்த்துக் கொள்ளும் என்பதே உண்மை. பள்ளியில் வந்து சேரும் மாணவர்கள் பல வகையான பண்பாடு, பொருளாதார நிலை, சமுதாயச் சூழலில் இருந்து நமது பள்ளிகளுக்கு வருகின்றனர் என்பதால் அவர்களுக்கு, பள்ளியில் சேரும்போது பெற்றிருக்கும் அறிவு மாறுபட்டு இருக்கும் என்றாலும் அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்கத் தகுந்தவர் என்ற கருத்தை நமது ஆசிரியர்களுக்கு உணர்த்த வேண்டும்.

**4.4.9.** நமது பள்ளிகளில் முதல் தலைமுறை பள்ளிக் கல்வி கற்கும் மாணவர் சிலர் உண்டு. அவர்கள் படிக்கவும் எழுதவும் அவர்கள் வீட்டில் எந்தவித உதவியும் இல்லாததால் பள்ளியையே நம்பிக் கற்கின்றனர். இவர்களுக்குக் கல்வி கற்பதில் ஆர்வம் உருவாக்குவதும், இவர்கள் பள்ளியின் கலாசாரத்தைப் புரிந்து கொள்ளச் செய்வதும் ஆசிரியரின் கடமை ஆகும். அதாவது பல விதமான கற்பிக்கும் முறைகளையும் ஆசிரியர் அறிந்து பயிற்சிபெற்று இருக்க வேண்டும். பலவகைப்பட்ட முறைகளில் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களுக்கு ஏற்ற முறையில் கற்பிக்க வேண்டும். மேலும், குடும்பச் சூழல் காரணமாக, சில மாணவர் பள்ளிக்குத் தாமதமாக வரலாம், அடிக்கடி பள்ளிக்கு வராமல் போகலாம்; வகுப்பில் பாடங்களைக் கேட்பதில் கவனம் குறையலாம். இத்தகைய மாணவரும் மற்ற மாணவர்கள் போல தரமான கல்வி கற்கும் வகையில் கலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

**4.4.9.**முழுமையாக நோக்கும்போது தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட கல்வித் திட்டத்தை ஆசிரியர், தான் கற்பிக்கும் மாணவர்க்கு தக்க முறையில் அதாவது அவர்கள் எம்முறையில் கற்பித்தால் விளங்கிக் கொள்வார்களோ அம் முறையில் அவரவர்க்குத் தேவையானவற்றைக் கற்பதில் உதவி, எல்லா மாணவரும் சிறப்பாக அறிவு பெற உதவும் வகையில் அல்லது முறையில் கற்பிக்க வேண்டும்.

### 4.5 அறிவும், அறிவைப் பெறுதலும்

**4.5.1.** அறிவைப் பெற ஒரு மொழி தேவை. மனித இனம் ஒவ்வொன்றும் தமக்கென்று ஒரு மொழியை உருவாக்கித் தமது அனுபவங்களைத் தொகுத்து அளிப்பதன் மூலம் அடுத்து வரும் தலைமுறை அதைப் பயன்படுத்தி தன் அனுபவத்தையும் இணைத்து அறிவைப் பெருக்கி வருகிறது.

**4.5.2.** குழந்தைகளின் அடிப்படைத் திறமைகளே அறிவைப் பெறுவதற்கும் விழுமங்களையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்ளவும், ஊற்றுக் கண்களாக உள்ளன. அவ்வடிப்படைத் திறமைகள் பின்வருமாறு: மொழியை பயன்படுத்தும் அறிவு, சமுதாயத்துடன் தொடர்பை உருவாக்கிப் பேணும் திறமை; பணிகளைச் செய்யும் திறமையும் செய்யத் துணிதலும்.

**4.5.3.** சமுதாயம் வாழவும் தொடரவும், பலவிதமான செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. அத்தகைய செய்ற்பாடுகளை மேற்கொள்ள பலவகைப்படும் அறிவு தேவை. கைத்தொழில் செய்ய பயிற்சி தேவை. கைகளைப் பயன்படுத்தித் தேவையான பணிகளை ஆற்ற பயிற்சி தேவை. வாழ்க்கைத் தொழில் கல்விக்கு பலவகையான வாய் வார்த்தையே போதுமானதாக இருக்கலாம். வழிவழியாகச் செய்யப்படும் பல கைத்தொழில்களுக்கும் வாழ்க்கைத் தொழில்களுக்கும் நூல்கள் என்று ஏதும் இல்லை என்றாலும், இவையாவும் ஒரு வகையில் அறிவு வளமே.

**4.5.4.** படிப்பறிவு கற்கும் பாடத்திற்கு ஏற்ப பல வகைப்படும். கணிதம், அறிவியல், சமூக அறிவியல், கலை, அரசியல், நீதிநூல், தத்துவ இயல் இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே கோட்பாடுகள், கற்கும் முறை, துறை சார்ந்த சொற்கள், விளக்கங்கள் இன்ன பிற உண்டு. இவற்றை அறிந்தால்தான் இவற்றின் வழி, துறைசார்ந்த அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்.

**4.5.5.** சுருக்கமாகச் சொல்வதென்றால் அறிவு பல வகைப்படும். அவற்றைப் பெருக்கிக் கொள்ள பலவகையான சொற்கள், விளக்கங்கள் முறைகள் ஆகியவற்றைக் கற்க வேண்டும்; பயிற்சிகள் பெற வேண்டும். இக்கல்வியைப் பெற பல வகையான முறைகள் உண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு துறை அறிவைப் பெற வெவ்வேறு முறைகள் ஏற்புடையதாக இருக்கக் கூடும். ஆகவே, ஒரு மாணவனுக்கு ஒரு தனிப்பட்ட துறை அறிவை வளர்க்க அம்மாணவனுக்கும் துறைக்கும் ஏற்புடைய கற்பிக்கும் முறையைப் பயன்படுத்தினால் கல்வி சிறக்கும். ஆகவே கற்பிக்கும் ஆசிரியர் மாணவர்க்கும் சூழலுக்கும், கற்பிக்கும் பாடத்திற்கும் ஏற்ற முறையில் கற்பிக்க வேண்டும்.

### 4.6. பொது அறிவும், உள்ளூர் விவரங்களும்.

**4.6.1.** பொது அறிவும், அறிவியலும் தொழில் நுட்பமும் வளர்ந்து வரும் இக்காலக் கட்டத்தில் பள்ளிக் கல்வியில் எதைச் சேர்ப்பது எதை விடுவது என்று தீர்மானிப்பது மிகவும் கடினம். அதே சமயம் உள்ளூர் தொடர்பான செய்திகள் விவரங்களையும் அறிந்திருப்பதும் அவசியமாகிறது.

**4.6.2.** பிற்கால வாழ்க்கைக்கு அல்லது மேற்படிப்புக்குத் தேவையான யாவற்றையும் ஒவ்வொரு மாணவரும் அறிந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.. தவறான கருத்தில் தேவையில்லாத பாடப் பகுதிகளைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். மேலும் சிலவற்றைப் பற்றித் தெரிந்திருந்தால் போதுமானது. மேற்கொண்டு விவரங்களைப் பயிலுபவரே தேவையான போது கற்றுக்கொள்ள முடியும் என்பதால், அத்தகைய பாடங்களில் அறிமுகப்பகுதி மட்டுமே போதுமானது. அதற்கு மேல் விவரங்களைப் பாடத்திட்டத்தில் திணிக்க வேண்டியதில்லை.

**4.6.3.** பாடத்திட்டம் மாணவனின் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். இதன் பொருள் மாணவர் விரும்புவதைப் படிக்கலாம். செய்யலாம் என்பதல்ல. எதைக் கற்பிக்க வேண்டுமோ, அதைக் கற்பிக்க வேண்டும். அதைக் கற்பிக்கும் முறை மாணவரின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், பாடத்தைக் கற்கச் செய்வதாகவும் அமைய வேண்டும்.

**4.6.4.** பாடத்திட்டம் பொருள் பொதிந்ததாக இருக்க வேண்டும். அதாவது பாடங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கத் தகுந்ததாகவும் கருத்துள்ளவையாகவும் இருக்க வேண்டும்.

**4.6.5.** சுருங்கச் சொல்வதென்றால், பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும் பாடங்கள் யாவும் வாழ்க்கைக்கு அல்லது மேற்படிப்புக்குத் தேவையானவையாகவும், மாணவரின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், பொருண்மைச் சிறப்புடையதாகவும் இருக்க வேண்டும்.

**4.6.6.** நம் மாநிலத்தில் ஒவ்வொரு பகுதியிலும் ஒட்டு மொத்தமாகவும், பல்லாயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர், தங்களது அனுபவ வாயிலாகவும் கல்வி கேள்வி ஞானத்தாலும் பெற்ற அறிவை, எழுத்து வடிவிலும், வாய்மொழி வழியாகவும் விட்டுச் சென்றுள்ளனர். இவை இன்று நாம் வகுத்துள்ள கணிதம், அறிவியல், சமூக அறிவியல் என்ற அறிவியல் பகுப்பு முறையில் எழுதப்படவில்லை, சொல்லப்படவில்லை என்றாலும், இவையாவும் மிகுந்த பயன் தருபவை என்பதில் ஐயமில்லை. இவை போற்றிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். இவை பள்ளிக் கல்வியில் இடம் பெற வேண்டும். இவற்றைக் கற்கும் இளைஞர்கள் நம் முன்னோரின் அறிவைப் போற்றுவதுடன் நம் மொழி நாடு குறித்து பெருமை கொள்வர். அது தன்னம்பிக்கையை வளர்க்கும் அவர்கள் வாழ்வு சிறக்க வழி வகுக்கும்.

**4.6.7.** உலக அளவில் பொதுவான அறிவும், நமது நாட்டு அளவில் பொதுவான அறிவும் நமது மாநில, வாழும் பகுதி அளவில் அறிவும் பெறும் மாணவர் தமது அனுபவத்தால் அறிவை உருவாக்கவும் பெருக்கவும் திறமை பெறுவர். கல்வி பெறுவதன் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றான அறிவைப் பெருக்கும் செயல்களில் மாணவர் ஈடுபடும்போது கல்வியின் தரம் உயரும் என்பதில் ஐயமில்லை. ஆதலால், தரமான பாடத்திட்டத்தில் உலக அளவில் பொது அறிவுடன், நமது நாடு மாநிலம் பகுதி விவரங்களையும், அறிவையும் உள்ளடக்கி இருக்க வேண்டும்.

**4.7. கலைத்திட்டமும் சமுதாயமும்.**

**4.7.1.** இன்றையச் சூழலில் மாணவர்களின் பெற்றோர் அல்லது சமுதாய மக்கள் சிலர் பாடத்திட்டத்தில் சிலவற்றை ஏன் சேர்த்தீர்கள் ? என்றோ, ஏன் சேர்க்கவில்லை என்றோ கேட்கக் கூடும். அதற்குத் தகுந்த பதிலைப் பள்ளி நிர்வாகமும், பள்ளி ஆசிரியர்களும் சொல்ல வேண்டியது, அவர்தம் கடமை. மற்றவர்களை நம்பச் செய்ய வேண்டும் என்றால் தான் அதை முழுமையாக அறிந்து இருக்க வேண்டும். ஆகவே ஆசிரியர்களும் நிர்வாகத்தினரும் பாடத்திட்டம் கலைத்திட்டம் பற்றி சிந்தித்து முழுமையாக புரிந்து கொண்டு செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**4.7.2.** உள்ளூர் மக்களுடன் ஒரு சுமூகமான உறவை மேம்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி உறுப்பினர்கள் தலைவர் ஆகியோரை, பள்ளிக்கு வரவழைத்து பள்ளியைப் பார்வையிடுவதுடன், மாணவர்களிடம் பேசவும் செய்தால், மாணவர்களுக்கும் உள்ளாட்சி பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும். இத்தகைய செயல்கள் மக்களாட்சியை வலுப்படுத்தும், மாணவர்களையும் நல்குடிமக்களாக உருவாக்கும்.

**4.8. கலைத்திட்டத் தரத்தை மேம்படுத்தல்**

**4.8.1.** குழந்தைகளின் விருப்பு வெறுப்புகள், மொழி அறிவு, சிந்தனைத் திறன், கற்றதற்கு மேல் தானே தன் அறிவை விரிவாக்குதல், பயிற்சித்திறம் ஆகியவை மழலையர் நிலையில் இருந்து பள்ளி இறுதித் தேர்வு வரையில் மிக விரைவாக வளர்கின்றன. ஆகவே தான் இந்தக் காலக் கட்டத்தில் குழந்தைகளுக்கு ஊட்டப்படும் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது.

எனினும் இந்தப் பருவத்தில் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. தெரிந்து கொள்ளவும் முடியாது. ஆகவே தான் கற்பதில் ஆர்வத்தை உருவாக்குவது மிகவும் அவசியம்.

**4.8.2.** குழந்தைகள் மழலையர் பள்ளியில் அல்லது முதல் வகுப்பில் சேரும் முன்னரே நிறைய சொற்களைத் தம் குடும்பத்தாரிடம் இருந்தும், குடும்பத்துடன் தொடர்புடைய மற்றவர்களிடமிருந்தும் அவர்கள் பேசுவதைக் கூர்ந்து கவனிப்பதன் மூலமும் ஒருவர் பேசியதைக் கேட்ட மற்றவர் என்ன செய்கிறார், என்ன சொல்கிறார் என்பதை உற்று நோக்குவதன் மூலமும் தெரிந்து கொண்டிருப்பர். மேலும் தமது வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப சில விழுமங்களையும் அறிந்து இருப்பர்.

**4.8.3.** இந்நிலையில் பள்ளியில் சேர்ந்த போது பலதரப்பட்ட சூழலில் இருந்து வந்த மற்ற மாணவர்களையும் ஆசிரியரையும் கண்டு முதலில் தயங்கினாலும், பிறகு படிப்படியாகப் புதிய சொற்களையும் விழுமங்களையும் கற்றுக் கொள்ளும்; அதன் பண்பாடும் முழு உருவத்தைப் பெறத் தொடங்கும்.

**4.8.4.** மேற்சொன்னவற்றின் அடிப்படையில் கலைத்திட்டத்தில் தரமான அறிவு வளர்ச்சிக்குத் தேவையான உத்திகளில் முக்கியமான சில பின்வருமாறு: சமுதாய யதார்த்தையும் இயற்கைச் சூழலையும் முழுமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் பாடங்கள் உருவாக்கப்பட்டுக் கற்பிக்கப் படுதல்; பல வகையிலும் பெற்ற அறிவுக்கு தான் வாழும் பகுதிக்கும் இன்றைய கால கட்டத்திற்கும் பொருந்தும் வகையில் தொடர்பையும் பொருளையும் உருவாக்குமாறு கற்பித்தல்; பலவிதமான பாடங்களையும் தனித்தனியே கற்பித்தாலும் அவற்றுக்குள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளும் வகையில் பாடத்திட்டத்தை உருவாக்கிக் கற்பித்தல்.; நடுவுநிலைமையுடன் எதையும் ஆராயும் மனப்பாங்கை வளர்த்தல்; ஐயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வகையிலும் தெளிவு பெறுவதற்காகக் கேள்விகள் கேட்பதை ஊக்குவிக்கும் வகையிலும் வகுப்பறைச் செயற்பாடுகள் இருக்க வேண்டும்; வகுப்பறைச் செயற்பாடுகளில் பாரபட்சம் இருக்கலாகாது; ஒவ்வொரு மாணவரும், ஆசிரியர் தனக்கு மட்டுமே கற்பிப்பது போன்ற உணர்வு பெறுமாறு கற்பிக்க வேண்டும்; கற்பனை ஆற்றலையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் வகையில் கல்வி முறை உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.

# 5. பாடத்திட்டமும் பள்ளி நிலைகளும்

## 5.1. அறிமுகம்

**5.1.1.** இந்த அதிகாரத்தில் பாடத்திட்டத்தின் பாடங்கள் பற்றியும் ஒவ்வொரு பள்ளிநிலையிலும், முக்கிய பாடங்களில் எந்த அளவுக்கு தேர்ச்சி எதிர்பார்க்க வேண்டும் என்பது குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

**5.1.2.** நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் சமுதாயத்தில் பலவித மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் மக்கள் எதிர்பார்ப்புகள் பலவிதமாக மாறியும் வளர்ந்தும் உள்ளன. புதிய சமுதாயச் சூழலுக்கு ஏற்றவாறும் மக்களின் தேவைகள் எதிர்பார்ப்புகளுக்குத் தக்கவாறும் பள்ளிப் பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

**5.1.3.** பாடத்திட்டத்தில், மொழிகள், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகியவைகளே முக்கிய பாடங்கள் என்றாலும், இன்றையச் சூழலில் கலைகள், உடற்பயிற்சி, சுகாதாரம், சுற்றுச்சூழல், ஒழுக்கக் கல்வி, அமைதிக்கல்வி, வாழ்க்கைத் தொழில் கல்வி இவை போன்ற பலவும் பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டும். எட்டு ஆண்டுகள் கல்வி கற்ற இளைஞர்கள் சொந்தக் காலில் நிற்கும் மனப்பான்மையுடன் உலக நடப்பை அறிந்தவர்களாக, அமைதியை விரும்புவர்களாக, ஒழுக்கம் உடையவர்களாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பற்றிக் கவலை கொள்பவர்களாக, பொதுவாக நல்ல குடிமக்களாக உருவாகும் வகையில் பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

## 5.2. பள்ளிக் கல்வி வாரியம்

**5.2.1.** பள்ளிக் கல்வியில் இன்று நமது மாநிலத்தில் ஐந்து தனித்தனிப் பாடத்திட்டங்கள் (மாநில உயர் கல்வி, மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்தியன், ஓரியண்டல், நர்சரி ஆகியவை) உள்ளன. சமச்சீர்க் கல்வி முறை வந்த பின்னர் ஒரே திட்டம்தான் இருக்கும் என்பதால், இன்று உள்ள நான்கு தனித்தனிக் குழுமங்கள் தேவை இல்லை. அவற்றுக்கு பதிலாக ஒரு தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்வி வாரியம் அமைக்க வேண்டும்.

**5.2.2.** தமிழ்நாடு மாநில பள்ளிக் (சமச்சீர்) கல்வி வாரியம் ஒரு தலைவர், செயலர், உறுப்பினர்களுடன் செயல்பட வேண்டும். அதன் கடமைகளும் பொறுப்புகளும்

பள்ளிக்கல்வியைப் பொறுத்தவரை ஒரு பல்கலைக்கழகக் கல்விக்குழுவுக்கு உள்ள கடமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் இணையாக இருக்க வேண்டும். பள்ளிக் கல்வி இயக்குநர் அல்லது ஒரு கல்வியாளர் அதற்குத் தலைவராக நியமிக்கப்பட வேண்டும். பொதுவாக பணியில் இல்லாத ஒருவரைத் தலைவராக நியமித்தால் வாரியம் தன்னாட்சியுடன் செயல்பட ஏதுவாக இருக்கும் என்பதால் அத்தகையவரையே நியமிப்பது சிறப்பாக அமையும். அந்நிலையில் பள்ளிக்கல்வி இயக்குநர் அவ்வாரியத்திற்கு உறுப்பினர் செயலராகச் செயல்படுவார். பள்ளிக்கல்வித் துறையில் பணியாற்றும் மற்ற அனைத்து இயக்குநர்களும், இயக்குநர்களுக்கு அடுத்த நிலையில் பணியாற்றும் குறைந்தபட்சம் இரண்டு அலுவலர்களும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். மேலும் மாநிலத்தில் அமைந்த பல்கலைக்கழகங்கள், பள்ளிகளின் ஆட்சிக் குழுவினர், பள்ளித் தலைமையாசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், பள்ளிக் கல்வியில் ஈடுபாடு உள்ள பொதுமக்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், கல்வியாளர்கள் ஆகியோரிலிருந்து ஒரு சிலரும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவ்வாரியத்தின் அமைப்பு இன்றைய மெட்ரிகுலேசன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள், ஓரியண்டல் பள்ளிகள் ஆகியவற்றைச் சார்ந்தவர்களின் பண்பாடும், எதிர்பார்ப்புகளும், விருப்பங்களும் தொடருவதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் அவற்றைச் சார்ந்தவர்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கியவாறு உருவாக்கப்பட வேண்டும். ஆகவே, பலவித நிறுவனங்களைச் சார்ந்த ஒரு சில உறுப்பினர்களாவது தேர்ந்து எடுக்கப்பட்டவர்களாக இருப்பது உசிதம்.

**5.2.3.** இவ்வாரியத்தின் பணிகள் சிறப்பாக நடைபெற கீழ்க்காணும் குழுமங்கள் தேவை:
பாடத்திட்டக் குழுமங்கள்

1. தமிழ்
2. ஆங்கிலம்
3. ஓரியண்டல் மொழிகள்
4. மற்ற மொழிகள்
5. கணிதம்
6. அறிவியல்
7. சமூக அறிவியல்
8. கல்வி சார்ந்த மற்றவை – கலைகள், விளையாட்டு, உடற்பயிற்சி போன்றவை
9. தனிக்கவனம் தேவைப்படுபவை ஆங்கிலோ இந்தியன், ஓரியண்டல் கல்வி

10.தனித் தேவைகள்

11.மேலும் வாரியம் தேவை என்று கருதும் துறைகள் / இனங்கள்

**5.2.4.** தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்வி வாரியம் என்று ஒரு தன்னாட்சி பெற்ற வாரியம் . அதன் கீழ் தேவைப்படும் கல்விக் குழுமங்களும் அமைக்கப்பட்டு அவை உயிர்ப்புடன் செயற்பட அரசு நடவடிக்கை எடுத்தால்தான் சமச்சீர்க் கல்வி முறை வெற்றிகரமாக செயற்படுத்த முடியும்.

**5.3. மொழிப்பாடம்**

**5.3.1.** பள்ளியில் சேரும்போதே குழந்தைகள் வீட்டு மொழி/தாய்மொழி ஆகியவற்றின் பல சொற்களை அறிந்திருப்பார்கள்; உச்சரிப்பு, வாக்கியத்தில் அமைத்துப் பேசுதல் ஆகிய பல திறமைகளுடனும் வருகிறார்கள். மேலும் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு சரியான முறையில் பேசவும் அவர்களுக்குத் தெரியும். இவ்வாறான திறமைகளை சரியான வடிவம் கொடுத்து வளர்ப்பதும் எழுத்துக்களைக் கற்பித்துப் படிக்கவும், எழுதக் கற்றுத் தருவதும் தொடக்கக் கல்வி ஆசிரியரின் தலையாய பணியாகும். மேலும், பள்ளியில் சேரும்போது கொச்சையாகப் பேசும் குழந்தைகளைப் படிப்படியாக தவறின்றித் தாய்மொழியில் பேசக் கற்றுத்தருவதும் , ஐந்தாவது ஆண்டு படிப்பை முடிக்கும்போது, தாய்மொழியில் நல்ல முறையில் பேச, படிக்க எழுத கற்றுத் தருவதும் ஆசிரியரின் கடமை. அதாவது, ஓரளவு தாய்மொழி அறிவோடு பள்ளிக்கு வந்தாலும் முறையாக மொழியைக் கற்றுக் கொள்வது பள்ளியில்தான். தாய்மொழியைக் கற்பிப்பதைப் பற்றி தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005) பின்வருமாறு சொல்கிறது : இலக்கியம் என்பது குழந்தையின் சொந்தக் கற்பனைகளைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். ஒரு கதையை, ஒரு பாடலை, ஒரு கவிதையைக் கேட்ட பிறகு குழந்தையைத் தானாகவே அதுபோன்ற கதை, பாடல், கவிதை வழங்க ஊக்குவிக்க வேண்டும்."

**5.3.2. இரண்டாவது மொழியைக் கற்றல்**

**5.3.2.1.** பல மொழிகள் பேசப்படும் நமது நாட்டில், ஆங்கிலம், ஓர் உலக மொழி என்ற அடிப்படையில் கற்பிக்கப்படுகிறது."நமது நாட்டில் ஆங்கில மொழி அறிவைப் பெறுவது என்பது கல்வி ரீதியில் இல்லாது மக்களின் உணர்வுகளுக்கு அரசியல் ரீதியான பதிலாக அமைந்துள்ளது". என்று தேசிய கலைத் திட்ட வடிவமைப்பு (2005) சுட்டிக்காட்டுகிறது.

மேலும், அதே அறிக்கை " மொழிகளில் உயர் திறமை என்பது எல்லா மொழிகளுக்கும் பொதுவானது. எடுத்துக்காட்டாக, படிக்கும் திறமையைக் கூறலாம். ஒரு மொழியில் படிக்கும் திறமையை வளர்த்துக் கொண்டால், அதே திறமையை, இன்னொரு மொழியிலும் பெறலாம். சொந்த மொழியில் படிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள முடியாதவனால், இரண்டாவது மொழியில் படிக்கும் திறனை அடைய முடியாது" என்று சொல்வதும் நோக்கத்தக்கது.

**5.3.2.2.** ஆங்கிலம் கற்று, ஆங்கில வழி கற்றால்தான் வெளிநாடுகளில் வேலைகள் கிடைக்கும் என்று பொதுமக்கள் பலர் கருதுகிறார்கள். ஆனால் ஆங்கிலம், எல்லோருக்கும் கற்பிப்பது, இரு மொழி வல்லுனர்கள் பலரை உருவாக்குவதும், அதன்வழி நமது நாட்டு மொழிகளை வளப்படுத்தலாம் என்பதுமே பொதுவாக கல்வியாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

**5.3.2.3.** தாய்மொழி, தமிழ் மொழியாக இல்லாத குழந்தைகள், அவர்கள் சூழலுக்கு ஏற்றார் போல சிலர் தமிழையும், தாய்மொழியோடு இணையாகக் கற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும், ஒரு சிலர் ஓரளவுக்குத் தாய்மொழி அறிவு பெற்ற பின்னரே, தமிழைக் கற்கக் கூடியவர்களாக இருக்கக்கூடும் என்பதால் அவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதை ஓரிரு ஆண்டுகள் தள்ளிப் போடலாம். எனினும், அவர்களும் வெகுவிரைவில் மற்றக் குழந்தைகளுடன் தமிழ் கற்கும் திறன் பெற்றுவிடுவார்கள் என்பதால், ஐந்தாவது வகுப்பிற்குள் அல்லது எட்டாவது வகுப்பிற்குள் மற்றக் குழந்தைகளுக்கு ஈடாகத் தமிழ் அறிவு பெறுமாறு கற்பிக்க முடியும்; கற்பிக்க வேண்டும்.

### 5.3.3. மொழிக்கல்வி

**5.3.3.1.** நமது மாநிலத்தில் மொழிக் கல்வியும், பயிற்று மொழி பற்றிய விவாதங்களும் உணர்ச்சி அடிப்படையில் நோக்கப்படுகிறது. எனினும், ஒரு மாநிலத்தில் வாழும் மக்களின் கல்வியில், அம்மாநில மொழியைக் கற்பது, சேர்க்கப்படாமல் இருப்பது சரியல்ல என்ற கருத்து இப்போது பல மாநிலங்களிலும் பரவலாக உள்ளது. ஆகவே பல மாநிலங்களில், மாநில மொழி கற்பது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. இது நியாயம் என்று அம்மாநில உயர்நீதி மன்றங்களும் தீர்ப்புக் கூறியுள்ளன. அந்த வகையில், நமது மாநில அரசும், அண்மையில் ஒரு சட்டம் இயற்றி உள்ளது. (இணைப்பு 5.1. Tamil Nadu Act 13 of 2006)

**5.3.3.2.** நமது மாநிலத்தில் உள்ள கல்வித் திட்டங்களில் இரு மொழிகள் மட்டுமே கற்பித்தாலும், ஓரியண்டல் பள்ளிகளில் மூன்றாவதாக பண்பாட்டு மொழியாக ஒரு சிறப்பு மொழிப்பாடமும் உள்ளது. அவர்கள், சமூக அறிவியல் படித்தாலும் அதில் தேற வேண்டியது அவசியம் இல்லை என்று இப்போது விதி உள்ளது. ஆனால், அவர்களும் சமூக அறிவியலில் தேர்ச்சி பெறுவது நல்ல குடிமக்களை உருவாக்கப் பயன்படும் என்று அவ்வகைப் பள்ளியினரிடையே ஒரு பரவலான கருத்து நிலவுகிறது. மேலும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் ஆங்கில மொழிக்கு ஒரு சிறப்பு இடம் கொடுக்கப்படுகிறது. இச்சூழலில் அனைத்துக் கல்வித் திட்டங்களையும் இணைத்து, பின்வருமாறு மொழிப்பாடங்களை அனைத்து மாணவர்க்கும் கற்பிக்கலாம் என்று இந்தக் குழு பரிந்துரைக்கிறது.

1. தமிழ்
2. ஆங்கிலம்
3. ஓரியண்டல் மொழி /சிறப்புத் தமிழ் / சிறப்பு ஆங்கிலம் அல்லது தாய்மொழி

தாய்மொழி தமிழோ, ஆங்கிலமோ இல்லாதவர் தமது தாய்மொழியைப் படிப்பது அவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. அவர்களில் சிலர் ஓரியண்டல் மொழியைக் கற்க விரும்பினால் தங்கள் தாய்மொழியை கூடுதலாகக் கற்க நேரிடும். இத்தகைய மாணவர்கள் மிகச் சிலரே இருக்கக்கூடும்.

**5.3.3.3.** இந்த வகையான மொழிப்பாடத் திட்டத்தில் ஓரியண்டல் மொழி கற்க விரும்பும் மாணவர் தாம் விரும்பும் ஓரியண்டல் மொழியைக் கற்கலாம்; தமிழிலோ (அல்லது) ஆங்கிலத்திலோ சிறப்பு புலமைப் பெற விரும்பும் மாணவர் தாம் விரும்பும் தமிழையோ, ஆங்கிலத்தையோ சிறப்பாகக் கற்கலாம்; தன்னுடைய தாய்மொழியைக் கற்க விரும்பும் மாணவர்கள் தமது தாய் மொழியைக் கற்கலாம் என்பதால், இத்திட்டம் அனைவருக்கும் ஏற்புடையதாக இருக்கும் என இக்குழு நம்புகிறது. மேலும் மொழிகளைக் கற்பதில் மாணவர்களிடையே மாறுபாடு இருக்கும் என்பதால், மொழிகளைக் கற்பிப்பதில் ஒரு நெகிழ்ச்சி இருப்பது நலம். அதாவது தாய்மொழி தமிழ் அல்லாதவர், அவர் விருப்பத்திற்கேற்ப தம் தாய்மொழியை முதலில் கற்று அதற்குப் பிறகு, அம்மொழி வழியாக மற்ற மொழிகளைக் கற்கச் செய்யலாம். எனவேதான், மொழிகளைக் கற்பிப்பதில் ஒரு நெகிழ்ச்சியைக் கடைபிடிக்கலாம் என இக்குழு பரிந்துரைக்கிறது. எனினும், 5வது வகுப்பு அல்லது 8வது வகுப்பு முடிக்கும்பொழுது, அனைத்து மாணவர்களும், தமிழிலும்,

ஆங்கிலத்திலும் குறிப்பிட்ட தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்து, இம்முடிவிற்கேற்ப பாடத்திட்டங்களை வகுக்கலாம்.

**5.4. கணிதம்**

**5.4.1.** கணிதம் என்பது எண்கள், அவற்றைப் பயன்படுத்துதல், அளவீடு ஆகியவற்றையும், அவற்றுடன் தொடர்புடையவற்றையும் கற்பது என்ற பொதுவான கருத்து நிலவுகிறது. ஆனால், தர்க்க ரீதியான திறன்களை வளர்த்துக்கொள்ளவும் காரண காரியங்களை அறிந்து ஆராய்ந்து மெய்யான முடிவுகளைக் காணவும், தேவையான திறன்களை வளர்ப்பதற்கும், கணிதக்கல்வி பயன்படும். உயர்கல்வி கற்பதற்கும் வாழ்க்கைக்கும் தேவையான முக்கிய திறன்களில் இது ஒன்று என்பதால், இக்கல்வி எல்லா மாணவர்க்கும் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகிறது.

**5.4.2.** இன்றைய கால கட்டத்தில் படிப்பைப் பாதியில் நிறுத்தும் மாணவர்களில், பலர் நிறுத்துவதற்கான காரணங்களில் முக்கியமான ஒன்று, கணிதம் படிப்பதில் உருவாகும் பயமும், அதன் விளைவாக நேரும் தோல்வியும். ஆகவே பாடத்திட்டமும் கற்பிக்கும் முறையும் மாணவர்களின் தேவைக்கும் திறமைக்கும் ஏற்றவாறு அமைக்கப்பட வேண்டியது இன்றையத் தேவை.

**5.4.3.** கணிதம் கற்க ஆர்வத்தை உருவாக்க கணித விளையாட்டுகள், புதிர்கள், கதைகள் மூலமாக அன்றாட வாழ்வுக்கும் கணிதத்திற்கும் உள்ள தொடர்பையும் மற்றப் பாடங்களுக்குள்ள தொடர்பையும் விளக்குவது மிகுந்த பயன் அளிக்கும். கணிதத்தில் ஆர்வம் உருவான பின்னர் கணித விதிகள் தத்துவங்கள் நிரூபணங்கள் ஆகியவற்றைக் கற்பிக்கலாம். "ஒவ்வொரு நிலையிலும் கணிதம் கற்பிப்பதன் நோக்கம், பாடத்திட்டம் ஆகியவை அந்த அந்த நிலையில் மாணவரின் வயதுக்கும் திறமைக்கும் ஏற்ப அமைக்கப்பட வேண்டும்" என்று தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005) வலியுறுத்துவதை இக்குழு செயல்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கிறது.

**5.5. கணினி அறிவியல்**

பெரும்பாலான நாடுகளில் பள்ளி நிலையிலேயே கணினி கல்வி கற்பிக்கப்படுகிறது. நமது இளைஞர்களும் அன்றாட வாழ்க்கையிலும் மேற்படிப்பதற்கும் தேவையான

கணிப்பொறித் திறமைகளை வளர்த்துக் கொள்ளுமாறு கணினி கல்வி கற்பிக்க வேண்டியது இன்றைய சூழலில் கட்டாயம். ஆகவே கணிப்பொறி பயன்பாடு பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டும். மூன்றாம் வகுப்பு முதல் கணினிக் கல்வி அனைத்து மாணவர்களுக்கும் கற்றுத் தருதல் வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தானே கணிப்பொறியை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் உரிய பயிற்சிகளும் தரப்பட வேண்டும். கணிப்பொறியுடன் இணைந்த இன்டர்நெட் பயன்பாடும் தொடக்கப் பள்ளி நிலையிலிருந்தே அறிமுகப்படுத்த வேண்டும்.

### 5.6. அறிவியல்

**5.6.1.** அறிவியல் துறை என்பது ஓர் உயிரோட்டமுள்ள தொடர்ந்து வளர்ந்து வரும் துறை. ஆகவே எவ்வளவு கற்பிப்பது, எதைக் கற்பிப்பது என்பதைத் தீர்மானிப்பது கடினம். எவ்வளவு ஆழ்ந்த பார்வையும் எந்த அளவுக்கு அகன்ற பார்வையும் தேவை என்பனவற்றைக் கணித்து, மாணவரின் வயதுக்கேற்ற விவரங்கள் உள்ளடக்கிய, பாடத்திட்டத்தை எளிமையாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் கற்பிக்க வேண்டும். அறிவியல் சமுதாயத்திற்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை உணர்த்த வேண்டும். அதற்கு மாணவரின் சூழலைப் பொறுத்து பாடத்திட்டம் அமைய வேண்டும். அறிவியல் பாடத்திட்டத்தை மாணவரின் சூழலைப் பொறுத்து உருவாக்கி, புதியவற்றைப் படைக்கும் ஆற்றலை வளர்க்கும் வகையிலும் அவ்வறிவு சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துமாறும் கற்பிக்க வேண்டும்.

**5.6.2.** " அறிவியல் பாடத்திட்டம் சமுதாய மாற்றத்தை உருவாக்க ஒரு கருவியாக இருக்க வேண்டும். சமுதாய ஏற்ற தாழ்வுகளைக் களைவதாக இருக்க வேண்டும். பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரையறைக்குள் பல பாடப்புத்தகங்கள் எழுத ஊக்குவிக்க வேண்டும்" என்று தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005) கூறுகிறது. இவ்வாறு பல பாடநூல்கள் இருக்குமானால், ஒவ்வொரு வகையான மாணவர்க்கும் ஏற்ற புத்தகங்கள் உருவாகும் என்பதாலும் பெரும்பாலான மாணவர்களுக்கு பாடநூலே மிக முக்கியமான கல்வி பெறும் கருவியாக அமைந்திருப்பதால் பல பாடநூல்கள் உருவாக்க வேண்டும் என்று இக்குழு பரிந்துரைக்கிறது,

### 5.7. சமூக அறிவியல்

**5.7.1.** சமூக அறிவியல் பயன் தராத பாடம் என்று சிலரால் கருதப்பட்டு இக்கல்விக்கு உரிய இடம் அளிக்க அவர்கள் மறுக்கிறார்கள். ஆனால் சமுதாய, அரசியல், யதார்த்த நிலைகளைப் புரிந்து கொண்டு, ஒருவரை ஒருவர் சார்ந்து வாழவேண்டிய அவசியத்தையும் அறிந்து, நல்வாழ்வு வாழ சமூக அறிவியல் கற்பது அவசியம். இப்பாடம் செம்மையாகக் கற்பிக்கப்பட வேண்டும். மேலும், யஷ்பால் குழு "சமுதாய, அரசியல், யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளும் திறமையை வளர்ப்பதாக சமூக அறிவியல் பாடம் இருக்க வேண்டும்" என்று சொல்வது நோக்கத்தக்கது.

**5.7.2.** மனித மாண்புகளை மாணவர்களிடம் உருவாக்குவதாக சமூக அறிவியல் கல்வி இருக்க வேண்டும். சுதந்திரம், நம்பிக்கை, ஒருவருக்கு ஒருவர் மரியாதை செலுத்துதல், வேற்றுமையில் ஒற்றுமை போன்றவை மனித மாண்புகள் ஆகும். " மனித மாண்புகளுக்கு விரோதமான சக்திகளை எதிர்க்கும் மனவலிமையைஅளிக்கும் வகையிலும், நேர்மையையும் கற்பிப்பதாக சமூக அறிவியல் பாடம் கற்பிக்க வேண்டும்" என்று தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005) கூறுகிறது. சமூக அறிவியல் பாடத்தில் அடங்கும் வரலாறு, புவியியல், அரசியல் அறிவியல், பொருளாதாரம் ஆகியவற்றை மனித மாண்புகளுக்கு விரோதமான சக்திகளை எதிர்க்கும் மனவலிமையையும் வாழ்க்கையில் நேர்மையைக் கடைபிடிக்குமாறும் கற்பிக்க வேண்டும்.

### 5.8 கலையும் கைத்தொழிலும்

**5.8.1.** பல ஆண்டுகளாக பல கல்விக்குழுக்கள் மாணவர்க்கு கலைகள் பயில பள்ளிகளில் பயிற்சி வேண்டும் என்று பரிந்துரைத்து வருகின்றன. ஆனால் கலைகள் கற்பிப்பதில் பெரும் முன்னேற்றம் ஏதும் இல்லை. பொதுவாக, பள்ளி விழாக் காலங்களில் ஒரு சில மாணவர்க்கு சிறு பயிற்சிகள் அளித்து அவர்கள் தம் திறமைகளை வந்திருப்பவர்களுக்காக வெளிப்படுத்தும் அளவுக்குத்தான் பள்ளிகளில் கலைக் கல்வி இடம் பெறுகிறது. இதற்கு முக்கிய காரணம் ஆசிரியர்கள் மட்டுமல்லர்; பெற்றோரும், பள்ளிக்கு செல்வதே மற்ற பாடங்கள் படிக்க மட்டுமே என்று எண்ணுவதே. ஆனால், கலைகள் வழியாக மற்ற பாடங்களைக் கற்கவும், கற்பிக்கவும் முடியும். மேலும், கலைகளில் பயிற்சியோ அல்லது கலைகளை அனுபவிக்கவோ கற்றவர்தான் முழு மனிதராகப் பரிணமிக்க முடியும். மற்றவர்கள் இயந்திரங்கள் போல வாழ்க்கையைக் கழிப்பார்கள். நமது பாரம்பரிய

கைத்தொழில்கள், உள்ளூரிலேயே கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தும் உள்ளூர் தொழில்நுட்பம், இவற்றின் மூலமும் மாணவரின் படைப்பாற்றலை வளர்க்க முடியும். ஆக எல்லாவிதமான கலைகளையும் கற்பிக்க வசதி வேண்டும். நுண்கலைகளான ஓவியம், இசை, வாய்ப்பாட்டு, நடனம் , கிராமிய நடனம் போன்றவைகளையும் மரவேலை, நெசவு வேலை, தையல் போன்ற கைத்தொழில்களையும் கற்பிக்க வேண்டும். இவை பிற்காலத்திலும் கண்டிப்பாக உதவும்.'

**5.8.2.** கலைக்கல்வி கற்பிப்பதில் தனிக் கவனம் செலுத்தினால்தான் நம் இளைஞர்கள் பிற்காலத்தில் மனிதத் தன்மையோடு நல்ல குடிமக்களாக வாழ்வார்கள். கலைகள் மூலம் மற்றப் பாடங்களையும் கற்பிக்க முடியும். ஆகவே, ஆசிரியர் பயிற்சி பாடத்திட்டத்தில் கலைகள் கற்பித்தலும் கலைகள் மூலம் கற்பித்தலும் ஒரு பகுதியாகச் சேர்க்க வேண்டும்.

**5.9. உடல் பயிற்சிக் கல்வியும் உடல் நலமும்**

*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே* (திருமந்திரம் பாடல் 708 வரிகள் 3, 4)

**5.9.8.1.** குழந்தைகள் ஆரோக்கியத்தைப் பொறுத்தே அதனுடைய பள்ளி வருகையும், பள்ளியில் நீடித்தலும், பள்ளிப் படிப்பை முடித்தலும், அமையும். ஆகவே உடலை வளர்க்கும் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் உடற்பயிற்சி, விளையாட்டுகள், யோகாசனம் ஆகியவை பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டும். மேலும், இன்றையச் சூழலில், நமது பள்ளிகளில் படிக்க வருகின்றவர்களில் சில மாணவர்கள், குடும்பத்தில் சமச்சீர் உணவு கிடைக்காத குழந்தைகள் என்பதால் நமது மாநில அரசு அம்மாணவர்களுக்குத் தேவை எனில் சத்துணவு திட்டத்தில் மதிய உணவு அளித்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நல்ல சத்தான உணவு ஏழை எளிய மாணவர்களுக்கும் கிடைக்கிறது. அவர்களது உடல் பேணப்படுகிறது. ஆகவே சத்துணவுத் திட்டம் தொடரப்பட வேண்டும்.

**5.9.2.** பாடத்திட்டத்தின் பகுதியாக ஒவ்வொரு மாணவரும் நாட்டு நலப்பணித்திட்டம் அல்லது தேசிய மாணவர் படை அல்லது சாரண இயக்கம் மற்றும் இதுபோன்ற இயக்கங்களில் ஏதாவது ஒன்றில் சேர்ந்து கட்டாயமாகப் பயிற்சி பெற வேண்டும். யோகாசனப் பயிற்சியும் தவறாமல் அறிமுகப்படுத்தலாம். உடற் பயிற்சி, விளையாட்டுகள் ஆகியவற்றுக்கு நேரம் ஒதுக்கி மாணவர்கள் இவற்றில் பங்கேற்க வாய்ப்பு அளிக்க

வேண்டும். பள்ளிகளில் உருவாக்க வேண்டிய வசதிகள், வாய்ப்புகள் இணைப்பு 5.2ல் குறிக்கப்பட்டுள்ளன. உள்ளூர் விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மேலும், உடற்பயிற்சிப் பாடத்திட்டத்தைப் பற்றிய ஒரு குறிப்பு இணைப்பு 5.3ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் உடற்பயிற்சியை பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளிலும் அனைத்து மாணவர்க்கும் கட்டாயம் ஆக்க வேண்டும் என்பதும் உடற் பயிற்சி ஆசிரியர்கள் பள்ளிகளில் நியமிக்க வேண்டியது குறித்தும், விளையாட்டுப் போட்டிகள் குறித்தும் இவை போன்றவற்றையும் செயற்படுத்துவது இன்றைய காலத்தின் கட்டாயம் என்பது விளக்கப்படுகிறது. மேலும், சுகாதாரம் பற்றிய பாடங்கள் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கற்பிக்க வேண்டும். ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டத்தில் இவற்றைக் கற்பித்தலும் இடம் பெற வேண்டும்.

### 5.10 பணி அனுபவக் கல்வி

**5.10.1.** குழந்தைகள் சிறிய வயதிலேயே வீட்டில் உள்ள பெரியவர்களைப் பார்த்து அந்த வேலைகளைச் செய்ய முயல்வார்கள் அல்லது அவர்களுக்கு உதவ முன் வருவார்கள். அதாவது பயனுள்ள செயல்களைச் செய்வது இயற்கையாக அமைந்த ஒன்று. மாண்டிசோரி கல்வி முறையில் பயனுள்ள பணிகள் வழியாக செயல்திறம் கற்பிக்கப்படுகிறது. குழந்தைகளின் வயதுக்கும் திறமைக்கும் ஏற்ப பயனுள்ள வேலைகள் செய்வது அவர்களின் பொது முன்னேற்றம் மட்டுமல்லாது அறிவியல் உண்மைகளை அறியவும், கற்பனை வளத்தைப் பெருக்கவும் பயன்படும். பள்ளியில் படிக்கும்போதே பணி அனுபவம் பெறுவதால் சமுதாயத்தை நேசிப்பதுடன் சமுதாயம் தன்னை நேசிப்பதையும் உணருவார்கள். இந்தச் சூழலில் பெற்றுக் கொண்ட எத்தகைய பணி அனுபவமும் பிற்கால வாழ்க்கையில் கண்டிப்பாகப் பயன்படும்.

**5.10.2.** " இந்தியா போன்ற ஓர் ஏழை நாட்டில் உடலுழைப்புப் பயிற்சி அளிப்பதில் இரண்டு காரியங்கள் நிறைவேறும். நமது குழந்தைகளின் கல்விச் செலவை அது ஈடு செய்து கொள்ளும்; பிற்காலத்தில் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டதாகவும் இருக்கும். இத்தகைய ஓர் ஏற்பாடு நமது குழந்தைகளுக்கு ஒரு தன்னம்பிக்கையைக் கற்றுக் கொடுப்பதாயிருக்கும். வேலை செய்வதை இழிவுபடுத்துவதைப் போல் தேசத்தைச் சீர் குலைக்கக் கூடியது வேறொன்றுமில்லை".என்று மகாத்மா காந்தி 1.9.1921 அன்று 'யங் இந்தியா' வில் எழுதினார். இலக்கியப் பயிற்சியும்

கைத்தொழில் பயிற்சியும் தனித்தனியாக அளிப்பதில் பயனில்லை என்று உணர்ந்து மகாத்மா தனது ஆசிரமப் பள்ளியில் கைத்தொழில் பயிற்சி மூலம் இலக்கியப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தார். அப்போதுதான் கைத்தொழில் பயிற்சி அலுப்பூட்டாது; இலக்கியப் பயிற்சி பயனுள்ளதாக அமையும் என்பது அவரது கருத்து.

**5.10.3.** இன்றோ பல பெற்றோர் பள்ளிக் குழந்தைகள் எந்தவித உடல் உழைப்பும் செய்யக் கூடாது என்று எண்ணுகின்றனர். இது தவறு. பலவிதத் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுமாறு பணி அனுபவத்தைப் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக அமைக்க முடியும், அமைக்க வேண்டும். ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டத்தில் இம்முறையில் கற்பித்தல் ஒரு பகுதியாக அமைக்கப்பட வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலமாக இத்தகைய பாடத்திட்டத்தின் பலன்களைப் பெற்றோருக்கு விளக்குவது பள்ளிகளின் கடமை.

**5.11. அமைதிக்கான கல்வியும் விழுமங்களைக் கற்பித்தலும்**

**5.11.1.** நாடுகளுக்கு இடையிலும் ஒரே நாட்டில் இரு வேறு இனங்களுக்கு இடையிலும் மட்டுமல்லாது உற்றார் உறவினர் அல்லது குடும்பத்தாருக்கு இடையில் கூட அமைதியின்மை காணப்படலாம். பிரச்சினைகள் எழும் போது அவை நீண்ட காலம் தீர்க்கப்படாமல் இருந்தால் அமைதி குறைந்து போவது இயற்கை. இன்றைய சூழலில் பல பிரச்சினைகள் மாதக் கணக்கில் மட்டுமல்ல ஆண்டுக் கணக்கில் தீர்க்கப்படாது உள்ளன. இவை மனக்கவலையை உருவாக்குகின்றன. அதனால் அமைதியின்மை நிலவுகிறது. இச்சூழலில் இருந்து விடுபட இளைஞர்கள் வன்முறையை வெறுக்கும், அமைதியை நாடும் மக்களாக உருவாக்கப்பட வேண்டிய கட்டாயம் இன்று உள்ளது. அமைதிக்கான கல்வி தனிப்பாடமாகவும் அமையலாம். எல்லாப் பாடங்களிலும் அமைதி பற்றிய கருத்துக்கள் விரவி வருமாறும் கற்பிக்கலாம். எவற்றை முதன்முறையிலும், எவற்றை இரண்டாவது முறையிலும் கற்பிப்பது என்பதைப் பள்ளிகளே தீர்மானிக்கலாம் என்று இக்குழு கருதுகிறது.

**5.11.2.** தனி மனித உரிமைகள் மதிக்கப்படாத சமுதாயத்தில் அமைதி நிலவாது. ஆகவே தனி மனித உரிமைகள் நிலை நாட்டப்படுவதும் அவற்றைப் பற்றிக் கற்பிப்பதும் தேவையாகிறது. உரிமைகளும், கடமைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை என்பதால் இவற்றை இணைத்தே கற்பிக்க வேண்டும். நேர்மையான வாழ்க்கை வாழும் சமுதாயத்தில்தான் அமைதி நிலவும். ஆகவே நேர்மையான வாழ்க்கையில் பற்றை

உருவாக்க வேண்டும். கல்வி அமைதியை அனுபவிப்பவராக மட்டும் அல்லாது அமைதியை உருவாக்குபவராக மாணவர்களை மலரச் செய்ய வேண்டும்.

**5.11.3.** "காலத்திற்கேற்றவாறு புதுப்பித்து அமைத்தல் என்றால் அறம், ஆன்மீக விழுமங்கள் தன்னடக்கம் ஆகியவற்றை ஒப்புக் கொள்ளாது அவை இந்தக் காலத்திற்கு ஒவ்வாதவை என்று அவற்றை ஒதுக்கிவிடுவது அல்ல" என்று கோத்தாரிக் குழு **(1966)** தனது அறிக்கையில் குறிப்பிடுகிறது. ஆகவே ஒழுக்கம், விழுமங்கள் ஆகியவை கற்பிக்கப்பட வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. எனினும் விதிகள் என்று சிலவற்றைப் பட்டியலிட்டு, அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்று கட்டளைகளாகக் கற்பிப்பது பயனளிக்காது. பொதுவாக சமுதாயத்திற்கு எவை நல்லவை, அவை எவ்வாறு தனி மனிதருக்கும் நன்மை பயக்கும், என்பனவற்றை விளக்கி எது சரி, எது தவறு என்பனவற்றைத் தாங்களாகவே புரிந்து கொள்ளுமாறு பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். இத்தகைய முறையே விழுமங்களையும் ஒழுக்கத்தையும் கற்பிக்க உதவும்.

**5.11.4.** சுருங்கச் சொல்வதென்றால், ஒழுக்கம், விழுமங்கள், அமைதிக் கல்வி இவை யாவும் கற்பிக்கப்பட வேண்டும். இவை தனிப்பாடமாகவோ முக்கிய பாடங்களுக்கு ஊடேயோ கற்பிக்கலாம். எவ்விழுமங்களை எவ்வாறு கற்பிப்பது என்பதைப் பள்ளிகளுக்கு விட்டு விடலாம்.

**5.12. சுற்றுச் சூழல் கல்வி**

*முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து*
*நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்*
*பாலை என்பதோர் படிவம் கொள்ளும்.*

(சிலப்பதிகாரம், மதுரை காண்டம்).

மாசுகள் அதிகமாகி வருவதாலும், இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருவதாலும் மனிதன் தான் வாழும் இடத்தின் சுற்றுச் சூழல் கெட ஆரம்பித்ததை உணர ஆரம்பித்த பின்னர், தான் வாழும் இடத்தைப் பேணுவதன் அவசியத்தை அறிந்தான். சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு பாதுகாக்க முன் வருகிறான். இந்தத் தேவையை முழுமையாக உணர்ந்த நமது நீதிமன்றங்களும், அரசும், சுற்றுச் சூழல்

கல்வியை பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்க அறிவுறுத்தி உள்ளன. தொடக்கக் கல்வி நிலையிலிருந்து இன்றைய பாடத்திட்டத்தில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுற்றுச் சூழல் கல்வி தொடர வேண்டும்.

### 5.13 பாடத்திட்டம்

பாடத்திட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற கேள்விக்கு சிலர் கிராம மாணவர்களும் புரிந்து கொள்ளுமாறு இருக்க வேண்டும்; பிற்படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் விளங்கிக்கொள்ளுமாறு பாடத்திட்டம் உருவாக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். இது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. முதலாவதாக கிராமப் புற மாணவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் அறிவில் குறைந்தவர்கள் என்ற தவறான கருத்தில் இது சொல்லப்படுகிறது. அறிவு என்பது எல்லோருக்கும் பொதுவானது என்பதால் பிறப்பாலும் வாழும் இடத்தாலும் வேறுபடாது. சூழ்நிலையால் அவர்கள் விருப்பங்களும் அவர்கள் தெரிந்து வைத்துள்ள செய்திகளும் வேறுபடலாம். எடுத்துக்காட்டுக்கு: இசை வல்லுநர்கள் நிறைந்த ஒரு குடும்பச் சூழலில் பிறந்து வளரும் குழந்தை இசை குறித்து பல நுணுக்கங்களைச் சிறுவயதிலேயே அறிந்திருக்கும். ஆனால் நீர் நிலைகள், பயிர்கள் பற்றி அது தெரிந்துகொண்ட செய்திகள் குறைவாக இருக்கும். அதற்கு நீர் நிலைகள், பயிர்கள் பற்றி தெரியாததால் அது அறிவு குறைந்த குழந்தை ஆகாது. இரண்டாவதாக, ஒவ்வொரு வகையான மாணவர்க்கும் அவர்களுக்கு எளிதாகப் புரியக்கூடியது என்ற வகையில் பாடத்திட்டம் உருவாக்கினால் அதன் அளவும் தரமும் குறைவாகவே அமையும். கல்வி கற்பதன் குறிக்கோள்கள் எவை என்பனவற்றைத் தீர்மானித்து அக் குறிக்கோள்களை அடையத் தேவையான பாடத்திட்டத்தை உருவாக்குவதே ஏற்புடையது. ஆகவே முன்னரே கூறியபடி பொது அறிவைப் பெறவும், சமுதாயத்தில் நல்ல குடிமகனாக வாழவும், ஒரு வாழ்க்கைத்தொழில் அறிவைப் பெறவும் அல்லது ஒரு தொழில்நுட்பக்கல்வி கற்கத் தேவையான அறிவைப் பெறவும் வழி வகுக்கும் முறையில் பள்ளிக் கல்வி பாடத்திட்டம் உருவாக்கப்படுவதே ஏற்புடையது.

### 5.14. பள்ளிக் கல்வியின் நிலைகள்

**5.14.1.** நமது மாநிலத்தில் பள்ளிக்கல்வி என்பது ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான கல்வியைக் குறிக்கும். பொதுவாக ஆறு முதல் பதினெட்டு வயது

வரையிலான குழந்தைகள் இந்த வகுப்புகளில் கல்வி கற்பார்கள். இந்தக் கல்வி நான்கு நிலைகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை தொடக்கக்கல்வி என்றும், ஆறுமுதல் எட்டு வகுப்பு வரையில் உயர் தொடக்க நிலை என்றும் ஒன்பதும் பத்தும் இடைநிலை என்றும் பதினொன்றும் பன்னிரண்டும் மேனிலை என்றும் குறிக்கப்படுகின்றன. மேலும், மூன்று முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு பள்ளி முன்பருவக் கல்வி நிலை மழலையர் வகுப்புகளும் சில பள்ளிகளில் உண்டு.

**5.14.2.** இந்த ஐந்து நிலைகளில் ஒவ்வொன்றுக்கும் தேவையான வசதிகள் பாடத்திட்ட முறை, ஆசிரியர் பயிற்சி, பயிற்றுவித்தல் முறை, தேர்வுமுறை இவற்றில் வேறுபாடுகள் உண்டு . மேலும், நமது மாநிலத்தில் பள்ளி, மாணவருடைய வீட்டில் இருந்து கீழ்க்காணும் தூரத்திற்குள் இருக்க வேண்டும் என்று இலக்கு குறிக்கப்பட்டு அது செயற்படுத்தப்பட்டும் வருகிறது.

| | | |
|---|---|---|
| தொடக்கப்பள்ளி | – | 1 கிலோ மீட்டர் |
| நடுநிலைப்பள்ளி | – | 3 கிலோ மீட்டர் |
| உயர்நிலைப்பள்ளி | – | 5 கிலோ மீட்டர் |
| *மேனிலைப்பள்ளி* | – | *8 கிலோ மீட்டர்* |

ஆசிரியர் பயிற்சி இரண்டு நிலைகளில் இன்று உள்ளன. பன்னிரண்டாவது வகுப்பில் தேர்ந்தவர்களுக்கு ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பும், பட்டப்படிப்பில் தேர்ந்தவர்களுக்கு ஆசிரியர் கல்வி பட்டப்படிப்பும் இன்று நடைமுறையில் உள்ளன. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பள்ளிகளில் கல்வி கற்பிக்க ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பட்டயப் படிப்பு படித்து தேர்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆறாம் வகுப்பிலிருந்து பள்ளிகளில் கல்வி கற்பிக்க ஆசிரியர் கல்வி பட்டப்படிப்புப் படித்துத் தேர்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்தப் பயிற்சிகள் அந்தந்த நிலை மாணவர்க்கு கற்பிக்கும் முறைகளைப் பயிற்றுவிக்கின்றன. மேலும் மழலையர்க்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கும் நிறுவனங்களும் உண்டு.

**5.14.3.** ஒவ்வொரு நிலைக்கும் தேவையான வசதிகளும் பாடத்திட்டத்தைப் பொறுத்து மாறுபடுகின்றன. மாணவர்களின் வயதுக்கும் மனவளர்ச்சிக்கும் தக்கவாறு தேர்வு முறைகளிலும் பல மாறுபாடுகள்தேவை. பின்வரும் பகுதிகளில் ஒவ்வொரு நிலைக்கும் அவற்றுக்காக அமைக்கப்பட்ட உட்குழு அறிக்கைகளின் விவரங்கள் தரப்படுகின்றன.

இவ்வறிக்கைகளை பகுதி 5.2ல் பரிந்துரைக்கப்படும் வாரியம் அமைத்து அதன் ஒப்புதலைப் பெற்றுச் செயற்படுத்துவது உசிதம்.

**5.15. மழலையர் கல்வி**

**5.15.1.** குழந்தை பிறந்து கண் விழித்துப் பார்க்கவும், ஒலிகளைக் காதால் கேட்கவும் தொடங்கியதுமே பார்ப்பதையும் கேட்பதையும் புரிந்து கொள்ள முயலுகிறது. அதேபோன்று தன் அன்னையின் அரவணைப்பிலும் மற்றவர்களையும், பொருட்களையும் தொட்டும், தொடு உணர் அறிவையும் பெருக்கிக் கொள்கிறது. பலவகையான வாசனைகளையும் உண்ணும் உணவு மூலமாகவும் வாயால் கடித்தும் பலவிதமான சுவைகளையும் புரிந்து கொள்ள முயல்கிறது. எந்த உணவில் என்ன வாசனை வருகிறது? என்ன வகையான சுவையுடன் உள்ளது? என்ன சொன்னால் கேட்பார்கள்? என்ன செய்கிறார்கள்? என்பனவற்றை யெல்லாம் நோக்கி தனது பகுத்தறிவையும் பெருக்கிக்கொள்கிறது.

**5.15.2.** மழலையர் நிலையிலான (அதாவது ஆறு வயதுக்கு முன் அல்லது எட்டு வயதுக்கு முன்) கல்வி வளர்ச்சி ஆகியவை மிகவும் முக்கியமானவை. இது மூளை வளர்ச்சிக்கான பருவம் என்பதால் ஆயுள் முழுவதுமான முன்னேற்றத்திற்கு அடித்தளம் இந்த பருவத்தில் தான் இடப்படுகிறது என்ற பொதுவான கருத்து நிலவுகிறது. கற்றலுக்கான ஆவலை வளர்த்து வேரூன்றச் செய்யும் இந்தப் பருவத்தில் உரிய கவனம் செலுத்துவது மிக முக்கியம். உரிய கவனம் செலுத்தவில்லை எனில் குழந்தையின் வளர்ச்சி தவறான பாதையில் செல்ல நேரிடுவதுடன், பின்னர் திருத்தும் வாய்ப்பும் இல்லாது போக நேரிடலாம். ஆகவேதான் இந்த பருவத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான கவனம் செலுத்தப்பட வேண்டும்; வாய்ப்புகள், அனுபவங்கள் தரப்பட வேண்டும். உடல் அளவிலும் உள அளவிலும், சமுதாயச் சூழலிலும், பன்முக வளர்ச்சி பெற வழிகாட்டுதல் தேவை.

**5.15.3.** இந்தப் பருவத்தில் குழந்தைகளின் விருப்புகளுக்கு ஏற்றாற்போல பாடங்கள் உருவாக்கப்பட வேண்டும். நம்பிக்கையுடனும் அச்சமின்றியும் எதையும் ஆராய்ந்து அது குறித்து அறிந்து கொள்ளும் ஆர்வத்தை வளர்க்கும் சூழல் மழலையர் பள்ளியில் இருக்க வேண்டும். பேச, கேட்க, உரையாட வாய்ப்புகள் வேண்டும். ஆகவே பள்ளி மொழி, வீட்டு மொழியாக இருக்க வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. இந்த

நிலையில் பாடநூல் தேவையில்லை. படிப்பது, எழுதுவது ஆகியவை இந்த நிலையில் தவிர்க்கப்பட வேண்டும்.

**5.15.4.** இரண்டாம் மொழியான ஆங்கிலம், இந்த நிலையிலேயே கற்பிக்க வேண்டும் என்று சில பெற்றோர் நினைக்கின்றனர். தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு(2005) இந்த நிலையிலே இரண்டாம் மொழியை அறிமுகப்படுத்தலாம் என்று சொல்கிறது. ஆனால், ஒரு மொழியை நன்றாகக் கற்ற பின்னரே, இரண்டாம் மொழி கற்பிக்க வேண்டும். இரண்டாம் மொழியைக் கற்பிக்கத் தகுந்த வயது 10 அல்லது அதற்கு மேல் என்ற கருத்து சில கல்வியாளர்களிடம் உள்ளது.

**5.15.5.** மொழிச் சிறுபான்மையினர் வீட்டுக் குழந்தைகள் குடும்பத்தாரிடம் இருந்து வீட்டுமொழியைக் கற்றுக் கொள்ளும். வெளியில் இருந்து வருகின்றவர்கள் மாநில மொழியைப் பேசும்போது அதையும் கற்றுக் கொள்ளும். எனினும் அவற்றைத் தனித்தனியாக நினைவில் கொண்டு குடும்பத்தாரிடம் குடும்ப மொழியிலும் வெளி மனிதரிடம் மாநில மொழியிலும் பேசும். ஆனால் அவர்கள் மொழியை மாற்றிப் பேசினால் சில குழந்தைகள் சிறிது நேரம் மயங்கி நின்று பின்னர் சரியான மொழியில் பேசும். இதே நிலைதான் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கும் ஏற்படும். ஓர் ஆசிரியர் ஒரு மொழியைக் கற்பித்துவிட்டு சிறிது நேரம் கழித்து வேறு மொழியில் பேசினால் சில குழந்தைகள் மொழி மாறியதைப் புரிந்துகொண்டு உடனடியாகப் பதில் சொன்னாலும், பல குழந்தைகள் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு நிற்கும். ஆகவே தான் சில குழந்தைகள் இரு மொழிகளை ஒரே நேரத்தில் கற்கும் திறமை பெற்றிருப்பதால், எல்லா குழந்தைகளும் இவ்வாறு கற்கும் என்ற எண்ணத்தில் இரு மொழிகளை மழலையர் பள்ளியில் கற்பிப்பது ஒப்புக்கொள்ளக் கூடியது அல்ல என்று கல்வியாளர்களிடம் ஒரு கருத்தும் நிலவுகிறது. இந்த அடிப்படையில் எல்லாக் குழந்தைகளும் இரண்டாவது மொழியான ஆங்கிலம் கற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது என்று தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005) சொல்கிறது. அதாவது இரண்டாம் மொழியை மழலையர் அல்லது முதல் வகுப்பில் கற்பிக்காது ஐந்தாவது அல்லது எட்டாவது வகுப்பு நிலையில் எல்லாக் குழந்தைகளும் ஒரே அளவு இரு மொழித்திறன் பெறுமாறு பாடத்திட்டத்தில் ஒரு நெகிழ்ச்சி அளிக்கலாம் என்று இக்குழு கருதுகிறது.

**5.15.6.** மழலையர் பள்ளிப் பயிற்சி குழந்தைகள், கவனிக்கவும், பேசப் பழகவும், வீட்டிற்கும் பள்ளிக்கும் உள்ள தொடர்பைப் புரிந்துகொள்ளவும் செய்தால் குழந்தைகள் தொடக்கக் கல்வியைக் கற்பதில் ஆர்வத்துடன் அப்பள்ளிக்குச் செல்வார்கள். "மழலையர் பாதுகாப்புக் கல்வி (Early Childhood Care and Education) மழலைக் குழந்தைகளின் பன்முக வளர்ச்சிக்கு உதவும். மழலையருக்கு கல்வியும் பாதுகாப்பும் வழங்கும் திட்டத்தை அனைத்துக் குழந்தைகளுக்கும் செயற்படுத்த போதுமான நிதி ஒதுக்கப்பட வேண்டும். வளர்ச்சிக்கு உதவிடும் பாடத்திட்டம், பயிற்சி பெற்ற போதுமான அளவு ஊதியம் பெறும் ஆசிரியர்கள், பொருத்தமான ஆசிரியர் மாணவர் விகிதம்; குழந்தைகளின் தேவைக்கேற்ற உள்கட்டமைப்பு வசதிகள்; கற்க ஊக்குவிக்கும் மேற்பார்வை ஆகிய ஐந்து அம்சங்களின் மூலம் தரமான மழலையர் பாதுகாப்புக் கல்வி அளிக்கப்பட வேண்டும்." என்று தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005)ல் சொல்லப்படுகிறது.

**5.15.7.** மழலையர் நிலையில் பார்த்ததைச் செய்யக்கூடிய வகையிலும் வண்ணப்படங்கள் தீட்டவும், விளையாடவும், பாட்டுகள் பாடவும், நாட்டியம் ஆடவும் கற்பிக்கலாம். மழலையர் பள்ளி முதலாண்டில் 10–15 மாணவர்க்கு ஓர் ஆசிரியரும், இரண்டாவது ஆண்டில் 20–25 மாணவர்க்கு ஓர் ஆசிரியரும் தேவை. மழலையர் பள்ளி ஆண்டுக்கு 220 நாள்கள் கல்வி கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் பள்ளிநேரம்: முதலாண்டு: 21/2 – 3 மணி , இரண்டாம் ஆண்டு 5 மணி. இந்நிலையில் தேர்வுகள், மதிப்பெண்கள், வரிசைப்படுத்தல் ஆகியவை கண்டிப்பாகக் கூடாது. கற்பிக்கும் மொழி குழந்தையின் வீட்டு மொழியாக இருப்பதே ஏற்புடையது அல்லது அது மாநில மொழியாக இருக்கலாம்.

**5.15.8.1.** இன்றையச் சூழலில் பெரும்பாலான குடும்பங்களில் மழலைப் பிள்ளைகளுக்கு வீட்டில் அறிவு பெறும் வசதிகள் இல்லை என்பதால், மழலையர் பள்ளிக் கல்விப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளவிட்டால் குழந்தைகள், பயிற்சி பெறாத ஆசிரியர்கள் பணிபுரியும் மழலையர் பள்ளிகளில் தரமில்லாத கல்வி பெற்று எதிர்மறையான விளைவுகளுக்கு ஆளாகலாம் என்பதால், இக்கல்விக்கு முழுமையான பொறுப்பை அரசே ஏற்றுக்கொண்டால்தான் அனைவருக்கும் கல்வித்திட்டம் வெற்றி பெறும்.

**5.14.8.2.** அரசு தரமான மழலையர் கல்வி வழங்குவதற்காக அனைத்துப் பள்ளிகளிலும் மூன்று வயது நிரம்பிய குழந்தைகள் அனைவருக்கும் மழலையர் பிரிவுகள் தொடங்க வேண்டும்.

**5.15.8.3.** மழலையர் பள்ளிகளின் செயற்பாடுகள் பாடத்திட்டம், உள் கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக் குறித்து விரிவான விதிகள் தயாரித்துச் செயல்படுத்த வேண்டும்.

**5.16. தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி நிலைகள்**

**5.16.1.** தொடக்கப் பள்ளி நிலையும், உயர் தொடக்கப் பள்ளிநிலையும் அதாவது 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான கல்வி தற்போது அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி கட்டாயக் கல்வி ஆகும். இந்தப் படிப்பில் தான் குழந்தைகள் படிக்க, எழுத, கணக்குப் போடக் கற்றுக் கொள்கின்றன. மேலும் அறிவியல், சமூக அறிவியல் கல்வியும் அறிமுகப்படுத்தப் படுகின்றன. குழந்தைகளுக்கு சிந்திக்கும் திறனையும், எதையும் ஆராய்ந்து அறிந்து கொள்ளும் அறிவையும் இந்த எட்டு ஆண்டுக் கல்வி வளர்க்க வேண்டும்.

**5.16.2.** உயர் தொடக்கப் பள்ளி நிலையில் குழந்தைகளின் இயல்பான திறமைகளும், தனிப்பட்ட விருப்பங்களும் வெளிப்படும். ஆகவே அந்த நிலையில் அவர்களுக்கு பலவிதமான கலைகள், விளையாட்டுகள், கைவினைத் தொழில்கள் அறிமுகப்படுத்த வேண்டும்.

**5.16.3.** .அனைவருக்கும் கல்வி வழங்கும் திட்டம் செயலுக்கு வந்த பின்னர் பல தரப்பட்ட சமூகப் பின்னணியில் இருந்தும் மாணவர்கள் நமது பள்ளிகளுக்கு வருகின்றனர். அவரவர் பின்னணியையும் அவர்கள் வீடுகளில் அவர்கள் கல்வி கற்க ஏதுவான சூழலின் தன்மையைப் பொறுத்தும் கல்வித்திட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டும். இந்த பருவத்தில் மாணவர்கள் மொழித் திறமையை வளர்ப்பதும், பேசவும், மொழியைப் பயன்படுத்தவும், சிந்திக்கவும், மொழியைத் தன்னம்பிக்கையுடன் கையாளும் வகையிலும் மொழித் திறமையை வளர்க்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் அதன் தாய்மொழியில் நல்ல பயிற்சி பெற வேண்டும். "இந்த வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கலாம். ஆனால் அது தாய்மொழியையும் மாநில மொழியையும் புறக்கணிப்பதாக இருக்கக் கூடாது" என்று தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு கூறுகிறது.

**5.16.4.** தரமான தொடக்கக் கல்வி அளிக்கவும் பெறவும் குழந்தைகளின் முழுமையான ஈடுபாடு முக்கியம். அவர்கள் இயல்பாகக் கற்கும் வகையில் இது அமைய வேண்டும். குழந்தைகள் ஆர்வத்தை உறுதிப்படுத்துவது ஆசிரியரின் கடமை. குழந்தைகள் ஆர்வம் ஆசிரியருக்கு வெற்றி உணர்வைத் தரும் என்பதால் அது தரம் உயர வகை செய்யும். இது ஏதோ ஒரு வட்டத்தில் சுற்றுவதுபோல் தோன்றினாலும், ஆசிரியர் மாணவருக்கு எவ்வாறு கற்பித்தால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை அனுமானித்து அவ்வகையில் கற்பித்தல் நலம். மேலும், ஆசிரியரும் மாணவரும் உற்சாகத்துடன் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டால், பெற்றோருக்கு அப்பள்ளியின் மேல் நம்பிக்கை வரும். தொடக்கநிலைக் கல்வியில் பாடத்திட்டத்திற்கும் பாடப் புத்தகத்திற்கும் முக்கியமான இடம் உண்டு என்றாலும், அதைவிட முக்கிய இடம் மாணவரின் ஈடுபாடும், ஆசிரியர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர் அறிவையும், மனநிலையையும் சொல்வதைப் புரிந்து கொள்ளும் திறமையையும் உணர்ந்து அவர்கள் கற்றலில் ஆர்வம் காட்டும் வகையில் கற்பிப்பதற்கும் மாணவரை அரவணைப்பதற்கும் உண்டு. உயர்நிலை, மேனிலை வகுப்புகளில் இந்த நிலைமாறி பாடத்திட்டம், பாடநூல்கள் சிறப்பான இடம் பெறும் என்றாலும், தொடக்கநிலையில் ஆசிரியரின் பங்கு மகத்தானது என்பதில் ஐயமில்லை.

**5.16.5.** தொடக்கப் பள்ளி நிலையில் இன்றுள்ள பாடத்திட்டங்களைப் பரிசீலித்து சமச்சீர்க் கல்விக்கான பாடத்திட்டத்தை வடிவமைக்க அமைக்கப்பட்ட உட்குழுவின் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் இரண்டாம் தொகுதியில் தரப்பட்டுள்ளன. அதன் சுருக்கம் பின்வருமாறு.: முதன் மொழியில் (தமிழில்) கேட்டல்; ஒப்புவித்தலைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல், முதல் மொழியைப் பயன்படுத்துதல், சூழலுக்குத் தக்கவாறு மொழியைப் பயன்படுத்துதல் போன்ற 19 திறன்கள் கற்பிக்கப்பட வேண்டும். நன்னெறிக் கருத்துக்கள் கற்பிக்கப்பட வேண்டும். ஆங்கிலத்தில் பேசுவதையும், பாடல்களையும் நேரிலும், தொலைக்காட்சி, வானொலி முதலியவற்றில் கேட்கவும், சொல்லப்படும் சிறிய செய்திகள், அறிவுரைகள் போன்றவற்றைப் புரிந்து கொள்ளவும், சாதாரண பேச்சுக்கள் விவாதங்களாகப் புரிந்துகொள்ளவும், கேள்விகள் கேட்கவும், சிறுகதைகள் சொல்லவும் சொற்களைக் கோவையாகச் சொல்லவும் மற்றவர்களுடன் பேசிப்பழகவும், தொலைக்காட்சி விளம்பரங்களைப் புரிந்து கொள்ளவும், கதைகள், சிறுகட்டுரைகளைப் படிக்கவும், நடந்தவற்றைப் பற்றி ஒரு சில வாக்கியங்களில் எழுதவும், சிறு உரையாடல்கள் எழுதவும், இது போன்ற அளவுக்கு பேச, படிக்க, எழுதத் தெரிந்து இருக்க வேண்டும். கணிதத்தில்

எண் கணிதம், அளவைக் கணிதம், வடிவியல் கணிதம், பின்னங்கள் ஆகியவை அறிமுகப்படுத்த வேண்டும். அறிவியல் பாடங்கள் இப்போது நான்கு வகையான பள்ளிகளிலும் ஒரே மாதிரியாக இருக்கிறது. அது தொடரலாம். சமூக அறிவியலில் பொதுவாக எதிர்பார்க்கப்படும் திறன்கள் இப்போதைய பாடத்திட்டங்களில் உள்ளன. சில விவரங்களில் மாற்றங்கள் செய்து, இவற்றை இணைத்து உருவாக்கிய பாடத்திட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

**5.16.6.** தொடக்கப் பள்ளியில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்படும் வகுப்பு நேரம் பின் வருமாறு அமையலாம்:

| மொழிகள்* | கணிதம் | அறிவியல் | சமூக அறிவியல் | மற்றவை** | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 12 | 5 | 3 | 3 | 12 | 35 |

ஆண்டிற்கு மொத்தம் 1100 மணிநேரம்.

பள்ளி நாள்கள்: 220 ஒவ்வொரு நாளும் பள்ளி நேரம்: 5 மணி

காலையில் 4 x 45 நிமிடம் – 180 நிமிடம்

மதியம் 3 x 40 நிமிடம் – 120 நிமிடம்

மொத்தம் 300 நிமிடம்

*தமிழ், ஆங்கிலம், வீட்டுமொழி, ஓரியண்டல் மொழிகள் இதில் அடங்கும். மொழிகளைக் கற்பிப்பதில் ஒரு நெகிழ்ச்சியை அளிக்கலாம். பள்ளி விரும்பும் வகையில் மொழிகளைக் கற்பிக்கலாம். ஆனால் எட்டாம் வகுப்பில் ஒவ்வொரு மொழியிலும் எதிர்பார்க்கப்படும் அளவு தேர்ச்சி பெற வேண்டும்.

** மற்றவை என்பதில் கலைகள், விளையாட்டுகள், உடற்பயிற்சி, கணினிப் பயிற்சி, வாழ்க்கைக் கல்வி போன்றவை அடங்கும்.

**5.16.7.** உயர் தொடக்கநிலைப்பள்ளி நிலையில் இன்றுள்ள பாடத்திட்டங்களைப் பரிசீலித்து சமச்சீர்க்கான பாடத்திட்டத்தை வடிவமைக்க அமைக்கப்பட்ட உட்குழுவின் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் இரண்டாம் தொகுதியில் தரப்பட்டுள்ளன. அதன் முக்கியப் பகுதியின் சுருக்கம் பின்வருமாறு: இன்று நடைமுறையில் உள்ள தமிழ்ப்பாடம் எல்லாப் பாடத்திட்டங்களிலும் ஒரே மாதிரி தான் உள்ளது. எனினும் விழுமங்கள் கற்கவும்,

மொழித்திறனை மேம்படுத்தவும் சில பரிந்துரைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.. ஆங்கிலப் பாடத்திலும் பொதுவாக எல்லா திட்டங்களிலும் ஒரே மாதிரியான பாடங்கள் உள்ளன என்றாலும் மற்றவருடன் தொடர்பு கொள்ளும் திறனை வளர்க்க சில உத்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. கணிதத்தில் இன்றையச் சூழலுக்குத் தேவையான திறன்களை வளர்க்கும் வகையில் பாடத்திட்டம் வரையப்பட்டுள்ளது. மேலும் செயல்முறைக் கற்பித்தல் செயற்பாட்டுக்கு வரும்போது பாடத்திட்டம் குறைக்கப்பட வேண்டும் என்றும் பாடநூலில் ஒரே மாதிரியான வினா விடைகள் பல தேவையில்லை என்றும் இந்த உட்குழு பரிந்துரைத்துள்ளது. அறிவியல் பாடங்களில் நடுநடுவே விடுபட்டுப் போன பகுதிகளைச் சுட்டிக்காட்டி புதிய பாடத்திட்டம் முழுமை பெறத் தேவையான பரிந்துரைகள் தரப்பட்டுள்ளன. சமூக அறிவியல் பாடத்திட்டத்தில் இன்றுள்ள பாடத்திட்டங்களில் அமைந்த நமது நாட்டுக்கும், நம் மாணவருக்கும் பொருத்தமில்லாத பகுதிகள் நீக்கப்பட்டு தேவையான பாடங்களைச் சேர்த்து புதிய பாடத்திட்டத்தைத் தந்துள்ளது.

**5.16.8.** உயர்தொடக்கநிலைப் பள்ளியில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்படும் வகுப்பு நேரம் பின் வருமாறு. அமையலாம்:

| மொழிகள்* | கணிதம் | அறிவியல் | சமூக அறிவியல் | மற்றவை* | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 15 | 05 | 05 | 05 | 10 | 40 |

* – 5.16.6–ல் உள்ளபடி

பள்ளி வகுப்பு நேரம் ஆண்டுக்கு 1,100. அது ஒவ்வொரு நாளும் வகுப்பு நேரம் 5 மணி 30 நிமிடம், பள்ளி நாள்கள் 200 என்றோ ஒவ்வொரு நாளும் வகுப்பு நேரம் 5 மணி, பள்ளி நாள்கள் 220 என்றோ அமையலாம்.

காலை 4 x 45 நிமிடம் –180 நிமிடம்
மாலை 2 x 40 நிமிடம் – 80 நிமிடம்
2 x 35 நிமிடம்– 70 நிமிடம்
மொத்தம் 330 நிமிடம்

(அல்லது) 4 x 45 நிமிடம் – 180 நிமிடம்
3 x 40 நிமிடம் – 120 நிமிடம்
மொத்தம் 300 நிமிடம்

**5.17 இடைநிலைப் பள்ளி நிலை**

**5.17.1.** இடைநிலைப் பள்ளி நிலையிலான இரண்டு ஆண்டுகளில் மாணவர் உடல் வளர்ச்சி துரிதமாக வளரும்; மாணவரின் தனிப்பட்ட விருப்புகளும் முழுமை பெறும்; மாணவர் துடிதுடிப்புடன் விளங்கும் காலம் இது. தன்னை வளர்க்கும் சமுதாயத்தில் தன் இடம்

எதுவாக இருக்க வேண்டும் என்று சிந்திக்கும் பருவம் இது. ஆகவே இந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு வகைப் பாடங்களைப் பற்றிய விழிப்புணர்வு வரும் வகையில் பாடத்திட்டமும் கலைத்திட்டமும் அமைக்கப்பட வேண்டும். மாணவர் பலவித காரணங்களுக்காக எட்டாவது ஆண்டு முடிவில் அல்லது பத்தாவது ஆண்டு முடிவில் படிப்பைத் தொடராது விட்டுச் செல்கின்றனர். அதைத் தடுத்து மேலும் கற்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும் வகையில் பரிசோதனைக் கூட வசதிகள், நூலகம் போன்றவற்றைப் பள்ளியில் அமைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**5.17.2.** இடைநிலைப் பள்ளி நிலையில் இன்றுள்ள பாடத்திட்டங்களைப் பரிசீலித்து சமச்சீர்க் கல்விக்கான பாடத்திட்டத்தை வடிவமைக்க அமைக்கப்பட்ட உட்குழுக்களின் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் இரண்டாம் தொகுதியில் தரப்பட்டுள்ளன. அவற்றின் முக்கிய பகுதிகளின் சுருக்கம் பின்வருமாறு: தமிழ்ப்பாடத்தில் இன்று பாடநூலில் பெரிய மாறுபாடு இல்லை என்றாலும் தேர்வு வினாத்தாளில் மாறுபாடுகள் இருக்கின்றன. அனைவருக்கும் மாநில வாரியப் பள்ளிப் பாடமும் தேர்வும் இருக்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது. எல்லாப் பாடத்திட்டங்களுக்கும் பொதுவான ஒரு பாடத்திட்டத்தை ஆங்கில மொழி உட்குழு பரிந்துரைத்துள்ளது. கணித உட்குழு மூன்று வகையான பாடத்திட்டங்களுக்குள் பெருத்த மாறுபாடுகள் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்து அவற்றுக்குப் பொருத்தமான ஒரு பாடத் திட்டத்தை வகுத்துள்ளது. அறிவியல் உட்குழு மூன்று வகையான பாடத்திட்டங்களையும் பரிசீலித்து, ஒவ்வொன்றிலும் உள்ள ஏற்கத்தக்கவைகளையும் தவிர்க்க வேண்டியவைகளையும் கணித்து, பின்னர் ஒரு சமச்சீர் பாடத் திட்டத்தை வகுத்தளித்துள்ளது. சமூக இயல் பாட உட்குழு நீண்ட விளக்கங்களுடன் இன்றைய மாநில உயர்கல்வி வாரிய பாடத்திட்டத்தையே எல்லா மாணவர்க்கும் அளிக்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது.

**5.17.3.** " 9வது வகுப்பிலேயே சில விருப்பப் பாடங்களை அறிமுகப்படுத்தலாம்; முக்கியப் பாடங்களுக்குப் பதிலாக வேறு பாடங்கள், தொழிற்கல்விப் பாடங்கள் கூட விருப்பப்பாடங்களாக வைக்கப்படலாம்" என்று தேசிய கலைத் திட்ட வடிவமைப்பு (2005) கருத்துத் தெரிவிக்கிறது. இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு பாடத்திட்டத்திற்கு வெளியே அல்லது உள்ளே தொழிற் கல்விப் பாடங்கள் விருப்பப்பாடங்களாக ஒரு சில பள்ளிகளில் நடத்தலாம்.

**5.17.4.** பள்ளி இறுதித்தேர்வு மாணவரின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதாக இருப்பதால் பள்ளிகள் நிறைய தேர்வுகளும் மீள் தேர்வுகளும் நடத்துகின்றன. மாணவரும் இந்தக் காலக் கட்டத்தில் மிகுந்த மன உளச்சலுக்கு ஆளாகிறார்கள். இதற்குப் பரிகாரம் காணவேண்டும். இது குறித்து குழுவின் பரிந்துரைகளைத் தேர்வுகால சீர்திருத்தம் என்ற அதிகாரத்தில் காணலாம்.

**5.17.5.** இடைநிலைப் பள்ளியில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்படும் நேரம் பின்வருமாறு அமையலாம்:

| மொழிகள்* | கணிதம் | அறிவியல் | சமூக அறிவியல் | மற்றவை** | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 15 | 6 | 6 | 6 | 7 | 40 |

பள்ளி நாள்கள் 200 ஒவ்வொரு நாளும் பள்ளி நேரம் 5 மணி 30 நிமிடம்.

காலை 4 x 45 நிமிடம் =180 நிமிடம்

மதியம் 2 x 40 நிமிடம் = 80 நிமிடம்

2 x 35 நிமிடம் = 70 நிமிடம்

மொத்தம் 330 நிமிடம்

* மொழிகள் என்பதில் தமிழ், ஆங்கிலம், வீட்டுமொழி, ஓரியண்டல் மொழிகள் அடங்கும்

** மற்றவை என்பதில் கலைகள், விளையாட்டுகள், உடற் பயிற்சி, கணினி பயிற்சி, வாழ்க்கைக்கல்வி, ஒழுக்கக்கல்வி, அமைதிக்கல்வி போன்றவை அடங்கும்.

**5.18. பயிற்று மொழி**

**5.18.1.** கல்வி, வீட்டு மொழி (தாய் மொழி / மாநில மொழி)யில் தான் கற்பிக்கப்பட வேண்டும் என்பதை பல அறிஞர்களும், கல்விக் குழுக்களும் வலியுறுத்தி வந்துள்ளன. இராமமூர்த்திக் குழு இது பற்றிக் கூறிய பரிந்துரை பின்வருமாறு:

> **4.4.8.** The first step in securing equity and social justice in education is the building up of a Common School System. Specific actions required in this context are the following:

## Recommendations

Ensuring instruction for all in the medium of mother tongue at the primary level, particularly for linguistic minorities; active encouragement of teaching in the regional languages at the secondary level; and discontinuance of State aid to the schools imparting education otherwise than in the medium of mother tongue / regional languages.

**5.18.2**. தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005) மொழிகளைக் கற்பிப்பதற்கு வழிகாட்டுதலில் பின்வருமாறு சொல்கிறது (பகுதி 3.3.1.): நமது நாட்டில் பல மொழிகளைக் கற்கவும், கற்பிக்கவும் தேவை இருக்கிறது. அதற்கு நாம் பின்பற்ற வேண்டிய நெறிமுறையில் தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். (இங்கு தாய்மொழி என்பது இயற்கையாக தன் வீட்டிலும், சுற்றிலும் சமுதாயத்திலும் பேசப்படும் மொழி என்று பொருள் கொள்ளப்படுகிறது. ஆகவே அது தாய்மொழி அல்லது மாநில மொழி என்று பொருள்படும்) மேல்நிலைக்கல்வி நிலையில் தாய் மொழியில் கற்பிக்க இயலாத நிலை ஒரு பள்ளியில் இருந்தால், அப்பள்ளியில் குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வி நிலையிலாவது தாய்மொழியில் கற்பிப்பது அவசியம்.

**5.18.3.1.**நாட்டு மொழியே பயிற்று மொழியாக இருப்பது உலகளாவிய நடைமுறை. ஒரு நாட்டில் ஒரு பகுதியில் தனித்தன்மையுள்ள சிறுபான்மையோர் இருந்தால் அவர்கட்கு அவர் மொழிவழியே கற்க ஒரு சில நாடுகளில் வாய்ப்பு உள்ளது.

**5.18.3.2**. மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் வட்டார மொழியே அனைத்து நிலைகளிலும் பயன்படுத்தப்பட்டு மக்கள் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். என்பதே. பல்வேறு கல்விக்குழுக்களும், தேசிய கல்விக் கொள்கைகளும், தேசிய கலைத்திட்ட வரைவும், வட்டார மொழியே ஒரே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளன. மேற்கூறியவற்றிலிருந்து உளவியல், மொழியியல், சமூக இயல், பன்னாட்டு மரபுகள் ஆகிய அனைத்து அடிப்படைகளிலும், தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ் மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பது பெறப்படும்.

### 5.18.4 இன்றைய நிலை

**5.18.4.1.** ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளில் பயிற்று மொழி ஆங்கிலமே. ஆனால், அப்பள்ளிகளில் பெரும்பாலோரது தாய் மொழி ஆங்கிலமன்று.

**5.18.4.2.** மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிற்று மொழி, ஆங்கிலமே. சமீப காலமாக, சில பள்ளிகளில் ஆங்கிலத்தோடு தமிழும் பயிற்று மொழியாக உள்ளது. மேலும் பல பள்ளிகளும் தமிழ் வழிக் கற்பித்தல் வேண்டியுள்ளனர். இப்பள்ளிகளில் கற்போரது தாய்மொழி ஆங்கிலம் அன்று.

**5.18.4.3.** மாநில வாரியப் பள்ளிகளில் பெரும்பாலும் தமிழே பயிற்று மொழியாகும். ஒரு சில பள்ளிகளில், ஆங்கிலமும் பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆங்கில வழி வகுப்புச் சேர்க்கைக்கென விதிகள் எதுவும் இல்லை. பிற மாநில எல்லைப் பகுதிகளில் அமைந்த பள்ளிகளில் சிறுபான்மையோர் நலனிற்காக கன்னடம், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகியவை பயிற்று மொழியாக உள்ளன. ஒரு சில பள்ளிகளில் உருதும் பயிற்று மொழியாக உள்ளது.

### 5.18.5. வரலாற்றுப் பின்னணி

**5.18.5.1.** 1937–க்கு முன்னர் ஒரு சில பள்ளிகள் அரசின் அனுமதி பெற்று வட்டார மொழியினைப் பயிற்று மொழியாகக் கொண்டு அரசுத் தேர்விற்கு மாணாக்கரை அனுப்பி வந்தனர். 1937–ல் வட்டார மொழியே பயிற்று மொழியென ஒன்றுபட்ட சென்னை மாகாண அரசு ஆணையிட்டது. மிகச்சில பள்ளிகளில் ஒரு சில வகுப்புகளைத் தவிர பிற எல்லாப் பள்ளிகளிலும் வட்டார மொழியே பயிற்று மொழியாக ஆக்கப்பட்டது.

**5.18.5.2.** விடுதலைக்குப் பின்னரும், இதே நிலை தொடர்ந்தாலும், ஆங்கிலவழி வகுப்புச் சேர்க்கைக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மாநிலம் விட்டு மாநிலம் மாறுதல் பெறுவோர், அவர்கள் பணியாற்றும் ஊரில் அவர் தம் தாய் மொழி வழிக்கல்வி இல்லாமை, வட்டார மொழியில் பரிச்சயமின்மை, தொடக்கக் கல்வியை ஆங்கில வழியில் கற்றல் போன்ற கட்டுப்பாடுகளுக்கிடையில் அரசின் அனுமதி பெற்றே ஆங்கில வழி வகுப்புகளில் மாணாக்கர் சேர்க்கப்பட்டனர். 1962–ஆம் ஆண்டில் இக்கட்டுப்பாடுகள் யாவும் விலக்கப்பட்டு, ஆங்கில வழி வகுப்புகளில் எவரும் சேரலாம் என்றாகியது.

**5.18.5.3.** மெட்ரிகுலேசன் பள்ளிகள் பல்கலைக்கழகப் பொறுப்பினின்று கல்வித்துறைக்கு மாற்றப்பட்ட பின்னரே ஆங்கில வழிக்கல்வி வெகு வேகமாகப் பட்டி தொட்டியெல்லாம் பரவியுள்ளது.

**5.18.5.4.** சில பல நிர்வாகக் காரணங்களால், பொதுப்பள்ளி முறை வலுவிழந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. அதனைப் பயன்படுத்தி கட்டணப் பள்ளிகள் பல்கிப் பெருகின. பள்ளி இறுதித் தேர்வில் காட்டப் பெறும் தேர்ச்சியே பள்ளித் தரத்தின் அளவு கோலாகக் கருதப்பட்டதால், மக்கள் கட்டணப் பள்ளிகளை நோக்கிச் செல்லத் தொடங்கினர். கட்டணப் பள்ளிகள் ஆங்கில வழிப் பள்ளிகளாக இருந்ததால், ஆங்கில வழிக் கல்வியே அவற்றின் தரத்திற்குக் காரணமென்று தவறாக மக்கள் நம்பினர். மேலும் உயர்கல்வி பெரும்பாலும் ஆங்கில வழியிலேயே தரப்படுவதால், பள்ளியில் ஆங்கில வழியில் கற்றால் உயர்கல்வியில் நல்ல தேர்ச்சி அடைய உதவுமென்று கருதினர். ஆங்கில வழிக் கல்வியால் வேலை வாய்ப்புகளும் அதிகமாக இருக்கும் என்றும் நம்பினர்.

### 5.18.6 விளைவுகள்

**5.18.6.1.** படித்தோர், வசதியுள்ளோரே பெரும்பாலும், ஆங்கில வழி வகுப்புகளில் சேர்கின்றனர். நன்கொடை, கட்டணம் ஆகியவற்றைக் கொடுக்கக் கூடியவாக இருத்தல் வேண்டுமென்பதால், பள்ளிகள் சமுதாயத்தின் இணைப்புப் பாலமாக இருப்பதற்கு மாறாக வேறுபாட்டை உருவாக்கும் இடங்களாக மாறின.

**5.18.6.2.** பெற்றோரது ஆங்கில அறிவு குறைந்திருந்தால் அவர்கள் ஆங்கில வழியில் படிக்கும் தன்குழந்தைகட்கு உதவ இயலுவதில்லை. தனிவகுப்புகட்குச் செல்ல வேண்டும். ஆறாம் வகுப்பிற்குப் பின்னர், எளிய குடும்பங்களின்று வரும் மாணாக்கர் ஆங்கில வழி வகுப்புகளினின்று மாறுதல் கேட்பதும் இதன் காரணமாகவே. புரிதலின்றி மனன முறைக் கற்றல் முறைக்கு ஆங்கில வழிக்கல்வியே வித்திட்டது. தேசிய கல்விக் கொள்கைகட்கும், அரசியல் சட்ட நோக்கங்களுக்கும் முற்றிலும் மாறுபட்டது ஆங்கில வழிக்கல்வி.

### 5.18.7 பரிந்துரைகள்

- சர்வதேச நடைமுறைப்படியும், தேசிய அளவில் அமைக்கப்பட்ட கல்விக் குழுக்களின் பரிந்துரைப்படியும் தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வி முழுமையும் தமிழ் வழியாக அளிக்கப்பட வேண்டும்.
- மொழிச்சிறுபான்மையோர்க்கு, அவர்கள் விரும்பினால், இப்போது நடைமுறையில் உள்ள அவர்தம் மொழி பயிற்று மொழியாகத் தொடர வாய்ப்பு அளிக்கலாம்.
- தாய்மொழி வழிக் கற்பதுதான் சாலச்சிறந்தது என்பதை பொதுமக்களும் பெற்றோரும் உணரச் செய்து தாய்மொழி/தமிழ் மொழிவழிக் கற்பதை ஊக்குவித்து இராமமூர்த்தி குழுப் பரிந்துரையைப் படிப்படியாகச் செயல்படுத்த அரசு முயலவேண்டும்.

### 5.19. மாணவர்களின் தேர்ச்சி அளவை மதிப்பிடுதலும் குறிப்பேடும்

**5.19.1.** மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவு கற்றபின்னர் அவர்கள் தேர்ச்சி எவ்வாறு உள்ளது என்பதை அறிய வேண்டியது அவசியம். மாணவர்கள் தாம் எந்த அளவுக்குக் கற்று உள்ளோம் என்பதை அறிய ஆவல் உள்ளவராக இருப்பது இயற்கை. அவர்கள் மேற்படிப்பு படிக்கவோ அல்லது பணியில் அமரவோ அவர்களின் கல்வி அறிவு பற்றிய ஒரு மதிப்பீடு தேவைப்படுகிறது. ஆசிரியரைப் பொறுத்தவரை தனது உழைப்புக்கு என்ன பயன்? எந்த அளவு தமது மாணவர் கல்வி அறிவைப் பெற்று இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள தேர்வு ஒரு வாய்ப்பு. அந்த முடிவுகளை ஆராய்ந்து தனது கற்பிக்கும் முறையில் மாற்றங்கள் தேவையா? பாடத்திட்டத்தில் மாற்றங்கள் தேவையா? என்பனவற்றையும் இவை போன்ற கற்றல், கற்பித்தல் தொடர்பான பல செய்திகளையும் அறிய முடியும். பள்ளி நிர்வாகத்தினர், பள்ளியில் படித்த மாணவர் பெற்ற அறிவின் அளவைத் தேர்வுகள் மூலம் அறிந்து பாடத்திட்டம் கற்பிக்கும் முறை மட்டுமல்லாது, எந்த ஆசிரியருக்கு என்ன பயிற்சி தேவைப்படுகிறது? என்ன அறிவுரை சொல்ல வேண்டும்? என்பன போன்ற கல்வித்துறை சம்பந்தமான பல விவரங்களும் விளக்கங்களும் பெற தேர்வு முடிவுகள் பயன்படும். பொதுமக்கள், மாணவரின் பெற்றோர், பள்ளியின் செயற்பாடு குறித்தும் தங்கள் குழந்தைகளின் கல்வியில் கண்ட முன்னேற்றம் குறித்தும் அறிந்து கொள்ள இது உதவும்.

அரசு கல்விக்காகச் செலவிடும் தொகை என்ன பலன் அளித்துள்ளது என்பதை அறியவும் கல்வித்துறையில் என்ன மாற்றங்கள் செய்ய வேண்டும்? நிதி உதவியில் மாற்றங்கள் தேவையா? என்பனவற்றையும் மதிப்பிட தேர்வு முடிவுகள் பயன்படும். இவ்வாறு தேர்வுகள் பல முக்கிய பயன்களைத் தருவதால் அவை இன்றியமையாதவை என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

**5.19.2.** பள்ளி இறுதித் தேர்வில் உள்ள பாடங்கள் மட்டுமல்லாது எல்லாப் பாடங்களிலும் தேர்வுகள் நடத்தி அவற்றில் மாணவர் பெற்ற மதிப்பெண்களை உரிய நேரத்தில் மாணவர்க்கும், அவர்தம் பெற்றோருக்கும் தெரியப்படுத்த வேண்டும். இவற்றை மாணவனின் குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும். இதன் மூலம் மாணவர் அந்தப் பள்ளியில் கல்வி கற்ற ஆண்டுகளில் அவர் பெற்ற கல்வி வளர்ச்சியை அறியலாம். இதே குறிப்பேட்டில் மேலும் மாணவர் குறித்து ஏதேனும் பொதுவான கருத்துக்கள், செய்திகள் அதாவது மாணவரின் சிறப்புத் தகுதிகள், போட்டிகளில் கலந்துகொண்டது, பொதுவாக அவர் வருகை, நடத்தை இவை போன்றவை தெரியப்படுத்த வேண்டும் எனில் அவற்றையும் குறிப்பிடலாம்.

# 6. பள்ளி, வகுப்பறைச் சூழல்

## 6.1. நிறைவான கற்றல் சூழலைப் பேணுதல்

**6.1.1.** வகுப்பறையில் மட்டுமல்லாது, பள்ளி வளாகத்திலும், கல்விச் சுற்றுலா போன்ற வெளியுலகிலும் மாணவர் அறிவைப் பெறுகின்றனர். அதாவது வகுப்பறை, பள்ளி வளாகம், வெளிவுலகு ஆகியவற்றில் எல்லாம் கற்றல் நிகழ்கிறது. பள்ளி என்பது மாணவரும், ஆசிரியரும் அறிவைப் பெறவும் பெருக்கிக்கொள்ளவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம். அங்கு பள்ளி அறைகளில் கல்வி கற்பிக்கப்படும். வெளியிலும் விளையாட்டுத் திடல்களில் மாணவர் ஒருவரோடு ஒருவர் பழக வாய்ப்பு உண்டு. பள்ளி வகுப்புகளுக்கு இடையில் கிடைக்கும் நேரங்களிலும் மாணவர் தம்மிடையே பல செய்திகளைப் பகிர்ந்து கொள்வர். வகுப்புத் தேர்வு, ஆண்டு இறுதித் தேர்வு இவற்றிற்கு கடைசி நேரத்தில் படிப்பது, தேர்வு எழுதுவது, தேர்வு முடிவுகளைக் கவலையுடன் எதிர்நோக்குவது, தேர்வு முடிவை அறிந்து மகிழ்வது அல்லது வருந்துவது, இவை யாவும் கலந்ததே பள்ளி வாழ்க்கை. இவற்றில் ஒவ்வொரு நிகழ்விலும் ஏற்படும் அனுபவங்களால் அறிவு வளர்கிறது என்பதில் ஐயமில்லை.

**6.1.2.** எல்லாக் குழந்தைகளும் இயற்கையாகவே அறிவு பெற ஆவல் உள்ளவர்கள்தான். குழந்தைகளுக்குள் அடிப்படை அறிவு நுட்பத்தில் வேறுபாடுகள் இல்லை. ஆனால் எவ்வாறு அறிவைப் பெற விரும்புகிறார்கள் என்பதில் வேறுபாடுகள் உண்டு. சில குழந்தைகள் நேரடியாகப் பார்த்துக் கற்றுக் கொள்ளும்; சில செவி வழி, கேள்வி வழி ஞானம் பெறும்; சில தொட்டு, செய்முறையில் கற்றுக் கொள்ளும். இவ்வாறு கற்றுக்கொள்ளும் முறைகளில் வேறுபாடுகள் உண்டு.

**6.1.3.** பள்ளிக்கூடம் குழந்தைகளை அடைத்து வைக்கும் இடமாக இருக்கக் கூடாது. அது புதியவற்றை, மகிழ்ச்சியாக அறியும் ஓர் இனிமையான பயணமாக அமையவேண்டும். குழந்தைகள் காலையில் எழுந்த பின்னர் எப்போது பள்ளிக்கூடம் செல்லலாம் என்று ஆர்வமுடன் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவும், விடுமுறை காலத்தில் எப்போது விடுமுறை முடிந்து பள்ளி செல்லலாம் என்று ஆவலுடன் காத்திருக்கவும் வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் எவ்வாறு கற்க விரும்புகிறதோ அவ்வாறு அது கற்பதற்குத் தகுந்த

சூழல் பள்ளியில் இருந்தால் இத்தகைய நிலை உருவாகும். அத்தகைய சூழலில் அங்கு, தனிப் பயிற்சி (tuition) தேவைப்படாது.

**6.1.4.** ஒரு பள்ளிக் கூடத்தில் கற்கும் மாணவர் எந்த அளவுக்கு கல்வி அறிவு பெற்று விளங்குகிறார்கள் என்பதைப் பொறுத்தே, அந்தப் பள்ளிக்கூடம் நல்ல பள்ளியா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். ஒவ்வொரு மாணவனும் அவனது பின்புலம் எத்தகையதாக இருப்பினும் தான் படிக்கும் வகுப்பில் வேறு எந்த மாணவனுக்கும் சளைத்தவனாக இல்லாது, அந்நிலைக்கு உரிய அறிவுடன் விளங்குவான். நல்ல பள்ளிக்கூடம், தனது பள்ளியில் கல்வி கற்கும் எல்லா மாணவரும் சிறந்தவர்களாக விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கும். அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும், யாவரும் நல்லாசிரியர்களாகத் திகழ்வார்கள். தங்கள் மாணவர் யாவரும் முழுமையாகக் கற்று அறிந்தவர் ஆவார் என்று நம்புவார்கள். அவர்களிடம் பாரபட்சம் காண்பிக்கமாட்டார்கள். மாணவர்கள் பள்ளிப் பாடங்களைக் கற்பது முக்கியம் என்பதில் ஐயமில்லை. நல்ல பள்ளி மாணவரிடம் பரிவு காட்டும். அவர்கள் மதியம் உணவு உண்ணுவதில் கவனம் செலுத்தும். அதாவது மாணவரின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். நன்கு கல்வி கற்பிக்கத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகள் இருக்கும். சுகாதார வசதிகளும் இருக்கும். இவையாவும் சீராகப் பராமரிக்கப்படும்.

**6.1.5.** சுற்றுலா என்பது பள்ளிக் கல்வியில் இருந்து தப்பிச் செல்லுவதற்காக அல்ல. பள்ளிக் கல்வியின் விரிவாக்கமாக அது அமைய வேண்டும்.

**6.1.6.** பள்ளியில் பலவிதமான தேர்வுகள் செயல்படுத்தப்படும். அவை மாணவனை வரிசைப்படுத்துவதற்காக அல்ல; ஒவ்வொரு மாணவரும் எந்த அளவுக்கு, அறிவு பெற்று உள்ளார் என்பதை அறியவும், ஆசிரியர், தான் கற்பிக்கும் முறை எந்தளவுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பதை அறியவும் பயன்படுத்தப்படும். மாணவர் ஒவ்வொருவரும் ஒரு நிலையில் எதிர்பார்க்கப்படும் அறிவைப் பெற்ற பின்னரே அடுத்த நிலை அறிவு பெற வழி வகுக்கப்படும்.

**6.1.7.** பள்ளியின் சட்ட திட்டங்கள் மாணவர், அவர் தம் பெற்றோர், ஆசிரியர் யாவருக்கும் நன்றாகத் தெரியும். அவை பாரபட்சமின்றிச் செயல்படுத்தப்படும் என்பதும் யாவருக்கும் தெரியும். ஆகவே அவற்றை அவர்கள் யாரும் மீறமாட்டார்கள்.

**6.1.8.** மாணவர் எவரும் தான் கூட்டத்தில் ஒருவன் என்று எண்ணும் நிலை இல்லாது, ஆசிரியரும் பள்ளியும் தன்னைத் தனிப்பட்ட முறையில் கவனித்துக் கொள்ளுவதாக நினைக்கும் வகையில் பள்ளிகளும் ஆசிரியர்களும் செயல்பட வேண்டும். ஆகவே தன்னுடைய எதிர்காலம் தான் விரும்பும் வண்ணம் சிறப்பாக அமைய, பள்ளியும், தன் பள்ளி ஆசிரியர்களும் தனக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை ஒவ்வொரு மாணவர்க்கும் உருவாக்கும் சூழல் வேண்டும். பள்ளியில் படிக்கும்போது ஒவ்வொரு மாணவரும் தமது திறமைகளை முழுமையாக வளர்த்துக் கொள்ளும் வகையிலும் பாராட்டும்படி வெற்றி பெறும்போது அம்மாணவரைப் பாராட்டி உற்சாகப்படுத்தி மேன்மேலும் வளரும் சூழலை உருவாக்கும் வகையிலும் பள்ளி செயல்பட வேண்டும்.

**6.1.9.** திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், தானே மேன்மேலும் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்ளும் வகையிலும் பள்ளி செயல்படுவதுடன் நற்குணங்களை வெறும் சொற்களால் சொல்லாது, வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் வகையில் கற்பிக்க வேண்டும்.

**6.1.10.** பள்ளியின் தலைமையாசிரியர் திறமை மிக்க நல்ல தலைவராகச் செயல்படுவார். தேவை எனில் பள்ளி சார்ந்த எந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு மற்ற யாவரையும் வழி நடத்துவார். நல்ல தலைவருக்குண்டான எல்லாத் திறமைகளும் குண நலன்களும் அவரிடம் இயற்கையாக அமைந்திருக்கும். அவர் தனது பள்ளி ஆசிரியர்களையும் மற்றப் பணியாளர்களையும் தங்களின் பணியைச் சிறப்பாகச் செய்ய வழிகளைச் சொல்லித் தருவார். தேவை எனில் சிறப்புப் பயிற்சி பெறவும் வழிவகை செய்வார்.

**6.1.11.** பள்ளி சமுதாயத்துடன் இணைந்து செயல்படும். அதன் தேவைகளையும் எதிர் பார்ப்புகளையும் புரிந்துகொண்டு அவற்றைப் பூர்த்தி செய்ய வழி வகுக்கும். சமுதாயமும், பள்ளி சிறப்பாகச் செயல்படுவதில் அக்கறை கொண்டு, தேவையான வசதிகள் செய்யும்.

**6.1.12.** பொதுவாக, பெற்றோர், மாணவர், ஆசிரியர் மற்றப் பணியாளர்கள் நிர்வாகத்தினர் யாவருக்கும் தம் பணிகள், தம் உரிமைகள் பொறுப்புகள் தெரியும் என்பதால் அவரவர் தத்தம் பணிகளைச் சிறப்பாகச் செய்வார்கள். ஒருவரை ஒருவர் மதித்து நடப்பார்கள். மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வெளியுலக அங்கீகாரம் பெறும் ஒவ்வொருவரும் பாராட்டப்படுவர். அங்கு கல்வி கற்ற மாணவர் யாவரையும் வெளியுலகம் கை நீட்டி வரவேற்கும். சிறப்புக் கல்வி தேவைப்படும் மாணவர், மனவளர்ச்சி குன்றிய மாணவர் ஆகியோருக்குத் தனிக்கவனம் செலுத்தப்படும். மொத்தத்தில் எல்லா மாணவரையும் அவரவர்க்குத் தேவையான தரமான கல்வியை முழுமையாக அளிக்கும், கற்பதற்கும், மேன்மேலும் கற்கவேண்டும் என்ற ஆவலை வளர்க்கும், கற்றதைப் பின்பற்றும் வகையில் கற்பிக்கும் பள்ளிச் சூழலே நல்ல பள்ளிச் சூழல் எனலாம்.

**6.2 வகுப்பறை, வகுப்பு**

**6.2.1**. வகுப்பறை காற்றோட்டமாக இருக்கும். தேவையான வெளிச்சத்துடன் இருக்கும். மான்ய நெறிமைகளில் குறிப்பிட்டபடி ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு சதுர மீ. அளவு இட வசதியுடன் அமைக்கப்பட்டிருக்கும். வகுப்பறையின் உயரம் 3.7.மீ. ஆவது இருக்க வேண்டும். சுவர்களில் பொருத்தப்பட்ட அலமாரிகளில் மாணவர் செய்த கைவினைப் பொருட்கள், வரைந்த சித்திரங்கள் போன்றவை வைக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் வகுப்பறையில் இவற்றைக் காணும்போது தங்கள் செயற்பாடுகள் மதிக்கப்படுகின்றன; தாங்கள் பாராட்டப்படுகிறோம் என்று பெருமிதம் கொள்வார்கள். வகுப்பறையில் மாணவர் தமக்கு முன்னோடிகளாகக் கருதக்கூடிய அறிவாளிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், அரசியல் அறிஞர்கள் போன்றவர்கள் படங்கள் பொருத்தப்பட்டிருக்கும். அவர்களின் முக்கிய அறிவுரைகள், கூற்றுகள் போன்றவையும் எழுதிய பலகைகள் சுவர்களில் மாட்டப்பட்டிருக்கும். இப்படங்களைப் பார்த்தும் அறிவுரைகளைப் படித்தும் தாம் விரும்பும் துறையில் பெயரும் புகழும் பெறும் வகையில் வாழவேண்டும் என்ற உணர்வைப் பெறுவார்கள். பாடத்திற்குத் தேவையான வரை படங்களும் வகுப்பறையில் மாட்டலாம். இவை மாணவர்களுக்குத் தங்கள் பாடங்களை நினைவு கொள்ளவும் ஆசிரியர் தேவையானபோது பயன்படுத்தவும் உதவும். இத்தகைய படங்களும் கைவினைப் பொருட்களும் மாணவரும் ஆசிரியருமே செய்தவை என்பதால் இவற்றுக்கு அதிகப் பொருள் செலவாகாது.

**6.2.2.** ஒரு வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்க்கும் தகுந்த வகையில் பாடங்களைக் கற்பிப்பது ஆசிரியர் கடமை. தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005) வகுப்பில் மாணவர் எண்ணிக்கையைக் குறித்துப் பின்வருமாறு சொல்கிறது. " உலக அளவிலும் தேச அளவிலும் பெற்ற அனுபவங்களில் இருந்து ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 30க்கு மேல் இருப்பது விரும்பத்தக்கது அல்ல என்று தெரிகிறது. கோத்தாரி குழு அறிக்கையில் (1966) அதிக மாணவர்கள் அடங்கிய வகுப்புகள் கற்பிக்கும் தரத்திற்கு மிக அதிகமாக தீங்கு விளைவிக்கும்; அத்தகைய வகுப்புகளில் சிறப்பான கற்பித்தலும் பயனற்றுப் போகும் என்று கூறியுள்ளது". இக்குழுவும் அக்கருத்தை வலியுறுத்துகிறது.

**6.2.3.** சுருங்கச் சொல்வதெனில் வகுப்பறை தேவையான வெளிச்சத்துடனும், காற்றோட்டத்துடனும் மான்ய நெறிமைகளில் குறிப்பிட்டப்படி அமைக்கப்பட வேண்டும். இனி வருங்காலங்களில் புதியதாகத் தொடங்க உள்ள பள்ளிகளின் அனைத்து வகுப்பறைகளும் ஏற்கனவே உள்ள பள்ளிகளில் புதியதாகக் கட்டப்பட உள்ள வகுப்பறைகளும் ஒவ்வொரு மாணவனுக்கும் குறைந்தபட்சம் ஒரு சதுர மீட்டர் இடவசதியும், 3.7 மீட்டர் உயரத்துடனும் அமைக்கப்பட வேண்டும். வகுப்பறைச் சுவர்களில் மாணவர் வரைந்த சித்திரங்கள், கைவினைப் பொருட்கள் மாணவர்க்குப் பயன்படும் வரைபடங்கள் பெரியோர் படங்கள் பொருத்தினால் மாணவர் தாங்கள் பாராட்டப்படுகிறோம் என்று பெருமைப்படுவர்; அவர்களுக்கு வழிகாட்டிகள் பற்றிய சிந்தனையும் பெருகும்; தங்கள் பாடங்களை நினைவு கொள்ளவும் ஏதுவாகும்.

### 6.3. பள்ளி வளாகம்

குழந்தைகள் வண்ணமயமான, இயற்கையோடு இயைந்த, அமைதியான, விளையாடத் தேவையான திறந்த வெளிகளுடன் கூடிய, ஒளிந்து விளையாட மறைவிடங்கள் உள்ள, விலங்குகள், மலர்ச்செடிகள், பழ மரங்கள் ஆகியவை நிறைந்த இடத்தையே விரும்புவர். இத்தகைய வளாகத்தை அவர்கள் ஒரு மகிழ்ச்சிகரமான வளாகம் என்று எண்ணுவார்கள். பள்ளிக்கு வர ஆர்வத்துடன் இருப்பார்கள். வளாகத்தில் அமைந்த இயற்கைச் சூழல் பாடத்திட்டத்தில் உள்ள உயிரியல் பாடங்களைக் கற்க உதவும்; தாங்கள் படிக்கும் பாடங்களுக்கு ஓர் உயிரை ஊட்ட உதவும். வளாகத்தில் உள்ள திறந்த வெளி, காலையில் பள்ளி ஆசிரியர் மாணவர் கூட்டம் நடத்தப் பயன்படும். மொத்தத்தில் பள்ளி

வளாகம், அங்கு அமைந்த கட்டிடங்கள், மைதானம், மரங்கள் செடிகள், இவைகள் யாவும் மாணவர்களைத் தங்கள் பள்ளிக் குறித்து பெருமைப்படும்படி அமைய வேண்டும். மேலும் பள்ளி வளாகத்தில் மாணவர் உடற்பயிற்சி செய்யவும் விளையாடவும் தேவையான இடவசதி வேண்டும்.

### 6.4. பள்ளியில் ஒழுக்கம்

**6.4.1.** பள்ளியின் வகுப்பறை, மாணவர்களை வடிவமைக்கும் இடம்; வார்த்தெடுக்கும் இடம்; அடித்தளங்களை வலுப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளில் ஒளியூட்டும் இடம். அவர்களுடைய ஆளுமைகளை மேம்படுத்தும் இடம். இத்தகைய இடத்தில் ஒழுக்க விதிகள் அத்தியாவசியமானவை என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. ஒழுக்க விதிகள் வேலி என்றால் அதன் எல்லைக்குள் பாதுகாப்பாக வளர்ந்து செழிக்கும் பயிர் ஒழுக்கமே ஆகும்.

**6.4.2.** மாணவர்களின் ஒழுக்கம் என்பது அவர்களிடம் இருக்க வேண்டிய நன்னடத்தையையே முதன்மையாய்க் குறிக்கும். அவர்களுடைய கடமைகளைச் செவ்வனே மேற்கொள்வதே அதன் தொடர்ச்சியாய் இருக்கும். இந்த ஒழுக்கமே அவர்கள் கல்வியில் உயர உதவும். ஒழுக்க வீழ்ச்சி, பண்பாட்டின் வீழ்ச்சியாகும். வீழ்ச்சிக்குரிய போக்குகள் உள்ள மாணவர்களிடம், "எழுமின் விழிமின்" என்பது ஓட்டைப் பானையில் நீரை ஊற்றுவது போன்றது. ஒருவன் கல்வியில் சிறந்து விளங்கி, உயர்ந்து வளர வேண்டுமெனில் ஒழுக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு இன்றி அதற்குரிய கல்வியைக் கற்றுவிட முடியாது என்ற உணர்வைப் பெறுதல் வேண்டும். " ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம் ஓதலின் சிறந்தன்று ஒழுக்கமுடைமை" என்று எடுத்துக் கூறப்பட்டது இந்த அடிப்படையில்தான்.

**6.4.3.** ஒழுக்கத்தின் வகைகள் இரண்டு. ஒன்று தனி மனித ஒழுக்கம், மற்றொன்று சமுதாய ஒழுக்கம். தனி மனித ஒழுக்கம் இன்றேல், சமுதாய ஒழுக்கம் உருவாகாது. இன்றைய மாணவனே நாளைய மனிதன். இன்றைய மாணவர்களே நாளைய சமுதாயம்.

**6.4.4.** மாணவர்களை அவர்தம் ஒழுக்கமே முதலானது, முதன்மையானது என்பதை அறியச் செய்தலும், ஒழுக்கத்தின் மேன்மையை உணரச் செய்தலும் ஆசிரியர் தம் கடமையாகும்.

**6.4.5.** ஒரு செடியிலிருந்து மலர், காய், கனி முதலியவற்றை எதிர்பார்க்கும் தோட்டக்காரன் அந்தச் செடி நடப்பட்டு வளர்ந்து வரும் இடத்தின் மீது தான்—மண்ணின் மீது தான்—தன்னுடைய கவனத்தையும், உழைப்பையும் செலுத்துகிறான். நீர் . பாய்ச்சுதல், களையெடுத்தல், உரமிடுதல் எனத் தோட்டக்காரனின் கவனமெல்லாம் மண்ணின் மீதே தொடர்கிறது. ஒரு நாளில் அவன் நிமிர்ந்து பார்க்கும் போது அந்தச் செடி அவன் விரும்பிய அனைத்தையும் தருகின்ற தருவாகத் தெரிகிறது. ஆசிரியரும் தோட்டக்காரரே. அவர் மாணவர்களின் மனங்களில் கவனம் செலுத்த வேண்டியவராய் இருக்கிறார். அவர் கவனம் செலுத்துவதில் வெற்றி பெற்றுவிட்டால் மாணவர்களிடத்தில் ஒழுக்க மாண்புகள் வெற்றிகரமாக வெளிப்படும். இயல்பாகவும் பயனுள்ள விதத்திலும் வெளிப்படும். இதன் மூலம் கல்வியின் நோக்கங்களில் முதன்மையான ஒன்று நிறைவேறி விடுகிறது.

**6.4.6.** பள்ளியில் ஆசிரியரும் மாணவரும் ஒருவரை ஒருவர் சார்ந்து உள்ளனர் என்பதை இருவரும் புரிந்து கொள்ள வேண்டும். எப்படி ஆசிரியர் இல்லையேல், மாணவர் இல்லையோ, அவ்வாறே மாணவர் இல்லையேல், ஆசிரியர் இல்லை. ஆசிரியர் கொடுப்பவர்; மாணவர் பெறுபவர் என்றாலும், கல்வி மாணவரைத் தழுவியது என்பதால் ஆசிரியர் கற்பவர் கற்க ஊக்குவிப்பவர் என்பதே நிதர்சன உண்மை. கல்வி என்ற தமிழ்ச்சொல்லுக்கு வேர் 'கல்' . கல் என்றால் தோண்டுதல் என்பது பொருள். அதாவது முயன்று அறிவைப் பெறுதல் கற்றல் ஆகும். ஆகவே கல்வி என்ற சொல்லே கற்பவரை முதன்மைப்படுத்துகிறது.

**6.4.7.** ஒவ்வொரு பள்ளியிலும் விதிகள், நெறிகள், நடைமுறைகள் உண்டு. அவையே மாணவரின் ஒழுக்கத்திற்கான வரையறைகள். சில பள்ளிகளில் வகுப்புத் தலைவர் என்று ஒரு மாணவரைத் தேர்வு செய்து பள்ளியின் ஒழுங்கை நிலைநாட்டுவதும், கட்டுப்பாடுகள் உருவாக்கிச் செயற்படுத்துவதும் உண்டு. இத்தகைய முறைகளில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும்போது மாணவர்கள் சுயமரியாதை, மன வளர்ச்சி, கற்பதில் ஆர்வம், இவற்றில் பாதிப்பு ஏற்படாதவாறு பள்ளி வளாகத்திலும், வகுப்பறைகளிலும் ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும். அண்மைக்காலத்தில் நமது மாநில அரசு இதை முழுமையாக உணர்ந்து மாணவரை உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் துன்புறுத்துவதைத் தடை செய்துள்ளது. இது வரவேற்கத்தக்கது. (அரசு ஆணை எண்.12, தேதி .18.1.2007 : இணைப்பு 6.1)

**6.4.8.** பள்ளியில் ஒழுக்கம் என்பது பள்ளியில் உள்ளவர்கள் தாங்களாகவே வகுத்துக் கொண்ட விதிகளின்படி நடப்பது ஆகும். அதாவது பள்ளி தன்னைத்தானே முறையாகச் செயல்படச் செய்கிறது. இதை மாணவர்க்கு உணர்த்தும் முகத்தான் அவர்களையே ஒழுக்க விதிகளை வகுக்கச் சொல்லலாம். அவர்களாகவே அவ்விதிகளைச் செயல்படுத்தச் சொல்லலாம்.

**6.4.9.** *விதிமுறையின்* பேரால் *மாணவர்களைத்* தண்டிப்பதில் பயனில்லை. முதலில் மாணவரை ஏன் மீறி நடந்தார் என்று கேட்டு, அவருடைய பதிலைப் பொறுமையாகக் கேட்டறிந்து நடவடிக்கை எடுப்பதுதான் பொருத்தமானது. ஒழுக்கத்தை நிலை நாட்டுவதற்கு அதிகாரம் செலுத்துவது தவறு. தண்டிக்கும் ஆசிரியரோ, தலைமையாசிரியரோ, தான்கொடுக்கும் தண்டனை பள்ளி விதிகளின்படி நியாயமானது என்று மாணவர் உணரும்படியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதிகாரம் மதிக்கப்படுவதில்லை, அஞ்சப்படுகிறது என்பதால், அதிகாரம் செலுத்தாமலேயே மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க செய்வதே உசிதமாகும்.

**6.4.10.** ஒழுக்கமுள்ள மாணவர்கள் உருவாக, 'அதைச் செய்யாதே! இதைச் செய்யாதே' என்பது போன்ற எதிர் முறை அணுகுமுறை அதிகப் பயனை அளிக்காது. நேர்முறை உபதேசங்களும் எதிர்பார்க்கும் விளைவுகளை ஏற்படுத்தி விடுவதில்லை. ஒழுக்கம் மற்றும் ஒழுக்க விதிகளைப் பற்றிய உணர்வையும் அவற்றைத் தாமே கடைப்பிடிக்கக் கூடிய ஆர்வத்தையும் மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். இதற்கோர் இனிய வழி நீதிக்கல்வி வகுப்புகள். அரிச்சந்திரனின் வாழ்வு காட்டும் நீதி போதனையை உணர்ந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற மாணவச் சிறுவன், *வாழ்நாளெல்லாம் உண்மையை* மட்டுமே பேசிவந்த *மகாத்மா* காந்தியாக மாறிவிட்டாரே! பள்ளிகளில் நீதிக்கல்வி வகுப்புகளில் செயல்பாடுகள் சில இணைப்பு 6.2ல் கொடுக்கப்பட்டுள்ளன. "கல்வி என்பது நல்ல பழக்க வழக்கங்களையும் நல்ல நடத்தைகளையும் மாணவர்களிடையே வளர்க்க வேண்டும்" என்பது காந்தியடிகளின் கருத்தாகும். அதாவது, பள்ளியில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கு மாணவர்கள் தங்களைத் தாங்களாகவே முறைப்படுத்திக் கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். விதிகளை மீறினால் *தண்டனை*

வழங்குவதைவிட, விதிகளை மீறாமல், அவற்றை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து மாணவர்கள் செயல்படும்படியான சூழலை உருவாக்குவது, தலைமையாசிரியரின், ஆசிரியர்களின் கடமை.

**6.4.11.** வகுப்பறையின் தூய்மை பேணுதல், அமைதி காத்தல், கல்வியில் கவனம் செலுத்துதல், ஆசிரியரின் கட்டளைகளுக்கு மனமுவந்து கீழ்ப்படிதல், உடன் பயிலும் மாணவர்களுடன் ஒற்றுமையாய் இருத்தல். ஒத்துழைப்புக் கொடுத்தல் முதலியனவெல்லாம் வகுப்பறை ஒழுக்கங்கள் என்பதை அறியாமல் ஒருவன் நல்ல மாணவனாகவோ, சிறந்த மாணவனாகவோ உருவாக முடியாது.

**6.4.12.** விதிமுறைகளை நெறிமுறைகளாக உணரும் மாணவன் வகுப்பறையிலும் வாழ்வியலிலும் ஒழுக்கத்தைப் பேணுவதை ஒரு சுமையாகக் கருதமாட்டான்.

**6.4.13.** பள்ளியில் இருக்கும் நேரத்தைவிட வீட்டில் இருக்கும் நேரம் அதிகம் என்பதால் ஒழுக்கக் கல்வியில் பெற்றோர்களும் இயன்ற பங்கை ஏற்க முடியுமானால் அது பொன்மலர் நறுமணம் பெற்றது போலாகிவிடும். இந்தக் கூட்டுப் பொறுப்பும் கற்பிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பள்ளி வகுப்பறைச் சூழலில் இருந்து வர வேண்டிய ஒழுக்கமும் ஒழுக்க விதிகளும் வீட்டிலிருந்து பெறக்கூடிய விதைகளாக இருக்குமானால் அவற்றின் வீரியம் மிகுந்து விளங்கும்.

### 6.5. பெற்றோரின் பங்கும், சமுதாயத்தின் பங்கும்

#### 6.5.1. பெற்றோர் கடமைகள்

நமது நாட்டில் பொதுவாக பெற்றோர் தமது குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டால் தமது கடமை முடிந்து விட்டது என்று நினைக்கிறார்கள்; சிலர் மிக அதிகமாகக் கல்விக் கட்டணம் வாங்கும் பள்ளியில் சேர்த்துவிட்டால் தன் கடமை முடிந்தது என்று எண்ணுகிறார்கள்; மற்றும் சிலர் ஆங்கிலவழிக் கல்வி கற்பிக்கும் பள்ளியில் தன் குழந்தையைச் சேர்த்து விட்டால் போதும் என்று எண்ணுகிறார்கள். ஆனால், நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக் காலம் காலமாக நாம் நல்ல கல்வி கற்பிப்பது பெற்றோர்

கடமை என்றே நம்பி வந்துள்ளோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்கப் புலவர் பாடினார்.

*ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*
(புறநானூறு 312, வரிகள் 1,2)

குழந்தையின் உடலைப் பேணுவது மட்டுமல்ல, குழந்தை, ஒரு வாழ்க்கைத் தொழிலைக் கற்றுக் கொள்ளச் செய்வதும் பெற்றோரின் கடமை. பெற்றோர் தம் குழந்தைகள் என்ன கற்கிறார்கள்? கற்க வேண்டியவற்றைக் கற்கிறார்களா? கல்வியில் முன்னேற்றம் அடைந்துள்ளார்களா? குழந்தைகள் தமது கல்வியில் மேலும் முன்னேற்றம் அடைவதற்கு என்ன உதவிகள் பெற்றோர் செய்ய வேண்டும் என்பதையும் ஆசிரியருடன் கலந்து பேசித் தமது குழந்தைகளின் கல்வி முன்னேற பெற்றோர்கள் தவறாமல் கவனம் செலுத்த வேண்டும்.

**6.5.2. பெற்றோர் செய்யக் கூடியவை**

குழந்தைகளுக்கு கற்பதின் மீது ஆர்வமுண்டாக்குவதற்காகப் பெற்றோர் தம் பங்குக்குச் செய்யக் கூடியவை, பின்வருமாறு:

- குழந்தைகள் பேச்சுத் திறனை வளர்க்கலாம். அவர்களுக்குக் கதைகள், குடும்ப அங்கத்தினர், நண்பர், வசிக்கிற இடம் போன்றவற்றைப் பற்றிய விவரங்களைச் சொல்லாம்.
- பக்கத்து வீடுகளில் உள்ளவர்களையும் வீட்டுக்கு வருபவர்களையும் அறிமுகப்படுத்தலாம். சமுதாயத்தில் ஒவ்வொருவரிடமும் குறிப்பாக அறிமுகம் இல்லாதவர்களிடம் எவ்வாறு பழகுவது என்று சொல்லிக் கொடுக்கலாம். முக்கியமாக, பெண்குழந்தைகளுக்குச் சமுதாயத்தில் அவர்களுக்கு தவறான நபர்களால் ஏற்படக்கூடிய தொந்தரவுகள் குறித்துத் தெரிவிக்கலாம். அத்தகைய சூழ்நிலைகளில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் தெரிவிக்கலாம்.

- சினிமாவோ, தொலைக் காட்சியோ பார்க்கும் போது, குழந்தைகளை அவர்கள் பார்க்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி பேசச் செய்யலாம். அவைகுறித்து அவர்கள் கேட்கிற கேள்விகளுக்கு முடிந்தவரை பதில் சொல்லலாம்.
- வீட்டிலிருக்கும் பொருட்களை கையாள்வது பற்றிச் சொல்லிக் கொடுத்து எவற்றை அவர்கள் தாங்களே கையாளலாம், எப்பொருட்களைப் பெரியவர்கள் துணையின்றித் தொடக்கூடாது போன்ற விவரங்களைக் குழந்தைகளுக்கு விளக்கலாம். குழந்தைகளுக்குப் பெரிதும் உதவும் புத்தகங்கள், படங்கள் பத்திரிகை போன்றவற்றை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் விளக்கலாம்
- பள்ளிக்குச் செல்கிற குழந்தைகளிடம் அன்றன்றைக்குப் பள்ளியின் செயல்பாடுகள் குறித்து பெற்றோர் தவறாமல் பேசி அறிவது, பெற்றோர் அதிகம் படித்தவராக இல்லாவிட்டாலும்கூட, குழந்தைகளுக்குப் பெற்றோர் காட்டுகிற இத்தகைய அக்கறை ஒரு பாதுகாப்பு உணர்வையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

**6.5.3. பள்ளியுடன் இணைந்து செய்யக் கூடியன**

பெற்றோர் தமது குழந்தைகளுக்குக் கல்வி கற்கும் பள்ளியில் பாடம் சொல்லித் தரும் ஆசிரியர்களைச் சந்தித்து அவர்களுடைய பெயர், அவர் என்ன பாடம் சொல்லித் தருகிறார், போன்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளுவது நல்லது. ஆசிரியர்கள் கற்பிப்பதைத் தங்கள் குழந்தைகள் எந்த அளவுக்குத் தெரிந்து கொள்கிறார்கள், தெரிந்துகொண்டதை எந்த அளவுக்கு நடைமுறையில் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கவனித்து, தெரிந்து கொண்டதைப் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். மேலும் ஒத்த வயதுள்ள பிள்ளைகளோடு பழக விளையாட வாய்ப்புகள் கண்டிப்பாக உருவாக்கித் தரவேண்டும். குழந்தைகளின் இயல்பை அறியாமல் இலக்குத் தீர்மானித்து, அவர்களை நிர்பந்திக்கக் கூடாது; குழந்தைகளின் தவறுகளுக்குத் தயக்கங்களுக்குச் சுறுசுறுப்பின்மைக்குக் காரணங்களைப் பொறுமையுடன் கண்டுபிடித்து மிகவும் கவனமாக அணுகவேண்டும்; பெரிய தண்டனைகள் பயனற்றவை என்பதால் அவற்றைத் தவிர்க்க வேண்டும்; பெற்றோர்கள் கற்றல் நிகழ்வில் உள்ள குறைகளின் காரணம் உணர்ந்து

அக்குறைகளைக் களைவதற்கு ஆசிரியருடன் பேசி முயற்சி மேற்கொண்டால் பிள்ளைகளின் கற்றல் ஆர்வத்தை வளர்க்க இயலும்.

### 6.5.4. பெற்றோர் தம் கடமையை ஆற்றும் முறைகள்

பெற்றோர்கள் கல்வியின் அவசியத்தை உணர்ந்து தங்கள் குழந்தைகளைத் தவறாது பள்ளிக்கு அனுப்ப வேண்டும். பள்ளிக்கு அனுப்பினால் மட்டும் போதாது. அவர்கள் பள்ளியில் பெறும் தேர்ச்சி என்ன ? அதனை உயர்த்த நாம் என்ன வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதைக் கண்காணித்து உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சில பெற்றோர்கள் கல்வி வழங்குவது ஆசிரியர் பொறுப்பு என்று ஒதுங்கி விடுகிறார்கள். இது தவறான செயலாகும். ஒரு நாளில் சுமார் 5 மணி நேரம் மட்டுமே குழந்தைகள் ஆசிரியர்கள் பொறுப்பிலும் கண்காணிப்பிலும் இருக்கிறார்கள். எனவே பெற்றோர்களின் பொறுப்பு மிகவும் அதிகமானதாகும். சில பெற்றோர்கள் பள்ளிகளில் நடக்கும் விழாக்கள், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொள்வதுமில்லை. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போதுதான் தமது குழந்தைகளின் திறமைகள் மற்றும் தேவைகளை அறியமுடியும். எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை செவ்வனே ஆற்றினால்தான் அவர்தம் குழந்தைகளின் கல்வி சிறக்கும்.

*தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து*
*முந்தியி ருப்பச் செயல்.* (குறள் – 67)

### 6.5.5. சமுதாயத் தொடர்பு

பள்ளி தன்னைச்சுற்றியுள்ளச் சமுதாயத்தை பள்ளி நிகழ்வுகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். சில பாடங்கள் கற்பிக்கும் போது சமுதாய மக்கள் சிலரை அழைத்து அவர்களைக் கருத்தாளர்களாகப் பயன்படுத்தலாம். அவர்களைக் கற்பிக்கும் பொருட்களை உருவாக்க ஊக்குவிக்கலாம். சமுதாய மக்கள் நிரம்பப் படித்தவர்களாக இல்லாவிட்டாலும் கூட அவர்களையும் பள்ளியின் செயற்பாடுகளில் பங்கேற்கச் செய்வதால், சமுதாயம் பள்ளியின் முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளத் தொடங்கும்.

### 6.5.6 சமுதாயத்தின் பங்கேற்பு

சமுதாயத்தின் பங்கு கீழ்க்காணுமாறு அமையலாம்: நாட்டுப்புறக் கதைகள் வழியாக அந்தப் பகுதி வரலாறைத் தெரிவிக்கலாம்; பராம்பரிய அறிவைப் பற்றிய தகவல்களை அளிக்கலாம்; பாடத்திட்டத்தில் அந்தப் பகுதிசார்ந்த எடுத்துக்காட்டுகள், தகவல்கள், அனுபவங்களை எடுத்துச் சொல்லலாம்; மாணவர் சிந்திப்பதற்குத் தேவையான சில செய்திகளைச் சொல்லலாம்; உள்ளூர் ஆட்சி, மற்ற நடப்புகளைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கலாம்; மருத்துவர்கள், மாணவர்களின் உடல் நலம் பேண முகாம்கள் நடத்தலாம். குழந்தைகளின் பிரச்சனைகளுக்குத் தகுந்த அறிவுரைகள் கூறலாம்; தொழிற் கல்வி கற்பிப்பதில் உதவலாம்; கிராமத்தில் கற்றல் சூழலை உருவாக்கி கிராமமே பள்ளியாகச் செயல்பட உதவலாம்

### 6.5.7. பொது

**6.5.7.1.** சமுதாயம், பெற்றோர் ஆகியோர் பள்ளியின் செயற்பாடுகள், விழாக்கள், வளர்ச்சி ஆகியவற்றில் அவரவர் திறமைக்கும் வளமைக்கும் ஏற்ப பங்கேற்க வாய்ப்பளிக்க வேண்டும். முன்னாள் மாணவர் சங்கம், கிராம கல்விக்குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம் முதலியவற்றை உருவாக்கிச் செயற்படுத்தச் செய்தால் சமுதாயத்திற்கும் பள்ளிக்கும் இடையே நல் உறவு வளரும். சமுதாயம் பள்ளியின் செயற்பாடுகளில் நெருங்கிய தொடர்பு கொண்டால் தம் குழந்தைகளை வேறு பகுதியில் அமைந்த பள்ளிக்கு அனுப்பாது தம் பகுதிப் பள்ளிக்கே அனுப்புவார்கள். அதன்வழி பள்ளியும் வளரும், சமுதாயமும் பயன் பெறும். ஆகவே, பள்ளி விழாக்கள், போட்டிகள் முதலியவற்றுக்குப் பெற்றோரை அழைக்க வேண்டும். பங்கேற்கச் செய்ய வேண்டும். அடிக்கடி பள்ளிக்கு வரும் பொதுமக்கள் பள்ளியின் வசதிகள், நற்பணிகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதால், பள்ளியின் வசதிகளைப் பெருக்கவும், செயற்பாடுகள் சிறக்கவும் தம்மால் ஆனதைச் செய்ய தாமே முன்வருவார்கள். அதாவது, கிராமக் கல்விக்குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம், முன்னாள் மாணவர் சங்கம் போன்ற அமைப்புகளின் வழியாக, பெற்றோர், சமுதாயம் ஆகியோரைப் பள்ளியின் வளர்ச்சி, செயற்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபடச் செய்வது, பள்ளியின் முன்னேற்றத்திற்கும் கிராமத்தின் எதிர்காலம் சிறக்கவும் பெரிதும் உதவும் என்பதால் பெற்றோரையும் சமுதாயத்தையும் கல்விப் பணியில் பங்கேற்கச் செய்வது பள்ளியின் கடமை.

**6.5.7.2.** அனைத்துப் பள்ளிகளின் தரமும் ஒரே சீராக அமைந்திருப்பதால் எந்த மாணவரும் தனது வட்டாரத்தில் உள்ள பள்ளி தவிர வேறு பள்ளியில் சேர வேண்டும் என்ற தேவை பொதுவாக இருக்காது. திறன்களில் மாறுபாடு உடைய குழந்தைகளை (differently abled children), அத்தகைய குழந்தைகளுக்கு கற்பிக்கப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில் சேர்க்க வேண்டி இருக்கலாம். அத்தகைய வசதி எல்லா பள்ளிகளிலும் செய்வது அரிது என்பதால் அத்தகைய குழந்தைகள் தாம் வசிக்கும் வட்டாரத்திற்கு வெளியே சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில் சேர்க்கப்படலாம். மற்றப்படி எல்லா மாணவர்களும் தம்தம் வட்டாரத்தில் உள்ள பள்ளிகளிலேயே சேர்ந்து படிப்பார்கள்.

### 6.6. பாடநூல்கள்

**6.6.1.** கலைத் திட்டத்தினைச் செயல்படுத்த உதவும் ஒரு கருவி பாடநூலே. கலைத்திட்டத்தின் நோக்கங்களையும், உள்ளடக்கத்தையும் பிரதிபலிக்கும் வகையில் பாடநூல்கள் அமையவேண்டும். ஆசிரியரும் மாணாக்கரும் பாடநூலினைப் பெரிதும் நம்பியிருக்கிறார்கள். தேர்விற்கு ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கும் பாடநூல்களே துணையாகும். மேலும், எட்டாம், பத்தாம், பன்னிரண்டாம் வகுப்புகள் இறுதியிலும் நடத்தப் பெறும் அரசுப் பொதுத் தேர்வுகளில் முறையாகப் பள்ளிக்குச் செல்லாதவரும் தனித் தேர்வர்களாகக் கலந்து கொள்ள இயலும். அவர்கட்குப் பாடநூல்களே வழிகாட்டிகளாக அமைகின்றன. எனவே, பாடநூல்கள் தேவை என்பதிலும் அவற்றின் தயாரிப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்பதிலும் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

### 6.6.2. சுமையூட்டும் பாடநூல்

யஷ்பால் குழு, குழந்தைகள் மீது சுமத்தப்படும் பல்வேறு சுமைகளில் பாடநூல் சுமையும் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது. அளவில் பெரியதாகவும், தேவையற்ற செய்திகளை அதிகமாகக் கொண்டும், விளங்கா மொழியில் எழுதப்பட்டும், சிறிதும் மாணாக்கரைக் கவரும் எண்ணம், அச்சும் கோப்பும் இல்லாமலும் இருக்கின்றன என்று அக்குழு குறை கூறியுள்ளது.

### 6.6.3. தேசியக் கலைத்திட்டப் பரிந்துரைகள்

பாடநூல்கள் மாணாக்கர் சிந்தனையைக் கிளரும் வகையில் அமைய வேண்டும். துணுக்குகள், கேலிச்சித்திரங்கள், உண்மையான நிகழ்ச்சிகள், மாணாக்கரது அனுபவங்கள் போன்றவை பாடங்களில் இடம் பெற வேண்டும். இவற்றைக் கலைத்திட்டத்தின் உள்ளடக்கம் சார்ந்து இருப்பதோடு புத்தறிவு பெற ஒரு விருப்பத்தையும் மாணாக்கர்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும். அச்சும் கோப்பும் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட பாடநூல்கள் இருப்பது கலைத்திட்டத்தை மேம்படுத்த உதவும். பாடநூல்களோடு துணை நூல்கள் வெளியிடப்பட வேண்டும்.

### 6.6.4 இன்றைய நிலை

மாநில வாரியம் மற்றும் ஓரியண்டல் பள்ளிகளில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடநூல்களே பின்பற்றப்படுகிறது. மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பிற்கு மட்டும் அரசு தயாரித்துப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள் பின்பற்றப்படுகிறது. பிற வகுப்புகளுக்கு தனியார் வெளியீடுகளைப் பயன்படுத்துகின்றனர். பெரும்பான்மையான பள்ளிகளில் தமிழ்ப்பாடத்திற்கு மட்டும் பாடநூல் நிறுவன நூல்கள் பின்பற்றப்படுகின்றன. தமிழ்நாடு தவிர பிற மாநிலங்களிலும் உள்ள தனியார் வெளியீட்டாளர்கள் வெளியிடும் நூல்கள் பயன்பாட்டிலுள்ளன.

**6.6.5.** மேலும் நமது பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள் மிகவும் விரிவாகவும் பெரிதாகவும் எழுதப்படுகின்றன. அதில் மாணவர் படிக்க வேண்டிய மூலப்பகுதி மட்டுமல்லாது, ஆசிரியர் என்னென்ன விளக்கங்கள் அளிக்க வேண்டுமோ, அவையும், மாதிரி வினாக்கள், விடைகள், மேலும் பல பயிற்சி வினாக்கள் என்று மிக விரிவாக எழுதப்பட்டுள்ளன. இந்தப் பாடத்திட்டத்தில் இதற்கு மேல் விளக்கமளிக்க ஏதுமில்லை, படிக்க ஏதுமில்லை, வினாக்கள் பயிற்சிகள் வேறு ஏதும் இல்லை என்ற ஒரு மனநிலையை இத்தகைய நூல்கள் உருவாக்கி இருக்கின்றன. இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன? ஆசிரியர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில் பாடநூலில் உள்ளவற்றையே கற்பிக்க முடியவில்லை என்பதால் அதற்கு மேல் எதையும் சிந்திப்பதில்லை. மாணவர் பாடநூலில் உள்ள கேள்விகளுக்குள்தான் தேர்வில் கேள்விகள் வரும் என்ற நிலையில் பாடநூலில் உள்ள கேள்விகளுக்குப் பாடநூலில் உள்ள விடைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதையே

குறிக்கோளாகக் கொண்டு சிந்திப்பதும் இல்லை; சிலர் சிந்திப்பதையே மறந்தும் விடுகின்றனர்.

**6.6.6.** பாடநூல்கள் எழுத ஆசிரியர்களைப் பாடநூல் நிறுவனமே தேர்ந்து எடுத்து நூல் எழுதும் பணியை ஒப்படைத்துவிடுவதால் அவர்கள் தங்கள் நோக்கில் பாடத்திட்டத்தைச் சுருக்கியும் மாற்றியும் விரிவாக்கியும் நூல்களை எழுதும் வாய்ப்பு உருவாகிறது. நூல்களின் பக்கங்கள் அதிகமாக இருப்பதே நூலின் மதிப்பைக் கூட்டும் என்ற எண்ணத்தில் எதை எல்லாம் திணிக்கலாமோ அவற்றை எல்லாம் திணித்து நூல்களின் அளவைப் பெரிதாக்கிவிடவும். வாய்ப்புள்ளது. ஒரே வகுப்புக்கு மெட்ரிகுலேஷன் பள்ளிக்காக எழுதப்பட்ட நூலையும் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட நூலையும் ஒப்பிட்டால் பாடநூல் நிறுவன நூல் எவ்வளவு விரிவாகவும் பெரிதாகவும் இருக்கிறது என்பது தெரிகிறது. இந்த நிலைக்கு மாற்றாக ஆசிரியர் தாமாகச் சிந்திக்கவும் மாணவர்க்குப் பாடநூல் தவிர மேலும் படிக்க ஆர்வம் வளரவும், பாடநூல் மூலப்பகுதியும் ஓரிரு மாதிரி வினா விடையும், ஒரு சில பயிற்சி வினாக்களும் மட்டுமே அடங்கியதாக அமைத்து வெளியிட்டால் பாடநூல்கள் சிறியனவாகவும் கைக்கு அடக்கமாகவும் இருக்கும். நூல் சிறிதாக அமைந்தால் மாணவர் கவனத்தை ஈர்த்து, கற்கும் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் வெளியிடவும் முடியும். மேலும், ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் வகையில் நூல்கள் வெளியிடலாமா என்பதையும் அத்தகைய நூல்களைத் தேவைக்கு ஏற்ப வெளியிடலாமா என்பதையும் கருத்தில்கொண்டு அத்தகைய நூல்கள் தேவைக்கு ஏற்ப வெளியிடவேண்டும். தேவை இருப்பின் மாணவர் தாமே கற்கும் நூல்கள் (Self study books) இன்ன பிற நூல்களையும் பாடநூல் நிறுவனம் வெளியிடுவது சிறப்பாக அமையும்.

**6.6.7.** இவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவற்றைச் செயல்படுத்துவதில் ஆசிரியர் பங்கு மிக முக்கியம் என்பதால், சமச்சீர்க் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் முன் இத்திட்டம் குறித்து விரிவாக விளக்கம் அளிக்கும் வகையிலும் புதிய பாடத்திட்டத்தில் அமைந்த பாடங்களைக் கற்பிக்க வழிகாட்டும் வகையிலும் நூல்கள் எழுதி வெளியிடுவது, இத்திட்டம் சிறப்பாக நிறைவேற மிக அவசியம். அரசு வெளியிடும் பாடநூலில் அல்லது பாடத்திட்டத்தில் துணை நூல்கள் என்று ஒரு சில நூல்களைப் பட்டியலிடுவதும் பயனுள்ளதாக இருக்கும்.

**6.6.8.** மேலும், பாடநூல்களின் தரத்தை மேம்படுத்த, பாடநூல்களை எழுத, ஆசிரியர்களை நியமிக்காது பாடத்திட்டத்தை வெளியிட்டு, அதன் அடிப்படையில் எழுதப்பட்ட பாடநூல் கையெழுத்துப் பிரதிகளை வரவேற்று அவற்றில் சிறப்பானவற்றை நிபுணர் குழு அமைத்துத் தேர்ந்து எடுத்து வெளியிடலாம். அல்லது ஆசிரியரையே வெளியிடச் செய்து, அவற்றில் தேர்ந்தவற்றைப் பாடநூல் நிறுவனம் வாங்கி மாணவர்க்கு அளிக்கலாம். அவ்வாறு வெளியிடப்படும் நூல்கள் ஒவ்வொரு பாடத்திலும் ஒன்றுக்கு மேற்பட்டவையாக இருப்பதும் நலம். எந்த நூலைப் பயன்படுத்துவது என்பதைப் பள்ளிகளே தீர்மானிக்கவும் ஊக்குவிக்கலாம்.

**6.6.9.** சமச்சீர்க் கல்வி முறை வெற்றி பெற, பாடநூல்களின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும். அதற்கு பாடநூல்கள் மூலப் பகுதியுடன் ஒரு சில வினா விடையும் பயிற்சி வினாக்களும் மட்டுமே அடங்கியதாக இருப்பது நலம். பாடநூல்களை எழுத ஆசிரியர்களை நியமிக்காமல் தரமான கையெழுத்துப் பிரதிகளை வரவேற்று அவற்றில் சிலவற்றைத் தேர்ந்து எடுத்து வெளியிட வேண்டும்; அல்லது ஆசிரியரே வெளியிட ஊக்குவிக்க வேண்டும். பாடநூல் நிறுவனம் அல்லது பள்ளிக்கல்வி வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட பாடநூல்கள் ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் இருப்பதும், எந்த நூலைப் பயன்படுத்துவது என்பதைப் பள்ளிகளே தீர்மானிக்கவும் ஊக்குவிக்க வேண்டும்; அல்லது மாவட்ட அளவில் தீர்மானிப்பதும் பொருத்தமாக அமையும். பத்தாம் வகுப்பைப் பொறுத்த வரை பொதுத் தேர்வுக்கு மொழிப்பாடங்களுக்கு ஒரே ஒரு மூலப்பகுதி மட்டும் அடங்கிய பாடநூலை, பாடநூல் நிறுவனம் வெளியிட வேண்டும். மற்றப் பாடங்களுக்குப் பாடநூல் நிறுவனம் அல்லது பள்ளிக்கல்வி வாரியம் ஒப்புதல் அளித்த பாடநூல்கள் பயன்படுத்த வேண்டும். மேலும், பாடநூல்கள் தவிர விரிவாக எழுதப்பட்ட வழிகாட்டி நூல்களும் மாணவர்க்குத் துணை நூல்கள், பயிற்சிப் புத்தகங்கள், தேசப் படப் புத்தகங்கள், முக்கியக் குறிப்புகள் அடங்கிய நூல்கள், சிறப்புச் சொல் அகராதிகள் என்று பலவிதமான துணை நூல்களையும் பாடநூல் நிறுவனம் வெளியிடலாம். அல்லது ஏற்கனவே வெளியிடப்பட்ட இத்தகைய நூல்களை உயர்நிலைப்பள்ளிக் கல்வி வாரியம் பரிந்துரைக்கலாம்.

### 6.7. நூலகம்

#### 6.7.1 . பள்ளி நூலகம்

"ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் வேண்டும்; அது செயல்படும் நிலையில் இருக்க வேண்டும்; மாணவரும் ஆசிரியரும் அதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்'' என்று நமது நாட்டில் அரசு நியமித்த கல்விக்குழுக்கள் யாவும் வற்புறுத்தி வந்துள்ளன. எனினும் நூலகங்களுக்கு உரிய முக்கியத்துவம் தரப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. ஆகவே இனியாவது பள்ளிகளில் நூலகம் உருவாக்குவதுடன் நூலகத்தில் அமர்ந்து படிக்க என்று வாரத்துக்கு ஒரு மணி அல்லது காலப்பகுதி நேரம் (hour or period) ஒதுக்கிச் செயல்படுத்த வேண்டும். அந்த நேரத்தை மாணவர் தாம் விரும்புவதைப் படிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும். நூலக நேரத்தை பல வகைகளில் பயன்படுத்த முடியும். பள்ளியிலேயே உள்ள நூலகம், அல்லது கிராம நூலகம் அல்லது தாய்ப் பள்ளி (வேறு ஒரு பகுதியில் தாய்ப்பள்ளி முறை விவரிக்கப்படுகிறது.) நூலகத்தில் அமர்ந்து படிக்க வாய்ப்பு அளிக்கலாம். தாய்ப் பள்ளிக்குச் செல்வது இயலாது எனில் தாய்ப் பள்ளியில் இருந்து நூல்கள் கொண்டு வந்து தன் பள்ளியிலேயே படிக்கச் செய்யலாம். பள்ளி நூலகமும் சில பொதுநூலகங்களும் (Local Library) இணைந்து செயல்படுகின்றன. ஆனால் இந்தச் செயல்பாடு முறைப்படுத்தப்படாமல் நடந்து வருகிறது. இது முறைப்படுத்தப்பட்டு எல்லாப் பொது நூலகங்களும் அவை அமைந்துள்ள பகுதி பள்ளிகள் எல்லாவற்றுடன் இணைந்து முறையாகச் செயல்பட வழி வகுக்க வேண்டும். அதன் மூலம் பள்ளியைப் பயன்படுத்தும் சமுதாயமும் பள்ளி மாணவரும் ஆசிரியரும் இணைந்து நூலகத்தைக் பயன்படுத்த வாய்ப்பு உருவாகும். அதன்வழி நூலகங்களின் தரமும் உயரும், மக்களின் அறிவும் வளரும். உள்ளாட்சி நூலகங்களுக்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய்கள் செலவு செய்கிறது. 2000 ஆம் ஆண்டு திருவள்ளுவர் தினத்தில் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் நூலகம் திறக்கப்பட்டது. இந்த ஆண்டு 46 புதிய நூலகக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. நான்கு மாவட்ட நூலகங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. நூலகத் தீர்வை (Library Cess) மூலமாக வசூலாகும் பணமும் முழுப் பலனைத் தருவதற்கு இத்தகைய இணைச் செயல்முறை பெரிதும் உதவும். சிறு பள்ளிகளில் நூலகத்திற்கு என்று தனியாக ஒருவரை நியமிக்க முடியாது என்பதால் பள்ளி ஆசிரியர் ஒருவருக்கே நூலகத்தைப் பராமரிக்கும் பணியைக் குறித்து கற்பித்து அவரிடம் அப்பணி ஒப்படைக்கப்படவேண்டும். பணிப்பளு நிர்ணயிக்கும் போது இந்தப் பணியையும் கணக்கில் கொள்ள வேண்டும். நூலகத்தில்

இருந்து நூல் பெறுவதற்கும் திரும்பக் கொடுப்பதற்கும் தினமும் ஒரு மணி நேரம் அல்லது தேவையான நேரம் காலையிலோ மாலையிலோ ஒதுக்கி மாணவரும் ஆசிரியரும் நூலகத்தைப் பயன்படுத்த ஊக்குவிக்கலாம். மேனிலை, உயர்நிலைப் பள்ளிகளிலும் 500 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கும் நடுநிலைப்பள்ளிகளிலும் ஒரு நூலகர் அமர்த்தப்பட வேண்டும். மேலும் மாணவர்களை அவர்கள் அந்த வாரம் படித்த நூல் பற்றி எழுதச் சொன்னால் படித்தது மனதில் படிவதுடன் சிந்திக்கும், எழுதும் திறன்களும் மேம்படும். மொழிப்பாட வகுப்பில் தாங்கள் நூலகத்தில் படித்ததைப் பற்றி மற்ற மாணவர்க்குச் சொல்லவும் வாய்ப்பு அளிப்பது, அவர்கள் சிந்தித்துப் பேசவும் பயிற்சி அளிக்கும்.

### 6.7.2. மாணவர்களிடையே நூலக வாசிப்பை வளர்த்தல்

மாணவர்கள் பாடப்புத்தகங்களுடன் பிற புத்தகங்களையும் சேர்ந்து படிக்கும் பழக்கத்தைப் பள்ளிப் பருவத்திலேயே ஏற்படுத்த வேண்டும். இதற்கு பள்ளிக்கல்வித்துறையும், பொது நூலகத்துறையும் இணைந்து செயல்பட வேண்டும். ஏற்கனவே அரசாணை (2டி) எண். 38இ நாள் 11.6.2002ன்படி நூலகங்களைப் பள்ளிகளுடன் இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தாலும், அதன் முழுப்பயன் மாணவர்களுக்குக் கிடைக்க, ஒவ்வொரு பொது நூலகமும் அதன் அருகில் உள்ள ஒரு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளியைக் கண்டிப்பாக தத்து எடுக்கச் செய்ய வேண்டும். வாய்ப்பு உள்ள இடங்களில் நூலகங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளைத் தத்து எடுக்க ஊக்குவிக்க வேண்டும். மேலும் இத்திட்டத்தை மேம்படுத்தும் வகையில் அனைத்து மாணவர்களுக்கும் பொது நூலகத்தின் பயனை வழங்கக் கூடிய ஒரு உன்னத நிலை ஏற்படுத்த, கீழ்க்காணும் நெறிமுறைகளைப் பின்பற்றலாம்.

- ஒவ்வொரு நூலகமும் குறைந்தது ஒரு அரசு/தனியார் (உதவி பெறும்) மற்றும் உதவி பெறாத அங்கீகரிக்கப்பட்ட ஒரு பள்ளியாவது தத்தெடுக்க வேண்டும்.
- அதிகபட்சமாக 10 பள்ளிகள் வரை தத்து எடுத்துக் கொள்ளலாம்.
- பள்ளியில் ஓர் ஆசிரியர் (அல்லது) வகுப்புத் தலைவரை இப்பணிக்குப் பயன்படுத்தலாம்.

- 15 தினங்களுக்கு ஒரு முறை நூலகர் புத்தகங்களைப் பள்ளிக்கு கொண்டு வந்தாலும் குறைந்தது வாரம் ஒரு முறை (வெள்ளிக்கிழமை போன்ற விடுமுறைக்கு முந்தைய நாளில்) புத்தகங்களை மாணவர்களுக்குள் மாற்றிக் கொள்ளலாம். இத்திட்டத்தை 'வகுப்பறை நூலகம்' என அழைக்கலாம். முதல் கட்டமாக இத்திட்டத்தை 6 முதல் 10 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு நடைமுறைப்படுத்தலாம்.
- வாரம் ஒரு பிரிவு வேளையாவது நூலகத்திற்கு என ஒதுக்க வேண்டும்.
- வாரந்தோறும் மாணவர்கள் தாங்கள் படித்த நூலைப்பற்றிச் சிறு குறிப்பு எடுத்து வைக்க வேண்டும்.
- வகுப்பு ஆசிரியர் / பொறுப்பு ஆசிரியர் மாணவர்கள் எழுதிய குறிப்புக்களை மதிப்பீடு செய்வார்.
- ஆசிரியர் மதிப்பீட்டின் அடிப்படையில் வகுப்பில் சிறந்த மாணவர் ஒருவருக்குப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் மூலம் ஊக்குவிப்புப் பரிசு வழங்கலாம்.
- சிறந்த குறிப்பு எடுத்த மாணவர்களுக்கு இடையே வருவாய் மாவட்ட அளவில் பேச்சுப்போட்டி / கட்டுரைப் போட்டிகள் நடத்தி மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர் முதல் மூன்று மாணவர்களைத் தெரிவு செய்யலாம்.
- பொது நூலகத்துறை மாவட்டத்திற்கு ரூ.5000/– வீதம் பரிசுக்கென செலவிடலாம். இதனால் இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் படுவதையும், மாணவர்களுக்கு இத்திட்டத்தின்பால் ஈடுபாட்டையும் ஏற்படுத்தலாம்.
- நூலகங்களின் பயன்பாடு அதிகரிக்க உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் செயல்படும் ஊர்கள் அனைத்திலும் நூலகங்கள் செயல்படுவதை உறுதி செய்யலாம்.

- உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் செயல்படும் இடங்களில் நூலகங்கள் இருப்பின் அவற்றை மேம்படுத்தலாம். உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அருகில் நூலகங்கள் இல்லாவிடில் உடனடியாக நூலகங்களைத் திறக்கலாம்.
- மாணவர்களின் 10 / 12 வகுப்பிற்கு மேல் பயில இயலாதவர்களும், போட்டித் தேர்வு எழுதுபவர்களும் நூலகத்தைப் பயன்படுத்துவார்கள். இவ்வாறு திறக்கப்படும் நூலகங்களின் கூடுதல் செலவினத்தை அரசு ஏற்கலாம்.
- "வகுப்பறை நூலகம்" எனும் திட்டம் மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு நூல் வழங்கும் நிலையில் ஆண்டு இறுதியில் வகுப்பு மாணவர்கள் அனைவரும் வகுப்பிற்கு அளிக்கப்பட்ட அனைத்து நூல்களும் படித்த நிலை ஏற்படும்.
- மாணவர்களில் சிலர் சொந்தமாகவோ அல்லது ஆசிரியர் கூறும் பொது அறிவு, அறிவியல் போன்ற கருத்துக்களைத் தொகுத்து மாதம் ஒருமுறை தொகுத்து அடுத்த மாதம் 5ம் தேதிக்குள் நூலகத்திற்கு அனுப்புவார். இதில் மாணவரின் பெயர், வகுப்பு எழுதப்பட்டிருக்கலாம். இதனால் கருத்துக்களைத் தொகுத்த மாணவர் பிற மாணவர்களையும் நூலகத்திற்கு அழைத்துச் சென்று நூலகத்தைப் பயன்படுத்தும் நிலை ஏற்படும்.

மேலும் அரசாணை 2டி எண். 18 தேதி 25.2.2003ன் படி தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்கு நடமாடும் அறிவியல் ஊர்திகள் மூலம் நூலகச் சேவை நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து விரிவுபடுத்திச் செயல்படுத்த வேண்டும்.

### 6.8. கற்பித்தலில் தொழில் நுட்பத்தின் பங்கு

**6.8.1.** பல நாடுகளில் கற்பித்தலில் தொழில்நுட்பத்தைப் (Educational Technology) பயன்படுத்துகின்றனர். நமது நாட்டில் இது ஒரு முன்னோடித் திட்டமாக ஒரு சில பள்ளிகளில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்தி, செய்திகளை யாவருக்கும் அறிவிப்பது நமக்குத் தெரிந்ததுதான். ஆனால் நல்லாசிரியர்கள் எண்ணிக்கை தேவையான அளவு இல்லாததால் ஒரு சில நல்லாசிரியர்கள் தொழில் நுட்ப உதவியுடன் மிக அதிக எண்ணிக்கையில் மாணவர்க்குக் கற்பிக்க முடியும். ஆகவே இந்த முறையைப் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்கள் முன் வரவேண்டும். பல

ஆசிரியர்களும் மாணவரும் இந்த முறையைப் பயன்படுத்த முன்வந்தால்தான் இந்த புதிய முறை, மெய்யாகவே, கற்பித்தலில் முன்னேற்றத்தை உருவாக்கும். ஒளிநாடாப் படங்கள், (video films ) ஒளி விளையாட்டுக்கள் (video games), குறுந்தகடுகள் (compact discs) இவை இன்று பரவலாகப் பயன்பாட்டில் உள்ளன. இத்தகைய நிலையைக் கல்வி கற்பிப்பதிலும் உருவாக்கினால் மாணவர்கள் கல்வித்தரம் மேம்படும் என்பதில் ஐயமில்லை.

**6.8.2.** பாடநூல்களில் இருப்பதை வகுப்பில் பாடம் நடத்துவது போன்று ஒளிநாடாப் படம் எடுத்து அதை வகுப்புகளில் பயன்படுத்துவதைவிட பாடநூலில் உள்ளதை நிதர்சன வாழ்க்கையில் உள்ள நிகழ்ச்சிகளையும் இணைத்து எடுக்கப்படும் படங்கள் மிகுந்த பயனைத் தரும்.

**6.8.3.** இன்றைக்கு வகுப்பு அறையில் சில மாணவர் பாடம் படிப்பதையே ஒரு சுமையாகக் கருதும் நிலை மாற வேண்டும் என்றால் பாடநூலும் அன்றாட வாழ்க்கையில் வரும் அனுபவங்களையும் இணைத்துக் கற்பிக்கும் நிலை உருவாக வேண்டும். அதற்கு இன்றைய தொழில்நுட்ப முன்னேற்றம் பெரிதும் பயன்படும். மாணவர்களும் ஆசிரியரும் இணைந்தே தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி ஒளி நாடாப்படங்கள், குறுந்தகடுகள் உருவாக்கி அதன்படி அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்; வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**6.9. ஆய்வகங்களும், கருவிகளும்**

**6.9.1.** இன்றைய உலகம் அறிவியல் தொழில் நுட்ப உலகம். இந்நிலையில் மாணவர் அறிவியல் திறன்கள் வளர்ப்பதற்கு எல்லாப் பள்ளிகளிலும் அறிவியல், கணிதம் கற்பிக்க ஆய்வகங்கள் தேவை என்பதில் ஐயமில்லை. ஆய்வகங்கள் இல்லாத உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகளில் ஆறு முதல் பத்தாம் வகுப்புகள் வரை பாடப் பகுதிகளிலுள்ள செய்முறைப் பயிற்சிகளைச் செய்வதற்குத் தேவையான அனைத்துக் கருவிகளுடன் ஆன ஆய்வகங்கள் அமைக்க வேண்டும். மேனிலைப் பள்ளிகளில் அங்கு உள்ள ஆய்வகங்கள் ஆறு முதல் பத்து வகுப்பு மாணவர்க்கும் பயன்பட வேண்டும். ஆய்வகங்கள் இல்லாத பள்ளிகளில் அவை தனியாகக் கட்டப்பட வேண்டும் என்று காத்திருக்காமல், வகுப்பறைகளைத் தற்காலிக ஆய்வகங்களாக மாற்ற எளிய முறைகளில் திட்டமிட

வேண்டும். விலையுயர்ந்த கருவிகள் தான் தேவை என்பதில்லை. தேவையான கருவிகளை எளிய முறைகளில் செய்து கொள்ள வேண்டும். மாணவர்களே அச்சம் இன்றிச் சோதனைகள் செய்ய ஊக்குவிக்க வேண்டும். ஆறு முதல் எட்டாம் வகுப்பு மாணவர்க்கு ஆர்வத்தைத் தூண்டும் பரிசோதனைகள் செய்ய பயிற்சி அளிக்க வேண்டும். ஒன்பதாம், பத்தாம் வகுப்பு மாணவர்க்குத் தேர்வுடன் கூடிய செய்முறைகள் வேண்டும். ஆய்வகங்கள் குறித்த சில பயனுள்ள குறிப்புகள் இணைப்பு 6.3ல் தொடுக்கப்பட்டுள்ளன. சிறு பள்ளிகளில் ஆய்வகங்கள் அமைப்பது மிகுந்த பொருட்செலவாகும் என்பதால் ஆய்வகங்கள் அமைப்பது தள்ளிப் போடப்படுகிறது. இதற்கு மாற்றாக மாணவர்களை அருகில் அமைந்த மேனிலைப் பள்ளிக்கு வாரத்திற்கு ஒரு முறையோ, மாதத்திற்கு ஒரு முறையோ அழைத்துச் சென்று ஆய்வகத்தில் சோதனை செய்து காண்பிக்கலாம். அல்லது மேனிலைப் பள்ளிகளில் நடமாடும் ஆய்வகம் அமைத்து அதை மாதம் ஒரு முறையாவது அப்பள்ளி அமைந்த பகுதியில் உள்ள ஒவ்வொரு தொடக்க, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிக்கும் சோதனைகள் செய்து காண்பிப்பதற்காக எடுத்துச் செல்லலாம்.

**6.9.2.** மாணவர்களுக்கு கலைகளிலும், கைவினைத் தொழில்களிலும் பயிற்சி அளிக்கத் தேவையான கருவிகளும் பள்ளிகளில் இருந்தால்தான் கலை, கைவினைத் தொழில் வகுப்புகளைப் பயனுள்ள வகையில் நடத்த முடியும். ஆய்வகங்களில் பயிற்சிக்கு சொல்லியதைப் போலவே இதற்கும் பள்ளி அமைந்த பகுதியில் உள்ள மேனிலைப் பள்ளியின் / உயர்நிலைப் பள்ளியின் வசதிகளைப் பயன்படுத்த வழி வகை செய்ய வேண்டியது அவசியம்.

### 6.10. பள்ளிக்கல்வி நேரம், நாள்கள், காலை வழிப்பாட்டுக்கூட்டம்

**6.10.1.** பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் நாள்கள் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 1100 மணி நேரமாவது இருக்க வேண்டும். மாவட்டம் முழுவதும் அல்லது மாநிலம் முழுவதும் ஒரே நாளில் விடுமுறை அளிக்க வேண்டியதில்லை பொதுவாக கல்வி ஆண்டு ஜுன் மாதத்தில் தொடங்க வேண்டும், ஏப்ரல் மாதத்தில் முடிய வேண்டும் என்று விதியை ஏற்படுத்திக் கொண்டு பள்ளி நாள்கள் எவை என்பதை ஊராட்சி ஒன்றிய அளவில் அதாவது உதவிக் தொடக்க கல்வி அலுவலரின் எல்லை அளவில் அல்லது மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலரின் எல்லை அளவில் தீர்மானிக்கலாம்.

**6.10.2.** பள்ளி ஒரு வாரத்திற்கு எத்தனை மணி நேரம் செயல்பட வேண்டும் என்பதைப் பொதுவாகத் தீர்மானித்தாலும், ஒவ்வொரு பகுதியிலும் பள்ளி நேரத்தைத் தீர்மானிப்பதில் நெகிழ்ச்சி தேவை. பள்ளியில் கற்கும் மாணவரின் வசதிக்கு ஏற்ப பள்ளி தொடங்கும் நேரமும், செயற்படும் நேரமும் மாற்றப்படுவதில் தவறு ஏதும் இல்லை. இத்தகைய நெகிழ்ச்சி பள்ளிகள் சிறப்பாக செயல்பட பயன்படும். ஒவ்வொரு நாளும் வகுப்புகள் தொடங்கும் முன் ஆசிரியர்களும் மாணவர்களும் காலையில் கூட்டுவழிப்பாட்டுக் கூட்டத்தில் கூடுவது மிகுந்த நலம் பயக்கும். அக்கூட்டத்தில் உணர்வு ஊட்டக்கூடிய கதை கேட்டல், இசை கேட்டல், கருத்துரைகள், அன்றைய முக்கிய செய்திகள், பல பயனுள்ள ஆர்வமூட்டக்கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.. இவை வீட்டுச் சூழலில் இருந்து வகுப்பறைச் சூழலுக்கு மனநிலையை மாற்றப் பெரிதும் உதவும். ஆகவே, பள்ளிகளில் காலைகூட்டு வழிபாட்டுக் கூட்டம் நடத்தப்படுகிறது. இது தவறாமல் தொடரவேண்டும்.

### 6.11. பாடச்சுமை

### 6.11.1. அறிமுகம்

**6.11.1.1.** மாணவர் பாடங்களை எவ்வளவு மணி நேரம் கற்றால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும் என்ற அடிப்படையில் பாடச்சுமை அளவிடப்படுகிறது. மாணவர்கள் கற்கும் நேரம் என்பது அவர்கள் வகுப்பறையில் ஆசிரியர் சொல்வதைக் கேட்கும் நேரம், தானே படிக்கும் நேரம், எழுதும் நேரம், மற்ற மாணவருடன் இணைந்து செயல்படும் நேரம், அவர்களுடன் விவாதிக்கும் நேரம் இன்னபிற. இவை யாவற்றையும் கணக்கில் கொண்டுதான் பாடத்திட்டத்தை வகுக்க வேண்டும்.

**6.11.1.2.** தேசிய பாடத்திட்ட வடிவமைப்பு (National Curriculum frame work 2005) மாணவர்களின் வீட்டுப் பணிக்குக் கீழ்க்காணும் உச்ச வரம்புகளைப் பரிந்துரைக்கிறது. தொடக்கப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு வரை வீட்டுப்பணி இருக்கலாகாது. மூன்றாம் வகுப்பிலிருந்து வாரத்திற்கு இரண்டு மணி நேரம், நடுநிலைப்

பள்ளியில் வாரத்திற்கு ஐந்து அல்லது ஆறு மணி நேரம். உயர்நிலையிலும், மேனிலைப் பள்ளியிலும் வாரத்திற்கு, பத்திலிருந்து பன்னிரண்டு மணி நேரம். இந்த வரம்புக்குள் இருக்குமாறு ஆசிரியர்கள் யாவரும் இணைந்து செயல்படுவது அவசியம்.

### 6.11.2. தனியாகப் பாடம் கற்பித்தல்

மாணவர்க்குத் தனிக்கற்பித்தல் அதாவது தனியாகப் பாடம் கற்பித்தல் என்ற முறை (tuition) பள்ளிக் கல்வித்துறையை முழுமையாக ஆக்கிரமித்திருப்பது மிகுந்த கவலையை அளிப்பதாக உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் மெல்ல புரிந்து கொள்ளும் மாணவருக்கு பள்ளிப் படிப்பைத் தவிர வீட்டில் தனியாக ஆசிரியர் வைத்துப் பாடம் கற்பிப்பது உண்டு. ஆனால் இன்று எல்லா மாணவர்க்கும் தனியாகப் பாடம் சொல்லித் தருவது என்பது வாடிக்கை ஆகிவிட்டது. பொதுவாக நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடத்திட்டங்கள் இருப்பதால் அவற்றில் எது சரியோ அந்த யாவரும் உணர்ந்து அந்த ஏற்புடைய திட்டத்தைப் போன்ற பாடத்திட்டத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் நமது நாட்டில் ஏட்டிக்குப் போட்டியாக ஒருவரைவிட இன்னொருவர் அதிகப் பாடத்தைத் திணித்து தங்கள் பாடத்திட்டம் உயர்ந்தது என்று நிரூபிக்க முயன்று வருகின்றனர். அதன் விளைவாக 5 அல்லது 6 மணி பள்ளிநேரம் என்ற நிலை போய் தினமும் 12 அல்லது 15 மணி நேரம் பள்ளி நேரம் என்றாகிவிட்டது. நன்றாகப் படிக்கும் மாணவருக்கும் இத்தனை மணி நேரம் தேவைப்படுகிறது என்பதால் பாடச்சுமை இரண்டு மடங்குக்கு மேல் உள்ளது என்றாகிறது. இது சரியா? என்றால் எவ்வாறு நோக்கினாலும் இது சரி இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல தெரிகிறது.

### 6.11.3. பாடச்சுமையின் விளைவுகள்

பாடச்சுமை மிகவும் அதிகமாக இருப்பதால் சிறு வயதில் விளையாட்டில் நல்ல தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பலர் ஆறாவது வகுப்பு வந்த பிறகு விளையாடுவதையே மறந்து போய் விடுகின்றனர். அதாவது அவர்கள் புத்தகப் புழுவாக மாறுவதுடன் அவர்களுக்கு இயற்கையாக அமைந்த விளையாட்டுத் திறமைகளை வளர்த்துக்கொண்டு அவ்விளையாட்டுகளில் தேர்ச்சி பெற்றுப் புகழ் பெறும் வாய்ப்பையும் இழந்து விடுகின்றனர். பல விளையாட்டு வீரர்கள் உருவாவது முளையிலேயே கிள்ளி எறியப்படுவதால் நமது நாட்டு விளையாட்டுத்துறைக்கும் இது ஒரு பெரும் இழப்பாகும். மாணவர் தாம் விரும்பும் ஒரு

கலையோ, பொழுதுபோக்கு விளையாட்டு கலை அல்லது வேலையை (hobby) கற்று அதில் ஈடுபடுவது தமது பொது அறிவை வளர்த்துக் கொள்ள உதவும். பள்ளி நூலகம் அல்லது பொது நூலகத்திற்குச் சென்று தான் விரும்பும் நூல்களைப் படித்தால் கல்வி கற்பதில் ஆர்வம் பெருகும். அறிவு விரிவடையும். இன்று பாடச்சுமை அதிகமாக இருப்பதாலும், பள்ளி நேரம் போக மீதி நேரம் பயிற்சிகள் செய்யவும், தனிப் பயிற்சிக்குச் செல்லவும் தான் முடிகிறது என்பதால் மாணவர்கள் நூலகம் செல்லவோ, பாடப்புத்தகம் தவிர வேறு நூல்கள் படிக்கவோ, விளையாடவோ, உடற் பயிற்சி செய்யவோ, இசை போன்ற மற்றக் கலைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவோ முடியவில்லை. வெறும் புத்தகப் புழுக்களாக மாறிவிடுகின்றனர்.ஆகவே மாணவரின் கல்வி முழுமை பெறவில்லை. அவர்கள் சமுதாயத்துடன் தொடர்பு கொள்ளவோ தம் நாட்டுப் பண்பாட்டையும் மரபையும் அறியவும், புரிந்து கொள்ளும் வாய்ப்பையும் இழந்து நல்ல குடிமகனாக மாறாது, பிஞ்சிலேயே பழுத்து வெம்பிய பழங்களாக வாழ்க்கையை ஓட்டுகின்றனர் அல்லது பிழைக்கின்றனர் அல்லது நாளைக் கழிக்கின்றனர்.

**6.11.4. எது தரமானது**

**6.11.4.1.** அளவில் பெரிது வேறு; தரத்தில் உயர்வு வேறு. அளவில் பெரியதைத் தரத்தில் உயர்ந்ததாகக் கொள்ளமுடியாது. சிறிய அளவில் கூட தரம் உயர்ந்ததாக இருக்க முடியும். தேவை உயர் தரம்.

**6.11.4.2.** ஒரு சில ஆசிரியர்கள் கூட, ஒரு மாணவன் தனக்கு விளங்கவில்லை என்று சந்தேகம் கேட்டால், சொன்னதையே திரும்பத்திரும்பச் சொல்லுவார்கள். சொல்லுவதை விளக்கமாகவும் மாணவர் விளங்கிக் கொள்ளுமாறும் சொல்லுவதே தரமான கற்பித்தல் ஆகும்.

**6.11.4.3.** பாடத் திட்டத்தில் நிறைய செய்திகளைத் திணிக்காது, தேவையான பாடங்களைச் சேர்த்து, மாணவர் புரிந்து கொள்ளும், கற்பிக்கும் முறையைப் பயன்படுத்தி மாணவர் யாவரும் வரையறுக்கப்பட்ட பாடத்தில் நல்ல தேர்ச்சி பெறச் செய்வதே குறிக்கோளாக அமைக்கப்பட வேண்டும்.

### 6.11.5. தனியாக பாடம் கற்பித்தலின் விளைவுகள்

அரசு பள்ளிக் கல்விக்காகச் செலவிடும் பணம் ஒரு பங்கு என்றால் பள்ளியில் படிக்கும் மாணவரின் பெற்றோர் தனி வகுப்புகளுக்காகச் செய்யும் செலவு அதே அளவாக உள்ளது. பணம் படைத்தவர்கள் மட்டுமல்லாது, ஏழைகளும்கூட எப்படியாவது கடன் வாங்கியாவது தமது குழந்தைகளைத் தனி வகுப்புகளில் சேர்த்து படிக்க வைத்தால்தான் அவர்கள் முன்னுக்கு வர முடியும் என்று எண்ணுகிறார்கள். இந்த நிலைக்குக் காரணம் அரசுப் பள்ளிகளிலும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் கற்பித்தல் தரமானதாக இல்லை என்று கூறப்படுகிறது. அதாவது ஆசிரியர்களுக்குத் தமது பணியில் ஈடுபாடு இல்லை. பள்ளிகளில் வசதிகள் குறைவு அல்லது தரமில்லை. ஆனால் தனியார் பள்ளிகளிலும் வகுப்பு முடிந்த பின் தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அங்கு படிக்கும் மாணவர் கூட பள்ளிக்கு வெளியே தேர்வு எழுத பயிற்சி அளிக்கும் நிறுவனங்களில் (Coaching centres) சேர்ந்து தனிப் பயிற்சி பெறுகின்றனர். அதாவது தேவையான மாணவர்க்கு மட்டுமே அவர்கள் பள்ளியில் கற்றதை மேலும் நன்றாகப் புரிந்து கொள்வதற்காகத் தனியாக ஆசிரியர் ஐயங்களை நிவர்த்தி செய்து அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டவும் அவர் கற்பதற்குத் துணை செய்யவும் தனி வகுப்புகள் என்ற நிலை மாறி எல்லா மாணவர்க்குமே தனியாகப் பாடம் கற்பித்தல் தேவை என்ற நிலை இன்றுள்ளது. இது ஒரு சமுதாயக் கேடு என்றால் மிகையாகாது.

### 6.11.6. விடிவு

இன்றைய நிலையை ஆராய்ந்தால் சில உண்மைகள் வெளிப்படும். முதலாவதாக அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்பவர்கள் தனிப் பயிற்சி வகுப்புகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கிறார்களே! அங்கு என்ன கட்டமைப்பு வசதி உள்ளது? ஒன்றும் இல்லையே! அடுத்து . நிறைய பயிற்சிகள் செய்வதால் தேர்வில் அதிக

மதிப்பெண் பெற முடியும் என்றால் அந்தத் தேர்வு மாணவர் எவ்வளவு வேகமாக விடை எழுதுகிறார் என்பதைத்தான் சோதிக்க முடியுமே தவிர மாணவனின் அறிவின் ஆழத்தை அளவிட முடியாது. ஒரு மாணவன் ஒரு பாடத்தில் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தால் தேவையான சமயத்தில், அப்பாடத்திற்குத் தொடர்புள்ள மற்றச் செய்திகளையும் விவரங்களையும் பாடங்களையும் அவன் கற்று அறிந்து கொள்ள முடியும். ஆகவே, கற்ற பாடத்தில் ஆழ்ந்த புலமையே தேவை.

**6.11.7. பரிந்துரை**

இன்றைய பாடத்திட்டமும், கற்பிக்கும் முறையும் தேர்வு முறையும் பாடநூலி ல் உள்ள கேள்விகளுக்கு அதே நூலில் விடைகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் ஒரு பயிற்சியாக அமைந்திருக்கிறது. விடையை எவ்வளவு வேகமாக எழுத முடியும் என்பதைப் பொறுத்தே மதிப்பெண் பெறும் நிலை உள்ளது. இதிலிருந்து விடுபட வேண்டும். பாடத்திட்டம், கற்பிக்கும் முறை, தேர்வு முறை இவை யாவும் மாணவர் அறிவைப் பெறும் வகையிலும் அதைப் பரிசோதிக்கும் வகையிலும் அமைய வேண்டும். இதற்கு

- பாடத்திட்டம் சுருக்கமாக வடிவமைக்கப்பட வேண்டும்.
- பாடத்திட்டத்தின் அளவு, அதை வகுப்பு நேரத்திற்குள் கற்பிக்கக் கூடியதாகவும், மாணவர் வீட்டில் பாடத்திட்டத்தைச் சார்ந்த பணிகளுக்காகச் செயல்பட வேண்டிய நேரம் மூன்றாவது வகுப்புப் படிக்கும்போது வாரத்திற்கு இரண்டு மணி நேரமாகவும், அது சிறிது சிறிதாக உயர்த்தப்பட்டு பத்தாவது வகுப்புப் படிக்கும் போது பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
- பாட விவரங்களைப் புரிந்து கொண்டதைப் பரிசோதிக்க ஒரு சில மாதிரி வினாக்கள் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றால் போதுமானது.

- கற்பிக்கும் முறையும், தேர்வு முறையும் கற்றதைப் பயன்படுத்தும் பயிற்சிகளாக அமைய வேண்டும். இது மாணவருக்குத் தான் கற்றதில் ஆழ்ந்த புலமையைத் தரும்.
- இத்தகைய பாடத்திட்டத்தில் பாடச்சுமை குறைவாக இருக்கும். மாணவர் பெற்ற அறிவு ஆழமானதாக இருக்கும். ஆகவே மாணவர் தன்னம்பிக்கையுடன் செயல்படுவர். வருங்காலத்தில் தேவை இருப்பின் மாணவர் தாம் படித்தவற்றிற்குத் தொடர்பு உடைய அறிவைத் தாமே பெற்றுக் கொள்வர்.

**6.12. ஆசிரியர் கடமைகள், தன்னாட்சி உரிமை**

**6.12.1.** இராமமூர்த்திக் குழு (1990) " நமது அரசு நடத்தும் பள்ளிகளின் தரம் உயர்த்தப்படுவதற்கு முக்கியத் தேவை: அவற்றின் பொறுப்புகள் விளக்கமாக அறுதியிடப்பட்டு அவற்றைச் செயல்படுத்துவதில் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்' என்று பரிந்துரைத்துள்ளது. (குழு அறிக்கை 3.13.1) மேலும் அது "இத்தகைய மாற்றம் வந்தால் பொதுப்பள்ளி முறை உண்மையாகவே உருவாக வழி வகுக்கும்" என்று அறுதியிட்டுச் சொல்லுகிறது. (குழு அறிக்கை 3.13.2)

**6.12.2.** இன்றைய சூழலில் ஆசிரியர்கள், மாணவருக்கு எவை தேவை என்பனவற்றை ஆராய்ந்து, அவர்தம் திறமைக்கு ஏற்ப அவற்றைக் கற்பிக்க வேண்டும். எவ்வாறு எந்த வேகத்தில் கற்பித்தால் அவர்கள் புரிந்து கொள்வார்களோ அவ்வாறு அவ்வேகத்தில் கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் நேர்த்தியாக எழுதவும், பாடங்களை உரத்த குரலில் வாசிக்கவும், கற்றவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பேசவும், சொந்த வாக்கியங்களில் எழுதவும் பயிற்றுவிக்க வேண்டும். வகுப்பில் சேர்ந்த மாணவர் அனைவரையும் நல்ல குடிமக்களாக உருவாக்குவதும், ஒவ்வொரு மாணவரும் சிறப்பாகக் கல்வி கற்க

அவரவர்க்கு ஏற்ப வாய்ப்பை உருவாக்கித் தருவதும் ஆசிரியர் கடமை. எந்த மாணவரையும் அவர் கல்வி கற்கத் தகுதியில்லாதவர் என்று முத்திரை குத்தி அனுப்பாது அவர்களுடைய இயல்பான திறமைகள் முழு வளர்ச்சி பெற உதவ வேண்டும். மாநிலக் கல்வி வாரியம் மாநில அளவில் கலைத்திட்டம் பாடத்திட்டம் உருவாக்குவதில் நேரடியாகப் பங்கு பெற வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும், அவற்றைப் பயன்படுத்தும் போது அவற்றில் காணப்படும் குறை நிறைகளைப் பற்றிச் சிந்தித்துக் குறைகளை நிவர்த்திக்கவும் நிறைகளைப் பெருக்கவும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மாநில உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியத்திற்கு எழுதி அனுப்ப வேண்டும். இவ்வாறு கலைத் திட்டம் பாடத்திட்டம் ஆகியவற்றில் பங்கு கொள்ள வேண்டும். இதே போன்று பள்ளி இறுதித் தேர்விலும் விடைத்தாள்கள் திருத்தும் பணியிலும் வாய்ப்பு கிடைக்கும்போது பங்கேற்பதுடன் நேரடி வாய்ப்பு இல்லை என்றாலும் தேர்வு முறைகளிலும் விடைத்தாள் திருத்தும் பணிகளிலும் என்னென்ன மேம்பாடுகள் செய்யலாம் என்பதையும் எழுதி அனுப்புவது ஆசிரியரின் கடமை.

**6.12.3.** கற்றல், கற்பித்தல் நிகழ்ச்சி சிறப்பதற்குத் தன்னாட்சி சூழல் அவசியம். எவ்வளவு குறைவாக நிர்வாகக் கட்டுப்பாடு இருக்கலாமோ, அவ்வளவு குறைவாக இருப்பது உசிதம். பொதுவாக உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வுக்கு உரிய பாடநூல்கள் மட்டுமே தீர்மானிக்கப்பட்டு மற்ற நிலைகளிலும் எந்த முறையில் கற்பிப்பது போன்ற கல்வி சம்பந்தமான எல்லாவற்றையும் பள்ளி நிலையில் ஆசிரியர் குழுவாக அமைத்துத் தீர்மானிப்பது, செயற்படுத்துவது என்ற நிலையே சிறப்பானது. மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு இது போன்ற சுதந்திரம் அல்லது தன்னாட்சி செயற்பாடு இப்போது நடைமுறையில் உள்ளது. இதே போன்று சுதந்திரம் மற்ற எல்லாப்பள்ளிகளுக்கும் அளிப்பது கல்வியில் சமச்சீர் நிலையை உருவாக்கவும், கல்வி மேம்பாட்டுக்கும் உதவும்.

**6.12.4.** சமச்சீர்க் கல்வி முறை சிறப்பாக உருவாகிச் செயல்பட கீழ்க்காண்பவை செயலுக்கு வர வேண்டும்: மாணவர்க்குத் தேவையான கல்வியை அவர்களுக்கு உகந்த முறையில் கற்பிப்பது, ஆசிரியரின் கடமை. மாணவர் சேர்க்கை, பள்ளி அளவில் பாடத்திட்டம், தேர்வுமுறை ஆகியவற்றை ஆசிரியர்களே பெற்றோருடன் கலந்து முடிவு செய்ய வேண்டும் அல்லது ஆசிரியர்கள் இவற்றில் பெரும்பங்கு வகிக்க வேண்டும். பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் எவரையும் பள்ளியில் இருந்து விலக்காது, அவர்தம் இயல்பான திறமைகள் முழு வளர்ச்சி பெற உதவ வேண்டும். பள்ளி இறுதி தேர்வு நிலையில் மாநிலக் கல்வி வாரியம், கலைத்திட்டம், பாடத்திட்டம் ஆகியவற்றை உருவாக்குவதில் பங்கேற்று அவற்றில் காணப்படும் குறைகளை களையவும், நிறைகளைப் பெருக்கவும், பள்ளி இறுதித் தேர்வு செம்மையாக நடைபெறவும் உதவ வேண்டும். ஆசிரியர்களுக்கும் பள்ளிகளுக்கும் தேவையான செயற்பாட்டுச் சுதந்திரம் கிடைக்கச் செய்து, அதை அவர்கள் சீராகப் பயன்படுத்த உதவுவது கல்வித்துறையின் கடமை.

# பகுதி – 3
## தேவைப்படும் சீர்திருத்தங்கள்

# 7. தேர்வுகளும், மதிப்பீடும்

## 7.1. அறிமுகம்

**7.1.1.** இன்று கல்வி முறையில் தேர்வுகள் தேவைக்கதிகமான முக்கியத்துவம் பெற்றுள்ளன. பொதுத் தேர்வில் பெறுகின்ற மதிப்பெண்களே மாணவர்களை எடைபோடும் கருவியாகக் கருதப்படுவதாலும், மேற்படிப்பிற்கோ, வேலைக்கோ செல்லவும் பொதுத்தேர்வு மதிப்பெண்களே உதவுகின்றன என்பதாலும் பொதுத் தேர்விற்காக ஆயத்தம் செய்வதிலேயே மாணாக்கர்கள் ஈடுபடுகின்றனர். பள்ளிகளும் தேர்விற்கு மாணாக்கரைத் தயாரிப்பதுவே முதல் பணியாகக் கொள்கின்றனர். தனிப் பயிற்சி வகுப்புகளும் பெருந்தொழிலாக நடத்தப்படுகின்றன. அவற்றிற்குச் செல்ல இயலாத மாணாக்கர் பள்ளி வகுப்பறைக் கற்பித்தலையே முழுமையாக நம்பி இருக்க வேண்டியுள்ளார்கள். தேர்வுகளே எல்லாம் என்ற எண்ணம் பல்வேறு முறைகேடுகளுக்கும் வழிவகுக்கின்றது.

**7.1.2.** தேர்வுகள் மாணாக்கர்களை மதிப்பிடும் கருவி மட்டுமல்ல, கல்வி முறையையே மதிப்பிடும் ஒரு சாதனம். ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தலை எந்த அளவிற்கு மாணாக்கர் ஏற்றுள்ளனர் என்பதை அறியவும், பள்ளி நடைமுறைகளில் தேவைப்படும் மாற்றங்களைக் கொண்டு வரவும் தேர்வுகள் வழிகாட்டும். இராதாகிருஷ்ணன் தலைமையில் அமைந்த பல்கலைக்கழக ஆய்வுக்குழு முதல், கல்விக்குழுக்கள் அனைத்தும் தேர்வுச் சீர்திருத்தத்தை வலியுறுத்தியுள்ளன.

## 7.2. தேசிய கலைத்திட்ட வரைவு 2005ல் பரிந்துரைகள்

10ஆம் வகுப்பிற்கு முன்னர் பொதுத்தேர்வுகள் நடத்தப்படக்கூடாது. கலைத்திட்டத்தில் இடம் பெறுபவை எல்லாம் மதிப்பீடுச் செய்யப்பட வேண்டும். உடற்கல்வி, இசை, ஓவியம், கைத்தொழில் போன்ற பாடங்களில் மாணாக்கரிடம் ஏற்படும் முன்னேற்றத்தை அறிந்து பதிவு செய்யப்படவேண்டும். மதிப்பெண்கள் அளிக்கப் பெறும் பாடங்களுக்கு அளிக்கப்படும் கௌரவம் கலைத்திட்டத்தில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் அளிப்பதை உறுதி செய்ய வேண்டும். பருவத்தேர்வுகள், ஆண்டிறுதித் தேர்வுகள் மட்டுமின்றி, மதிப்பிடல் என்பது ஒரு தொடர் நிகழ்ச்சியாக அமைய வேண்டும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பாடத்திலும் மாணாக்கர் கற்றலை மதிப்பிடுவதுடன், ஆசிரியரது

கற்பித்தலின் விளைவுகளையும் அறிய வேண்டும். வெறும் மனன அறிவைச் சோதிப்பதோடு, மாணக்கரிடம் உருவாக்கப்பட வேண்டிய பல்வேறு மனத்திறன்களையும் மதிப்பிட வேண்டும. வினாத்தாள்கள் மன அறிவைச் சோதிக்கும் வகையில், பாடநூலில் படித்தவற்றை வினா—விடை மூலம் சோதிப்பதற்கு மாறாக, பல்வேறு மாற்று முறைகளைக் கையாண்டு மாணாக்கர்க்கு நம்பிக்கையூட்டும் வகையில் மதிப்பீட்டுச் செயல்பாடுகள் அமையவேண்டும்.

**7.3. சமச்சீர்க் கல்விக் குழுவிடம் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்**

**7.3.1.** நர்சரி முதல் 10ஆம் வகுப்பு வரை நடைபெறும் கல்வி முறைகளை ஆய்வதே சமச்சீர்க் கல்விக்குழுவின் பணி. ஆனால், குழுவிடம் கருத்துத் தெரிவித்தவர்கள் பெரும்பாலும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வைப் பற்றியே கருத்துத் தெரிவித்தார்கள்.

**7.3.2.** ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் தற்பொழுது ஆங்கிலத்திற்கு அப்பள்ளிகளில் அளிக்கப்படும் சிறப்பிடம் பாதிக்கப்படக் கூடாதென்று வலியுறுத்தினார்கள்.

**7.3.3.** ஓரியண்டல் பள்ளிகளில் சமூக அறிவியல் பாடத்தில் பொதுத்தேர்வு இருந்த போதிலும் அதில் தேர்ச்சிக்குரிய பாடமாக இல்லாததால் மாணாக்கர் அப்பாடத்தைப் புறக்கணிக்கின்றனர் என்றும் அதனால் உயர் கல்விக்குச் செல்லும் பொழுது சில பாடங்களைத் தேர்ந்தெடுக்க இயலாத நிலை நடைபெறுகிறது என்றும் கூறி, தேர்ச்சிக்குரிய பாடமாக சமூக இயல் பாடமும் ஆக்கப்பட வேண்டுமென்றும் விளக்கமாகக் கூறினர்.

**7.4 பரிந்துரைகள்:**

- நர்சரி வகுப்புகள், எவ்விதமான எழுத்துத் தேர்வும் இந்நிலையில் இருக்கக் கூடாது. மாணாக்கரது புலனறிவு, உடற்திறன், பழக்க வழக்கங்கள் ஆகியவை நிகழ்வு முறையில் (anecdotal history) பதிவு செய்யப்பட வேண்டும்.
- பெற்றோர் சந்திப்பின் பொழுது தனித் தனியாக ஒவ்வொரு குழந்தையின் பெற்றோரிடமும், குழந்தையின் சிறப்புகளை எடுத்துக் கூறிட வேண்டும்.

பெற்றோர் கவனிக்க வேண்டியவற்றையும் எடுத்துக் கூறவேண்டும். குறைசொல் நிகழ்ச்சியாக இல்லாது குழந்தைகளை மேம்படுத்தும் விதமாக அமைவது சிறப்பு.

### 7.5 தொடக்கக்கல்வி

**7.5.1.** மொழிப் பாடங்களில் கேட்டல், பேசுதல் திறன்களை வளர்க்கும் வகையில் அன்றாடம் கற்பித்தல் செயல்பாடு அமைய வேண்டும். கற்பித்தல் நடைபெறும் பொழுதே இத்திறன்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும். குறைகளைக் கண்டறிந்து, அவற்றைச் சரி செய்யும் பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும். அடுத்ததாக, வாசித்தல் திறன் தினமும் சோதிக்கப்பட வேண்டும். ஒரு நிமிடத்தில் எத்தனை சொற்கள் படிக்கின்றனர். உச்சரிப்பில் உள்ள நிறை குறைகள், குரல் வளம் ஆகியவை கவனிக்கப்பட்டு, குறைகளைத் தவிர்க்க உரிய செயல்பாடுகள் எடுக்கப்பட வேண்டும். எழுத்துத் தேர்வுகளும் சொற்களை எழுதத் தொடங்கி படிப்படியாக வாக்கியம், பத்தி அளவு எழுதுவதை மதிப்பிட வேண்டும். வினா–விடை முதலில் வாய் மொழித் தேர்வாகவும், பின்னர் எழுத்து முறைத் தேர்வாகவும் நடத்தப் பெற வேண்டும். பாடநூலில் தொடங்கி பின்னர் பிற நூல்கள், தினத்தாள்கள் போன்றவற்றையும் படித்து விடையளிக்கும் திறனை மதிப்பிட வேண்டும்.

**7.5.2.** முறையான தேர்வுகளைத் தவிர கட்டுரை எழுதுதல், பேச்சுப் போட்டி போன்றவற்றையும் மதிப்பிட்டுப் பதிவு செய்திட வேண்டும். மாணாக்கர்களுக்கு மொழியில் ஒரு விருப்பம் ஏற்படும் வகையில் மதிப்பீட்டு முறைகள் அமைய வேண்டும்.

### 7.6. உயர்தொடக்கக் கல்வி

**7.6.1.** வினாக்கள் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைதல் வேண்டும். மாற்று விடைகளுக்கு இடம் தரும் வினாக்கள் மாணாக்கரது சிந்தனையைக் கிளறும். ஒரு வினா–ஒரு விடை என்ற நிலைப்பாட்டினின்று விலக வேண்டும். எழுத்து முறைத் தேர்வுகளைத் தவிர, செயல் திட்டங்கள் (Project) தொகுப்புகள் (albums) போன்றவை அதிக இடம் பெற வேண்டும். குழு முறைக் கற்றல் முறையைப் பின்பற்ற உந்து சக்தியாக குழு முறைத் தேர்வுகள் செயல்பட வேண்டும்.

**7.6.2.** மேனாடுகளில் 80–85% விழுக்காடே தேர்ச்சிக்குரிய மதிப்பெண் என்ற போதிலும், எல்லா மாணாக்கரும் தேர்ச்சி பெறுகின்றனர். நமது தேர்வு முறையில் 35% தேர்ச்சிக்குரிய மதிப்பெண்ணாக இருந்த போதிலும், பெரும் அளவில் மாணாக்கர் தேர்ச்சி பெறத் தவறுகின்றனர். வினாக்களை எளிமைப்படுத்தி, முறையாகப் பள்ளிக்கு வந்த மாணாக்கர் யாவரும் எல்லா வினாக்களுக்கும் சரியான விடை தரும் வகையில் வினாத்தாள்கள் அமைய வேண்டும். தோல்வி அச்சம் சிறு வயதில் கூடாது. இடைவிலகல், தற்கொலை முயற்சி போன்றவற்றிற்குத் தேர்வுகள் காரணமாக அமையக் கூடாது.

7.7 பொதுத் தேர்வு

**7.7.1.** மாநில வாரியப் பள்ளியில் பொதுத் தேர்வு 5 பாடங்களில் 7 தேர்வுகள் எழுதுகின்றனர். மொழிப்பாடம் ஒவ்வொன்றிலும் இரண்டு தாள்கள் இருந்தபோதிலும், அவற்றின் கூட்டுச் சராசரியே எடுத்துக் கொள்ளப்படுகிறது. மொத்த மதிப்பெண் 500.

**7.7.2.** ஓரியண்டல் பள்ளிகளில் 6 பாடங்கள் மூன்று மொழிகளுக்கு 300 மதிப்பெண்களும் மொழியில்லாப் பா டங்களுக்கு 300 மதிப்பெண்களுளமாக மொத்தம் 600 மதிப்பெண்கள்.

**7.7.3.** ஆங்கிலோ இந்தியன் பள்ளியில் 5 பாடங்கள். இரண்டு ஆங்கிலம் 200, மொழி .100 மொத்தம் 300 மதிப்பெண்கள். அறிவியல் 2 தாள்கள் (200) செய்முறைப்பயிற்சி (100) மொத்தம் 300 மதிப்பெண்கள். கணிதம் . 2 தாள்கள் 200 மதிப்பெண்கள் சமூக அறிவியல் 200 மதிப்பெண்கள், மொத்தம் 1000 மதிப்பெண்கள்.

**7.7.4.** மெட்ரிகுலேசன் தேர்வு: மொழிப்பாடங்கள் 2. ஒவ்வொன்றிலும் 2 தாள்கள் 400 மதிப்பெண்கள். கணிதம் 2 தாள்கள் 200 மதிப்பெண்கள் அறிவியல் 2 தாள்கள் 200 மதிப்பெண்கள் செய்முறை 2 தாள்கள் 100 மதிப்பெண்கள் சமூக அறிவியல் 2 தாள்கள் 200 மதிப்பெண்கள் மொத்தம் 1100 மதிப்பெண்கள்.

## அட்டவணை 7.1.
## தேர்வு விவரங்கள்

| வ. எண் | பாடம் | பாடத்திட்டம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அரசு | | மெட்ரிக்குலேசன் | | ஆங்கிலோ இந்தியன் | | ஓரியண்டல் | |
| | | தாள் | மதிப் பெண் | தாள் | மதிப் பெண் | தாள் | மதிப் பெண் | தாள் | மதிப் பெண் |
| 1 | மொழி | 2 | 100 | 2 | 200 | 1 | 100 | 1 | 100 |
| 2 | ஆங்கிலம் | 2 | 100 | 2 | 200 | 2 | 200 | 2 | 100 |
| 3 | கணிதம் | 1 | 100 | 2 | 200 | 2 | 200 | 1 | 100 |
| 4 | அறிவியல் | 1 | 100 | 2 | 200 | 2 | 200 | 1 | 100 |
| | அறிவியல் செய்முறை | – | – | 2 | 100 | 2 | 100 | | |
| 5 | சமூக அறிவியல் | 1 | 100 | 2 | 200 | 2 | 200 | 1 | 100* |
| 6 | ஓரியண்டல் மொழி | | | | | | | 2 | 200 |
| | மொத்தம் | 7 | 500 | 12 | 1100 | 11 | 1000 | 8 | 600 |

* இதில் தேர்வது கட்டாயமில்லை.

### 7.8. கருத்தாய்வு

**7.8.1.** மாநில வாரியம், ஓரியண்டல், சி.பி.எஸ்.இ. தேர்வுகளில் தேர்வுப்பாடங்கள் எல்லாவற்றிற்கும் சமமதிப்பாக ஒவ்வொரு பாடத்திற்கும் 100 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன. மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்தியப் பள்ளித் தேர்வுகளில் பாடத்திற்குப் பாடம் வேறுபடுகின்றன. கலைத்திட்டத்தில் எல்லாப் பாடங்களுக்கும் சம முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. வகுப்பறைக் கற்பித்தலுக்கான பிரிவுவேளை ஒதுக்கீட்டிலும் அதிகமான வேறுபாடு கிடையாது. எனவே, பாடத்திற்குப் பாடம் மொத்த மதிப்பெண் ஒதுக்கீடு சமமாகவே இருக்க வேண்டும்.

**7.8.2.** இவ்வேறுபாட்டிற்குக் காரணம் ஒவ்வொரு பாடத்திலும் உள்ள வினாத் தாள்களின் எண்ணிக்கை வேறுபாடாகும். கணிதம், அறிவியல், சமூகவியல் பாடங்கள் ஒவ்வொன்றிலும் மாநில வாரியம், ஓரியண்டல் மற்றும் சி.பி.எஸ்.இ.தேர்வுகளில் ஒரே தாள் தான் உண்டு. ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேசன் தேர்வுகளில் ஒன்றிற்கு மேற்பட்ட தாள்கள் இருக்கின்றன. எனவே, தாள்களின் எண்ணிக்கையில் சமத்துவம் கொண்டு வருதல் வேண்டும்.

**7.8.3.** மிக அதிகமான பாடச் சுமையுள்ள மேல்நிலைப்பள்ளித் தேர்வுகளிலேயே ஒரு பாடத்திற்கு ஒரு தாள் என்றே உள்ளது. மற்றவற்றைச் சோதிக்க ஒரு தாளே போதுமானது என்றே கருதப்படுகின்றது. இரண்டு தாள்கள் இருந்தால், வினாக்களின் எண்ணிக்கை கூடுமாதலால், மாணாக்கர் வினாக்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புகள் அதிகம் என்று கூறப்படுகின்றது. அதே சமயத்தில் சில பாடப்பகுதிகளை ஒதுக்கிடவும் இயலும் என்ற நிலையும் உள்ளது.

**7.8.4.** மாணாக்கர் மீதான தேர்வுச் சுமையைக் குறைத்திட வேண்டுமென்று யஷ்பால் குழு வற்புறுத்தியுள்ளது. அதிகத் தாள்கள் இருப்பதால், ஆண்டில் நடத்தப்பெறும் பருவத் தேர்வுகள் அதிககாலம் எடுத்துக்கொள்ளும். கற்றல்–கற்பித்தலுக்கான காலம் குறையும். நிறைவான கற்றல் நடைபெறவேண்டுமெனின் பாடத்திட்டங்களில் ஒதுக்கியுள்ள அளவு பிரிவு வேளைகள் கற்றல் கற்பித்தல் நடைபெற வேண்டும்.

**7.8.5.** அடுத்த வேறுபாடு, அறிவியல் பாடத்தில் செய்முறைத்தேர்வு. ஆங்கிலோ இந்தியன் மெட்ரிகுலேசன் முறைகளில் செய்முறைத் தேர்வுகள் உண்டு. தற்பொழுது நடைமுறையிலுள்ள செய்முறைப் பயிற்சிகள் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் முறையில் அமையவில்லை. ஏற்கனவே கற்றவற்றைச் சோதிப்பது போலவே உள்ளன என்று விமரிசனம் செய்யப்படுகிறது. செய்முறைத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற வாய்ப்புள்ளதால், அது தொடர வேண்டுமென்று மெட்ரிகுலேசன் பள்ளிகள் வற்புறுத்துகின்றன.

**7.8.6.** செய்முறை பயிற்சி மாணவர் தாம் கற்கும் பாடத்தை சீராக புரிந்து கொள்ள பெரிதும் உதவும் என்பதால் செய்முறைத்தேர்வு அவசியம் தேவை. மாநில வாரியப் பள்ளிகளில் செய்முறைத் தேர்வுகள் நடத்துவதற்கான அறிவியல் ஆய்வக வசதிகள் இல்லை என்ற வாதம் சரியானதல்ல. செய்முறைத் தேர்வுகள் நடைமுறைக்கு வந்தால் எல்லாப் பள்ளிகளிலும் அறிவியல் ஆய்வகத்தைச் செம்மைப்படுத்த முற்படுவார்கள். ஆகவே, இக்குழு செய்முறைத் தேர்வு வேண்டும் என்று பரிந்துரைக்கிறது.

**7.8.7.** இவற்றின் அடிப்படையில் இருவிதமான பொதுத்தேர்வு முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முறை 1

| எண் | பாடம் | தாள்கள் | மொத்த மதிப்பெண்கள் | பதிவிற் குரியவை |
|---|---|---|---|---|
| 1 | மொழி 1 | 2 | 200 | 100 |
| 2 | மொழி 2 | 2 | 200 | 100 |
| 3 | மொழி 3 | 2 | 200 | 100 |
| 4 | கணிதம் | 2 | 200 | 100 |
| 5 | அறிவியல் எழுத்துத்தேர்வு<br>செய்முறைத்தேர்வு | 2 | 200<br>100 | 100 |
| 6. | சமூகவியல் | 2 | 200 | 100 |
| | | | மொத்தம் | 600 |

முறை 2

| எண் | பாடம் | தாள்கள் | மொத்த மதிப்பெண்கள் | பதிவிற் குரியவை |
|---|---|---|---|---|
| 1 | மொழி 1 | 1 | 100 | 100 |
| 2 | மொழி 2 | 1 | 100 | 100 |
| 3 | மொழி 3 | 1 | 100 | 100 |
| 4 | கணிதம் | 1 | 100 | 100 |
| 5 | அறிவியல் எழுத்துத்தேர்வு<br>செய்முறைத்தேர்வு | 1 | 75<br>25 | 100 |
| 6. | சமூகவியல் | 1 | 100 | 100 |
| | | | மொத்தம் | 600 |

கூடுதலாக நான்காம் மொழியை கற்கும் மாணவர், அப் பாடத்திலும் தேர்வு எழுதுவார். பொதுத்தேர்வில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தேர்வு முறை இருந்தாலும் இருதேர்வு முறை இருந்தாலும் மதிப்பெண்ணை ஒவ்வொரு பாடத்திலும் 100 என்றே பதிவு செய்ய வேண்டும்.

பகுதி 5.2–ல் பரிந்துரைக்கப்பட்ட பள்ளிக் கல்வி வாரியம் அமைக்கப்பட்டபின் அது இவ்விரு முறைகளில் அனைத்து மாணவர்களுக்கும் ஏற்ற ஒரு முறையை முடிவு செய்யலாம்.

# 8. ஆசிரியர் கல்வி மற்றும் பணியிடைப் பயிற்சி

## 8.1. அறிமுகம்

கல்வித் திட்டத்தின் ஒரு முக்கிய பங்கேற்பாளர் ஆசிரியராவார். ஆசிரியரது தகுதி, பணிப்பற்று, மனித நேயம் ஆகியவை கல்வித் திட்டத்தின் வெற்றிக்கு உதவும். எனவே, ஆசிரியர்களை உருவாக்கும் பணி மிக முக்கியமானதாகும்.

## 8.2. இன்றைய நிலை:

**8.2.1.** ஆசிரியர் கல்வி, நான்கு நிலைகளின்று இரண்டு நிலையாக அளிக்கப்பட்டு வருகின்றது. நுழைவுத் தகுதியும் உயர்த்தப்பட்டுள்ளது. பட்டயப் படிப்பிற்கு மேனிலைக் கல்வித் தேர்வில் 50% க்குக் குறையாது பெற்றிருக்க வேண்டும்.

**8.2.2.** பட்டயப்படிப்பு இரண்டு ஆண்டுகளும், பட்டப்படிப்பு ஓராண்டும் என ஆசிரியர் கல்வி அளிக்கப்படுகின்றது.

**8.2.3.** பட்டயப்படிப்பு 477 ஆசிரியர்கல்வி நிறுவனங்களிலும், பட்டப்படிப்பு 150க்கு மேற்பட்ட நிறுவனங்களிலும் வழங்கப்படுகின்றன.

**8.2.4.** அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர் அனைவரும் முழுத் தகுதி பெற்றவராவர். ஆனால், பிற பள்ளிகளில் 30% முதல் 80% வரை பயிற்சி பெறாதவராகவும், குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி இல்லாதவராகவும் இருக்கின்றனர்.

**8.2.5.** சமச்சீர்க் கல்வி முறையை நடைமுறைப்படுத்த அனைத்து ஆசிரியர்களும் முழுமையான தகுதி பெற்றவராக இருப்பது அவசியம்.

**8.2.6.** பயிற்சி பெறாத ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தல் முறைகளை அறியாதவர். எனவே, தேர்விலே சிறந்த தேர்ச்சியைக் காட்டிட வேண்டும் என்ற அவசியத்தால் வினா–விடை முறையையும் மனன முறையையும் கையாள்வதால், மாணாக்கரிடம் வளர்க்கப்பட வேண்டிய பல மனத் திறன்களும் புறக்கணிக்கப்படுகின்றன.

**8.2.7.** ஆசிரியர் கல்வி நிறுவனங்களும் ஒரு முழுமையான ஆசிரியரை உருவாக்கத் தவறுகின்றன. தொழிலிற்கு வந்த பின்னர் பெறும் அனுபவ அறிவினையே ஆசிரியர் நம்பி இருக்க வேண்டியுள்ளது. இயந்திர முறைக் கற்பித்தலும், மாணவரது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது இருத்தலும் மாணாக்கர்களைப் பல்வேறு மன உளைச்சலுக்குத் தள்ளுகின்றன. தற்கொலை முயற்சிகள் பலவற்றிற்கும் பள்ளி நடைமுறைகளே காரணமாக அமைகின்றன. எனவே ஆசிரியர் கல்வியில் சீரிய மாற்றங்கள் கொண்டுவர, தேசிய ஆசிரியர் கல்விக்குழு (NCTE) சமீபத்தில் தரமான ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்ட வரைவை வெளியிட்டுள்ளது அவ்வரைவின்படி ஆசிரியர் கல்வியின் பொழுது, பயிற்சி ஆசிரியர்க்குத் தரப்பட வேண்டிய திறன்கள் பின்வருமாறு:

- பாட அறிவு
- கலைத்திட்ட விளக்கம்
- கற்பித்தல் முறைகள்
- மாணாக்கரோடு உள்ள உறவு
- மாணாக்கரை அறிதலும் புரிதலும்
- கல்விக் கூடங்களில் பயிற்சி
- சமுதாய உணர்வும், சமுதாயப் பணியும்.

**8.3. ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகள்:**

ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் மூன்று வகைப்பட்டன.

**• மாவட்ட ஆசிரியர் மற்றும் பயிற்சி நிறுவனம் (DIET)**

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இந்நிறுவனங்களில் உயர் தகுதியும், நீண்ட அனுபவமுள்ள பேராசிரியர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கட்கு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் முறையான பயிற்சிகளை அவ்வப்பொழுது தருவதால் இவர்கள் புத்தறிவு பெற்றுச் சிறந்து விளங்குகின்றனர். தகுதியின் அடிப்படையிலேயே மாணாக்க–ஆசிரியர் சேர்க்கை இருப்பதால், அறிவு நிரம்பியவர்களே பயிற்சி பெறுகின்றனர்.

• **அரசு உதவி பெறும் அல்லது அரசால் நடத்தப் பெறும் நிறுவனங்கள்**

இவை நெடுங்காலமாக இயங்கும் நிறுவனங்கள், சில பட்டப்படிப்புகளையும், சில பட்டயப்படிப்புகளையும் அளிக்கின்றன. பெரும்பாலனவை அனுபவமிக்க பேராசிரியர்களைக் கொண்டவை. நல்ல உட்கட்டமைப்பு வசதிகளும், சீரிய அனுபவமும் உள்ளவையாதலால், இவற்றிலும் சிறந்த பயிற்சி அளிக்கப்படுகின்றது.

• **அரசு உதவி பெறா ஆசிரியர் கல்வி நிறுவனங்கள்**

ஏறக்குறைய 500க்கு மேற்பட்ட இந்நிறுவனங்கள் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள், இவற்றில் கற்கும் மாணவர் வகுப்பறைக் கற்பித்தல் பயிற்சிக்கு அருகிலுள்ள பஞ்சாயத்து ஒன்றிய மற்றும் பிற பள்ளிகளை நாடுகின்றனர். இவற்றின் தரம் இதுவரை மதிப்பிடப்படவில்லை.

இவற்றைத் தவிர தொலைநிலைக் கல்வி மூலமும் பணியிலுள்ளோர் ஆசிரியர் கல்வி பெற இயலும். பட்டய, பட்டப் படிப்புகளுக்கே இந்நிறுவனங்கள் பயிற்சி அளிக்சின்றன. இன்றைய முக்கிய தேவையான மழலையர் கல்விப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் மிகச் சிலவே.

## 8.4. பணியிடைப் பயிற்சி

ஆசிரியர் என்றும் கற்பவர், நந்தா விளக்குப் போன்றவர், தாமாக அறிவை நாடிச் செல்வது அவர் இயல்பு. தொழிற்துறையில் அவர் திறனை வளர்க்க, கல்வித்துறை பல்வேறு பணியிடைப் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன. புத்தறிவு பெற்றுத் தமது கற்பித்தல் திறன்களையும் மனப்பான்மையையும் சிறப்பாக்கிக் கொள்ள இப்பயிற்சிகள் உதவும். பணியிடைப் பயிற்சியில் கூறப்படும் குறைகள்.

- அரசுப்பள்ளி ஆசிரியர்க்கு மட்டுமே அளிக்கப்படுகின்றது. ஒரு சிலவே அரசு உதவி பெறும் ஆசிரியர்களும் பெறுகின்றார்கள். உதவி பெறாப்பள்ளி ஆசிரியர்களுக்கு எப்பயிற்சியும் கிடையாது. நிர்வாகங்கள் வேறுபட்டாலும், தமிழ்நாட்டு மாணவர்களே பயன் பெறப் போவதால், அனைத்தாசிரியர்கட்கும் பணியிடைப் பயிற்சி அளிப்பது அவசியம்.
- பள்ளி நாள்களிலே பெரும்பாலான பயிற்சிகள் நடப்பதால், பள்ளி மாணாக்கர் கற்றல் தடைபடுகின்றது.

- முன்னரே தயாரிக்கப்பட்டவையே பயிற்சியாகத் தரப்படுகின்றன. பெரும்பாலும், என்.சி.ஈ.ஆர்.டி தயாரித்த திட்டங்களே பின்பற்றப்படுகின்றன. ஆசிரியரது தேவைகளையும், வகுப்பறைப் பிரச்னைகளையும் அறிந்து பயிற்சிப்பாடங்கள் அமைவதில்லை.
- ஆசிரியர் கேட்பவராகவே இருக்கின்றனர். அவர் பங்கேற்க வாய்ப்பு இல்லை.
- வட்டாரவளமையத்தில் உள்ள பயிற்றுனர்களுக்கு வகுப்பறை அனுபவம் இல்லாததால், கிளிப்பிள்ளை போலத் தாம் கற்றவற்றை ஒப்பிக்கின்றனர் என்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.
- பயிற்சியின் விளைவுகள் மதிப்பிடப்படுவதில்லை. எனவே, ஆசிரியர்கள் பயிற்சி வகுப்புகளில் அக்கறை காட்டுவதில்லை

**8.5. பரிந்துரைகள்**

- மூன்றாண்டு காலத்திற்குள், பயிற்சி பெறாத ஆசிரியர் அனைவரும் தகுதி பெற வேண்டும். அவர்க்கு ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் முன்னுரிமை அளித்துச் சேர்ப்பதுடன், பயிற்சிக் காலத்திற்கு விடுப்பு அளிக்க வேண்டும்.
- ஆசிரியர் கல்வி நிறுவனக் கலைத்திட்டம் புதுப்பிக்கப்பட வேண்டும். பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்யத்தக்கவையாக அவை இருக்க வேண்டும்.
- மழலையர் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கூடங்கள் விரிவு படுத்தப்பட வேண்டும்.
- பணியிடைப் பயிற்சி அனைத்தாசிரியர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.
- மூன்றாண்டுகட்கு ஒரு முறை குறைந்தது ஒரு மறு பயிற்சியாவது ஒவ்வொரு ஆசிரியரும் பெற வேண்டும்.
- ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் நடத்தும் பணியிடைப் பயிற்சிகளில், பணியிலுள்ள மூத்த ஆசிரியர்களும் சிறப்பு ஆசிரியர்களாக அமைர்த்தப்பட வேண்டும்.
- வகுப்பறை ஆசிரியரோடு, உடற்கல்வி, ஓவியம், கைத்தொழில் போன்றவற்றிற்கான சிறப்பு ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
- மாணவர்களின் கற்றல் நாள்களில் குறைவு ஏற்படாமல் தவிர்க்க ஒவ்வொரு பள்ளியிலும் கூடுதலாக குறைந்த பட்சம் 10 சதவிகிதம் ஆசிரியர்கள் மாற்று ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு பயிற்சி மையமும் தங்களுக்குரிய வருகிற கல்வி ஆண்டிற்கான பயிற்சி வகுப்புத் திட்டத்தை நிகழ்கிற ஆண்டிலேயே வரையறுத்து அதன்படி தவறாமல் செயல்பட வேண்டும்.

# 9.பள்ளி ஆய்வு

### 9.1. ஆய்வின் அவசியம்

கலைத்திட்டத்தின் நோக்கங்கள், இலக்குகள் அடையப் பெற்றுள்ளனவா என்பதை அறிந்திட பள்ளி ஆய்வு உதவிடும். மேலும் பள்ளியின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறமை மதிப்பிடப்பட்டு மேலும் திறனுள்ளதாக ஆக்கவும் பள்ளி ஆய்வு ஒரு சிறப்பான கருவியாகவும், பள்ளியின் செயல்பாடுகளையும் கண்டறிந்து குற்றங்குறைகள் நீக்கப்பெறவும் பள்ளி ஆய்வு வழி செய்யும். சமச்சீர்க் கல்வி நன்முறையில் வழங்கப்பெற்று அனைத்து மாணவர்களும் முழுமையான கல்வி பெறுவதை உறுதிப்படுத்தவும் ஆய்வு உதவும். எனவே ஆய்வு முறைகளை ஆய்வு செய்து திறன்மிக்கதாகச் செய்வது அவசியம்.

### 9.2. ஆய்வுப்பணி

**9.2.1.** தொடக்க, நடுநிலைப்பள்ளிகளை உதவிக் கல்வி அலுவலரும், உயர்நிலைப் பள்ளிகளை மாவட்டக் கல்வி அலுவலரும், மேனிலைப் பள்ளிகளை முதன்மைக் கல்வி அலுவலரும் ஆய்வு செய்வர். உயர்நிலைப் பள்ளி மற்றும் மேனிலைப் பள்ளிகளில் உள்ள 6 முதல் 10ஆம் வகுப்புகளை மாவட்டக் கல்வி அலுவலரே ஆய்வு செய்வர்.

**9.2.2.** ஆய்வு நெறிமையின்படி தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் ஒவ்வொரு ஆண்டும் ஒரு முழுமையான ஆய்விற்கும், குறைந்தது மூன்று முன்னறிவிப்பில்லாத பார்வைக்கும் உட்படுத்தப்படும். உயர்நிலைப் பள்ளிகள் ஆண்டிற்கு ஒரு முறையும், மேனிலைப் பள்ளிகள் இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

**9.2.3.** ஏறக்குறைய 5000 உதவி பெறா நர்சரி–தொடக்கப் பள்ளிகள் ஆய்விற்கு உட்படுவதில்லை. 3500க்கு மேற்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு 10 ஆய்வாளர்களே உள்ளதால், முறையாக ஆய்வுகள் நடத்தப் பெற இயலவில்லை.

**9.3 ஆய்விற்குட்படுத்தப்படுபவை**

**9.3.1.** வகுப்பறைக் கற்பித்தல், மாணாக்கரது அடைவுகள், மாணாக்கரது கட்டுரை பிற ஏடுகள் ஆகியவை பார்வையிடப்படுவதோடு, கலைத்திட்டத்தின் பகுதிகளான உடற்கல்வி, கைத்தொழில், ஓவியம், சாரணீயம் போன்ற இளைஞர் அமைப்புகள் ஆகியவை ஆண்டாய்வில் ஆய்வு செய்யப்படும்.

**9.3.2.** வகுப்பறை ஆசிரியரது பணியினை ஆய்ந்திட மாவட்டக் கல்வி அலுவலர்க்கு உதவியாக வேற்றுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் அடங்கிய குழு துணைபுரியும்.

**9.3.3.** ஆசிரியர்களது நியமனம், தகுதிச் சான்றிதழ்கள், பணிப் பதிவேடு ஆகியவையும் ஒவ்வொரு ஆண்டும் ஆய்விற்கு உட்படும்.

**9.3.4.** பள்ளியில் மாணாக்கர் சேர்க்கை, ஆண்டுத் தேர்ச்சி, பள்ளிக் கணக்கு, தமிழ்நாடு கல்வி விதிகளின்படி பேணப்பட வேண்டிய பதிவேடுகள் முதலியனவும் பார்வையிடப்பட்டு நிறைகுறைகள் பட்டியலிடப்படும்.

**9.4. இன்றையநிலை**

கடந்த பல ஆண்டுகளாக பள்ளிகளின் எண்ணிக்கையும், மாணவர்கள் எண்ணிக்கையும் வேகமாக வளர்ந்து வந்துள்ளது. அந்த வேகத்தில் ஆய்வாளர் எண்ணிக்கை வளராததால் பள்ளி ஆய்வுப்பணி மனநிறைவு தருவாக இன்று இல்லை.

**9.5. பரிந்துரைகள்:**

- அனைத்து வகைப் பள்ளிகளிலும் ஆய்வு நெறிமை (Inspection Code)யில் உள்ளவாறு ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.
- எல்லா நிலை ஆய்வாளர்கட்கும் நிர்வாகப் பணிகள் அதிகமாக உள்ளதால், ஆய்வுப்பணி இரண்டாம் இடத்தில் இருப்பதைத் தவிர்க்க நிர்வாக அலுவலர் ஒருவரும், ஆய்வாளர் ஒருவரும் என ஒவ்வொரு நிலையிலும் இருவர் நியமிக்கப்பட வேண்டும்.

- மாநில வாரியம், ஓரியண்டல், ஆங்கிலோ–இந்தியன் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் அனைத்தையும் ஒரே அலகாகக் கருதி, 30 பள்ளிகளுக்கு ஒரு ஆய்வாளர் வீதம் நியமித்து, பள்ளி ஆய்வுகள் தவறாது ஆண்டுதோறும் நடைபெறச் செய்ய வேண்டும். எப்பள்ளியும் ஆய்வு செய்யப்படாமல் விடுபடக் கூடாது.
- மேல்நிலைப் பள்ளிகள் மூத்த பாட வல்லுநர்களைக் கொண்ட குழுவால் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பள்ளி மாணாக்கர் மற்றும் ஆசிரியர் எண்ணிக்கைக்கேற்ப ஆய்வு நாள்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும்.
- ஆய்வு முடிந்தவுடன் ஒவ்வொரு ஆசிரியருடனும், தலைமையாசிரியரிடமும் ஆய்வில் கண்டவற்றைக் கூறி அவர்கள் பணி சிறக்க அறிவுறுத்தல் செய்ய வேண்டும்.
- ஆய்வு அறிக்கை ஆய்வு முடிந்து ஒரு வாரத்திற்குள் பள்ளிக்கு அனுப்பப்பட வேண்டும். அதன் மீதான விளக்கங்களைத் தலைமையாசிரியர் உடனடியாக அனுப்ப வேண்டும்.
- ஆய்வாளர்க்குக் கலைத்திட்ட அறிவு, நிர்வாக நடைமுறைகள் ஆகியவற்றில் முழுமையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
- சிறப்பு மிக்க ஆசிரியர்கள், பள்ளிகளில் காணப்பட்ட சீரிய நடைமுறைகள் அடையாளம் காணப்பட்டு, அவை பிற பள்ளிகளுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

# 10. கல்விச் சட்டம்

## 10.1. முன்னுரை

ஒவ்வொரு அரசுத்துறையிலும் நிர்வாகம் சீராக இயங்க ஒரு கையேடும் (manual) ஒரு தணிக்கை நெறிமை (Audit code)யும் அரசு வெளியிடுகிறது. துறை சார்ந்த சட்டங்கள், நிர்வாக ஆணைகள், நடைமுறைகள், அனுமதிக்கப்படும் செலவினங்கள் முதலியவை கையேட்டில் முழுமையாக இடம் பெறும். அது போலவே, துறை சார்ந்த கணக்குகளைப் பேணவும், தணிக்கை செய்யவும் நடைமுறைகள், வரம்புகள் முதலியனவும் விவரமாக அளிக்கப்படும். அரசுப் பதிவிதழில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள மாற்றங்களும் கையேட்டிலும் நெறிமையிலும் உடனுக்குடன் சேர்க்கப்படும். இதன் காரணமாக, துறை அலுவலர்கள் தம் பொறுப்புகள், கடமைகள், வரம்புகள் ஆகியவற்றை அறிந்து எவ்விதக் குழப்பங்களுமின்றிச் செயலாற்ற இயலும். ஆனால் கல்வித்துறையினைப் பொறுத்துக் கையேடும், நெறிமையும் வெளியிடப்படவில்லை. அதனால், பல்வேறு மாறுபட்ட நிலைப்பாட்டிற்கு இடமளித்து முடிவுகள் எடுப்பதில் பல சமயங்களில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. கையேடும், நெறிமையும் தயாரிக்கப்பட வேண்டுமென்பது துறை சார்ந்தவர்களின் பல்லாண்டு காலக் கோரிக்கையாக இருந்து வருகின்றது.

## 10.2 சட்டத்தின் தேவை:

கல்வித்துறை சார்ந்த பல நடவடிக்கைகளும் நீதி மன்றங்களுக்குச் செல்கின்றன. சட்ட அடிப்படையில்லாது பெருமளவில் நிர்வாக ஆணைகளாகவே அமைந்துள்ள காரணத்தால், சாதாரண அன்றாட நிகழ்வுகள் கூட நீதிமன்றத்திற்குச் செல்கின்றன. 150 ஆண்டுகட்கு மேல் பயன்பாட்டிலுள்ள தமிழகக் கல்வி விதிகள் சட்டங்களாக இயற்றப்படாதக் காரணத்தினால் அவற்றின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் பலவும் நீதிமன்றங்களால் புறந்தள்ளப்பட்டன என்பது வரலாறு. தனியார் பள்ளி ஆசிரியர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாகவே தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தல் சட்டம் 1975ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் உதவி பெறும் தனியார் பள்ளிகட்கு மட்டுமே பொருந்தும். அச்சட்டம் நிறைவேற்றிய பின்னர், தமிழ்நாட்டுக் கல்வித்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. துறை முழுமைக்கும் பொருந்தக்கூடிய

ஒரு சட்டம் தேவை என்பது உணரப்படுகின்றது. அதன் மூலம் நிர்வாகம் நேர்மையாகவும் முறையாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய முடியும்.

**10.3 இன்றைய நிலை:**

பள்ளிக்கல்வி நிர்வாகத்தைப் பொறுத்து இன்று நடைமுறையிலுள்ள பல்வேறு சட்டங்கள், பிற நடைமுறை விதிகள் ஆகியவற்றைத் தருபவை பின்வருமாறு:

**அ. சட்டங்கள்:**

**தொடக்கப்பள்ளிச் சட்டம்:**

இது 1920 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, பல மாறுதல்களைப் பெற்றது. மிக விவரமாக தொடக்கப் பள்ளி தொடங்குதல் முதல் ஆய்வு வரை எல்லாக் கூறுகள் பற்றியும் இச்சட்டமும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட விதிகளும் தெளிவாகக் கூறுகின்றன.

**ஆ. தமிழ்நாடு தனியார் பள்ளி ஒழுங்குபடுத்தல் சட்டம்**

இச்சட்டம் 1974 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. உரிய விதிகள் 1975ல் அமைக்கப்பட்டுள்ளன. பள்ளி தொடங்கல், அங்கீகாரம் ஆசிரியர் நியமனம், ஆசிரியர், நிர்வாகி மீது ஒழுங்கு நடவடிக்கை முதலியன இச்சட்டத்திலும் விதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்சட்டம் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகட்கு மட்டுமே பொருந்தும்.

**கட்டாயக் கல்விச்சட்டம்**

இச்சட்டம் 1995ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் 5 ஆம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும்.

இ. விதிகள் / நெறிமைகள்:

1. தமிழ்நாடு கல்வி விதிகள் (Tamil Nadu Educational Rules) எம்..ஈ.ஆர். (M.E.R.) என்று அழைக்கப்படும் இவ்விதிகள் கிழக்கிந்திய கம்பெனியார் காலத்தில் உருவாக்கப்பட்டு, பல திருத்தங்கள் செய்யப்பட்டு இன்றும் நடைமுறையில் உள்ளது. பள்ளி சார்ந்த எல்லாப் பிரச்சனைகளுக்கும் நடைமுறைகளை வகுத்துக் கொடுக்கும் இவ்விதிகட்கு சட்ட அடிப்படையில்லாமை ஒரு பெருங்குறை. பதிப்பு அரசால் பல்லாண்டுகளாக வெளியிடப்படவில்லை.

2. மானிய நெறிமைகள் (grant-in-aid code) உள்ளாட்சி மற்றும் உதவிபெறும் பள்ளிகளுக்கு கற்பித்தலிற்கும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கவும் அரசு மான்யம் அளிக்க விரிவான விதிகளைக் கொண்டது.

3. ஆய்வு நெறிமை **(Inspection Code)** இந்நெறிமையில் ஆய்வாளர் தகுதி, அவர் பொறுப்புகளும், கடமைகளும், செயலாற்றும் நடைமுறைகள் ஆகியவை மிக விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதனை முழுமையாகச் செயல்படுத்தினால் பள்ளிகளின் செயல்பாடு சிறந்து விளங்கும் என்பது ஐயமில்லை.

4. இடைநிலைக்கல்விச் சான்றிதழ் திட்டம் **(SSLC Scheme)** இது 1929ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, அவ்வபொழுது தேவைப்படும் மாற்றங்களுக்குட்பட்டது. பொதுத்தேர்வு எழுத வேண்டிய தகுதிகள், வயது வரம்பு, பிறந்த தேதி பெற்றோர் பெயர் மாற்றம் செய்ய நடைமுறைகள், வகுப்புத் தேர்வுகள், கட்டுரைகள் போன்றவற்றை மதிப்பிடுதல், தேர்வுகட்கு இல்லாத உடற்பயிற்சி, செய்முறைப் பயிற்சி, கைத்தொழில் ஆகியவற்றை மதிப்பிட்டுப் பதிவு செய்தல், இடைநிலைச் சான்றிதழ் பதிவேடு (SSLC Book) பராமரித்தல் போன்றவை விவரிக்கப்பட்டுள்ளன. **1963** ஆம் ஆண்டிற்குப் பின்னர் இது புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்படவில்லை.

5. மெட்ரிகுலேசன் பள்ளிகள் நெறிமை **(Code of Matriculation Schools)** மெட்ரிகுலேசன் பள்ளிகள் பல்கலைக்கழகப் பொறுப்பினின்று அரசிற்கு மாற்றிய பொழுது அமைக்கப்பட்டது.

6. ஆங்கிலோ – இந்தியன் பள்ளிகள் நெறிமை (Code of Anglo-Indian Schools) ஆங்கிலோ– இந்தியப் பள்ளிகள் இயக்கம் பற்றியது

7. அரசாணைகள்

அவ்வப்பொழுது, அரசால் இடப்படும் ஆணைகள் தொகுக்கப்படவில்லை. ஆனால், இவை அன்றாட, பள்ளி நிர்வாகத்தைப் பற்றியவை. முன்னர் அரசிதழில் வெளியிடப்பட்டன. தற்பொழுது வெளியிடப்படுவதில்லை.

8. இயக்கக நெறிமுறைகள்

அரசாணைகளின் விளக்கங்களாகவும், அவ்வப்பொழுது எழுகின்ற பிரச்சனைகளைத் தெளிவு படுத்துபவையாகவும் துறை அலுவலர்களுக்கும், பள்ளிகட்கும் அனுப்பப்படுபவை. இவை பொதுமக்கள் அறியும் வகையில் வெளியிடப்படுவதில்லை. பலவும் சுற்றறிக்கைகள் போலவே அனுப்பப்பெறுபவை.

### 10.4. பரிந்துரை

மேலே குறிப்பிட்டவற்றிலுள்ள முரண்பாடுகளைச் சரி செய்தும், தொகுத்தும் ஒரே சட்டமாக சட்டமன்றத்தில் இயற்றப்படுவது தமிழகக் கல்வியின் வளர்ச்சிக்கும் உறுதித் தன்மைக்கும் உதவும். எனவே, அனைத்துப் பள்ளிக்கும் பொருந்தும் ஒரு பொதுச்சட்டமாக தமிழ்நாடு கல்விச் சட்டம் என்ற தலைப்பில் ஒரு சட்டம் இயற்றப் பரிந்துரைக்கப்படுகின்றது.

சட்டத்தில் இடம்பெற வேண்டியவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:

- பள்ளிகள் தொடங்கல், அங்கீகரித்தல், வகைப்படுத்தல்.
- ஆசிரியர்கள் தகுதி, நியமனம், பணிவரன்முறை, ஆசிரியர் எண்ணிக்கை நிர்ணயம்.
- பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள்.
- நிதி ஒதுக்கீடும் மானியங்களும்
- பள்ளிக்குழுக்கள் அமைத்தல், பொறுப்புகள்.
- கிராமக்கல்விக்குழு அமைப்பும் பணிகளும்
- கலைத்திட்டம், தேர்வுகள், வேலைநாட்கள், விடுமுறை
- மாணவர் சேர்க்கையும் விலகலும்
- மாணவர்க்கான படிப்புதவித் திட்டங்கள்
- மாணவர் ஒழுங்கு விதிகள்
- ஆசிரியர் நடத்தை விதிகள், நெறிகள்
- பள்ளிக் கணக்குப் பேணல், கட்டணங்கள், சலுகைகள், பதிவேடுகள்
- பள்ளி ஆய்வு நடைமுறை விதிகள்
- பள்ளிக் கணக்குத் தணிக்கை
- பொதுத் தேர்வு விதிகள்
- உறைவிடப் பள்ளிகள், மாணவர் விடுதிகள்
- பெற்றோர்–ஆசிரியர் அமைப்பு விதிகள்

# 11. கல்வித்துறை நிர்வாகச் சீர்திருத்தம்

**11.1 பின்னணி:**

**11.1.1.** பள்ளிக்கல்வி அளிக்கும் பொறுப்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தனியார் உதவி பெறும் பள்ளி நிர்வாகங்களுக்குமே கொடுக்கப்பட்டிருந்தது. அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களோடு இணைந்த மாதிரிப் பள்ளிகள், இஸ்லாமியப் பெண்களுக்கான பள்ளிகள் போன்றவற்றை மட்டுமே அரசு நடத்தி வந்தது. அன்றைய சென்னை மாநிலத்தில் மொத்தம் 20–க்கு உட்பட்டே அரசுப் பள்ளிகள் இருந்தன.

**11.1.2.** மாவட்டக் கழகங்களும், நகராட்சிகளும் நடத்திய பள்ளிகளுக்கும் அரசு மானிய விதிகள்படி மானியங்கள் வழங்கப்பட்டன. மானிய விகிதத்திலுள்ள மாற்றத்தைத் தவிர, அரசு உதவி பெறும் பள்ளிகட்கும், உள்ளாட்சி நிறுவனப் பள்ளிகளுக்கும் இடையில் எவ்வித வேறுபாட்டையும் அரசு ஏற்படுத்தவில்லை.

**11.1.3.** பொதுக்கல்வி இயக்ககம் கீழ்க்காணும் பணிகளை மேற்கொண்டது.

- பள்ளிகள் தொடங்க அனுமதிப்பதும், அங்கீகாரம் வழங்குதலும்
- பாடத்திட்டம் வகுத்தல்
- தனியார் வெளியிடும் பாடநூல்களுக்கு ஏற்பு அளித்தல்
- பொதுத் தேர்வு நடத்தி, சான்றிதழ் வழங்குதல்
- பள்ளிகளை ஆய்வு செய்தல்
- மேற்காண் பணிகளை ஒட்டிய இதரச் செயல்பாடுகள்

**11.2. மாவட்டக் கழகங்கள் கலைப்பு**

**11.2.1.** மாவட்டக் கழகங்கள் 1958ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டு, பஞ்சாயத்து ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாவட்டக் கழகப் பொறுப்பிலிருந்த தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் கல்வி விரிவு அலுவலர் நியமிக்கப்பட்டபோதிலும், பள்ளி ஆய்வுகளை அரசுப் பள்ளி ஆய்வாளரே மேற்கொண்டார்.

**11.2.2.** உயர்நிலைப் பள்ளிகள் மாவட்ட ஆட்சியரின் பொறுப்பிற்கு மாற்றப்பட்டது. அவர் மாவட்டக் கழகத் தலைவருக்குள்ள அதிகாரங்களைப் பெற்றவரானார். 1964–ல் மாவட்ட ஆட்சியரிடமிருந்து மண்டலப் பள்ளிக் கல்வி அலுவலர்க்கு இவ்வதிகாரம் மாற்றப்பட்ட போதிலும் மாவட்டக் கழகச் சட்டத்தின்படியே பள்ளிகள் நிர்வகிக்கப் பெற்றன. 1971ல் கல்வித் துறைக்குப் பள்ளிகள் முழுமையாக மாற்றப்பட்டன. பிறகு தொடங்கப்பட்ட புதிய பள்ளிகள் அரசுப் பள்ளிகளாகவே தொடங்கப் பெற்றன. 1982–ல், ஒன்றிய மேலாண்மையிலிருந்த ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். ஒன்றியத் தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளாயின. இன்று இப்பள்ளிகள் தொடக்கக் கல்வி இயக்ககத்தாலும் உயர்நிலைப் பள்ளிகள் பள்ளிக் கல்வி இயக்ககத்தாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

### 11.3 கருத்தாய்வு

**11.3.1.** கல்வித்துறை இன்று 42,225 தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளிகளையும், 9,448 இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. அரசுப் பள்ளிகள் தொடக்கம், ஆசிரியர் தேர்வு, நியமனம், மாற்றல், ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் ஆகிய பணிகள் அனைத்தையும் கல்வித்துறை மேற்கொள்கின்றது. மாவட்டக் கழகங்கள் தம் மாவட்டத்திலுள்ள பள்ளிகளை மட்டுமே நிர்வகித்ததால், பள்ளிகளுக்கும் நிர்வாகத்திற்கும் நேரடித் தொடர்பு இருந்தது. அதனால், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல், ஆசிரியர் நியமனம், பிற பள்ளிப் பிரச்சனைகளையையும் உடனடியாகக் கவனிக்க இயன்றது. மாநிலம் முழுமையும் உள்ள அரசுப் பள்ளிகளைத் தமது பிற பொறுப்புகளோடு கவனிப்பது கல்வித்துறைக்கு மிகப்பெரும் சுமையாக உள்ளது.

**11.3.2.** அரசியல் சட்டத் திருத்தத்தங்கள் 73 மற்றும் 74–ன்படி, கல்வி, பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளின் பொறுப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. தமிழகத்தில் பஞ்சாயத்து நிர்வாகத்திற்குப் பள்ளிகள் மாற்றப்படவில்லை. ஆசிரியர்களின் எதிர்ப்பு ஒரு காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**11.3.3.** சமச்சீர்க் கல்விக்குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டங்களில், தொண்டு நிறுவனங்கள் பள்ளிகள் பஞ்சாயத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்றும், ஆசிரிய இயக்ககங்கள் அவ்வாறு

செய்யக் கூடாதென்றும் வலியுறுத்தின. இப்பிரச்னை முறையாகத் தீர்க்கப்படுவதே பள்ளிகள் சீராக இயக்க உதவும்.

**11.4. பரிந்துரைகள்**

- சர்வசிக்ஷா அபியான் திட்டத்தில் அரசாணை எண் 108 பள்ளிக் கல்வித்துறை, நாள் 31.7.2003ன்படி கிராமக் கல்விக்குழு அமைக்கப்பட்டுள்து (இணைப்பு 11.1.). பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், அரசாணை எண் 102, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 12.4.2005ன்படி கிராமக் கல்விக்குழு அமைக்க வழி வகுத்துள்ளது. (இணைப்பு 11.2.) இவ்விரு குழுக்களையும் சட்ட அடிப்படையில் ஒன்றாக இணைத்து, பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படச் செய்வது ஏற்புடையது. இத்தகைய கல்விக்குழு பள்ளிக்கும், சமுதாயத்திற்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும்.
- ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ளாட்சி சட்ட அடிப்படையில் ஒரு கல்விக்குழு உருவாக்க வழிவகை உள்ளது. ஒன்றியத்தில் அமைந்த பள்ளிகள் யாவும் எவ்வாறு இணைந்து செயல்படலாம் என்பதை அந்தக் கல்விக்குழு பரிந்துரைக்கும். மேலும் இப்பள்ளிகள் தரமாகச் செயல்படத் தேவையான வசதியையும் அது செய்து கொடுக்கும். ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியும் தமது வட்டாரத்திலுள்ள தொடக்க, உயர் தொடக்க, இடைநிலைப் பள்ளிகளுடன் தொடர்பு கொண்டு ஒரு தாய்போல் செயல்பட்டு அவற்றின் கல்வித் தரம் சிறப்பாக அமைய உதவ இக்குழு வழிகாட்டும். இத்தகைய சூழலில் எந்த ஒரு மாணவரும் தனது படிப்பைத் தொடரவும், பன்முகப்படுத்தப்படும் நிலையில் தான் விரும்பும் பாடத்தைத் தனக்கு தகுதி இருப்பின் விருப்பப்பாடமாக எடுத்துப் படிக்கவும் வசதி இருக்கும்; எந்த மாணவரும் தனது பள்ளிப் படிப்பைத் தொடர்வது குறித்துக் கவலை கொள்ள வேண்டியதில்லை. பெற்றோரும் எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்பது பற்றிக் கவலைப்படாது, தமது குழந்தைகள் சீரிய முறையில் கல்வி பெறும் என்று நம்பி நிம்மதியாகச் செயல்படலாம்.
- தனியார் பள்ளி ஒவ்வொன்றிற்கும் ஒரு தாளாளர் இருக்கின்றார். ஆனால் அரசுப் பள்ளிகள் அனைத்திற்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் அல்லது தொடக்கக் கல்வி இயக்குநரே நிர்வாகியாக இருக்கின்றார். மாவட்டக் கழகங்கள் கலைக்கப்பட்ட பொழுது, மாற்று ஏற்பாடு செய்திட அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டக் கல்வி குழுமம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், கழகப் பள்ளிகளின் முழு மேலாண்மையும் அவற்றிடம் ஒப்படைக்க

வேண்டுமென்றும், தனியார் பள்ளிகட்கான மானியங்களை வழங்கும் பொறுப்பும் அவற்றிற்கு அளிக்கலாமென்றும் பரிந்துரைத்தது. அதனைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுப்பது காலத்தின் கட்டாயமாகின்றது. மாவட்டக் கல்விக் குழுமத்தில் கல்வியாளர்கள், ஆசிரியப் பிரதிநிதிகள், பெற்றோர் சங்கப் பிரதிநிதிகள், பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உறுப்பினர் செயலராகவும், பொதுப்பணிப் பொறியாளர், மருத்துவர், குழந்தை நலக் காவலர் பிரதிநிதிகளும் இடம் பெற்றுப் பணியாற்றுவர்.

- அனைவருக்கும் கல்வித்திட்டம் செயல்படுத்தியதால் பள்ளிகளின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்ததாலும், அதை தொடர்ந்து வழக்குகள் அதிகமாயின; நிதி நிர்வாகம் மற்றும் அலுவலக நிர்வாகம் அதிகரித்து மொத்தத்தில் பள்ளிக் கல்வித்துறையில் நிர்வாகப் பணி கூடியது. ஆகவே மாநில அளவில் இயக்குநரின் பணிகளைப் பகிர்ந்து கொள்ள இணை இயக்குநர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்த வேண்டும். மாநிலத்தை ஆறு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் இணை இயக்குநர் நிலையில் ஒருவர் பொறுப்பேற்று, அப்பகுதிப் பிரச்சனைகள் அனைத்தையும் உடனடியாகத் தீர்க்குமாறு செய்வது இன்றைய தேவை. பள்ளிக் கல்வி இயக்ககத்தில் கூடுதலாக நிதிக்கட்டுப்பாட்டிற்கும், சட்டப்பிரிவிற்கும், நிர்வாகப் பிரிவிற்கும் மூன்று இணை இயக்குநர்கள் பதவி ஏற்படுத்த வேண்டும்.

- அலுவலக நிர்வாகத்தை வலுப்படுத்த தேர்வுத்துறையைப் பொறுத்தவரை கூடுதலாக இரண்டு இணை இயக்குநர்களும், மண்டல அளவில் ஏழு இணை இயக்குநர்களும் நியமிக்க வேண்டும்.

- தொடக்கக் கல்வித்துறைக்குத் தணிக்கைப் பிரிவு மூன்று மாவட்டங்களில் மட்டுமே உள்ளது. குறைந்த பட்சம் பத்துத் தணிக்கைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும், மதுரை உயர்நீதிமன்ற வழக்குகளுக்காகத் தனிச் சட்டப்பிரிவு ஏற்படுத்த வேண்டும்.

- பள்ளிக் கல்விக்கென ஒட்டுமொத்தப் புள்ளி விவரம் தயாரித்திட இணை இயக்குநர் அளவில் ஒரு தனி அமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

# பகுதி – 4
# அறிக்கையின் சுருக்கமும், பரிந்துரைகளும்

# 12. அறிக்கையின் சுருக்கமும், பரிந்துரைகளும்

## அறிமுகம்

**12.1.** செப்டம்பர் 2006ல் தமிழ்நாடு அரசு தற்போது செயல்பாட்டில் உள்ள கல்வி முறைகளை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்க சமச்சீர்க் கல்வி முறையை உருவாக்கி நடைமுறைப்படுத்த ஒன்பது கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது. இந்தக் குழு பலமுறை கூடி விவாதித்ததுடன், சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தி பொதுமக்கள், மாணவர், ஆசிரியர், கல்வியாளர் ஆகியோருடைய கருத்துக்களைக் கேட்டறிந்து மேலும் பல உட் குழுக்களை அமைத்துப் பாடத்திட்டங்களை ஆராய்ந்து அறிக்கைகள் பெற்றது. ஒரு சில பள்ளிகளையும் பார்வையிட்டது. இவற்றின் அடிப்படையில் கடைசியாக 21.04.2007 அன்று கூடி இவ்வறிக்கையை உருவாக்கியது.

**12.2.** தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வியின் இன்றைய நிலையின் விவரங்கள் அதிகாரம் 2ல் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு கல்வித்துறை சற்றேறக்குறைய 56,000 பள்ளிகளில் 130 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அடங்கிய ஒரு மாபெரும் அமைப்பு ஆகும். இத்துறையில் இன்று ஐந்து வகையான பாடத்திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. இவற்றை ஒருங்கிணைக்கும் முயற்சியை மேற்கொண்டு இவ்வறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

## சமச்சீர்க் கல்வி

**12.3.** கலைத்திட்டம், நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், உள்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர் மாணவர் விகிதம் இவற்றுள் ஏதாவது ஒன்று மட்டுமே சமமாக இருந்தால் சமச்சீர்க் கல்வியை உருவாக்க முடியாது. ஆகவே பள்ளிக் கல்வி சம்பந்தப்பட்ட யாவற்றையும் ஆராய்ந்து ஒரு மேலான, தரமான, தேவைக்கேற்ற கல்வித் திட்டத்தை உருவாக்கும் வகையில் இவ்வறிக்கை வழங்கப்படுகிறது. (3.1.2.)

**12.4.** கடந்த பல ஆண்டுகளாக அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளினால் அனைத்து, பள்ளி வயதுக் குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். அவர்கள் தொடர்ந்து எட்டு

ஆண்டுகள் சமச்சீர்க் கல்வித் திட்டத்தில் கல்வி கற்பதை உறுதி செய்ய பள்ளி இடை நிற்றலுக்கான காரணிகள் கண்டறியப்பட்டு அவற்றினை நேர்ப்படுத்த சர்வசிக்ஷா அபியான் திட்டத்தில் பல புதிய செயல்பாடுகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். (3.2.7.)

**12.5.** பொதுப்பள்ளி முறையில் தரம் தாழ்ந்து போகும் என்ற கருத்து உண்மைக்குப் புறம்பானது. பொதுப்பள்ளி முறை சமுதாயத்தை முழுமையாக ஊடுருவும் என்பதால், இப்பள்ளி முறை சமுதாயத்தை உயர்த்தும். (3.2.8)

**12.6.** இளைஞர்கள் முழுமையான வளர்ச்சி பெற்று சமுதாயத்தில் நல்ல குடிமக்களாக பயனுள்ள செயல்களைச் செய்பவராக உருவாக்கக் கூடியதாகக் கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள் அமைய வேண்டும். பாடச்சுமையைக் கூட்டாது மனப்பாடம் செய்வதை முன்னிறுத்தாது, பெற்ற அறிவைப் பயன்படுத்தி வாழும் வகையில் கற்பிப்பது அவசியம். (3.3.5)

**12.7.** தேர்வுகள், மனப்பாடம் செய்தவற்றைத் தேர்வு அறையில் எழுதுவதாக மட்டுமே அமையக்கூடாது. மாணவர் கற்றதனால் பெற்ற அறிவைத் தொகுத்தும் விரித்தும் விளக்கும் திறமை பெற்று இருக்கிறாரா என்பதையும் பெற்ற அறிவைத் தகுந்த முறையில் பயன்படுத்தும் திறன் பெற்றுள்ளாரா? என்பதையும் சோதிக்கும் முறையில் அமைய வேண்டும். (3.3.6)

**12.8.** கல்வியின் தரம் என்பது ஒரு பரந்த நோக்கில் காண வேண்டிய ஒன்று. 2005ஆம் ஆண்டு கலைத்திட்ட வடிவமைப்பில் கல்வியின் தரம் பற்றிப் பின்வரும் கருத்து சொல்லப்படுகிறது. " கல்வியின் தரம் என்பது வாழ்க்கையின் பரிமாணங்கள் யாவற்றின் தரத்தையும் உயர்த்தும் மனப்பான்மையை உள்ளடக்கியது. ஆகவே தான் விழுமங்கள் தவிர, அமைதி காத்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமுதாய மாற்றத்தை நாடும் மனப்பான்மை ஆகியவற்றையும் தரத்தின் முக்கிய அங்கங்கள் என்று கருதப்படுகின்றது. (3.3.7)

**12.9.** மாணவர் தேவைகளின் அடிப்படையில் தொடர்ந்து தரத்தை மேம்படுத்துவதுதான் தரமான கல்வி அமைப்பின் நோக்கம். குறுகிய காலப் போக்கில் பார்க்காது நீண்ட கால அடிப்படையில் கல்வியின் தரத்தை அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், அரசு உதவி பெறாத பள்ளிகள் ஆகிய பள்ளிகள் ஒவ்வொன்றிலும் நிதானமாக ஆராய்ந்து முறையாக மேம்படுத்துவது இன்றையத் தேவை.**(3.3.8)**

**12.10.** சமுதாயம், பள்ளிக்கல்வித்துறை, பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர், மாணவர் ஆகியோர் இணைந்து சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வது இன்றையத் தேவை. அதுவே முழுமையான பள்ளிக்கல்வி அமைப்பின் மேம்பாட்டுக்கு வழி செய்யும். **(3.4.2.)**

**12.11.** பள்ளிக் கல்வியின் பயன்களைப் பின்வருமாறு சுருக்கமாகப் பட்டியலிடலாம்: தான் அங்கம் வகிக்கும் சமுதாயத்தின் மற்ற அங்கத்தினருடன் தொடர்பு கொள்ளவும் தானாக தினசரிச் செயல்பாடுகளில் ஈடுபடவும் தேவையான மாநில மொழி அறிவு பெறுதல்; தன் சுற்றத்தாரின், தன் சமுதாயத்தின் பண்பாட்டையும், மரபையும், அதற்கும் நமது நாட்டின் பண்பாடு, மரபு, ஆகியவற்றுடன் உள்ள தொடர்பையும் அறிதல், புரிந்துகொள்ளுதல்; நமது நாட்டுப் பண்பாடு, மரபு ஆகியவற்றுக்கு உலக அளவில் மனித சமுதாயப் பண்பாடு மரபுகள் ஆகியவற்றுடன் உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளுதல்; நற்கருத்துக்களைக் கற்று சமுதாயத்திற்கு பயனுள்ள நல்லதொரு குடிமக்களாக மலர்தல்; வாழ்க்கைக்குத் தேவையான பொருள் ஈட்டுவதற்காக ஒரு வாழ்க்கைத் தொழில் கல்வியும் பயிற்சியும் பெறவோ, அல்லது தொழில் நுட்பக் கல்வி கற்கத் தேவையான அறிவைப் பெறுதல். **(3.5.7)**

**கற்றலும், அறிவு வளர்ச்சியும்**

**12.12.** பொதுவாக நல்ல மாணவன் என்பவன் நன்னடத்தை உள்ளவனாகவும், ஆசிரியர்கள் தன்னைவிட மேலான கல்வி அறிவு பெற்றவர்கள் என்பதால் அவர்கள் அறிவைப் போற்றுபவனாகவும், பொதுவாக ஆசிரியர் சொற்படி நடப்பவன் என்றாலும் எதையும் ஆராய்ந்து ஏற்றுக் கொள்பவனாகவும், பல நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ளும் ஆவல் உள்ளவனாகவும் இருப்பான். **(4.1)**

**12.13.** பாடத்திட்டத்தில் மாணவர் ஆயுள் முழுமைக்கும் தேவையான செய்திகள் யாவற்றையும் திணிக்க முயலாது, குறைந்தபட்ச அளவுக்கே பாடத்திட்டத்தை அமைத்து, அதைக் கற்பிக்கும் போது மாணவர் தொடர்ந்து தமக்குத் தேவையானவற்றைத் தாமே கற்கும் மனநிலையை உருவாக்க வேண்டும். கல்வி கற்க அவசியமான எல்லா வசதிகளும் உருவாக்கி அவற்றை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். தேர்வு சம்பந்தப்பட்ட மன அழுத்தம் வாராது, நம் மாணவர்கள் காக்கப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலையே இன்றையத் தேவை. (4.2.2.)

**12.14.** மாணவர்க்கு இடையே உள்ள மாறுபாடுகளை ஒரு சிக்கலாக நோக்காது பலதரப்பட்ட மாணவர்களுக்குக் கற்பிக்கும் வாய்ப்பாகக் கருதி எல்லாக் குழந்தைகளும் தரமான கல்வி பெறத்தக்க வகையில் கலைத்திட்டத்தை உருவாக்குவது பள்ளிக்கல்வி நிர்வாகத்தின் பொறுப்பாகும். மத, மொழி, இன, பால் வேறுபாடின்றித் தங்கள் பகுதியில் வசிக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் மாநில பள்ளிக்கல்வி வாரியம் வகுத்த கலைத் திட்டத்தைச் செயல்படுத்துவது அனைத்துப் பள்ளிகளின் கடமை ஆகும். பள்ளிக்கு அனுமதி அளிக்கும் ஆணையில் இக்கடமை குறிப்பிடப்பட வேண்டும். (4.3.3.)

**12.15.** பல விதமான கற்பிக்கும் முறைகளையும் ஆசிரியர் அறிந்து பயிற்சிபெற்று இருக்க வேண்டும். பலவகைப்பட்ட முறைகளில் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களுக்கு ஏற்ற முறையில் கற்பிக்க வேண்டும். மேலும், குடும்பச் சூழல் காரணமாக, சில மாணவர் பள்ளிக்கு தாமதமாக வரலாம்; அடிக்கடி பள்ளிக்கு வராமல் போகலாம்; வகுப்பில் பாடங்களைக் கேட்பதில் கவனம் குறையலாம். இத்தகைய மாணவரும் மற்ற மாணவர்கள் போல தரமான கல்வி கற்கும் வகையில் கலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். (4.4.9)

**12.16.** தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட கல்வித் திட்டத்தை ஆசிரியர், தான் கற்பிக்கும் மாணவர்க்குத் தக்க முறையில் அதாவது அவர்கள் எம்முறையில் கற்பித்தால் விளங்கிக் கொள்வார்களோ அம் முறையில் அவரவர்க்குத் தேவையானவற்றைக் கற்பதில் உதவி, எல்லா மாணவரும் சிறப்பாக் அறிவு பெற உதவும் வகையில் அல்லது முறையில் கற்பிக்க வேண்டும். (4.4.10)

**12.17.** அறிவு பல வகைப்படும். அவற்றைப் பெருக்கிக் கொள்ள பலவகையான சொற்கள், விளக்கங்கள் முறைகள் ஆகியவற்றைக் கற்க வேண்டும்; பயிற்சிகள் பெற வேண்டும். இக்கல்வியைப் பெற பல வகையான முறைகள் உண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு துறை அறிவைப் பெற வெவ்வேறு முறைகள் ஏற்புடையதாக இருக்கக் கூடும். ஆகவே, ஒரு மாணவனுக்கு ஒரு தனிப்பட்ட துறை அறிவை வளர்க்க அம்மாணவனுக்கும் துறைக்கும் ஏற்புடைய கற்பிக்கும் முறையைப் பயன்படுத்தினால் கல்வி சிறக்கும். ஆகவே கற்பிக்கும் ஆசிரியர் மாணவர்க்கும் சூழலுக்கும், கற்பிக்கும் பாடத்திற்கும் ஏற்ற முறையில் கற்பிக்க வேண்டும். (4.5.5.)

**12.18.** நம் மாநிலத்தில் ஒவ்வொரு பகுதியிலும் ஒட்டு மொத்தமாகவும், பல்லாயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர், தங்களது அனுபவ வாயிலாகவும் கல்வி கேள்வி ஞானத்தாலும் பெற்ற அறிவை, எழுத்து வடிவிலும், வாய்மொழி வழியாகவும் விட்டுச் சென்றுள்ளனர். இவை இன்று நாம் வகுத்துள்ள கணிதம், அறிவியல், சமூக அறிவியல் என்ற அறிவியல் பகுப்பு முறையில் எழுதப்படவில்லை, சொல்லப்படவில்லை என்றாலும், இவையாவும் மிகுந்த பயன் தருபவை என்பதில் ஐயமில்லை. இவை போற்றி பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். இவை பள்ளிக் கல்வியில் இடம் பெற வேண்டும். இவற்றைக் கற்கும் இளைஞர்கள் நம் முன்னோரின் அறிவைப் போற்றுவதுடன் நம் மொழி நாடு குறித்து பெருமை கொள்வர். அது தன்னம்பிக்கையை வளர்க்கும் அவர்கள் வாழ்வு சிறக்க வழி வகுக்கும். (4.6.6.)

**12.19.** உலக அளவில் பொதுவான அறிவும், நமது நாட்டு அளவில் பொதுவான அறிவும் நமது மாநில, வாழும் பகுதி அளவில் அறிவும் பெறும் மாணவர் தமது அனுபவத்தால் அறிவை உருவாக்கவும் பெருக்கவும் திறமை பெறுவர். கல்வி பெறுவதன் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றான அறிவைப் பெருக்கும் செயல்களில் மாணவர் ஈடுபடும்போது கல்வியின் தரம் உயரும் என்பதில் ஐயமில்லை. ஆதலால், தரமான பாடத்திட்டத்தில் உலக அளவில் பொது அறிவுடன், நமது நாடு மாநிலம் பகுதி விவரங்களையும், அறிவையும் உள்ளடக்கி இருக்க வேண்டும். (4.6.7.)

**12.20.** ஆசிரியர்களும் நிர்வாகத்தினரும் பாடத்திட்டம் கலைத்திட்டம் பற்றிச் சிந்தித்து முழுமையாகப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.(4.7.1.)

**12.21.** உள்ளூர் மக்களுடன் ஒரு சுமூகமான உறவை மேம்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி உறுப்பினர்கள் தலைவர் ஆகியோரைப் பள்ளிக்கு வரவழைத்துப் பள்ளியைப் பார்வையிடுவதுடன், மாணவர்களிடம் பேசவும் செய்தால், மாணவர்களுக்கும் உள்ளாட்சி பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும். இத்தகைய செயல்கள் மக்களாட்சியை வலுப்படுத்தும், மாணவர்களையும் நல்குடிமக்களாக உருவாக்கும். (4.7.2.)

**12.22.** கலைத்திட்டத்தில் தரமான அறிவு வளர்ச்சிக்குத் தேவையான உத்திகளில் முக்கியமான சில பின்வருமாறு: சமுதாய யதார்த்தையும் இயற்கைச் சூழலையும் முழுமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் பாடங்கள் உருவாக்கப்பட்டுக் கற்பிக்கப் படுதல்; பல வகையிலும் பெற்ற அறிவுக்கு, தான் வாழும் பகுதிக்கும் இன்றைய, காலக் கட்டத்திற்கும் பொருந்தும் வகையில் தொடர்பையும் பொருளையும் உருவாக்குமாறு கற்பித்தல்; பலவிதமான பாடங்களையும் தனித்தனியே கற்பித்தாலும் அவற்றுக்குள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளும் வகையில் பாடத்திட்டத்தை உருவாக்கிக் கற்பித்தல்., நடுவுநிலைமையுடன் எதையும் ஆராயும் மனப்பாங்கை வளர்த்தல்; ஐயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வகையிலும் தெளிவு பெறுவதற்காகக் கேள்விகள் கேட்பதை ஊக்குவிக்கும் வகையிலும் வகுப்பறைச் செயற்பாடுகள் இருக்க வேண்டும்; வகுப்பறைச் செயற்பாடுகளில் பாரபட்சம் இருக்கலாகாது; ஒவ்வொரு மரணவரும், ஆசிரியர் தனக்கு மட்டுமே கற்பிப்பது போன்ற உணர்வு பெறுமாறு கற்பிக்க வேண்டும்; கற்பனை ஆற்றலையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் வகையில் கல்வி முறை உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.(4.8.4)

**பாடத்திட்டமும், பள்ளி நிலைகளும்**

**12.23.** பாடத்திட்டத்தில், மொழிகள், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகியவைகளே முக்கிய பாடங்கள் என்றாலும், இன்றையச் சூழலில் கலைகள், உடற்பயிற்சி, சுகாதாரம், சுற்றுச்சூழல், ஒழுக்கக் கல்வி, அமைதிக்கல்வி, வாழ்க்கைத் தொழில் கல்வி இவை

போன்ற பலவும் பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டும். எட்டு ஆண்டுகள் கல்வி கற்ற இளைஞர்கள் சொந்தக் காலில் நிற்கும் மனப்பான்மையுடன் உலக நடப்பை அறிந்தவர்களாக அமைதியை விரும்புவர்களாக, ஒழுக்கம் உடையவர்களாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பற்றிக் கவலை கொள்பவர்களாக, பொதுவாக நல்ல குடிமக்களாக உருவாகும் வகையில் பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். (5.1.3)

**12.24**. *சமச்சீர்க் கல்வி முறை வந்த பின்னர் ஒரே திட்டம்தான்* இருக்கும் என்பதால், இன்று உள்ள நான்கு தனித்தனி குழுமங்கள் தேவை இல்லை. அவற்றுக்குப் பதிலாக ஒரு தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்வி வாரியம் அமைக்க வேண்டும். (5.2.1.) தமிழ்நாடு மாநில பள்ளிக் (சமச்சீர்) கல்வி வாரியம் ஒரு தலைவர், செயலர், உறுப்பினர்களுடன் செயல்பட வேண்டும். அதன் கடமைகளும் பொறுப்புகளும் பள்ளிக்கல்வியைப் பொறுத்தவரை ஒரு பல்கலைக்கழகக் கல்விக்குழுவுக்கு உள்ள கடமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் இணையாக இருக்க வேண்டும். (5.2.2.) இவ்வாரியத்தின் பணிகள் சிறப்பாக நடைபெற பின்வரும் குழுமங்கள் தேவை:1. தமிழ், 2. ஆங்கிலம்,3. ஓரியண்டல் மொழிகள், 4. மற்ற மொழிகள், 5.கணிதம், 6. அறிவியல், 7. சமூக அறிவியல், 8. கல்வி சார்ந்த மற்றவை – கலைகள், விளையாட்டு, உடற்பயிற்சி போன்றவை , 9. தனிக்கவனம் தேவைப்படுபவை ஆங்கிலோ இந்தியன், ஓரியண்டல் கல்வி, 10.தனித் தேவைகள், 11.மேலும் வாரியம் தேவை என்று கருதும் துறைகள் / இனங்கள் (5.2.3) தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்வி வாரியம் என்று ஒரு தன்னாட்சி பெற்ற வாரியமும் அதன் கீழ்த் தேவைப்படும் கல்விக் குழுமங்களும் அமைக்கப்பட்டு அவை உயிர்ப்புடன் செயற்பட அரசு நடவடிக்கை எடுத்தால்தான் சமச்சீர்க் கல்வி முறையை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும். (5.2.4.)

**12.25.** பள்ளியில் சேரும்போது கொச்சையாகப் பேசும் குழந்தைகளைப் படிப்படியாக தவறின்றித் தாய்மொழியில் பேசக் கற்றுத்தருவதும் ஐந்தாவது ஆண்டுப் படிப்பை முடிக்கும்போது, தாய்மொழியில் நல்ல முறையில் பேச, படிக்க எழுத கற்றுத் தருவதும் ஆசிரியரின் கடமை. (5.3.1)

**12.26.** ஆங்கிலம், எல்லோருக்கும் கற்பிப்பது, இரு மொழி வல்லுனர்கள் பலரை உருவாக்குவதும், அதன்வழி நமது நாட்டு மொழிகளை வளப்படுத்தலாம் என்பதுமே பொதுவாகக் கல்வியாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தாகும். (5.3.2.2.)

**12.27.** தாய்மொழி, தமிழ் மொழியாக இல்லாத குழந்தைகள், அவர்கள் சூழலுக்கு ஏற்றார் போல சிலர் தமிழையும், தாய்மொழியோடு இணையாகக் கற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும், ஒரு சிலர் ஓரளவுக்கு தாய்மொழி அறிவு பெற்ற பின்னரே, தமிழைக் கற்கக் கூடியவர்களாக இருக்கக்கூடும் என்பதால் அவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதை ஓரிரு ஆண்டுகள் தள்ளிப் போடலாம். எனினும், அவர்களும் வெகுவிரைவில் மற்றக் குழந்தைகளுடன் தமிழ் கற்கும் திறன் பெற்றுவிடுவார்கள் என்பதால், ஐந்தாவது வகுப்பிற்குள் அல்லது எட்டாவது வகுப்பிற்குள் மற்றக் குழந்தைகளுக்கு ஈடாகத் தமிழ் அறிவு பெறுமாறு கற்பிக்க முடியும்; கற்பிக்க வேண்டும். (5.3.2.3)

**12.28.** அனைத்துக் கல்வித்திட்டங்களையும் இணைத்துப் பின்வருமாறு அனைத்து மாணவர்க்கும் கற்பிக்கலாம் என்று இந்தக் குழு பரிந்துரைக்கிறது: 1.தமிழ் 2. ஆங்கிலம் 3. ஓர் ஓரியண்டல் மொழி/சிறப்புத் தமிழ்/சிறப்பு ஆங்கிலம் அல்லது தாய்மொழி தாய் மொழி தமிழோ, ஆங்கிலமோ இல்லாதவர் தமது தாய்மொழியைப் படிப்பது அவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. அவர்களில் சிலர் ஓரியண்டல் மொழியைக் கற்க விரும்பினால் தங்கள் தாய் மொழியை கூடுதலாகக் கற்க நேரிடும். இத்தகைய மாணவர்கள் மிகச் சிலரே இருக்கக் கூடும். (5.3.3.2.)

**12.29.** மொழிகளைக் கற்பிப்பதில் ஒரு நெகிழ்ச்சியைக் கடைபிடிக்கலாம் என இக்குழு பரிந்துரைக்கிறது. எனினும், 5வது வகுப்பு அல்லது 8வது வகுப்பு முடிக்கும்பொழுது, அனைத்து மாணவர்களும், தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிட்ட தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்து, இம்முடிவிற்கேற்பப் பாடத்திட்டங்களை வகுக்கலாம். (5.3.3.3)

**12.30.** கணிதம் கற்க ஆர்வத்தை உருவாக்க கணித விளையாட்டுகள், புதிர்கள், கதைகள் மூலமாக அன்றாட வாழ்வுக்கும் கணிதத்திற்கும் உள்ள தொடர்பையும் மற்றப்

பாடங்களுக்குள்ள தொடர்பையும் விளக்குவது மிகுந்த பயன் அளிக்கும். கணிதத்தில் ஆர்வம் உருவான பின்னர் கணித விதிகள் தத்துவங்கள் நிரூபணங்கள் ஆகியவற்றைக் கற்பிக்கலாம். (5.4.3)

**12.31**. பெரும்பாலான நாடுகளில் பள்ளி நிலையிலேயே கணினிக் கல்வி கற்பிக்கப்படுகிறது. நமது இளைஞர்களும் அன்றாட வாழ்க்கையிலும் மேற்படிப்பதற்கும் தேவையான கணிப்பொறித் திறமைகளை வளர்த்துக் கொள்ளுமாறு கணினிக் கல்வி கற்பிக்க வேண்டியது இன்றைய சூழலில் கட்டாயம். ஆகவே கணிப்பொறிப் பயன்பாடு பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டும். (5.5.)

**12.32**. அறிவியல் பாடத்திட்டத்தை மாணவரின் சூழலைப் பொறுத்து உருவாக்கி, புதியவற்றைப் படைக்கும் ஆற்றலை வளர்க்கும் வகையிலும் அவ்வறிவு சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துமாறும் கற்பிக்க வேண்டும்(5.6.1) பல பாடநூல்கள் இருக்குமானால், ஒவ்வொரு வகையான மாணவர்க்கும் ஏற்ற புத்தகங்கள் உருவாகும் என்பதாலும் பெரும்பாலான மாணவர்களுக்குப் பாடநூலே மிக முக்கியமான கல்வி பெறும் கருவியாக அமைந்திருப்பதால் பல பாடநூல்கள் உருவாக்க வேண்டும் என்று இக்குழு பரிந்துரைக்கிறது. (5.6.2)

**12.33**. சமூக அறிவியல் பாடத்தில் அடங்கும் வரலாறு, புவியியல், அரசியல் அறிவியல், பொருளாதாரம் ஆகியவற்றை மனித மாண்புகளுக்கு விரோதமான சக்திகளை எதிர்க்கும் மனவலிமையை அளிக்கும் வகையிலும் வாழ்க்கையில் நேர்மையைக் கடைபிடிக்குமாறும் கற்பிக்க வேண்டும். (5.7.2)

**12.34**. கலைகள் வழியாக மற்றப் பாடங்களைக் கற்கவும், கற்பிக்கவும் முடியும். மேலும், கலைகளில் பயிற்சியோ அல்லது கலைகளை அனுபவிக்கவோ கற்றவர்தான் முழு மனிதராகப் பரிணமிக்க முடியும். மற்றவர்கள் இயந்திரங்கள் போல வாழ்க்கையைக் கழிப்பார்கள். நமது பாரம்பரியக் கைத்தொழில்கள், உள்ளூரிலேயே கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தும் உள்ளூர்த் தொழில்நுட்பம், இவற்றின் மூலமும் மாணவரின் படைப்பாற்றலை வளர்க்க முடியும். நுண்கலைகளான ஓவியம், இசை, வாய்ப்பாட்டு, நடனம்,

கிராமிய நடனம் போன்றவைகளையும், மரவேலை, நெசவு வேலை, தையல் போன்ற கைத்தொழில்களையும் கற்பிக்க வேண்டும். இவை பிற்காலத்திலும் கண்டிப்பாக உதவும். ஆக எல்லாவிதமான கலைகளையும் கற்பிக்க வசதி வேண்டும்.(5.8.1) ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டத்தில் கலைகள் கற்பித்தலும் கலைகள் மூலம் கற்பித்தலும் ஒரு பகுதியாகச் சேர்க்க வேண்டும்.(5.8.2)

**12.35.** நமது பள்ளிகளில் படிக்க வருகின்றவர்களில் சில மாணவர்கள், குடும்பத்தில் சமச்சீர் உணவு கிடைக்காத குழந்தைகள் என்பதால் நமது மாநில அரசு அம்மாணவர்களுக்கு தேவை எனக் கருதி சத்துணவு திட்டத்தில் மதிய உணவு அளித்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நல்ல சத்தான உணவு ஏழை எளிய மாணவர்களுக்கும் கிடைக்கிறது. அவர்களது உடல் பேணப்படுகிறது. ஆகவே சத்துணவுத் திட்டம் தொடரப்பட வேண்டும். (5.9.1)

**12.36.** பாடத்திட்டத்தின் பகுதியாக ஒவ்வொரு மாணவரும் நாட்டு நலப்பணித்திட்டம் அல்லது தேசிய மாணவர் படை அல்லது சாரண இயக்கம் மற்றும் இதுபோன்ற இயக்கங்களில் ஏதாவது ஒன்றில் சேர்ந்து கட்டாயமாகப் பயிற்சி பெற வேண்டும்.(5.9.2) உள்ளூர் விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மேலும், உடற்பயிற்சிப் பாடத்திட்டத்தைப் பற்றிய ஒரு குறிப்பு இணைப்பு 5.3ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் உடற்பயிற்சியைப் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் அனைத்து மாணவர்க்கும் கட்டாயம் ஆக்க வேண்டும் என்பதும் உடற் பயிற்சி ஆசிரியர்கள் பள்ளிகளில் நியமிக்க வேண்டியது குறித்தும், விளையாட்டுப் போட்டிகள் குறித்தும் இவை போன்றவற்றையும் செயற்படுத்துவது இன்றைய காலத்தின் கட்டாயம். என்பது விளக்கப்படுகிறது. மேலும், சுகாதாரம் பற்றிய பாடங்கள் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கற்பிக்க வேண்டும். ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டத்தில் இவற்றைக் கற்பித்தலும் இடம் பெற வேண்டும். (5.9.2)

**12.37.** பலவிதத் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுமாறு பயனுள்ள உழைப்பைப் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக அமைக்க முடியும், அமைக்க வேண்டும். ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டத்தில் இம்முறையில் கற்பித்தல் ஒரு பகுதியாக அமைக்கப்பட

வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலமாக இத்தகைய பாடத்திட்டத்தின் பயன்களைப் பெற்றோருக்கு விளக்குவது பள்ளிகளின் கடமை. (5.10.3)

**12.38**. ஒழுக்கம், விழுமங்கள், அமைதிக் கல்வி இவை யாவும் கற்பிக்கப்பட வேண்டும். இவை தனிப்பாடமாகவோ முக்கியப் பாடங்களுக்கு ஊடேயோ கற்பிக்கலாம். எவ்விழுமங்களை எவ்வாறு கற்பிப்பது என்பதைப் பள்ளிகளுக்கு விட்டு விடலாம். (5.10.4)

**12.39**. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதை முழுமையாக உணர்ந்து நமது நீதிமன்றங்களும், அரசும், சுற்றுச் சூழல் கல்வியைப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்க அறிவுறுத்தியதால் தொடக்கக் கல்வி நிலையிலிருந்து இன்றையப் பாடத்திட்டத்தில் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுற்றுக் சூழல் கல்வி தொடர வேண்டும். (5.12)

**12.40.** ஒவ்வொரு வகையான மாணவர்க்கும் அவர்களுக்கு எளிதாகப் புரியக்கூடிய வகையில் பாடத்திட்டம் உருவாக்கினால் அதன் அளவும் தரமும் குறைவாகவே அமையும். கல்வி கற்பதன் குறிக்கோள்கள் எவை என்பனவற்றைத் தீர்மானித்து அக் குறிக்கோள்களை அடையத் தேவையான பாடத்திட்டத்தை உருவாக்குவதே ஏற்புடையது. ஆகவே முன்னரே கூறியபடி பொது அறிவைப் பெறவும், சமுதாயத்தில் நல்ல குடிமகனாக வாழவும், ஒரு வாழ்க்கைத்தொழில் அறிவைப் பெறவும் அல்லது ஒரு தொழில்நுட்பக்கல்வி கற்கத் தேவையான அறிவைப் பெறவும் வழி வகுக்கும் முறையில் பள்ளிக் கல்விப் பாடத்திட்டம் உருவாக்கப்படுவதே ஏற்புடையது. (5.13)

**12.41.** பள்ளிக் கல்வியின் ஐந்து நிலைகளில் ஒவ்வொரு நிலைக்கும் தேவையான வசதிகளும் பாடத்திட்டத்தைப் பொறுத்து மாறுபடுகின்றன. மாணவர்களின் வயதுக்கும் மனவளர்ச்சிக்கும் தக்கவாறு தேர்வு முறைகளிலும் பல மாறுபாடுகள் தேவை. பின்வரும் பகுதிகளில் ஒவ்வொரு நிலைக்கும் அவற்றுக்காக அமைக்கப்பட்ட உட்குழு அறிக்கைகளின் விவரங்கள் தரப்படுகின்றன. இவ்வறிக்கைகளைப் பகுதி 5.2ல் பரிந்துரைக்கப்படும் வாரியம் அமைத்து அதன் ஒப்புதலைப் பெற்றுச் செயற்படுத்துவது உசிதம். (5.14.3)

**12.42**. மழலையர் நிலையில் பார்த்ததைச் செய்யக்கூடிய வகையிலும் வண்ணப்படங்கள் தீட்டவும், விளையாடவும், பாட்டுகள் பாடவும், நாட்டியம் ஆடவும் கற்பிக்கலாம். மழலையர் பள்ளி முதலாண்டில் 10–15 மாணவர்க்கு ஓர் ஆசிரியரும், இரண்டாவது ஆண்டில் 20–25 மாணவர்க்கு ஓர் ஆசிரியரும் தேவை. மழலையர் பள்ளி ஆண்டுக்கு 220 நாள்கள் கல்வி கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் பள்ளிநேரம்: முதலாண்டு: 2 1/2 – 3 மணி , இரண்டாம் ஆண்டு 5 மணி. இந்நிலையில் தேர்வுகள், மதிப்பெண்கள், வரிசைப்படுத்தல் ஆகியவை கண்டிப்பாகக் கூடாது. கற்பிக்கும் மொழி குழந்தையின் வீட்டு மொழியாக இருப்பதே ஏற்புடையது அல்லது அது மாநில மொழியாக இருக்கலாம். (5.15.7)

**12.43.** இன்றையச் சூழலில் பெரும்பாலான குடும்பங்களில் மழலைப் பிள்ளைகளுக்கு வீட்டில் அறிவு பெறும் வசதிகள் இல்லை என்பதால், மழலையர் பள்ளிக் கல்விப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளாவிட்டால் குழந்தைகள், பயிற்சி பெறாத ஆசிரியர்கள் பணிபுரியும் மழலையர் பள்ளிகளில் தரமில்லாத கல்வி பெற்று எதிர்மறையான விளைவுகளுக்கு ஆளாகலாம் என்பதால், இக்கல்விக்கு முழுமையான பொறுப்பை அரசே ஏற்றுக்கொண்டால்தான் அனைவருக்கும் கல்வித்திட்டம் வெற்றி பெறும். (5.15.8.1) அரசு தரமான மழலையர்க் கல்வி வழங்குவதற்காக அனைத்து பள்ளிகளிலும் மூன்று வயது நிரம்பிய குழந்தைகள் அனைவருக்கும் மழலையர் பிரிவு தொடங்க வேண்டும். (5.15.8.2) மழலையர் பள்ளிகளின் செயற்பாடுகள் பாடத்திட்டம், உள் கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக் குறித்து விரிவான விதிகள் தயாரித்துச் செயல்படுத்த வேண்டும்.( 5.15.8.3)

**12.44.** தொடக்கநிலைக் கல்வியில் பாடத்திட்டத்திற்கும் பாடப் புத்தகத்திற்கும் முக்கியமான இடம் உண்டு என்றாலும், அதைவிட முக்கிய இடம் மாணவரின் ஈடுபாடும், ஆசிரியர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர் அறிவையும், மனநிலையையும் சொல்வதைப் புரிந்து கொள்ளும் திறமையையும் உணர்ந்து அவர்கள் கற்றலில் ஆர்வம் காட்டும் வகையில் கற்பிப்பதற்கும் மாணவரை அரவணைப்பதற்கும் உண்டு. நடுநிலை, உயர்நிலை, மேனிலை வகுப்புகளில் இந்த நிலைமாறி பாடத்திட்டம், பாடநூல்கள் சிறப்பான இடம் பெறும் என்றாலும், தொடக்கநிலையில் ஆசிரியரின் பங்கு மகத்தானது என்பதில் ஐயமில்லை.(5.16.4)

**12.45.** தொடக்கப் பள்ளியில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்படும் வகுப்பு நேரம் பின் வருமாறு அமையலாம்: வாரத்திற்கு மொத்தம் 35; மொழிகள் 12, கணிதம் 5, அறிவியல் 3, சமூக அறிவியல் 3, மற்றவை 12. மொழிகள் என்பதில் தமிழ், ஆங்கிலம், வீட்டுமொழி, ஓரியண்டல் மொழிகள் அடங்கும். மொழிகளைக் கற்பிப்பதில் ஒரு நெகிழ்ச்சியை அளிக்கலாம். பள்ளி விரும்பும் வகையில் மொழிகளைக் கற்பிக்கலாம். ஆனால் எட்டாம் வகுப்பில் ஒவ்வொரு மொழியிலும் எதிர்பார்க்கப்படும் அளவு தேர்ச்சி பெற வேண்டும். மற்றவை என்பதில் கலைகள், விளையாட்டுகள், உடற்பயிற்சி, கணினிப் பயிற்சி, வாழ்க்கைக் கல்வி போன்றவை அடங்கும். பள்ளி நாள்கள்: 220 ஒவ்வொரு நாளும் பள்ளி நேரம்: 5 மணி (5.16.6)

**12.46.** உயர் தொடக்கப் பள்ளி நிலையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்படும் வகுப்பு நேரம் பின் வருமாறு அமையலாம்: மொத்தம் 40 : மொழிகள் 15, கணிதம் 5, அறிவியல் 5, சமூக அறிவியல் 5, மற்றவை 10. மொழிகள் என்பதில் தமிழ், ஆங்கிலம், வீட்டு மொழி, ஓரியண்டல் மொழிகள் அடங்கும். இவற்றைக் கற்பிப்பதில் பள்ளிகளுக்கு ஒரு நெகிழ்ச்சியை அளிக்கலாம். ஆனால் எட்டாம் வகுப்பில் ஒவ்வொரு மொழியிலும் எதிர்பார்க்கப்படும் அளவு தேர்ச்சி பெற வேண்டும். மற்றவை என்பதில் கலைகள், விளையாட்டுக்கள், உடற்பயிற்சி, கணினிப் பயிற்சி, வாழ்க்கைக் கல்வி, ஒழுக்கக் கல்வி, அமைதிக் கல்வி போன்றவை அடங்கும். பள்ளி வகுப்பு நேரம் ஆண்டுக்கு 1100 மணி. அது ஒவ்வொரு நாளும் வகுப்பு நேரம் 5 மணி 30 நிமிடம், பள்ளி நாள்கள் 200 என்றோ, ஒவ்வொரு நாளும் 5 மணி, பள்ளி நாள்கள் 220 என்றோ அமையலாம். (5.16.8)

**12.47.** இடைநிலைப் பள்ளி நிலையில் பல்வேறு வகைப் பாடங்களைப் பற்றிய விழிப்புணர்வு வரும் வகையில் பாடத்திட்டமும் கலைத்திட்டமும் அமைக்கப்பட வேண்டும். மாணவர் பலவித காரணங்களுக்காக எட்டாவது ஆண்டு முடிவில் அல்லது பத்தாவது ஆண்டு முடிவில் படிப்பைத் தொடராது விட்டுச் செல்கின்றனர். அதைத் தடுத்து மேலும் கற்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும் வகையில் பரிசோதனைக் கூட வசதிகள், நூலகம் போன்றவற்றைப் பள்ளியில் அமைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.(5.17.1.) " 9வது வகுப்பிலேயே சில விருப்பப் பாடங்களை அறிமுகப்படுத்தலாம்; முக்கியப் பாடங்களுக்குப் பதிலாக வேறு பாடங்கள், தொழிற்கல்விப் பாடங்கள் கூட விருப்பப்பாடங்களாக

வைக்கப்படலாம்" என்று தேசிய கலைத் திட்ட வடிவமைப்பு (2005) கருத்துத் தெரிவிக்கிறது. இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு பாடத்திட்டத்திற்கு வெளியே அல்லது உள்ளே தொழிற் கல்விப் பாடங்கள் விருப்பப்பாடங்களாக ஒரு சில பள்ளிகளில் நடத்தலாம். (5.17.3) இடைநிலைப் பள்ளியில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்படும் நேரம் பின்வருமாறு அமையலாம்: மொத்தம் 40, மொழிகள் 15, கணிதம் 6, அறிவியல் 6, சமூக அறிவியல் 6 மற்றவை. மொழிகள் என்பதில் தமிழ், ஆங்கிலம், வீட்டுமொழி, ஒரியண்டல் மொழிகள் அடங்கும். மற்றவை என்பதில் கலைகள், விளையாட்டுகள், உடற் பயிற்சி, கணினிப் பயிற்சி, வாழ்க்கைக்கல்வி, ஒழுக்கக்கல்வி, அமைதிக்கல்வி போன்றவை அடங்கும்.(5.17.5) பள்ளி நாள்கள் 200 ஒவ்வொரு நாளும் பள்ளி நேரம் 5 மணி 30 நிமிடம்.

**12.48**. சர்வதேச நடைமுறைப்படியும், தேசிய அளவில் அமைக்கப்பட்ட கல்விக் குழுக்களின் பரிந்துரைப்படியும் பள்ளிக்கல்வி முழுமையும் தமிழ் வழியாக அளிக்கப்பட வேண்டும். சிறுபான்மையோர்க்கு, அவர்கள் விரும்பினால், இப்போது நடைமுறையில் உள்ள அவர்தம் மொழி பயிற்று மொழியாகத் தொடர வாய்ப்பு அளிக்கலாம். தாய் மொழி வழிக் கற்பதுதான் சாலச்சிறந்தது என்பதைப் பொதுமக்களும், பெற்றோரும் உணரச் செய்து, தாய்மொழி / தமிழ் மொழிவழிக் கற்பதை ஊக்குவித்து, இராமமூர்த்திக்குழுப் பரிந்துரையை படிப்படியாகச் செயல்படுத்த அரசு முயலவேண்டும். ( 5.18.7)

**12.49**. மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவு கற்றபின்னர் தங்களது தேர்ச்சி எவ்வாறு உள்ளது என்பதை அறியவும், ஆசிரியர் எந்த அளவு தமது மாணவர் கல்வி அறிவைப் பெற்று இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளவும், கற்றல், கற்பித்தல் தொடர்பான பல செய்திகளை அறியவும், பள்ளி நிர்வாகத்தினர் கல்வித்துறை சம்பந்தமான பல விவரங்களும் விளக்கங்களும் பெறவும், பொதுமக்கள், மாணவரின் பெற்றோர், பள்ளியின் செயற்பாடு குறித்தும் தங்கள் குழந்தைகளின் கல்வியில் கண்ட முன்னேற்றம் குறித்தும் அறிந்து கொள்ளவும், அரசு கல்விக்காகச் செலவிடும் தொகை என்ன பலன் அளித்துள்ளது என்பதை அறியவும் கல்வித்துறையில் என்ன மாற்றங்கள் செய்ய வேண்டும்? நிதி உதவியில் மாற்றங்கள் தேவையா? என்பனவற்றை மதிப்பிடவும், தேர்வுகள் பயன்படும் என்பதால் அவை இன்றியமையாதவை என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. (5.19.1)

**12.50.** பள்ளி இறுதித் தேர்வில் உள்ள பாடங்கள் மட்டுமல்லாது எல்லாப் பாடங்களிலும் தேர்வுகள் நடத்தி அவற்றில் மாணவர் பெற்ற மதிப்பெண்களை உரிய நேரத்தில் மாணவர்க்கும், அவர்தம் பெற்றோருக்கும் தெரியப்படுத்த வேண்டும். இவற்றை மாணவனின் குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும். இதன் மூலம் மாணவர் அந்தப் பள்ளியில் கல்வி கற்ற ஆண்டுகளில் அவர் பெற்ற கல்வி வளர்ச்சியை அறியலாம். இதே குறிப்பேட்டில் மேலும் மாணவர் குறித்து ஏதேனும் பொதுவான கருத்துக்கள் செய்திகள் அதாவது மாணவரின் சிறப்புத் தகுதிகள், போட்டிகளில் கலந்துகொண்டது, பொதுவாக அவர் வருகை, நடத்தை இவை போன்றவை தெரியப்படுத்த வேண்டும் எனில் அவற்றையும் குறிப்பிடலாம்.(5.19.2)

**பள்ளி, வகுப்பறைச் சூழல்**

**12.51.** வகுப்பறையில் மட்டுமல்லாது, பள்ளி வளாகத்திலும், கல்விச் சுற்றுலா போன்ற வெளியுலகிலும் மாணவர் அறிவைப் பெறுகின்றனர். அதாவது வகுப்பறை, பள்ளி வளாகம், வெளியுலகு ஆகியவற்றில் எல்லாம் கற்றல் நிகழ்கிறது. (6.1.1)

**12.52.** எல்லாக் குழந்தைகளும் இயற்கையாகவே அறிவு பெற ஆவல் உள்ளவர்கள்தான். ஆனால் கற்றுக்கொள்ளும் முறைகளில் வேறுபாடுகள் உண்டு. (6.1.2)

**12.53.** பள்ளிக்கூடம் குழந்தைகளை அடைத்து வைக்கும் இடமாக இருக்கக் கூடாது. அது புதியவற்றை, மகிழ்ச்சியாக அறியும் ஓர் இனிமையான பயணமாக அமையவேண்டும். குழந்தைகள் காலையில் எழுந்த பின்னர் எப்போது பள்ளிக்கூடம் செல்லலாம் என்று ஆர்வமுடன் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவும், விடுமுறை காலத்தில் எப்போது விடுமுறை முடிந்து பள்ளி செல்லலாம் என்று ஆவலுடன் காத்திருக்கவும் வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் எவ்வாறு கற்க விரும்புகிறதோ அவ்வாறு அது கற்பதற்குத் தகுந்த சூழல் பள்ளியில் இருந்தால் இத்தகைய நிலை உருவாகும். அத்தகைய சூழலில் அங்கு, தனிப் பயிற்சி (tuition) தேவைப்படாது. (6.1.3)

**12.54.** நல்ல பள்ளிக்கூடம், தனது பள்ளியில் கல்வி கற்கும் எல்லா மாணவரும் சிறந்தவர்களாக விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கும். நல்ல பள்ளி மாணவரிடம் பரிவு

காட்டும். அவர்கள் மதியம் உணவு உண்ணுவதில் கவனம் செலுத்தும். அதாவது மாணவரின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். நன்கு கல்வி கற்பிக்கத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகள் இருக்கும். சுகாதார வசதிகளும் இருக்கும். இவையாவும் சீராகப் பராமரிக்கப்படும். (6.1.4.)

**12.55.** சுற்றுலா என்பது பள்ளிக் கல்வியில் இருந்து தப்பிச் செல்லுவதற்காக அல்ல. பள்ளிக் கல்வியின் விரிவாக்கமாக அது அமைய வேண்டும். (6.1.5.)

**12.56.** மாணவர் ஒவ்வொருவரும் ஒரு நிலையில் எதிர்பார்க்கப்படும் அறிவைப் பெற்ற பின்னரே அடுத்த நிலை அறிவு பெற வழி வகுக்கப்படும். (6.1.6.)

**12.57.** பள்ளியின் சட்ட திட்டங்கள் மாணவர், அவர் தம் பெற்றோர், ஆசிரியர் யாவருக்கும் நன்றாகத் தெரியும். அவை பாரபட்சமின்றிச் செயல்படுத்தப்படும் என்பதும் யாவருக்கும் தெரியும். ஆகவே அவற்றை அவர்கள் யாரும் மீறமாட்டார்கள். (6.1.7.)

**12.58.** மாணவர் எவரும் தான் கூட்டத்தில் ஒருவன் என்று எண்ணும் நிலை இல்லாது, ஆசிரியரும் பள்ளியும் தன்னைத் தனிப்பட்ட முறையியல் கவனித்துக் கொள்ளுவதாக நினைக்கும் வகையில் பள்ளிகளும் ஆசிரியர்களும் செயல்பட வேண்டும். (6.1.8.)

**12.59.** திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், தானே மேன்மேலும் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்ளும் வகையிலும் பள்ளி செயல்படுவதுடன் நற்குணங்களை வெறும் சொற்களால் சொல்லாது, வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் வகையில் கற்பிக்க வேண்டும்(6.1.9)

**12.60.** பெற்றோர், மாணவர், ஆசிரியர் மற்றப் பணியாளர்கள் நிர்வாகத்தினர் யாவருக்கும் தம் பணிகள், தம் உரிமைகள் பொறுப்புகள் தெரியும் என்பதால் அவரவர் தத்தம் பணிகளைச் சிறப்பாகச் செய்வார்கள். ஒருவரை ஒருவர் மதித்து நடப்பார்கள். மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வெளியுலக அங்கீகாரம் பெறும் ஒவ்வொருவரும் பாராட்டப்படுவர். அங்கு கல்வி கற்ற மாணவர் யாவரையும் வெளியுலகம் கை நீட்டி வரவேற்கும். சிறப்புக்

கல்வி தேவைப்படும் மாணவர், மனவளர்ச்சி குன்றிய மாணவர் ஆகியோருக்குத் தனிக்கவனம் செலுத்தப்படும். மொத்தத்தில் எல்லா மாணவரையும் அவரவர்க்குத் தேவையான தரமான கல்வியை முழுமையாக அளிக்கும், கற்பதற்கும், மேன்மேலும் கற்கவேண்டும் என்ற ஆவலை வளர்க்கும், கற்றதைப் பின்பற்றும் வகையில் கற்பிக்கும் பள்ளிச் சூழலே நல்ல பள்ளிச் சூழல் எனலாம். **(6.1.12.)**

**12.61.** தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு **(2005)** வகுப்பில் மாணவர் எண்ணிக்கையைக் குறித்துப் பின்வருமாறு சொல்கிறது. " உலக அளவிலும் தேச அளவிலும் பெற்ற அனுபவங்களில் இருந்து ஆசிரியர் மாணவர் விகிதம் **1 : 30**க்கு மேல் இருப்பது விரும்பத்தக்கது அல்ல என்று தெரிகிறது. கோத்தாரி குழு அறிக்கையில் **(1966)** அதிக மாணவர்கள் அடங்கிய வகுப்புகள் கற்பிக்கும் தரத்திற்கு மிக அதிகமாக தீங்கு விளைவிக்கும்; அத்தகைய வகுப்புகளில் சிறப்பான கற்பித்தலும் பயனற்றுப் போகும் என்று கூறியுள்ளது". இக்குழுவும் அக்கருத்தை வலியுறுத்துகிறது. வகுப்பறை தேவையான வெளிச்சத்துடனும், காற்றோட்டத்துடனும் மான்ய நெறிமைகளில் குறிப்பிட்டப்படி அமைக்கப்பட வேண்டும். இனி வருங்காலங்களில் புதியதாகத் தொடங்க உள்ள பள்ளிகளின் அனைத்து வகுப்பறைகளும் ஏற்கனவே உள்ள பள்ளிகளில் புதியதாகக் கட்டப்பட உள்ள வகுப்பறைகளும் ஒவ்வொரு மாணவனுக்கும் குறைந்தபட்சம் ஒரு சதுர மீட்டர் இடவசதியும், **3.7** மீட்டர் உயரத்துடனும் அமைக்கப்பட வேண்டும். வகுப்பறைச் சுவர்களில் மாணவர் வரைந்த சித்திரங்கள், கைவினைப் பொருட்கள் மாணவர்க்குப் பயன்படும் வரைபடங்கள் பெரியோர் படங்கள் பொருத்தினால் மாணவர் தாங்கள் பாராட்டப்படுகிறோம் என்று பெருமைப்படுவர்; அவர்களுக்கு வழிகாட்டிகள் பற்றிய சிந்தனையும் பெருகும்; தங்கள் பாடங்களை நினைவு கொள்ளவும் ஏதுவாகும். **(6.2.2.), (6.2.3.)**

**12.62.** பள்ளி வளாகம், அங்கு அமைந்த கட்டிடங்கள், மைதானம், மரங்கள் செடிகள், இவை யாவும் மாணவர்களைத் தங்கள் பள்ளிக் குறித்துப் பெருமைப்படும்படி அமைய வேண்டும். மேலும் பள்ளி வளாகத்தில் மாணவர் உடற்பயிற்சி செய்யவும் விளையாடவும் தேவையான இடவசதி வேண்டும். **(6.3)**

**12.63.** பள்ளியில் ஒழுக்கம் என்பது பள்ளியில் உள்ளவர்கள் தாங்களாகவே வகுத்துக் கொண்ட விதிகளின்படி நடப்பது ஆகும். அதாவது பள்ளி தன்னைத்தானே முறையாகச் செயல்படச் செய்கிறது. இதை மாணவர்க்கு உணர்த்தும் முகத்தான் அவர்களையே ஒழுக்க விதிகளை வகுக்கச் சொல்லலாம். அவர்களாகவே அவ்விதிகளைச் செயல்படுத்தச் சொல்லலாம். (6.4.8)

**12.64.** பெற்றோர் தம் குழந்தைகள் என்ன கற்கிறார்கள்? கற்க வேண்டியவற்றைக் கற்கிறார்களா? கல்வியில் முன்னேற்றம் அடைந்துள்ளார்களா? குழந்தைகள் தமது கல்வியில் மேலும் முன்னேற்றம் அடைவதற்கு என்ன உதவிகள் பெற்றோர் செய்ய வேண்டும் என்பதையும் ஆசிரியருடன் கலந்து பேசித் தமது குழந்தைகளின் கல்வி முன்னேற பெற்றோர்கள் தவறாமல் கவனம் செலுத்த வேண்டும். (6.5.1)

**12.65.** பள்ளியின் செயற்பாட்டில் சமுதாயத்தின் பங்கு கீழ்க்காணுமாறு அமையலாம்: நாட்டுப்புறக் கதைகள் வழியாக அந்தப் பகுதி வரலாறைத் தெரிவிக்கலாம்; பாரம்பரிய அறிவைப் பற்றிய தகவல்களை அளிக்கலாம்; பாடத்திட்டத்தில் அந்தப் பகுதிசார்ந்த எடுத்துக்காட்டுகள், தகவல்கள், அனுபவங்களை எடுத்துச் சொல்லலாம்; மாணவர் சிந்திப்பதற்குத் தேவையான சில செய்திகளைச் சொல்லலாம்; உள்ளூர் ஆட்சி, மற்ற நடப்புகளைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கலாம்; மருத்துவர்கள், மாணவர்களின் உடல் நலம் பேண முகாம்கள் நடத்தலாம். குழந்தைகளின் பிரச்சனைகளுக்குத் தகுந்த அறிவுரைகள் கூறலாம்; தொழிற் கல்வி கற்பிப்பதில் உதவலாம்; கிராமத்தில் கற்றல் சூழலை உருவாக்கி, கிராமமே பள்ளியாகச் செயல்பட உதவலாம். (6.5.6)

**12.66.** சமுதாயம் பள்ளியின் செயற்பாடுகளில் நெருங்கிய தொடர்பு கொண்டால் தம் குழந்தைகளை வேறு பகுதியில் அமைந்த பள்ளிக்கு அனுப்பாது தம் பகுதிப் பள்ளிக்கே அனுப்புவார்கள். அதன்வழி பள்ளியும் வளரும், சமுதாயமும் பயன் பெறும். கிராமக் கல்விக்குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம், முன்னாள் மாணவர் சங்கம் போன்ற அமைப்புகளின் வழியாக, பெற்றோர், சமுதாயம் ஆகியோரைப் பள்ளியின் வளர்ச்சி, செயற்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபடச் செய்வது, பள்ளியின் முன்னேற்றத்திற்கும் கிராமத்தின் எதிர்காலம் சிறக்கவும் பெரிதும் உதவும் என்பதால் பெற்றோரையும்

சமுதாயத்தையும் கல்விப் பணியில் பங்கேற்கச் செய்வது பள்ளியின் கடமை. அனைத்துப் பள்ளிகளின் தரமும் ஒரே சீராக அமைந்திருப்பதால் எந்த மாணவரும் தனது வட்டாரத்தில் உள்ள பள்ளி தவிர வேறு பள்ளியில் சேர வேண்டும் என்ற தேவை பொதுவாக இருக்காது. திறன்களில் மாறுபாடு உடைய குழந்தைகளை (differently abled children), அத்தகைய குழந்தைகளுக்கு கற்பிக்கப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில் சேர்க்க வேண்டி இருக்கலாம். அத்தகைய வசதி எல்லா பள்ளிகளிலும் செய்வது அரிது என்பதால் அத்தகைய குழந்தைகள் தாம் வசிக்கும் வட்டாரத்திற்கு வெளியே சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில் சேர்க்கப்படலாம். மற்றப்படி எல்லா மாணவர்களும் தம்தம் வட்டாரத்தில் உள்ள பள்ளிகளிலேயே சேர்ந்து படிப்பார்கள். (6.5.7.), (6.5.7.2.)

**12.67.** சமச்சீர்க் கல்வி முறை வெற்றி பெற பாடநூல்களின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும். அதற்கு, பாடநூல்கள் மூலப் பகுதியுடன் ஒரு சில வினா விடையும் பயிற்சி வினாக்களும் மட்டுமே அடங்கியதாக இருப்பது நலம். பாடநூல்களை எழுத ஆசிரியர்களை நியமிக்காமல் தரமான கையெழுத்துப் பிரதிகளை வரவேற்று அவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து வெளியிட வேண்டும்; அல்லது ஆசிரியரே வெளியிட ஊக்குவிக்க வேண்டும். பாடநூல் நிறுவனம் அல்லது பள்ளிக்கல்வி வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட, ஒன்றுக்கு மேற்பட்ட பாடநூல்கள் ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் இருப்பதும், எந்த நூலைப் பயன்படுத்துவது என்பதைப் பள்ளிகளே தீர்மானிக்கவும் ஊக்குவிக்க வேண்டும்; அல்லது மாவட்ட அளவில் தீர்மானிப்பதும் பொருத்தமாக அமையும். பத்தாம் வகுப்பைப் பொறுத்த வரை பொதுத் தேர்வுக்கு மொழிப்பாடங்களுக்கு ஒரே ஒரு மூலப்பகுதி மட்டும் அடங்கிய பாடநூலை, பாடநூல் நிறுவனம் வெளியிட வேண்டும். மற்றப் பாடங்களுக்குப் பாடநூல் நிறுவனம் அல்லது பள்ளிக்கல்வி வாரியம் ஒப்புதல் அளித்த பாடநூல்கள் பயன்படுத்த வேண்டும். மேலும், பாடநூல்கள் தவிர விரிவாக எழுதப்பட்ட வழிகாட்டி நூல்களும் மாணவர்க்குத் துணை நூல்கள், பயிற்சிப் புத்தகங்கள், தேசப் படப் புத்தகங்கள், முக்கியக் குறிப்புகள் அடங்கிய நூல்கள், சிறப்புச் சொல் அகராதிகள் என்று பலவிதமான துணை நூல்களையும் பாடநூல் நிறுவனம் வெளியிடலாம். அல்லது ஏற்கனவே வெளியிடப்பட்ட இத்தகைய நூல்களை உயர்நிலைப்பள்ளிக் கல்வி வாரியம் பரிந்துரைக்கலாம். (6.6.9.)

**12.68.** பள்ளிகளில் நூலகம் உருவாக்கி, அந்த நூலகம் அல்லது கிராம நூலகம் அல்லது தாய்ப் பள்ளி (பகுதி 11.4ல்) நூலகத்தில் அமர்ந்து படிக்க வாய்ப்பு அளிக்கலாம். அதற்கு என்று வாரத்துக்கு ஒரு மணி அல்லது காலப்பகுதி நேரம் (hour or period) ஒதுக்கிச் செயல்படுத்த வேண்டும். தாய்ப் பள்ளிக்குச் செல்வது இயலாது எனில் தாய்ப் பள்ளியில் இருந்து நூல்கள் கொண்டு வந்து தன் பள்ளியிலேயே படிக்கச் செய்யலாம். பள்ளி நூலகமும் சில பொதுநூலகங்களும் (Local Library) இணைந்து செயல்படுகின்றன. இது முறைப்படுத்தப்பட்டு எல்லாப் பொது நூலகங்களும் அவை அமைந்துள்ள பகுதி பள்ளிகள் எல்லாவற்றுடன் இணைந்து முறையாகச் செயல்பட வழி வகுக்க வேண்டும். சிறு பள்ளிகளில் நூலகத்திற்கு என்று தனியாக ஒருவரை நியமிக்க முடியாது என்பதால் பள்ளி ஆசிரியர் ஒருவருக்கே நூலகத்தைப் பராமரிக்கும் பணியைக் குறித்துக் கற்பித்து அவரிடம் அப்பணி ஒப்படைக்கப்படவேண்டும். பணிப்பளுவை நிர்ணயிக்கும் போது இந்தப் பணியும் கணக்கில் கொள்ள வேண்டும். மேனிலை, உயர்நிலைப் பள்ளிகளிலும் 500 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கும் நடுநிலைப்பள்ளிகளிலும் ஒரு நூலகர் அமர்த்தப்பட வேண்டும். மேலும் மாணவர்களை அவர்கள் அந்த வாரம் படித்த நூல் பற்றி எழுதச் சொன்னால் படித்தது மனதில் படிவதுடன் சிந்திக்கும், எழுதும் திறன்களும் மேம்படும். மொழிப்பாட வகுப்பில் தாங்கள் நூலகத்தில் படித்ததைப் பற்றி மற்ற மாணவர்க்குச் சொல்லவும் வாய்ப்பு அளிப்பது, அவர்கள் சிந்தித்துப் பேசவும் பயிற்சி அளிக்கும்.(6.7.1)

**12.69.** மாணவர்கள் பாடப்புத்தகங்களுடன் பிற புத்தகங்களையும் சேர்த்துப் படிக்கும் பழக்கத்தைப் பள்ளிப் பருவத்திலேயே ஏற்படுத்த வேண்டும். இதற்குப் பள்ளிக் கல்வித் துறையும், பொது நூலகத் துறையும் இணைந்து செயல்பட வேண்டும். ஏற்கனவே அரசாணை (2டி) எண். 38இ நாள் 11.6.2002ன்படி நூலகங்களை பள்ளிகளுடன் இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தாலும், அதன் முழுப்பயன் மாணவர்களுக்குக் கிடைக்க, ஒவ்வொரு பொது நூலகமும் அதன் அருகில் உள்ள ஒரு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளியைக் கண்டிப்பாகத் தத்து எடுக்கச் செய்ய வேண்டும். வாய்ப்பு உள்ள இடங்களில் நூலகங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளைத் தத்து எடுக்க ஊக்குவிக்க வேண்டும்.(6.7.2)

**12.70.** அரசாணை 2டி எண். 18 தேதி 25.2.2003ன் படி தொடக்கப்பள்ளி, உயர்தொடக்கப் பள்ளிகளுக்கு நடமாடும் அறிவியல் ஊர்திகள் மூலம் நூலகச் சேவை நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து விரிவுபடுத்திச் செயல்படுத்த வேண்டும். **(6.7.2)**

**12.71.** இன்றைக்கு வகுப்பு அறையில் சில மாணவர் பாடம் படிப்பதையே ஒரு சுமையாகக் கருதும் நிலை மாற வேண்டும் என்றால் பாடநூலும் அன்றாட வாழ்க்கையில் வரும் அனுபவங்களையும் இணைத்துக் கற்பிக்கும் நிலை உருவாக வேண்டும். அதற்கு இன்றைய தொழில்நுட்ப முன்னேற்றம் பெரிதும் பயன்படும். மாணவர்களும் ஆசிரியரும் இணைந்தே தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி ஒளி நாடாப்படங்கள், குறுந்தகடுகள் உருவாக்கி அதன்படி அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்; வளர்த்துக் கொள்ள வேண்டும். (6.8.3)

**12.72** ஆய்வகங்கள் இல்லாத பள்ளிகளில் அவை தனியாகக் கட்டப்பட வேண்டும் என்று காத்திருக்காமல், வகுப்பறைகளைத் தற்காலிக ஆய்வகங்களாக மாற்ற எளிய முறைகளில் திட்டமிட வேண்டும். விலையுயர்ந்த கருவிகள் தான் தேவை என்பதில்லை. தேவையான கருவிகளை எளிய முறைகளில் செய்து கொள்ள வேண்டும். சிறு பள்ளிகளில், மாணவர்களை அருகில் உள்ள மேனிலைப் பள்ளிக்கு வாரத்திற்கு ஒரு முறையோ, மாதத்திற்கு ஒரு முறையோ அழைத்துச் சென்று ஆய்வகங்களில் சோதனைச் செய்து காண்பிக்கலாம். அல்லது மேனிலைப் பள்ளிகளில் நடமாடும் ஆய்வகம் அமைத்து அதை மாதம் ஒரு முறையாவது அப்பள்ளி அமைந்த பகுதியில் உள்ள ஒவ்வொரு தொடக்க, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிக்கும் சோதனைகள் செய்து காண்பிப்பதற்காக எடுத்துச் செல்லலாம். மாணவர்களுக்கு கலைகளிலும், கைவினைத் தொழில்களிலும் பயிற்சி அளிக்கத் தேவையான கருவிகளும் பள்ளிகளில் இருந்தால்தான் கலை, கைவினைத் தொழில் வகுப்புகளைப் பயனுள்ள வகையில் நடத்த முடியும். சோதனைச் சாலைகளில் பயிற்சிக்கு சொல்லியபதைப் போலவே இதற்கும் பள்ளி அமைந்த பகுதியில் உள்ள மேனிலைப் பள்ளியின்/உயர்நிலைப் பள்ளியின் வசதிகளைப் பயன்படுத்த வழி வகை செய்ய வேண்டியது அவசியம்.(6.9)

**12.73.** மாவட்டம் முழுவதும் அல்லது மாநிலம் முழுவதும் ஒரே நாளில் விடுமுறை அளிக்க வேண்டியதில்லை. பொதுவாக கல்வி ஆண்டு ஜுன் மாதத்தில் தொடங்க வேண்டும், ஏப்ரல் மாதத்தில் முடிய வேண்டும் என்று விதியை ஏற்படுத்திக் கொண்டு பள்ளி நாள்கள் எவை என்பதை ஊராட்சி ஒன்றிய அளவில் அதாவது உதவித் தொடக்க கல்வி அலுவலரின் எல்லை அளவில் தீர்மானிக்கலாம். **(6.10.1)**

**12.74.** பள்ளியில் கற்கும் மாணவரின் வசதிக்கு ஏற்ப, பள்ளி தொடங்கும் நேரமும், செயற்படும் நேரமும் மாற்றப்படுவதில் தவறு ஏதும் இல்லை. இத்தகைய நெகிழ்ச்சி பள்ளிகள் சிறப்பாகச் செயல்பட பயன்படும். ஒவ்வொரு நாளும் வகுப்புகள் தொடங்கும் முன் ஆசிரியர்களும் மாணவர்களும் வழிப்பாட்டுக் கூட்டத்தில் கூடுவது மிகுந்த நலம் பயக்கும். அதில் உணர்வு ஊட்டக்கூடிய கதை , இசை , கருத்துரைகள், அன்றைய முக்கிய செய்திகள் கேட்டலும், பல பயனுள்ள ஆர்வமூட்டக்கூடிய நிகழ்ச்சிகளும் நடைபெறும்.. இவை வீட்டுச் சூழலில் இருந்து வகுப்பறைச் சூழலுக்கு மனநிலையை மாற்ற பெரிதும் உதவும். ஆகவே ஒவ்வொரு பள்ளியிலும் இது போன்ற காலை வழிப்பாட்டுக் கூட்டம் கண்டிப்பாகக் கூட்டப்பட வேண்டும். (6.10.2)

**12.75.** இன்றைய பாடத்திட்டமும், கற்பிக்கும் முறையும் தேர்வு முறையும் பாடநூலில் உள்ள கேள்விகளுக்கு அதே நூலில் விடைகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் ஒரு பயிற்சியாக அமைந்திருக்கிறது. விடையை எவ்வளவு வேகமாக எழுத முடியும் என்பதைப் பொறுத்தே மதிப்பெண் பெறும் நிலை உள்ளது. இதிலிருந்து விடுபடவேண்டும். பாடத்திட்டம், கற்பிக்கும் முறை, தேர்வு முறை இவை யாவும் மாணவர் அறிவைப் பெறும் வகையிலும் அதைப் பரிசோதிக்கும் வகையிலும் அமைய வேண்டும். இதற்குப் பாடத்திட்டம் சுருக்கமாக வடிவமைக்கப்பட வேண்டும். பாடத்திட்டத்தின் அளவு, அதை வகுப்பு நேரத்திற்குள் கற்பிக்கக் கூடியதாகவும், மாணவர் வீட்டில் பாடத்திட்டத்தைச் சார்ந்த பணிகளுக்காகச் செயல்பட வேண்டிய நேரம் மூன்றாவது வகுப்பு படிக்கும்போது வாரத்திற்கு இரண்டு மணி நேரமாகவும், அது சிறிது சிறிதாக உயர்த்தப்பட்டு பத்தாவது வகுப்பு படிக்கும் போது பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். பாட விவரங்களைப் புரிந்து கொண்டதைப் பரிசோதிக்க ஒரு சில மாதிரி வினாக்கள் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றால் போதுமானது. கற்பிக்கும் முறையும், தேர்வு முறையும் கற்றதைப் பயன்படுத்தும்

பயிற்சிகளாக அமைய வேண்டும். இது மாணவருக்கு தான் கற்றதில் ஆழ்ந்த புலமையைத் தரும். இத்தகைய பாடத்திட்டத்தில் பாடச்சுமை குறைவாக இருக்கும். மாணவர் பெற்ற அறிவு ஆழமானதாக இருக்கும். ஆகவே மாணவர் தன்னம்பிக்கையுடன் செயல்படுவர். வருங்காலத்தில் தேவை இருப்பின் மாணவர் தாம் படித்தவற்றிற்குத் தொடர்பு உடைய அறிவைத் தாமே பெற்றுக் கொள்வர். (6.11.7)

**12.76.** இராமமூர்த்திக் குழு (1990) " நமது அரசு நடத்தும் பள்ளிகளின் தரம் உயர்த்தப்படுவதற்கு முக்கியத் தேவை: அவற்றின் பொறுப்புகள் விளக்கமாக அறுதியிடப்பட்டு அவை செயல்படுவதில் தன்னாட்சி அனுமதிக்கப்பட வேண்டும்" என்று பரிந்துரைத்துள்ளது. (குழு அறிக்கை 3.13.1) மேலும் அது "இத்தகைய மாற்றம் வந்தால் பொதுப்பள்ளி முறை உண்மையாகவே உருவாக வழி வகுக்கும்" என்று அறுதியிட்டுச் சொல்லுகிறது. (குழு அறிக்கை 3.13.2) (6.12.1.) கற்றல், கற்பித்தல் நிகழ்ச்சி சிறப்பதற்கு தன்னாட்சிச் சூழல் அவசியம். எவ்வளவு குறைவாக நிர்வாகக் கட்டுப்பாடு இருக்கலாமோ, அவ்வளவு குறைவாக இருப்பது உசிதம். பொதுவாக உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வுக்கு உரிய பாடநூல்கள் மட்டுமே தீர்மானிக்கப்பட்டு மற்ற நிலைகளில் பாட நூல்கள், எந்த முறையில் கற்பிப்பது போன்ற கல்வி சம்பந்தமான எல்லாவற்றையும் பள்ளி நிலையில் ஆசிரியர் குழுவாக அமைத்துத் தீர்மானிப்பது, செயற்படுத்துவது என்ற நிலையே சிறப்பானது. மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு இது போன்ற சுதந்திரம் அல்லது தன்னாட்சி செயற்பாடு இப்போது நடைமுறையில் உள்ளது. இதே போன்ற சுதந்திரம் மற்ற எல்லாப் பள்ளிகளுக்கும் அளிப்பது கல்வியில் சமச்சீர் நிலையை உருவாக்கவும், கல்வி மேம்பாட்டுக்கும் உதவும்.(6.12.3.)

**12.77.** சமச்சீர்க் கல்வி முறை சிறப்பாக உருவாகிச் செயல்பட கீழ்க்காண்பவைச் செயலுக்கு வர வேண்டும்: மாணவர்க்குத் தேவையான கல்வியை அவர்களுக்கு உகந்த முறையில் கற்பிப்பது, ஆசிரியரின் கடமை. மாணவர் சேர்க்கை, பள்ளி அளவில் பாடத்திட்டம், தேர்வுமுறை ஆகியவற்றை ஆசிரியர்களே பெற்றோருடன் கலந்து முடிவு செய்ய வேண்டும். அல்லது ஆசிரியர்கள் இவற்றில் பெரும்பங்கு வகிக்க வேண்டும். பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் எவரையும் பள்ளியில் இருந்து விலக்காது, அவர்தம் இயல்பான திறமைகள் முழு வளர்ச்சி பெற உதவ வேண்டும். பள்ளி இறுதித் தேர்வு நிலையில் மாநிலக் கல்வி

வாரியம், கலைத்திட்டம், பாடத்திட்டம் உருவாக்குவதில் பங்கேற்று அவற்றில் காணப்படும் குறைகளை நிவர்த்திக்கவும், நிறைகளைப் பெருக்கவும், பள்ளி இறுதித் தேர்வு செம்மையாக நடைபெறவும் உதவ வேண்டும். ஆசிரியர்களுக்கும் பள்ளிகளுக்கும் தேவையான செயல்பாட்டு சுதந்திரம் கிடைக்கச் செய்து, அதை அவர்கள் சீராகப் பயன்படுத்த உதவுவது கல்வித்துறையின் கடமை. (6.12.4)

**தேர்வுகளும், மதிப்பீடும்**

**12.78.** நர்சரி வகுப்புகளுக்கு எவ்விதமான எழுத்துத் தேர்வும் இருக்கக் கூடாது. மாணாக்கரது புலனறிவு, உடற்திறன், பழக்க வழக்கங்கள் ஆகியவை நிகழ்வு முறையில் (anecdotal history) பதிவு செய்யப்பட வேண்டும். பெற்றோர் சந்திப்பின் பொழுது தனித் தனியாக ஒவ்வொரு குழந்தையின் பெற்றோரிடமும், குழந்தையின் சிறப்புகளை எடுத்துக் கூறிட வேண்டும். பெற்றோர் கவனிக்க வேண்டியவற்றையும் எடுத்துக் கூறவேண்டும். குறைசொல் நிகழ்ச்சியாக இல்லாது குழந்தைகளை மேம்படுத்தும் விதமாக அமைவது சிறப்பு. (7.4)

**12.79.** தொடக்கக் கல்வியில் முதலில் வாய் மொழித் தேர்வாகவும், பின்னர் எழுத்து முறைத் தேர்வாகவும் நடத்தப் பெற வேண்டும். பாடநூலில் தொடங்கி பின்னர் பிற நூல்கள், தினத்தாள்கள் போன்றவற்றையும் படித்து விடையளிக்கும் திறனை மதிப்பிட வேண்டும். முறையான தேர்வுகளைத் தவிர கட்டுரை எழுதுதல், பேச்சுப் போட்டி போன்றவற்றையும் மதிப்பிட்டுப் பதிவு செய்திட வேண்டும். மாணாக்கர்களுக்கு மொழியில் ஒரு விருப்பம் ஏற்படும் வகையில் மதிப்பீட்டு முறைகள் அமைய வேண்டும். (7.5)

**12.80.** உயர் தொடக்கக் கல்வி நிலையில் வினாக்கள் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைதல் வேண்டும். மாற்று விடைகளுக்கு இடம் தரும் வினாக்கள், மாணாக்கரது சிந்தனையைக் கிளறும் தேர்வுகள் . ஒரு வினா–ஒரு விடை என்ற நிலைப்பாட்டினின்று விலக வேண்டும். எழுத்து முறைத் தேர்வுகளைத் தவிர, செயல் திட்டங்கள் (Project) தொகுப்புகள் (albums) போன்றவை அதிக இடம் பெற வேண்டும். குழு முறைக் கற்றல் முறையைப் பின்பற்ற உந்து சக்தியாக குழு முறைத் தேர்வுகள் செயல்பட வேண்டும். முறையாகப் பள்ளிக்கு வந்த மாணாக்கர் யாவரும் எல்லா வினாக்களுக்கும் சரியான விடை

தரும் வகையில் வினாத்தாள்கள் அமைய வேண்டும். தோல்வி அச்சம் சிறு வயதில் கூடாது. இடைவிலகல், தற்கொலை முயற்சி போன்றவற்றிற்குத் தேர்வுகள் காரணமாக அமையக் கூடாது. (7.6)

**12.81.** பொதுத் தேர்வில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தேர்வு என்ற முறையும், இரு தேர்வுகள் என்ற முறையும் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் மதிப்பெண்ணை ஒவ்வொரு பாடத்திலும் 100க்கு என்றே பதிவு செய்ய வேண்டும். அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்வு உண்டு. பகுதி 5.2ல் பரிந்துரைக்கப்பட்ட பள்ளிக் கல்வி வாரியம் அமைக்கப்பட்டபின் அது இவ்விரு முறைகளில் அனைத்து மாணவர்க்கும் ஏற்ற ஒரு முறையை முடிவு செய்யலாம். (7.8)

**ஆசிரியர் கல்வியும், பணியிடைப் பயிற்சியும்**

**12.82.** மூன்றாண்டு காலத்திற்குள், பயிற்சி பெறாத ஆசிரியர் அனைவரும் தகுதி பெற வேண்டும். அவர்க்கு ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் முன்னுரிமை அளித்துச் சேர்ப்பதுடன், பயிற்சிக் காலத்திற்கு விடுப்பு அளிக்க வேண்டும். (8.5)

**12.83.** ஆசிரியர் கல்வி நிறுவனக் கலைத்திட்டம் புதுப்பிக்கப்பட வேண்டும். பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்யத்தக்கவையாக இருக்க வேண்டும். (8.5)

**12.84.** மழலையர் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கூடங்கள் விரிவு படுத்தப்பட வேண்டும். (8.5)

**12.85.**பணியிடைப் பயிற்சி அனைத்தாசிரியர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.(8.5)

**12.86.** மூன்றாண்டுகட்கு ஒரு முறை குறைந்தது ஒரு மறு பயிற்சியாவது ஒவ்வொரு ஆசிரியரும் பெற வேண்டும். (8.5.)

**12.87.** ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் நடத்தும் பணியிடைப் பயிற்சிகளில், பணியிலுள்ள மூத்த ஆசிரியர்களும் சிறப்பு ஆசிரியர்களாக அமர்த்தப்பட வேண்டும். (8.5.)

**12.88**. வகுப்பறை ஆசிரியரோடு, உடற்கல்வி, ஓவியம், கைத்தொழில் போன்றவற்றிற்கான சிறப்பு ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். (8.5.)

**12.89**. மாணவர்களின் கற்றல் நாள்களில் குறைவு ஏற்படாமல் தவிர்க்க ஒவ்வொரு பள்ளியிலும் கூடுதலாக குறைந்த பட்சம் 10 சதவிகிதம் ஆசிரியர்கள் மாற்று ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும். (8.5.)

**12.90**. ஒவ்வொரு பயிற்சி மையமும் தங்களுக்குரிய வருகிற கல்வி ஆண்டிற்கான பயிற்சி வகுப்புத் திட்டத்தை நிகழ்கிற ஆண்டிலேயே வரையறுத்து அதன்படி தவறாமல் செயல்பட வேண்டும். (8.5.)

**பள்ளி ஆய்வு**

**12.91**. கலைத்திட்டத்தின் நோக்கங்கள், அடையப் பெற்றனவா என்பதை அறியவும், பள்ளியின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், குற்றங்குறைகள் நீக்கப்பெறவும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறமை மதிப்பிடப்பட்டு மேலும் திறனுள்ளதாக ஆக்கவும், அனைத்து மாணவர்களும் முழுமையான கல்வி பெறுவதை உறுதிப்படுத்தவும் ஆய்வு உதவும். (9.1.)

**12.92**. அனைத்து வகைப் பள்ளிகளிலும் ஆய்வு நெறிமை (Inspection Code)யில் உள்ளவாறு ஆய்வு மேற்கொள்ள வேண்டும். (9.4)

**12.93**. எல்லா நிலை ஆய்வாளர்கட்கும் நிர்வாகப் பணிகள் அதிகமாக உள்ளதால், ஆய்வுப்பணி இரண்டாம் இடத்தில் இருப்பதைத் தவிர்க்க நிர்வாக அலுவலர் ஒருவரும், ஆய்வாளர் ஒருவரும் என ஒவ்வொரு நிலையிலும் இருவர் நியமிக்கப்பட வேண்டும்.(9.4)

**12.94.** மாநில வாரியம், ஓரியண்டல், ஆங்கிலோ–இந்தியன் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் அனைத்தையும் ஒரே அலகாகக் கருதி, 30 பள்ளிகளுக்கு ஒரு ஆய்வாளர் வீதம் நியமித்து, பள்ளி ஆய்வுகள் தவறாது ஆண்டுதோறும் நடைபெறச் செய்ய வேண்டும். எப்பள்ளியும் ஆய்வு செய்யப்படாமல் விடுபடக் கூடாது. (9.4)

**12.95.** மேல்நிலைப் பள்ளிகள் மூத்த பாட வல்லுநர்களைக் கொண்ட குழுவால் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். (9.4)

**12.96.** பள்ளி மாணாக்கர் மற்றும் ஆசிரியர் எண்ணிக்கைக்கேற்ப ஆய்வு நாள்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும்.(9.4)

**12.97.** ஆய்வு முடிந்தவுடன் ஒவ்வொரு ஆசிரியருடனும், தலைமையாசிரியரிடமும் ஆய்வில் கண்டவற்றைக் கூறி அவர்கள் பணி சிறக்க அறிவுறுத்தல் செய்ய வேண்டும். (9.4)

**12.98.** ஆய்வு அறிக்கை ஆய்வு முடிந்து ஒரு வாரத்திற்குள் பள்ளிக்கு அனுப்பப்பட வேண்டும். அதன் மீதான விளக்கங்களைத் தலைமையாசிரியர் உடனடியாக அனுப்ப வேண்டும். (9.4)

**12.99.** ஆய்வாளர்க்குக் கலைத்திட்ட அறிவு, நிர்வாக நடைமுறைகள் ஆகியவற்றில் முழுமையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். (9.4)

**12.100.** சிறப்பு மிக்க ஆசிரியர்கள், பள்ளிகளில் காணப்பட்ட சீரிய நடைமுறைகள் அடையாளம் காணப்பட்டு, அவை பிற பள்ளிகளுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.(9.4)

**கல்விச் சட்டம்**

**12.101.** ஒவ்வொரு அரசுத்துறையிலும் நிர்வாகம் சீராக இயங்க ஒரு கையேடும் (manual) ஒரு தணிக்கை நெறிமையும் (Audit code) அரசு வெளியிடுகிறது. துறை சார்ந்த சட்டங்கள், நிர்வாக ஆணைகள், நடைமுறைகள், அனுமதிக்கப்படும் செலவினங்கள் முதலியவை கையேட்டில் முழுமையாக இடம் பெறும். அது போலவே, துறை சார்ந்த கணக்குகளைப் பேணவும், தணிக்கை செய்யவும் நடைமுறைகள், வரம்புகள் முதலியனவும் விவரமாக அளிக்கப்படும். அரசுப் பதிவிதழில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மூலம் தெரிவிக்கப்படும் மாற்றங்கள் கையேட்டிலும் நெறிமையிலும் உடனுக்குடன் சேர்க்கப்படும். இதன் காரணமாக, துறை அலுவலர்கள் தம் பொறுப்புகள், கடமைகள், வரம்புகள் ஆகியவற்றை அறிந்து எவ்விதக் குழப்பங்களுமின்றிச் செயலாற்ற இயலும். ஆனால்

கல்வித்துறையினைப் பொறுத்து கையேடும், நெறிமையும் வெளியிடப்படவில்லை. உடனடியாகத் துறைச் சார்ந்த விதிகளின் தொகுப்பும் (Education Departmental Code) துறை நிதிக் கணக்குவிதிகளின் தொகுப்பும் (Education Department Financial and Account Code ) வெளியிட வேண்டும். (10.1.)

**12.102**. இப்போது நடைமுறையில் உள்ள பல்வேறு சட்டங்களையும், விதிகளையும், ஆணைகளையும் அவற்றிலுள்ள முரண்பாடுகளைச் சரி செய்தும், தொகுத்தும் ஒரே சட்டமாக சட்டமன்றத்தில் இயற்றப்படுவது தமிழகப் பள்ளிக் கல்வியின் வளர்ச்சிக்கும் உறுதித் தன்மைக்கும் உதவும். எனவே, அனைத்துப் பள்ளிக்கும் பொருந்தும் ஒரு பொதுச்சட்டமாகத் தமிழ்நாடு கல்விச் சட்டம் என்ற தலைப்பில் ஒரு சட்டம் இயற்றப் பரிந்துரைக்கப்படுகின்றது. அச்சட்டத்தில் இடம்பெற வேண்டியவற்றில் முக்கியமானவை பின்வருமாறு: பள்ளிகள் தொடங்கல், அங்கீகரித்தல், வகைப்படுத்தல், ஆசிரியர்கள் தகுதி, நியமனம், பணிவரன்முறை, ஆசிரியர் எண்ணிக்கை நிர்ணயம், பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள், நிதி ஒதுக்கீடும், மானியங்களும், பள்ளிக்குழுக்கள் அமைத்தல், பொறுப்புகள். கிராமக்கல்விக்குழு அமைப்பும் பணிகளும், கலைத்திட்டம், தேர்வுகள், வேலைநாள்கள், விடுமுறை, மாணவர் சேர்க்கையும் நீக்கமும், மாணவர்க்கான படிப்புதவித் திட்டங்கள், மாணவர் ஒழுங்கு விதிகள், ஆசிரியர் நடத்தை விதிகள், நெறிகள், பள்ளிக் கணக்குப் பேணல், கட்டணங்கள், சலுகைகள், பதிவேடுகள், பள்ளி ஆய்வு நடைமுறை விதிகள், பள்ளிக் கணக்குத் தணிக்கை, பொதுத் தேர்வு விதிகள், உறைவிடப் பள்ளிகள், மாணவர் விடுதிகள், பெற்றோர்–ஆசிரியர் அமைப்பு விதிகள்.(10.4)

**கல்வித்துறை நிர்வாகச் சீர்திருத்தம்**

**12.103**. சர்வசிக்ஷா அபியான் திட்டத்தில் அரசாணை எண் 108 பள்ளிக் கல்வித்துறை, நாள் 31.7.2003ன்படி கிராமக் கல்விக்குழு அமைக்கப்பட்டுள்து. பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், அரசாணை எண் 102, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 12.4.2005ன்படி கிராமக் கல்விக்குழு அமைக்க வழி வகுத்துள்ளது. இவ்விரு குழுக்களையும் சட்ட அடிப்படையில் ஒன்றாக இணைத்து, பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படச் செய்வது ஏற்புடையது. இத்தகைய கல்விக்குழு பள்ளிக்கும், சமுதாயத்திற்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும். (11.4), ( 6.5.7.)

**12.104**. ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ளாட்சி சட்ட அடிப்படையில் ஒரு கல்விக்குழு உருவாக்க வழிவகை உள்ளது. ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியும் தமது வட்டாரத்திலுள்ள தொடக்க, உயர் தொடக்க, இடைநிலைப் பள்ளிகளுடன் தொடர்பு கொண்டு ஒரு தாய்போல் செயல்பட்டு அவற்றின் கல்வித் தரம் சிறப்பாக அமைய உதவ இக்குழு வழிகாட்டும் இத்தகைய சூழலில் எந்த ஒரு மாணவரும் தனது படிப்பைத் தொடரவும், பன்முகப்படுத்தப்படும் நிலையில் தான் விரும்பும் பாடத்தைத் தனக்கு தகுதி இருப்பின் விருப்பப்பாடமாக எடுத்துப் படிக்கவும் வசதி இருக்கும்; எந்த மாணவரும் தனது பள்ளிப் படிப்பைத் தொடர்வது குறித்துக் கவலை கொள்ள வேண்டியதில்லை. பெற்றோரும் எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்பது பற்றிக் கவலைப்படாது, தமது குழந்தைகள் சீரிய முறையில் கல்வி பெறும் என்று நம்பி நிம்மதியாகச் செயல்படலாம். **(11.4.)**

**12.105.** மாவட்டக் கழகங்கள் கலைக்கப்பட்ட பொழுது மாற்று ஏற்பாடு செய்திட அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டக் கல்விக் குழுமம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், மாவட்டக் கழகப் பள்ளிகளின் முழு மேலாண்மையையும் அவற்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் தனியார் பள்ளிகளுக்கான மானியங்களை வழங்கும் பொறுப்பும் அவற்றிற்கு அளிக்கலாம் என்றும் பரிந்துரைத்தது. அதனைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுப்பது காலத்தின் கட்டாயமாகின்றது. **(11.4)**

**12.106**. அனைவருக்கும் கல்வித்திட்டம் செயல்படுத்தியதாலும், பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், அதை தொடர்ந்த வழக்குகள் அதிகமாயின; நிதி நிர்வாகம் மற்றும் அலுவலக நிர்வாகம் அதிகரித்து பள்ளிக் கல்வித்துறையில் நிர்வாகப் பணி கூடியதால் மாநில அளவில் இயக்குநரின் பணிகளைப் பகிர்ந்து கொள்ள இணை இயக்குநர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்த வேண்டும். மாநிலத்தை ஆறு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் இணை இயக்குநர் நிலையில் ஒருவர் பொறுப்பேற்று, அப்பகுதிப் பிரச்சனைகள் அனைத்தையும் உடனடியாகத் தீர்க்குமாறு செய்வது இன்றைய தேவை. பள்ளிக் கல்வி இயக்ககத்தில் கூடுதலாக நிதிக்கட்டுப்பாட்டிற்கும், சட்டப்பிரிவிற்கும், நிர்வாகப் பிரிவிற்கும் மூன்று இணை இயக்குநர்கள் பதவி ஏற்படுத்த வேண்டும். **(11.4)**

**12.107.** அலுவலக நிர்வாகத்தை வலுப்படுத்த தேர்வுத்துறையைப் பொறுத்தவரை கூடுதலாக இரண்டு இணை இயக்குநர்களும், மண்டல அளவில் ஏழு இணை இயக்குநர்களும் நியமிக்க வேண்டும். (11.4)

**12.108.** தொடக்கக் கல்வித்துறைக்குத் தணிக்கைப் பிரிவு மூன்று மாவட்டங்களில் மட்டுமே உள்ளது. குறைந்த பட்சம் பத்துத் தணிக்கைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும், மதுரை உயர்நீதிமன்ற வழக்குகளுக்காகத் தனிச் சட்டப்பிரிவு ஏற்படுத்த வேண்டும். (11.4)

**12.109.** பள்ளிக் கல்விக்கென ஒட்டுமொத்தப் புள்ளி விவரம் தயாரித்திட இணை இயக்குநர் அளவில் ஒரு தனி அமைப்பு ஏற்படுத்த வேண்டும். (11.4)

# பகுதி – 5
# இணைப்புகள்

அரசாணை சமச்சீர் கல்விக்குழு அமைப்பு

(பகுதி 1.1 ஐ பார்க்கவும்)

சுருக்கம்

பள்ளிக்கல்வி– அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கிடும் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து பரிசீலனை செய்ய குழு அமைத்தல் -- ஆணை வெளியிடப்படுகிறது

பள்ளிக் கல்வி (சி2) துறை

அரசாணை (நிலை) எண்: 159 நாள்: 8.9.2006

ஆணை:

தமிழ்நாட்டில் தற்போது செயல்பாட்டில் உள்ள பல்வேறு கல்வி முறைகளான (i) நர்சரி கல்வி முறை (ii) மெட்ரிகுலேஷன் கல்வி முறை (iii) ஆங்கிலோ இந்தியன் கல்வி முறை (iv) ஓரியண்டல் கல்வி முறை (v) மாநில வாரிய கல்வி முறை ஆகியவற்றை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கும் சமச்சீர்கல்வி முறையை நடைமுறைப்படுத்த கல்வியாளர்கள், நர்சரி, மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ இந்தியன் மற்றும் ஓரியண்டல் பள்ளிகளின் பிரதிநிதிகள் பொது மக்கள் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை அமைத்து, அக்குழுவின் அறிக்கையை பரிசீலித்து முடிவெடுக்கலாம் என அரசு கருதி அவ்வாறே கீழ்க்கண்ட நபர்களை தலைவர் மற்றும் உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்றை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர் முத்துக்குமரன்,<br>முன்னாள் துணைவேந்தர்<br>பாரதிதாசன் பல்கலைக்கழகம். | : தலைவர் |
| 2 | திரு.டி.கிருஸ்துதாஸ்,<br>தலைவர்,தமிழ்நாடு நர்சரி, பிரைமரி,<br>மெட்ரிக்குலேஷன் மற்றும் உ யர் நிலைப்பள்ளிகள்<br>மேனேஜ்மெண்ட் அசோஷியேசன் | : உறுப்பினர் |
| 3 | தந்தை. ஜார்ஜ்,<br>மாண்ட்போர்ட் பள்ளி, ஏற்காடு<br>சேலம் மாவட்டம். | : உறுப்பினர் |
| 4 | திரு.எஸ்.காஜா முகைதீன்,<br>தலைமை ஆசிரியர்,<br>நிஜாம் ஓரியண்டல் மேல்நிலைப் பள்ளி,<br>புதுக்கோட்டை. | : உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 5 | டாக்டர் எஸ்.எஸ்.இராஜகோபாலன்<br>தலைமை ஆசிரியர் (ஓய்வு),<br>சர்வ ஜன மேல்நிலைப் பள்ளி<br>கோயம்புத்தூர். | : உறுப்பினர் |
| 6 | தொடக்கக் கல்வி இயக்குநர் | : அலுவல் வழி<br>உறுப்பினர் |
| 7 | மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர் | : அலுவல் வழி<br>உறுப்பினர் |
| 8 | அரசு தேர்வுகள் இயக்குநர் | : அலுவல் வழி<br>உறுப்பினர் |
| 9 | பள்ளிக் கல்வி இயக்குநர் | : அலுவல் வழி<br>உறுப்பினர்–செயலர்<br>மற்றும் நடத்துபவர்<br>(Ex-officio Member -Secretary and Convenor) |

2. மேற்படி குழுவின் ஆய்வு வரம்பு பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகிறது :–

" மாநிலத்தில் தற்போது செயல்பாட்டிலுள்ள பல்வேறு கல்வி முறைகளான: (i) நர்சரி கல்வி முறை (ii)மெட்ரிகுலேஷன் கல்வி முறை (iii) ஆங்கிலோ இந்தியன் கல்வி முறை (iv) ஓரியண்டல் கல்வி முறை (v) மாநில வாரிய கல்வி முறை ஆகியவற்றை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கும் சமச்சீர்கல்வி முறையை நடைமுறைப்படுத்த அறிக்கை சமர்ப்பித்தல். "

3. இக்குழு முதல் நிலைக் குழுவாகும். இக்குழுவின் தலைமையிடம் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம் சென்னை–6 ஆகும். சமச்சீர் கல்வி முறையினை செயல்படுத்துவது குறித்து, இக்குழுவானது தனது அறிக்கையினை ஆறு மாத காலத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்கும்.

4. இக்குழுவிற்கான செலவினத்தை பள்ளிக் கல்வி இயக்குநரக கணக்குத்தலைப்பில் மேற்கொள்ளலாம். இது சம்பந்தமான கருத்துருவினை விவரங்களுடன் தனியே அரசுக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண் 331/SS/.06 நாள் 08.09.2006இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை –6.
டாக்டர் முத்துக்குமரன்,
முன்னாள் துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்
குழுவின் உறுப்பினர்கள் – பகஇ வழியாக
மாநிலக் கணக்காயர், சென்னை–18
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை–35
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

இணைப்பு – 3.1.

# அனைவருக்கும் கல்வித் திட்டம் (S.S.A.) 2006–2007 திட்ட விவரங்கள்

(பகுதி 3.2.5.2–ஐ பார்க்கவும்)

- Upgradation of 126 Education Guarantee Scheme
- Upgradation of 234 Primary Schools in Upper Primary Schools
- 234 Educational Guarantee Scheme Centres in unserved habitations
- Construction of 126 Primary Schools buildings
- Construction of 546 Upper Primary Buildings
- Construction of 12,464 additional classrooms
- 1075 Cluster Resource Centre buildings.
- Innovative Bala Project (Building as a Learning Aid) to be incorporated in classroom construction
- Electrification to 3,910 Primary and Upper Primary Schools.
- Provision of School Grant at the rate of Rs 2,000 to 37,253 Primary Schools and 13,761 Upper Primary Schools
- Provision of Teaching Learning Material @ Rs.500 to 2,10,624 Primary and Upper Primary teachers.
- Provision of Teaching Learning Equipment grant at the rate of Rs.10,000 to 126 New Primary Schools and Rs 50.000 to 234 newly upgraded Middle Schools
- Coverage of 1,11,989 Out-of-School children in 4 890 Bridge Courses centres and 436 Residential Camps etc.
- Inclusive Education for the Disabled programme for 1,33,009 children.
- GPS survey to be competed in the remaining 20 districts.
- 18 days of In-service Teacher Training to 2,41,311 teachers at Primary and Upper Primary levels.
- Vocational skills training to 1 16 lakh girls at Upper Primary level.
- Computer Aided Learning (CAL) in co-ordination with Intel, Microsoft and Azim Premji Foundation, CAL centres in 412 Cluster Resource Centres.
- 2.96 lakh girls at Upper Primary Level to be covered under National Programme of Education for Girls at Elementary level (NPEGEL)
- 37 Residential Schools under Kasturba Gandhi Balika Vidyalaya (KGBV) scheme to enroll Out-of-School girls.
- EDUSAT to be extensively used for Programme implementation, monitoring and training.

# இணைப்பு –3..2

## பொதுப்பள்ளி முறை – இராமமூர்த்திக்குழு அறிக்கை

(பகுதி 3.2.8 ஐப் பார்க்கவும்)

**Ramamurti Committee Report Para 4.4.8**

The first step in securing equity and social justice in education is the building up of a Common School system. *Specific actions required in this context are the* following:

- Provision of significantly increased outlay for elementary (particularly primary) education. This would help in the building up of the required levels of infrastructure and quality of education, thereby transforming Government, local body and aided schools into genuine neighbourhood schools.
- Provision of special allocations for improvement of school system in *backward areas, urban slums, tribal areas, hilly tracts, desert and marshy* areas, drought and flood prone zones, coastal belts and islands.
- Ensuring instruction for all in the medium of mother tongue at the primary level, particularly to *linguistic minorities; active encouragement of teaching* in the regional languages at the secondary level; and discontinuance of State aid to the schools imparting education otherwise than in the medium of mother tongue/regional languages.
- Phased implementation of the common school system within a ten year frame; and essential minimum legislation, particularly to dispense with *early selection process, tuition fee*, capitation fee etc.
- Exploring ways of including the expensive private schools into the common school system through a combination of incentives, disincentives *and legislation.*

தமிழ்நாடு அரசுச் சட்டம் – 13/2006, தமிழ்மொழி கற்பது கட்டாயம்

(பகுதி 5.3 3.1 ஐ பார்க்கவும்)

**ABSTRACT**

ACT – The Tamil Nadu Tamil Learning Act , 2006. ( Tamil Nadu Act 13 of 2006) - Date of Commencement of the Act – Notification –Orders – Issued.

School Education (U2) Department

G.O.(Ms). No.88 Dated:19.6.2006.

**ORDER:**

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette, Extraordinary, dated: 19.6.2006.

**NOTIFICATION**

In exercise of the powers conferred by sub-section (3) of section 1 of the Tamil Nadu Tamil Learning Act, 2006 ( Tamil Nadu Act 13 of 2006), the Governor of Tamil Nadu hereby appoints the 19th day of June 2006 as the date on which the said Act shall come into force.

(By order of the Governor)

M.Kutralingam,
Secretary to Government.

To
The Works Manager,Government Central Press,
Chennai-79.
(for publication of the notification in the
Extraordinary issue of Tamil Nadu
Government Gazette).
The Secretary to Governor,
Raj Bhavan, Chennai-22.
The Secretary to Government,
Law Department, Chennai-9.
Copy to
The Secretary 1 to Hon'ble Chief Minister,Chennai-9.
The Senior Personnel Assistant to Minister,
(School Education), Chennai-9.

//Forwarded by order//

SECTION OFFICER.

**A Bill to provide learning of Tamil as one of the subjects in all schools in the State of Tamil Nadu.**

WHEREAS a policy decision has been taken by the Government of Tamil Nadu to ensure that all students studying in standards I to X in all schools in this State to learn Tamil as one of the subjects, in a phased manner, from the academic year 2006 – 2007,

BE it enacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Fifty-seventh Year of the Republic of India as follows:-

1 (1) This Act may be called the *Tamil Nadu Tamil Learning Act, 2006* — **Short title, extent and commencement.**

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the Government may, by notification, appoint

2 In this Act, unless the context otherwise requires,— **Definitions.**

(a) "academic year" means the year commencing on the first day of June,

(b) "competent authority" means the competent authority appointed by the Government under section 4,

(c) "Government" means the State Government,

(d) "prescribed" means prescribed by rules,

(e) "school" means,—

(i) any primary school, middle school, high school or higher secondary school maintained by the State or local bodies, or

(ii) any primary school, middle school, high school or higher secondary school established and administered or maintained by any private educational agency including minority school established and administered under clause (1) of Article 30 of the Constitution, whether receiving aid out of the State fund or not or

(iii) any nursery and primary school, matriculation school, anglo-indian school or oriental school including minority school established and administered under clause (1) of Article 30 of the Constitution, whether receiving aid out of the State fund or not, or

(iv) such other school as may be notified by the Government in this behalf

Explanation — For the purpose of this clause,—

(i) nursery and primary school shall consist of standards L K G to V

(ii) primary school shall consist of standards I to V,

(iii) middle school shall consist of standards I to VIII or standards VI to VIII,

(iv) high school shall consist of standards I to X, or VI to X or IX and X,

(v) higher secondary school shall consist of standards I to XII, VI to XII or IX to XII

3 (1) *Tamil shall be taught as a subject in standards I to X in all* schools, in a phased manner commencing from the academic year 2006–2007 for standard I, from the academic year 2007–2008 for standards I and II and shall be extended upto X standard in a like manner — **Tamil as subject.**

(2) For the purpose of sub-section (1), the pattern of education shall be as follows --

| | |
|---|---|
| Part I | Tamil (Compulsory) |
| Part II | English (Compulsory) |
| Part III | Other Subjects (Mathematics, Science, Social Science, etc ) |
| Part IV | Students who do not have either Tamil or English as their mother tongue can study their mother tongue as an optional subject |

4. (1) The Government may, by notification, appoint any officer *of the Education Department not below the rank of District* Educational Officer to be the competent authority for the purposes of carrying out the provisions of this Act and the rules made thereunder and different competent authorities may be appointed for different areas — **Competent authority.**

(2) The competent authority shall exercise such powers and perform such functions as may be prescribed

5 The Government may, subject to such conditions as they deem fit, by general or special order, exempt any class or category of student or students from all or any of the provisions of this Act either in part or in whole — **Exemption.**

**Central Act XLV of 1860.** — 6 The competent authority appointed under section 4 shall be deemed to be public servant within the meaning of section 21 of the Indian Penal Code — **Competent authority to be public servant.**

7 (1) The Government may, in the public interest, by order, direct the competent authority to make an enquiry or to take appropriate proceedings under this Act in any case specified in the order, and the competent authority shall report to the *Government the result of the enquiry made or the proceedings* taken by him within such period as may be prescribed — **Power of Government to give direction.**

(2) On receipt of the report from the competent authority under sub-section (1), the Government shall give such direction as they deem fit and such direction shall be final and binding

8 No suit, prosecution or other legal proceedings shall lie against the competent authority, Government or its Officers for anything which is in good faith done or intended to be done under this Act or any rule or order made thereunder

**Protection of action taken in good faith.**

9 (1) The Government may make rules for carrying out the purposes of this Act

**Powers to make rules.**

(2) Every rule or notification or order made under this Act, shall, as soon as possible, after it is made or issued be placed on the Table of the Legislative Assembly, and if, before the expiry of the session in which it is so placed or the next session, the Assembly makes any modification in any such rule or notification or order or the Assembly decides that the rule or notification or order should not be made, the rule or notification or order shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification or order

10. If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Government may, by order publish in the **Tamil Nadu Government Gazette**, make such provisions, as appears to it to be necessary or expedient for removing the difficulty

**Power to remove difficulties.**

Provided that no order shall be made after the expiry of a period of two years from the date of commencement of this Act

இணைப்பு 5.2

விளையாடுமிடமும், விளையாட்டுக்களும்

(பகுதி 5.8.2 ஐப் பார்க்கவும்)

# Schools with different categories of Play fields

## Games/Sports to be given

**I. Schools with No. Play fields**

**a) Indoor Activities:-**

1) Chess
2) Carrom
3) Asanas
4) Table Tennis (If a seperate class room is provided)
5) Minor Games (Class room games)
6) Thery Classes
7) Fencing
8) Jackwondo
9) Judo
10) Boxing

**b) Outdoor Activities:-**

(If a space of 5 x 10 Mts. available)
**Atheletics:-**
Shot – put
Long Jump

Maximum Accommodation of Students per period/per teacher : 30 + 30 = 60

**II. Schools with Minimum play fields:-**

(wtih 10 – 20 cents of play field of square / rectangle
(25 x 25 Mts. of size)

**a) Indoor Activities :-**

1) Chess
2) Carrom
3) Table Tennis (If a separate class room is provided)
4) Minor Games (Class room and out door also)
5) Asanas (Can be performed in out door also)

**b)Outdoor Activities:-**

1) Mass Drill/March past

2)Volley Ball (Only practice purpose / Volley ball, Throw ball court can also be utilised for Throw ball.

3)Tennikoit

4) Atheletics:-
   Long Jump
   High Jump
   Shot-put
   Running Events : Starting positions only .

5) Fencing

6) Taskwondo

7) Judo

8) Boxing

Maximum Accommodation of Students
per period/per teachers : 30 + 30 = 60

**III. Schools with below Average Play fields:**
(with minimum of 25 x 35 mts. of Play field)

**a) Indoor Activities:-**

1) Chess
2) Carrom
3) Table Tennis (If a seperate class room is provided)

**b) outdoor Activities:-**

1) Mass Drill/March Past
2) Minor Games
3) Asanas
4) Volley Ball – Seperate court for practice purpose
5) Throw Ball – Seperate court for practice purpose
6) Tennikoit – seperate court
7) Atheletics :-
   Long Jump
   High Jump
   Shot-put
   Running Events-starting positions only
8) fencing
9) Taskwondo
10) Judo
11) Boxing

Maximum Accommodation of Students per period/per teacher · 30+30+0= 90

**IV. Schools with Average Play fields:-**
(with 50 x 50 Mts of play field) Approx ½ a Acre

**a) Indoor Activities:-**

1)Chess
2)Carrom
3)Table Tennis (If a separate class room is provided)

**b)Outdoor Activities:-**

1) Mass Drill/'March Past
2)Minor Games
3)Asanas
4)Volley Ball/Throw ball
5)Kho-Kho field
6)Tennikoit/Ball Batminton
7)Basket ball
8)Atheletics
   Long-Jump
   High-Jump
   Shot-put
   Running events – staring position only

Miximum Accommodation of students per period/
per teacher (total three teachers) :50+50+=150

**V. Schools with Normal Play fields:-**

(with 60 x 60 mts of play field) Approx 1 Acre.

**a) Indoor Activities:-**

1)Chess
2)Carrom
3)Table Tennis (If a seperate class room is provided)

**b)Outdoor Activities:-**

| | |
|---|---|
| 1)Mass drill/March past | 1)200 mts. Atheletic Track with 6 Lanes in compact size. |
| 2)Miinor Games | 2)One Volley Ball court |
| | 3)One Kho-kho field |
| 3)Asanas | 4)One Basket Ball court |

4)2 nos. of Volley Ball courts
5)1 no. of Throw Ball court
6)1no. of Kho-Kho field
7)1 no.of Basket Ball court
8) Atheletics
   Long Jump
   High Jump
   Shot-put
   Discuss
   Javi lie
   Running Events –starting position
9) Fencing
10)Taskwondo
11)Judo
12)Boxing
13)Lawn Tennis/Ball Batminton

**(Or)**

1) Mass drill/March past
2) Minor Games
3) Asana
4) Fencing
5) Taekwondo
6) Judo
7) Boxing
8) 200 mts. Athletic. Track with 6 lanes in compact size
9) One volley ball court
10) One Kho-Kho field
11) One Basket Ball court

Maximum Accommodation of Students per period/
per teacher: (total four teachers) 60+70+60+60=240

VI. **Schools with Large Play fields:- ('A' Category)**
(with 100 x 100 mts of play field) Approx 2.5 Acre.

**a) Indoor Activities:-**

1)Chess
2)Carrom
3)Table Tennis (If a seperate class room is provided)

**b)Outdoor Activities:-**

1)Mass drill/March past
2)One Volley Ball court
3)Asanas
4)Atheletics: 400 mt. Atheletic Track of 6 Lanes
All the events of atheletics.
5)Foot ball/Hockey field
6)Volley Ball courts 2 nos.
7)Kho-Kho field – 1 no.
8) Basket Ball court – 1 no.
9)Throw Ball court – If space permits or Valley ball court can be utilised Events –starting position
10) Fencing
11)Taskwondo
12)Judo
13)Boxing
14)Squash – If space permits
(Indoor)
15)Gymnastics:-
Roman Rings
Parallel Bar
Horizontal Bar
Balancing Beam
16)Ball Badminton Court/Lawn Tennis

Maximum Accommodation of students
per period/per teacher. (total five teachers) 60+60+60+60+60=300

VII. **Schools with Multi Fields Facilities: "B Category"**
(with minimum 175 x 100 mts of play field) Approx 4.5 Acre.

a) **Indoor Activities:-**
1)Chess
2)Carrom
3)Table Tennis (with indoor facility)

b)**Outdoor Activities:-**
1)Mass drill/March past
2)Miinor Games
3)Asanas
4)Atje;etocs" 400 mt. athletic tract of 8 lanes.
5)Foot Ball : Seperate field within athletic tract
6)Hockey : Seperate field outside athletic tract.
7) Volley Ball courts 2 nos.
8) Kho-Kho field 2 nos.
9) Basket Ball court
10) Throw Ball court – Separate Court
11)Ball Batminton
12)Lawn Tennis – 2 courts.

c)**Multipurpose Indoor Gymnasium:-**
1) Squash
2)Shuttle Badminton
3)Gymnastics
4)Weight Training

Maximum Accommodation of students
per period/per teacher: (total ten teachers) 60x10 = 600

## இணைப்பு – 5.3

## உடற்பயிற்சி பாடத்திட்டம் செய்ய வேண்டுவன

(பகுதி 5.9. 2–ஐ பார்க்கவும்)

1. தொடக்கக் கல்வி திட்டத்தில் உடற்கல்விப்பாடம் கட்டாயமாக்கப்படல் வேண்டும்.
2. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் குறைந்த பட்சம் ஒரு பள்ளிக்கு ஒரு உடற்கல்வி ஆசிரியர் நியமனம் செய்யப்படல் வேண்டும்.
3. பள்ளிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடுநிலைப் பள்ளிகள் முதற்கொண்டு தொடங்கப்படல் வேண்டும்.
4. உடல் திறனாய்வுத் தேர்வுகளின் அளவுகோல் மற்றும் தேர்வுகளின் தன்மைகளை, பள்ளிகளின் விளையாட்டு மைதானத்தின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மனதிற்கொண்டு உருவாக்க வேண்டும்.
5. உடல் திறனாய்வுத் தேர்வுகளின் செயல்பாடுகள், கிராமப்புறப் பள்ளிகளில் அதிக அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். அப்போதுதான் அங்குள்ள மாணவர்களிடம் புதைந்து கிடக்கும் அரிய திறமைகளை வெளிக்கெணர முடியும்.
6. ஒவ்வொரு கிராமத்திற்கும் பொதுவான மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் பள்ளிக் குழந்தைகளுக்காக உருவாக்கப்படல் வேண்டும்.
7. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் பள்ளிக் கல்வித்துறையும் ஒருங்கிணைந்து தம்தம் உடற்கல்வித்துறை சம்பந்தப்பட்ட பள்ளிகள் அளவிலான செயல்பாடுகளை செயல்படுத்துதல் வேண்டும். இதற்காக, வருடாந்திர செயல்பாடுகளின் நிகழ்ச்சிகளை இருவரும் இணைந்து நிகழ்ச்சிக் காலக்குறிப்பேடு தயார் செய்தல் வேண்டும்.
8. உடற்கல்வித்துறை பயிற்சிக் கல்லூரிகளில் புதிய விளையாட்டுகளின் பாடத்திட்டம் சேர்க்கப்படல் வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படும் பட்சத்தில் அக்கல்லூரிகளிலிருந்து வெளிவரும் உடற்கல்வி ஆசிரியர்கள் புதிய விளையாட்டின் விதிமுறைகள் மற்றும் விளையாட்டு நுட்பங்களில் திறமையானவர்களாக வெளிவர இயலும்.
9. பள்ளிக் கல்வித்துறையின் பாடத்திட்டத்தில் புதிய விளையாட்டுகளையும் சேர்க்கப்படல் வேண்டும்.
10. உடற்கல்வி ஆசிரியர்களுக்கு புதிய விளையாட்டுகளுக்கான நுட்பங்கள் மற்றும் விதிமுறைகளை புத்துணர்வு முகாம் மூலமாக வருடந்தோறும் பயிற்றுவிக்க வேண்டும்.
11. புதிய விளையாட்டுகளில் தேர்ச்சி பெற்ற நடுவர்கள் இல்லாத காரணங்களினால் போட்டிகள் நடத்தும் போது பல சிரமங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆதலால் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ‘நடுவர்’ முகாம் நடத்தி அவர்களுக்கு சம்மந்தப்பட்ட விளயைாட்டு சங்கங்கள் மூலமான நடுவர் சான்றிதழ் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.
12. அந்தந்த மாவட்டத் தலைமையிடங்களில் கண்டிப்பாக ஒரு விளையாட்டு விடுதி அமைக்கப்படல் வேண்டும். அதில், அந்தந்த வட்டாரத்தில் பிரபலமான விளையாட்டுகளில் விடுதிகள் அமைவது அவசியம்.
13. மாவட்ட அளவிலான விளையாட்டு விடுதிகளில், பிற பள்ளிகளிலிருந்து போட்டிகளுக்காக வரும் மாணவாகளுக்கு தங்குவதற்காக கட்டிடம் அமைக்கப்படல் வேண்டும். இவை இலவசமாக அமைக்கப்படல் வேண்டும்.
14. ஏற்கனவே செயல்படும் விளையாட்டுகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் தங்கள் அறிவுத்திறமை வளர்த்துக் கொள்ளும் வண்ணம் பயிற்சி முகாம் வருடந்தோறும் நடத்தப்படல் வேண்டும்.
15. 250 மாணவர்களுக்கு ஒரு உடற்கல்வி ஆசிரியர் என்ற விகிதம் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட்டு அதற்கான அரசாணை வெளியிடப்படல் வேண்டும்.

இணைப்பு 6.1

அரசாணை – மாணவரை அடிக்கக்கூடாது

(பகுதி 6.4.7 ஐ பார்க்கவும்)

**ABSTRACT**

School Education – Tamil Nadu Educational Rules – Corporal Punishment - Amendment to Tamil Nadu Educational Rule 51 – issued

**School Education (V2) Department**

**G.O. (Ms) No. 12** **Dated: 18.1.2007.**

**Read:**

From the Director of School Education, Lr.Rc.No.109720/C10/2002, dated 1.11.2003.

-----------

**Order:**

Rule 51 of Tamil Nadu Educational Rules specifies the practice of Corporal punishment which is in vogue for deliberate lying, obscenity of word or act or flagrant insubordination on the part of the students. Of late, many instances of harsh punishments inflicted upon students have been brought to the notice of the Government The High Level Committee constituted to prepare the Tamil Nadu Educational Manual in its recommendations, among others has suggested that to maintain discipline among students, every school shall follow certain procedures but on any account shall not resort to Corporal punishment, inflicting physical and mental pain to the child. The committee has also recommended awards for positive and appropriate behaviour of the students and self punishment for inappropriate behaviour.

2. Based on the above recommendation of the High Level Committee, the Government have decided that Rule 51 of Tamil Nadu Educational Rules providing for corporal punishment be deleted and guidelines for self discipline be substituted in its place. Accordingly, the following notification will be published in the Tamil Nadu Government Gazette.

**Notification**

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Tamil Nadu Educational Rules:-

**Amendment**

For provision of rule 51 of the Tamil Nadu Educational Rules under the caption 'Punishments' and the following Caption namely, 'Guidelines for self-discipline' shall be substituted.

## 51:- Guidelines for Self-Discipline

The role status of the contemporary Teacher has declined in recent years. Both students and their parents viewed the Teacher in 'awe'. The Teacher was a very powerful figure in the eyes of students and could easily influence the student's behavior often with just a look, a smile or a threat. To day the Teacher has to earn the respect of both students and their parents. Children especially in the upper grades do not hold their Teacher in the 'awe' they used to. It is no longer fashionable to be the rigid, authoritarian, traditional, and disciplinarian of by gone days.

There is no long just one way to run a classroom. At present there are more children with more behaviour problems in the Public and Private Schools. Most of our Teachers have only been trained in how to teach nice normal children with no emotional problems.

A good Teacher should be able to handle all behavior problems on her own and within entries of the classroom. In order to grow Educationally, Socially, and Emotionally children need to be in an environment in which there is a concerned Teacher who will set firm, consistent and positive limits while providing warmth and support for their appropriate behavior with assertive discipline Simply stated, the Assertive Teacher let the child know that she means what she says and says what she means.

Some basic Assertive training skills in our on-going courses for Teachers both at Secondary and Graduate level and in-service training for Teachers is necessary.

Assertive discipline is an outgrowth of Teacher's efforts in working directly with children with behaviors problems and consulting with professionals on how to deal effectively with such children. Pupils choose how to behave and know the consequences that will follow. The needs of teachers and pupils are mutually met, matched and balanced

The style of response of the Assertive Teacher lies in expression of her wants and needs firmly and follows her words with actions She clearly sets the limits and follows it put with consequences. She is a positive person, knows to reinforce good behaviour with praise and is consistent in her words and action.

**A few limits setting consequences are:-**

Time out, Denials of privileges, Home consequences, detentions, Suspension etc. The corner stone of assertive discipline is the potential positive influence a Teacher can have on the behaviour of the students The children clearly know the parameters of acceptable and un-acceptable behavior. We place the responsibility where it belongs to the students We are providing the pupils with a choice; we are providing him with the opportunity to learn the natural consequences of his in-appropriate actions and that he is responsible for his own behaviour.

Just as Teachers planned how to reach the academic objectives with their students, they need to plan how he / she will reach their behavioural .objectives as an organized and systematic manner within the area of classroom management influencing of the majority of a class. With this objective the teacher shall make a chart for her classroom, which covers the behavior pattern the teacher wants.

## Awards

Student may be encouraged to follow appropriate behavior by way of awarding prizes and Certificates. Such a positive state will be helpful to convey their students that good behavior will be rewarded. A few examples are given below:

1. Honoring students in the Assembly
2. Displaying the names on the Notice Board
3. Praise in the class room with a pat or a smile
4. Giving prizes and special Certificates during functions.
5. Recommending the names for private Scholarship and Concession.

**Behaviour Pattern Commonly Noticed in Schools**

1. Absent for classes
2. Absent for tests
3. Cut off the last period
4. Late coming
5. Misbehavior with peer group
6. Hesitation to follow the instruction of the teacher
7. Neglecting Homework / Assignment
8. Wearing unclean dress / Uniform
9. Disturbing the class room teaching
10. Bringing or using prohibited or intoxicated materials
11. Inviting and inciting quarrels
12. Malpractice in examinations
13. Damaging school properties
14. Indecent posture language
15. Using filthy language
16. Using dis-respectful words against teachers
17. Sarcastic comment against the management or Government
18. To speak unpatriotic words
19. Eve-teasing
20. Destroying school records
21. Damaging the study materials of other students
22. Eating or chewing during class hours
23. Lying
24. Stealing
25. Mis-representation
26. Back talk
27. Shouting in the class, screaming
28. Not listening to class room teaching

**To maintain 'discipline' among the students every school and every class shall follow the device given below, but on any account shall not resort to corporal punishment, inflicting physical and mental pain to the child.**

1. Framing conduct rules for the pupils
2. Conducting parents' meeting at the beginning of the year
3. Call for parents as and when required
4. Forming a counseling team
5. Forming a disciplinary committee in school(P.T.A.members can be included)
6. Providing in-service training for teachers to inculcate appropriate behavior among students

. . . 4

**Some of the examples of Corrective Measures**

1. Choosing an activity as self-punishment like watering plants, duty in the library, cleaning the play field.
2. Following directions of the class teacher like washing the black board, running around the field, cleaning the campus
3. Imposition – not more than five times
4. Time out to another teacher who can correct and advise the boy
5. Denying of privilege (e.g.) Denying a player from the team
6. Retaining the students after school hours for a short duration assigning some academic work under the supervision of a teacher
7. The parents of the problematic pupils may be summoned and consulted for corrective measures needed
8. Suspension from class for a limited period to be decided by the Disciplinary Committee.

The staff council is free to frame its own corrective measures

The teacher should maintain a personal profile of Mal-adjustment students (Appendix 15). He should record his acts of indiscipline and the corrective measures taken in this regard.

In preparing the code of conduct and involving the students in the process some positive behaviors are suggested in Appendix 16.

(By Order of the Governor)

M. Kutralingam,
Secretary to Government.

**To**

The Director of School Education, Chennai-6.
The Director of Elementary Education, Chennai-6.
The Director of Government Examinations, Chennai-6.
The Director of Matriculation Schools, Chennai-6.
The Director of Collegiate Education, Chennai-6.
The Works Manager, Government Central Press, Chennai-79.
(For Publication of the Notification in the Government Gazette)
The Accountant General, Chennai18 / 35.

**Copy to**

All Departments of Secretariat, Chennai-9.
All Section in School Education Department, Chennai-9.

/ Forwarded by Order /

Section Officer.

## இணைப்பு 6.2

### பள்ளியில் ஒழுக்கம் : செயற்பாடுகள்

(பகுதி 6.4.10 ஐ பார்க்கவும்)

### மழலையர் பள்ளி

1. பெற்றோர்களைப் பிரிந்து வரும் குழந்தைகளை அழாமல் அரவணைத்தல்.
2. வண்ணப்படங்கள், விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள் ஆகியவற்றைக் காட்டி அமைதியாக இருக்கச் செய்தல்.
3. இதிகாசக் கதைகள், நீதிக் கதைகள் போன்றவற்றைக் கூறுதல்
4. படம் பார்த்து கதை கூறச் செய்தல்.
5. எக்காரணம் கொண்டும் குழந்தைகளை அடிக்காமல், அன்பான வழியில் சமாதானப்படுத்துதல்.
6. கழிவறைக்குச் செல்லப் பழக்குதல்.
7. மதிய உணவை யாருடைய உதவியும் இன்றி தானே உண்ணச் செய்தல்.
8. நல்ல பாடல்களை இசையுடன் பாடி, ஆடிக்காட்டுதல், குழந்தைகளையும் ஆடச் செய்தல்.
9. ஆசிரியர்களுக்கு வணக்கம் கூறச் செய்தல்.
10. நேரத்திற்கு உணவு உண்பது, நேரத்தில் தூங்குதல் போன்றவற்றைக் கூறுதல்.

### தொடக்கப்பள்ளி

1. நாள்தோறும் பல்துலக்கி குளித்து வரக் கூறுதல்
2. அதிகாலையில் எழுந்து படிக்கச் சொல்லுதல்
3. காலை எழுந்ததும் காலைக்கடன்கள் முடித்து குளித்து இறைவனை வணங்கச் சொல்லுதல்
4. கை, கால் விரல்களிலுள்ள நகங்களை வெட்டச் செய்தல்.
5. காலணிகள் அணிந்து வரச் செய்தல் (குறிப்பாக கழிவறைக்குச் செல்லும் போது)
6. தலைக்கு எண்ணெய் தேய்த்து சீவி வரச் செய்தல்
7. சீருடைகளைத் தூய்மையாக அணிந்து வரச் செய்தல்
8. பிற உயர்களிடத்து இரக்கம் காட்டச் செய்தல் (நாய், ஆடு, மாடு, இவற்றைத் துன்புறுத்தாது இருத்தல்.)
9. மகாபாரத. கதைகள், இராமாயணக் கதைகள் பஞ்சதந்திரக் கதைகள் ஆகியவற்றை கூறுதல்
10. கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தைத் கூறுதல்
11. பெரும் தலைவர்களின் இளம் பருவ வாழ்க்கையைக் கூறுதல்

12. சாலை விதிகளைக் கடை பிடிக்கச் செய்தல்

13. வகுப்பறையில் நடந்து கொள்ளம் விதம் பற்றிக் கூறுதல்

14. தினந்தோறும் பள்ளிக்கு வரச் செய்தல்

15. பாடங்களை செல்லிக் கொண்டே எழுதுவதன் மூலம் மனப்படைட சக்தியை வளர்த்தல்

16. ஆசிரியர்களுக்கும், பெரியோர்களுக்கம் வணக்கம் கூறச் செய்தல்

17. தலை முடியை வெட்டி தூய்மையாக வைத்திருத்தல்

18. இளமைப் பருவம் கல்விக்குரியது இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்று இளம் பருவத்தில் கல்வி கற்பதன் அவசியத்தைக் கூறுதல்

19. பொய் கூறுதல், திருடுதல், புறம் கூறுதல் ஆகிய தீய பழக்கங்களை விட்டொழிக்கச் செய்தல் அவற்றினால் வரும் தீங்கினை எடுத்துக் கூறுதல்

20. ஆண், பெண் உடைகளை மாற்றி அணியாதிருத்தல்

### உயர்நிலைப்பள்ளி

1 கல்வியின் சிறப்பைக் கூறதல்

2 தினசரி நாளிதழ், வார இதழ் ஆகியவற்றை வாசிக்கச் செய்தல்

3 நல்ல புத்தகங்கள் போல சிறந்த நண்பன் வேறு இல்லை. எனவே பாடநூல் தவிர ஏனைய நூல்களைப் படிக்கச் செய்தல்

4 தெனாலிராமன் கதைகள், பீர்பால் கதைகள், நீதிக் கதைகள் போன்றவற்றைச் கூறுதல்

5 பெற்றோர்களுக்கு உதவியாக இருக்கச் செய்தல்

6 பெற்றோர்கள், பெரியோர்கள் அறிவுரைகளைக் கேட்டல்

7 மனப்பாடம் செய்வதைத் தவிர்த்து பொருள் புரிந்து படிக்கச் செய்தல்

8 குருகுலக்கல்வி முறைக்கும், இப்போதைய கல்வி முறைக்கும் உள்ள வேறு பாட்டை எடுத்துக் கூறுதல்

9 அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள வானொலி, தொலைக்காட்சி, கணினி ஆகியவற்றை கல்வி கற்பதற்கு பயன்படுத்திக் கொள்ளம் முறையை விளக்கிக் கூறுதல்

10 ஆசிரியர் பாடம் நடத்தும் பொழுது குறிப்பு எடுக்கப் பழக்குதல்

11 எப்பொழுதும் இனிய சொற்களைப் பேசுதல், பிறர் மனம் புண்படாது பேசுதல்

12 உழைப்பின் பெருமையை எடுத்துக் கூறுதல்

13 கேள்வி கேட்கும் திறனை வளர்த்தல்

14 செய்கின்ற வேலையில் ஒழுங்கு இருக்கச் செய்தல்

15 நூறு நாட்கள் கற்ற கல்வி ஆறு நாட்கள் விடப்போகும் – எனவே நாள் தோறும் படிக்கும் பண்பை வளர்த்தல்

16 தாழ்வு மனப்பான்மை, கூச்சம் இவையிரண்டும் முன்னேற்றத்தின் எதிரி. எனவே, இவை நீங்கி துணிவுடனும், நேர்மையுடனும் இருக்கச் செய்தல்

17 அன்பு, பணிவு, பொறுமை, தன்னடக்கம், தொண்டு மனப்பான்மை, ஆர்வம், ஈடுபாடு போன்ற பண்புகளைக் கடைபிடித்தல்

18 அஞ்சலம், வங்கிகள் போன்றவற்றின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளுதல், பணம் அனுப்பும் முறை, காசோலையை எழுதும் முறை, வங்கியில் பணம் எடுக்கும் முறை ஆகியன பற்றி தெளிவாக அறிந்து கொள்ளுதல்

19 உடன் படிக்கும் மாணவியை சக தோழியாக எண்ணும் மனப்பான்மையை வளர்த்தல்

20 பருவம் அடைதல் பற்றிய விழிப்புணர்வை மாணவிகளிடம் ஏற்படுத்துதல்

21 மாதவிடாய் காலங்களில் முன்னேற்பாட்டுடன் பள்ளிக்கு வரச் செய்தல்

22 உடல் தெரியாவண்ணம் மாணவிகளை சீருடை அணியச் செய்தல்

23 எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

24 பொதுவாக நோய்வராமல் காக்கும் முறைகளைக் கூறுதல் (நீரை சூடாக்கி ஆற வைத்து வடிகட்டி குடித்தல். பொது இடங்களில் மலம் கழிக்காதிருத்தல், ஈ மொய்த்த பண்டங்களை உண்ணாதிருத்தல்

25 ஆண், பெண் இனக்கவர்ச்சியை நீக்கி சகோதர உணர்வை ஊட்டுதல்

## பொது

1. கல்விச் செயல்களைத் தொடங்குவதற்கு முன் நமக்கும் மேலான சக்தி உண்டு என்பதை உணர இறை வணக்கம் அல்லது வழிபாடு முறைகளில் ஏதேனும் ஒரு முறையைத் தினமும் கடைப்பிடிக்க வேண்டும்.

2. இறைவழிபாட்டின் போது ஒழுக்கத்தின் மேன்மையையும், அதைக் கடைப்பிடிக்க வேண்டியதன் இன்றியமையாமையையும் தலைமை ஆசிரியர் அல்லது எவரேனும் ஒரு ஆசிரியர் எடுத்துரைக்கலாம்.

3. மாணவர்கள் அன்றைய சிந்தனையாகச் சில நற்கருத்துக்களைக் கூறி பதிலுரையாகச் சொல்ல வைத்து, அதன் மூலம் மனதில் பதிய வைக்கலாம்.

4. உண்மையைக் கட்டாயமாக நம் ஒவ்வொருவர் வாழ்விலும் கடைப்பிடிக்கவும், அதைச் செயல்படுத்தவும் வேண்டும் என்பதை வலியுறுத்தலாம். அவ்வாறு கடைப்பிடிப்பதால் ஏற்படும் அமைதி, நிம்மதி, உடல் ஆரோக்கியம் போன்றவற்றையும் அதைத் தொடர்ந்த நல வாழ்வு, எதிர்கால வாழ்க்கைக்கான அறிவுரை அனைத்தையும் உணர்த்தலாம்.

**5.மதக்கல்வி:** மதங்களிலுள்ள நன்னெறி கருத்துக்களை மத உணர்வின்றி அவர்களுக்கு புகுத்தி மத வேறுபாட்டை களையவேண்டும்.

6. நாட்டுத் தலைவர்கள், சான்றோர்கள், அறிவியல் அறிஞர்கள் போன்றோரைப்பற்றி எடுத்துரைப்பது, சிலரையாவது விழிப்புறச் செய்யும் எளிய வழி முறையாகும்.

**7. சகிப்புத்தன்மை:** வாழ்வியல் மதிப்பீடுகள் பற்றி எடுத்துரைத்து, சக மாணவர்களிடையே அன்புடனும் சகிப்புத் தன்மையுடனும் பழகக் கற்றுத் தரவேண்டும்.

8. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்றால் என்னவென்றே தெரியவில்லை இப்போது காரணம், ஒரே மகனாக அல்லது ஒரே மகளாக இருப்பதால், பெற்றோரின் ஏகோபித்த அன்புக்குக் காரணமானவர்கள் ஆகிறார்கள்.

இதனால் கேட்பதெல்லாம் அவர்கட்கு உடனே கிடைக்கிறது. அதுவும் முழுதாக அப்படியே கிடைக்கிறது. பங்கு கேட்கவோ, பங்கு கொடுக்கவோ ஆட்கள் இல்லை. தானாகவே வளரும் முறையால் பிறரோடு பகிர்ந்து வாழும் இயல்பே அறியாதவர்கள் என்ற நிலையை அடைந்துள்ளனர் இன்றைய மாணவர்.

9. பணக்காரக் குடும்பத்தில் பிறந்து சகல வசதிகளும் பெற்றுக் கல்வி கற்பதிலும் சிறந்து மிகுந்த மதிப்பெண்களும் பெறும் மாணவனோ அல்லது மாணவியோ, ஒழுக்கமில்லாதவர் எனப் பெயர் எடுத்தால் மற்றவை எல்லாம் வீண் என்பதைத் தெளிவாகப் புரிய வைக்க வேண்டும்.

10.ஒருவரிடம் உண்மை இருக்க வேண்டுமென்றால், அதற்கு முதலாவதாகப் பணிவு இருத்தல் வேண்டும். இப்பணிவு, செல்வம் மிகுந்தவரிடம் பெரும்பாலும் இருக்காது. ஆனால் அத்தகையவரிடம் பணிவும் இருந்தால் அவர்கள் தான் வாழ்வின் சூட்சுமத்தைப் புரிந்து கொண்டவர்கள் என்பதைக் கற்பிக்க வேண்டும்.

11. அதற்கு, முதலில் ஆசிரியர்களிடம் அத்தகைய உணர்வுகள் இருக்க வேண்டும். அவ்வாறு வாழ்ந்து வாழ்வில் உயர்ந்த சான்றோர்களைப் பற்றி முதலில் கற்பிக்கும் ஆசிரியர்கள் உணர்ந்திருக்க வேண்டும். அவற்றை வகுப்பு ஆசிரியர்கள் தன் மாணவர்களுக்கு வாரம் ஒரு முறையாவது எடுத்துக்கூறவேண்டும்.

12. மாணவர்களிடையே திட்டமிடுதல் பற்றி விளக்கிக் கூற வேண்டும். பாராளுமன்றம் அமைத்து பொறுப்புகளைத் திறம்படச் செயலாற்றும் முறையை இக்கல்வி வயதிலேயே பயிற்றுதல் வேண்டும். நமக்கு நாமே திட்டம் போல அவரவரைச் சிந்திக்கத் தூண்டும் முறை வேண்டும்.

**13.ஒற்றுமை:-**

சமச்சீருடை மட்டும் போதாது. மாணவரிடையே , தன்னுடன் பயிலும் சக மாணவனைத் தன்னைப் போலவே மதித்து சாதி, மத, இனம் வேறுபாடு மறந்து நடக்கும் பண்பாட்டினை வளர்க்க வேண்டும்.

14. ஊடகங்கள் தரும் தவறான வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி, பயனுள்ளவற்றைப் பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். செல்போன் உபயோகத்தை தவிர்த்தல் வேண்டும்.

15. சுதந்திரம் என்ற பெயரில் வசதியுள்ள மாணவர்கள் பயன்படுத்துவது போல் நாமும் எல்லா நவீன ஆடம்பரப் பொருட்களையும் பயன்படுத்தலாம் என்ற ஆசையே இன்றைய இன மாணவரைத் தீய வழியில் செலுத்துகிறது.

இதற்குப் பள்ளிகள் மட்டும் தடைபோடுவது பெரும் அறிவீனமாகும். பெற்றோர் அதிலும் குறிப்பாக இருவரும் வேலைக்குப் போகும் பெற்றோர் தங்களின் பொருள் வசதியைப் பிள்ளைகளிடம் காட்டி பெருமையடிப்பதோ அல்லது அவ்வாறு தன் பிள்ளை கேட்பதையெல்லாம் வாங்கித் தருவதுதான் தம் பெற்ற கடமை என எண்ணுவதோ மிக மிக மோசமான மூடத்தனம் ஆகும்.

இதனால் தன் குழந்தைகளை மட்டும் கெடுப்பதோடு, உடன் பயிலும் மாணவர் மனதில் அபிலாசை, இயலாமை, ஏக்கம், போன்ற உணர்வுகளை நீருற்றாமலே வளர்க்கிறார்கள்.

ஆழ்மனதில் இத்தகு உணர்வுகளால் தாக்கப்படும் மாணவன் தன்னையறியாமலே அதற்கான வழிமுறைகளைப் பெற எந்த நிலையையும் மேற்கொள்ளகிறான். வன்முறை, பலவந்தம் என்பது நீண்டு கொலையில் கொண்டு முடிவதை அண்மைச் சம்பவங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன.

16. பகுதி நேரம், பாடப் புத்தகக் கல்வியாகவும், பகுதி நேரம் தொழில் செய்முறைக் கல்வியாகவும் இருந்தால் மாணவன் பள்ளியிறுதி வகுப்பை முடித்து வெளியேறும் போது, வாழ்வில் செயல்படும் திறனுடையவனாய்த் திகழ்வான்.

17. தங்களக்குள் குழுக்களை அமைத்துத்.தேவைகள் எது எனத் தெரிந்து கொள்ளவும், அத்தேவைகளைப் பெற எவ்வாறு உழைக்க வேண்டும் எனவும், அதற்கான திட்டமிடலையும், திட்டமிட்டவற்றை முறையாகவும் ஒற்றுமையாகவும் செயல்படுத்தவும் கற்றுத் தரும் கல்வியாக இக்காலக் கல்விக் கூடங்கள் திகழ வேண்டும்.

ஏழைகளுக்கு வீடுகட்டும் திட்டத்தில் அரசின் வீட்டு வசதி வாரியம், அடுக்குமாடி குடியிருப்புகளை அரசே அறிமுகப்படுத்தியது. அதைப்பற்றி பல்வேறு தனியார் நிறுவனங்களும் (Private Builders) என்று சொல்லக்கூடிய அடுக்குமாடி குடியிருப்புகளையே இன்று கட்டுவது என்பது இன்றைய காலத்தின் கட்டாயம். உதாரணத்திற்கு மாநகராட்சி பகுதிகளில் மக்களதொகை நெருக்கத்தினை கவனத்தில் கொள்வோம்.

அறிவியல் கல்வி மற்றும் கல்வித் துறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில் பொருளாதாரம் மாறிவரும் நிலையில் இன்னும் இந்த (Building Licence Actல்) மட்டும் Carpet Area என்று சொல்லப்படுகிற ஒரு மாணவனுக்கு 10 சதுர அடி கட்டாயம் தேவை என்பது மிக அதிகம். எந்த ஒரு அரசின் விதிமுறைகள் பொதுவாக உரிய முறையில் கடைபிடிக்கும் வகையில் இருத்தல் வேண்டும். புத்தகத்தோடு மட்டும் இருந்தால் காலப்போக்கில் வலுவிழந்ததாகிவிடும். புத்தகத்தில் மட்டும் இருந்தால் போதுமென எண்ணினால் அது ஊழலுக்குத்தான் அதிக வழிவகுக்கும் என்பதை மறக்க இயலாது. 1965ல் கொடுக்கப்பட்டுள்ள Building Licence Act பிரிட்டிஷ் அரசின் போது இயற்றப்பட்ட விதிகளின் சரி நகலாக உள்ளது. ஆனால் இந்தியா சுதந்திரம் அடைந்து இன்றைய மக்கள் தொகையை கணக்கில் கொள்கிறபோது நிச்சயம் இந்த கட்டிட உரிமம் விதியில் (building Licence) மாற்றம் தேவை என்பதை அறிய முடிகிறது.

இந்த Building Licence Actல் சினிமாத் தியேட்டர், திருமண மண்டபங்கள், கோயில்கள், காபி கடைகள் இன்னும் பலவும் இணைக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கென 10 சதுர அடி ஒரு மாணவனுக்கு என்று கட்டாயப்படுத்துகிறபோது நிச்சயம் பிற

பகுதிகளிலும் இதே 10 அடியையே மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கும் கேட்க வேண்டிய சூழல் ஏற்படின், நிச்சயம் ஒரு குழப்ப சூழலே ஏற்படும். மூன்று வயது குழந்தைக்கும் பதினாறு வயது குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.. சாதாரணமாக ஒரு இருக்கையின் அளவு 1½ அடியாகும். பள்ளி அறையில் காற்று மற்றும் வெளிச்சம் வேண்டும் என்பதில் மாற்று கருத்தில்லை. ஆனால் தேவையில்லாதநிலஅளவு வேண்டுமென்பதை நாம் பரிசீலிக்கப்பட வேண்டியதாகும். எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வகுப்பு வரைப்பட்டியல் மற்றும் எண் குறிப்பிட்ட 5.36 அடியே போதுமானது எனவே வளர்ந்து வரும் மக்கள்தொகையை கணக்கில் கொண்டு 5.36 அடிகளே போதுமானது என கருத்துரு வழங்கப்படுகிறது. (Annexure - II - Drawing of a Model Class Room)

பல்கலைக்கழகத்திலிருந்து மாற்றி கல்வி இயக்குனரகத்திற்கு கொடுக்கப்பட்ட மெட்ரிக் இணைப்பு விதிகளின் படி அங்கீகாரம் வழங்கப்பட்டு ஏற்கனவே நடந்துவரும் கல்வி நிலையங்கள் புதிதாக சிட்டிபாபு கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டுள்ள நில விகிதாச்சாரப்படி மாநகராட்சி 6 கிரவுண்டுகள், நகராட்சி 10 கிரவுண்டுகள் ஊராட்சி 2 ஏக்கர் வேண்டும் என விதி வகுக்கப்பட்டுள்ளது. இதனால் சென்னை பல்கலைக்கழகத்திலிருந்து மெட்ரிக் பள்ளிகள் பள்ளிக்கல்வி இயக்குநரகத்திற்கு மாற்றம் செய்த போதுள்ள விதிகளின் படி கடைப்பிடிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு. தொடர்ந்து இயங்கிவரும் மெட்ரிக் மற்றும் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகள் தொடர்ந்து இயங்க சிட்டிபாபு கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விதிகளிலிருந்து விலக்களித்து உத்தரவு வழங்கவேண்டும்.

அரசு (Government School) மற்றும் அரசு உதவிபெறும் (Aided School) மாநகராட்சி பள்ளிகள் (Corporation School) சவுக்கார்பேட்டை, மவுண்ட் ரோடு மற்றும் மக்கள் நெரிச்சல் நிறைந்த வடசென்னை, தென்சென்னை பகுதிகளில் சிட்டிபாபு கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டுள்ள 6 கிரவுண்டு இடம் இல்லாமல் தற்போது இயங்கி வருகின்றன. எனவே அப்பள்ளிகள் சிட்டிபாபு கமிஷன் அறிக்கையால் பெரும் பாதிப்படையும். பெரும்பாலும் மாநகராட்சி பகுதிகளில் சிட்டிபாபு கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை செயல்படுத்துவது மிகவும் கடினம். இதனால் ஏராளமான பள்ளிகள் மூடும் நிலைக்கு தள்ளப்படும். எனவே சிட்டிபாபு கமிஷன் பரிந்துரைகளை மறு பரிசீலனை செய்யலாம்.

வளர்ந்து வரும் மக்கள் தொகை பெருக்கத்தையும் மாறிவரும் சூழ்நிலைகள் கணினி மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி மக்கள் நெருக்கடிகள் மிகுந்த நகராட்சி நகர பள்ளிகள் இவற்றை கணக்கில் கொண்டு புதிதாக தொடங்க உள்ள மெட்ரிக் பள்ளிகளுக்கு 3 கிரவுண்டுகள் மேல்நிலைப்பள்ளிகளுக்கு 4 கிரவுண்டுகள் நிலஅளவைக் கொள்ளலாம். அதோடு மாடிக் கட்டிடங்கள் நிலப்பரப்பையும், அடித்தள பரப்போடு கணக்கில் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

மேலும் கட்டிட உறுதி சான்றிதழ் (Stablity) மற்றும் கட்டிட உரிமச் சான்றிதழ் (Licence) வழங்கும்போது நர்சரி பள்ளிகளுக்கு, பள்ளியின் பெயரால் (Approved Plan) வேண்டுமென்ற விதியை தளர்த்தி பட்டைய பொறியாளர் Charted Enginneer வரைபடம் கொடுத்தால் போதுமென்று வரைபட விதியை தளர்த்தியது போல் மெட்ரிக் பள்ளிகளுக்கும், மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகளுக்கும் வரைபடம் (Approved Plan) விதியை தளர்த்தி கடைப்பிடிக்கலாம்.

தற்போது அரசு பள்ளிகள், அரசு சார்பு பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளுக்கு இதுபோன்ற விதிகளால் கட்டிட உரிமம் பெற இயலாது அவதிப்படுகின்றன. பட்டைய பொறியாளர் வழங்கும் கட்டிட உறுதி சான்றிதழை ஏற்கும் போது அவருடைய வரைப்படத்தை ஏற்பதில் தவறேதும் இல்லை என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

## இணைப்புக் கட்டிடம்

மேலும் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை மாநகராட்சி பள்ளிகள் (புட்டசெட்டி மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி) இன்னும் பல பள்ளிகள் ஆறுமுக நாடார் மேல்நிலைப்பள்ளி மற்றும் இந்து உயர்நிலைப்பள்ளி இன்னும் தமிழகத்தில் ஏராளமான பள்ளிகள் இணைப்பு கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. எனவே இடநெருக்கடியை கருத்தில் கொண்டு மிக அருகாமையில் இயங்கிவரும் இணைப்பு கட்டிடங்களுக்கு கட்டிட உறுதி சான்றிதழ், கட்டிட உரிமம், சுகாதார சான்றிதழ், தீயணைப்பு சான்றிதழ் பெற்று அனுமதிக்கலாம்.

மேலும் (Revewal) அங்கீகாரம் புதுப்பித்தல் 1965 – ஆம் ஆண்டு விதிப்படி, (Building Licence Act)ன் படி (Stablitity Certificate) கட்டிட உறுதி சான்றிதழ் அதிகாரி 3 ஆண்டுகள் மட்டுமே வழங்குவதால் 3 ஆண்டுகளுக்கு மட்டுமே கட்டிட உரிமம் மாவட்ட ஆட்சியாளர்களால் வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில் 3 ஆண்டுகள் மட்டுமே நமது கல்வி இயக்குனர்களால், அங்கீகாரம் புதுப்பிக்கப்படுகிறது. 3 ஆண்டுகள் குறுகிய காலமே உள்ளதால், நீண்ட தொடர் செயல்முறைகளுக்குப்பின் ஒன்றன் பின் ஒன்றாக அனைத்து ஆவணங்களை பெற்று, ஆய்வுகளை பூர்த்தி செய்கிறபோது, கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் முடிந்துவிடும் சூழல் ஏற்படுகிறது. உடனேயே அடுத்த அங்கீகாரம் புதுப்பித்தல் படலம் மீண்டும் தொடர்கிறது இதனை தவிர்க்க உறுதியான கட்டிடங்களுக்கு 5 ஆண்டுகள் கட்டிட உறுதி சான்றிதழ் மற்றும் உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்.

### உட்கட்டமைப்பு பற்றி சிறு தீர்வு

1. தற்போதுள்ள நில மதிப்புப்படி ஒரே இடத்தில் நிலம் வாங்க இயலாது அருகாமையில் நிலம் வாங்கி இருந்தாலும் அதை ஏற்கலாம்.
2. சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பள்ளி கல்வி இயக்குனரகத்தில் மெட்ரிக் பள்ளிகள் மாற்றம் செய்தபோது பல்கலை கழக விதிகள் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அந்தப்பள்ளிகள் தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்படுதல் வேண்டும்.
3. நிலத்தின் அடிப்பரப்பளவை கணக்கில் கொள்வதுப்போல் அதன் மேல்தளங்களின் பரப்பளவையும் அதே கணக்கில் கொள்ள வேண்டும்.
4. பிரிட்டன், அமெரிக்க போன்ற நாடுகளில் பின்பற்றபடுவதைப்போல் நிலபரப்பிற்கு ஏற்றவாறு மாணவர்களின் எண்ணிக்கையை வரையறை செய்து அனுமதிக்கலாம்.

## III தனி வாரியம் அமைப்பு தொடர்பாக 16.04.2007 அன்று தெருவிக்கப்பட்ட கருத்து
## தனி வாரியம் தேவை அறிக்கை பக்கம் 126 - 12 - 24

**பள்ளிக் கல்வி வாரியம் (State Board) :** அரசின் மாநில கல்வி வாரியம், மெட்ரிக்குலேஷன் ஆங்கிலே இந்தியன், ஓரியண்டல், நர்சரி இவற்றிற்கு தனித்தனி குழு தேவையில்லை என்று கூறப்பட்டுள்ளது. இந்தக்குழு அந்தந்த பிரிவில் உள்ள பள்ளிகளின் பணிகளை ஆராய்ந்து ஆலோசனை கூறி கல்விநிலையங்கள் மற்றும் உரிய பள்ளிகளின் பணிகளை ஆராய்ந்து ஆலோசனை கூறி கல்விநிலையங்கள் மற்றும் உரிய மாற்றங்களுக்கு ஏற்ப முடிவெடுத்து பிரச்சனைகளை தீர்ப்பதும் முன்னேற்றத்திற்குரிய புதிய யுத்திகளை அரசுக்கு அவ்வப்போது கூறுவதும் போன்ற பணிகளை சிறப்பாக செய்து வருகின்றது. இதன் பணிகள் கடந்த காலங்களில் முழு திருப்தியடையும் நிலையில் உள்ளது. நீதிமன்றங்களும் இதன் கடமைகளை உறுதிபடுத்தி பல தீர்ப்புகள் வந்துள்ளன. தமிழகத்தில் உள்ள மைனாரிட்டி நிறுவனங்கள் மெட்ரிக் பள்ளிகள் நடத்தி வருகின்றனர். ஏற்கனவே இந்த மைனாரிட்டி நிறுவனங்கள் தங்கள் நிலைபாட்டை மற்றும் தங்கள் உரிமைகளை நிலை நிறுத்தி நீதிமன்றங்களிலிருந்து பல தீர்ப்புகள் பெற்றுள்ளன. இந்த தனிவாரிய அமைப்பால் அவற்றிற்கு பெரும் பிரச்சனைகள் ஏற்படும். எனவே தனிவாரிய அமைப்பை தவிர்க்கலாம். அதோடு பள்ளிகளை உரிய முறையில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கவும் எளிதாக இருக்கும் அதோடு அதன் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று அனைவரும் எதிர்ப்பார்க்கின்றனர். எனவே இந்த வாரியத்தை கவனிப்பதற்கு மேலாளர் ஒருவரை நியமனம் செய்து ஆளுகை செய்யலாம். State Board, ஓரியண்ட, மெட்ரிக் மற்றும் ஆங்கிலோ இந்தியன் இவற்றிற்கு தற்போதுள்ள தனித்தன்மைப் பாதுகாக்கப்பட வேண்டும்.

சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து பள்ளிக் கல்வி இயக்குனர் அலுவலகத்திற்கு மெட்ரிக் பள்ளிகளை மாற்றம் செய்தபோது அதற்கென்று தனி விதி மற்றும் தனித்தன்மை பாதுகாக்க உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தனித்தன்மையால் மெட்ரிக் பள்ளிகளுக்குரிய உரிமை இதுவரை பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. அப்படிப்பட்ட தனித்தன்மையால் மெட்ரிக் பள்ளிகள் சூழ்நிலைக்கேற்ப முடிவெடுத்து நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளது. இதன் அடிப்படையில் நீதிமன்றங்களில் பல வழக்குகள் நடைபெற்று தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

பொதுவிதியை உருவாக்க முற்பட்டால் தமிழகத்தில் தற்போது இயங்கிவரும் மத்திய அரசுப் பள்ளிகள் CBSE பள்ளிகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து தமிழகத்தில் இயங்கிவரும் பள்ளிகளை பொதுக்கல்வி விதியின் கீழ் நாம் கொண்டுவர இயலாது. எனவே, மெட்ரிக் பள்ளிகளுக்குள்ள நடைமுறையில் உள்ள விதியில் நாம் அதிக கவனம் செலுத்த தேவை இல்லை என்று கருத வேண்டியுள்ளது. அவற்றை மாற்றம் செய்யவும் தேவை இல்லை.

## IV 1-ம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்புவரை ஞானம் கமிட்டியின் பரிந்துரை பாடத்திட்டத்தை முழுமையாக கொண்டு வரலாம். அது தொடர்பான A Comparative Study of Matric and State Board இணைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அதை பரிசீலிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது

தற்போது அரசு நுழைவுத் தேர்வை ரத்து செய்துவிட்ட நிலையில் நேரடியாகப் பாடத்திட்டத்தில் பெறும் மதிப்பெண் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக தெரிகிறது. குறைந்த பாடத்திட்டத்தில் அதிகம் மதிப்பெண் கொடுத்தால் மாணவர்களின் தரம் இறங்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாடத்திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் அவசியமாகிறது. பாடத்திட்டத்தை சுருக்கியோ குறைத்தோ கொடுத்தால் மேல் வகுப்பிற்கு செல்லும் போது தரமில்லாத கல்வியை பெற்று இளைஞர்கள் எந்த நிலையிலும் தேர்வுச் செய்யப்படாத நிலையில் முடங்கி பெரும் சோதனையை அனுபவிக்க நேரிடும். சமச்சீர் தொடர்பாக தமிழகத்தில் உள்ள பல இடங்களில் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பொதுமக்கள் பள்ளி மாணவர்களிடம் கருத்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது அதில் கலந்து கொண்ட பெற்றோர் கற்கும் திறன், கற்றல் சூழல் அறிவைப் பெறுதல், பாடத்திட்ட தரத்தை மேம்படுத்தல் போன்ற கருத்தை தான் வெளிப்படுத்தினர் குறிப்பாக அரசு பள்ளி, அரசு சார்பு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மெட்ரிக் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு நாங்கள் ஒன்றும் இளைத்தவர்கள் அல்ல எங்களுக்கு நல்ல உட்கட்டமைப்பு வசதிகள் குறைந்தபட்ச மாணவர்களின் எண்ணிக்கைக்கு உரிய வகுப்பறை நல்ல ஆசிரியர்களையும் எங்களுக்கு உருவாக்கித் தாருங்கள் நாங்கள் அனைவரின் எதிர்பார்ப்பு படி நன்றாக படித்துக் காட்டுகின்றோம் என்று தங்களுடைய அதங்கத்தை நன்றாக வெளிப்படுத்திப் பேசினார்கள். கற்பிப்பவரின் திறனை பொறுத்து தான் மாணவர்கள் திறன் அமையும் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

1-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் மெட்ரிக் பாடத்திட்டத்தில் இருப்பது போல் மற்றும் ஞானம் கமிட்டியின் பரிந்துரையின்படி 6-ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வரலாறு, புவியியல் இரண்டு தாள்களாக பிரித்துக் கொடுக்கும்போது மன உளைச்சலும், அழுத்தமும் குறைகிறது. அதோடு பாடத்திட்டத்தில் உள்ள உட்பொருள் (Content) அறிவு விரிவாக்கப்படுகிறது.

VI-ஆம் வகுப்பிலிருந்து பாடங்கள் மற்றும் தேர்வுகள் இரண்டு பகுதியாக பிரித்து ஞானம் கமிட்டியின் பரிந்துரைபடி மொழி – I, மொழி – II, ஆங்கிலம் – I, ஆங்கிலம் – II, கணிதம், விஞ்ஞானம், வரலாறு மற்றும் புவியியல் ஆகியவை மெட்ரிக் பாடத் திட்டங்களில் உள்ளது போல் இரண்டு தாள்களாகப் பிரித்து வழங்கலாம். குறிப்பாக அரசு பள்ளிகள், தனியார் உதவி பெறும் பள்ளி மாணவர்களும், மெட்ரிக் பள்ளியில் பயிலுகின்ற மாணவர்கள் போல் பயில

வேண்டுமென்ற எண்ணங்கள் சமச்சீர் கருத்தாய்வுக் கூட்டங்களில் பொதுமக்கள், மாணவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையில் கொண்டு வரலாம். மேலும், மாணவர்களுக்கு இரண்டு தேர்வு தாள்களாக பிரித்துக் கொடுக்கும்போது மன உளைச்சலும், மன அழுத்தமும் குறைகிறது. அதோடு பாடத்திட்டத்தில் உள்ள உட்பொருள் (content) அறிவு விரிவாக்கப்படுகிறது. கல்வியில் இன்றைய தேர்வுக்கேற்ப காலத்திற்கேற்ற போட்டி (competition) என்று சொல்லப்படுகின்ற திறமைகளை வளர்கின்ற கல்வித்திட்டங்களை கொண்டு வரலாம்.

நமது கல்வித்திட்டம் (facts top down) மேல்நிலை கல்வி முதல் தொடக்கக் கல்வி வரை உள்ள கல்வி திட்டங்கள் ஏனைய ஆசிய நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் அவர்களுக்கென தேசிய நாடுகளின் மொழிகளில் ஏதாவது ஒன்றை நடுநிலைப் பள்ளிகளில் ஏற்றுக் கொண்டுள்ளன. அவைத் தங்கள் கல்வித் திட்டத்தின் மூலம் தங்கள் திட்டங்களை சர்வதேச முறைக்கு ஏற்றபடி மாற்றியமைத்துள்ளன. ஏனெனில் ஏதாவது ஒரு ஐரோப்பிய மொழியை பயிலுகிறபோது அது அவர்களை சமுதாயமாக, அரசுமயமான, பொருளாதாரமாக மற்ற நாடுகளுடன் இணைப்பதற்கான அல்லது இணைவதற்கான ஒரு வழி என திடமாக நம்புகின்றனர். (உம்.) ஐரோப்பிய கூட்டமைப்பு (Erop)

மேலும் வெளிநாட்டில் நம் இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதற்கான ஒரு வழியையும் அதன் மூலம் அந்நியச் செலாவணியை பெறவும் நமது கல்வியும் சமசீராக சர்வதேச நாடுகளுடன் போட்டியிடவும் முடியும். அதே போல் இந்தியா விடுதலைக்கு முன்னதாகவே ஒரு பொதுமொழி அகில இந்திய அளவில் தேர்வுச் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்னும் அபரித வளர்ச்சியைப் பெற்றிருக்குமென அறிவியல் ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். ஒரு புறம் மக்கள் தொகைப் பெருக்கத்தை குறை கூறுகின்ற நேரத்தில் இன்னொருப்புறம் அதே மக்கள் தொகையே, மக்கள் சக்தியே பொருளாதாரம், சமுதாய முன்னேற்றம், தொழில் நுட்பத் திறமை ஆகியவற்றில் நம் இந்தியாவை பலமிக்க நாடாய் மாற்றியுள்ளது. எனவே, நமது மக்கள் சக்தியே நமது தேசத்தின் சொத்து என அறிஞர்களும், அரசியல் ஆய்வாளர்களும், கல்வியாளர்களும் கணித்துள்ளனர்.

நமது ஜனாதிபதி டாக்டர் APJ அப்துல் கலாம் அவர்கள் கூற்றுப்படி ஆரோக்கியமான திறமையான, சாதுரியமான இளைஞர் கூட்டமே நமது எதிர்கால இந்தியாவை சரியான இலக்கில் அல்லது இலட்சியத்தில் பயணிக்க வைக்கிறது. எனவே இலக்கை அடைவதில் நமதுக் கொள்கை ஓர் முக்கிய காரணம் என்பதை மறக்க இயலாது மிகவும் முக்கியமாக ஆங்கில அறிவே நமது நாட்டின் ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும் இன்னும் சமுதாயப் புரட்சிக்கும் வித்திட்டது என்றால் மிகையாகாது. எனவே, சர்வதேச அளவிற்கு நமது மாணவர்களை தயார் செய்யக்கூடிய அளவில் நமது இளைஞர்கள் கல்வி பெறுவது மிகவும் அவசியமாகிறது.

இந்தியாவில் கல்வி சீர்திருத்தத்திற்கு அமைக்கப்பட்ட அனைத்து குழுக்களும் பொது மாநில மொழிக் கல்வியை நிலைநிறுத்த பரிந்துரை செய்துள்ளது. இதையே அரசுப் பள்ளி மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பாடத் திட்டம் அமைத்து போதிக்கப்படுகிறது. இதையும் மீறி 99% பெற்றோர் ஆங்கில கல்வி போதிக்கும் பள்ளிகளில் அதிகமான குழந்தைகளை சேர்க்க முற்படுகின்றனர். அதோடு பெற்றோர்களிடம் நல்ல வரவேற்பையும், வளர்ச்சியையும் பெற்றுள்ளது. இந்த கல்வி நல்ல தரமுடையதன்று அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த தரத்தின் அடிப்படையில் மாற்றங்களை அரசு மற்றும் அரசு சார்புப் பள்ளிகளில் கொண்டு வரலாம்.

வெளிநாடுகளிலிருந்து இந்தியாவில் பொருட்கள் மட்டும் இறக்குமதியாகவில்லை, மேலைநாட்டு நிறுவனங்கள் மட்டும் கால்பதிக்கவில்லை. பள்ளிகளும் இந்தியாவில் வேரூன்றி விட்டது. கல்வித் தரத்தை உறுதிபடுத்த வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் போட்டிபோட்டு அடியெடுத்து வைத்து பல இடங்களில் கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளது. இவற்றில் பெரும்பாலும் இந்திய மாணவர்கள் குறிப்பாக தமிழக மாணவர்கள் அதிகமாக இப்பள்ளிகளில் நுழையும் வாய்ப்பு உள்ளது. மெட்ரிக் பள்ளிகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது பலம் இழக்கும் வகையில் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் இந்தியாவில் இயங்கிவரும் மத்திய அரசுப்பள்ளிகள் (CBSC) பள்ளிகளுக்கும் மற்றும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுக்கும் வாசலை அகலப்படுத்தி திறந்து வைப்பது போலாகும்.

தமிழகத்தில் மெட்ரிக் பள்ளிகளின் பாடத்திட்டம் குழந்தைகள் கற்கும் திறன் மற்றும் ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்கும் திறனில் பெற்றோர் முழு திருப்தியடைந்துள்ளனர். மெட்ரிக் பள்ளிகளின் திறன் இத்துடன் இணைக்கப்பட்ட மூலம் மெட்ரிக் பள்ளிகளின் தேர்ச்சி விகிதத்தில் முன்னணி பெற்றுள்ளனர் என்பதும் +2 அரசுத் தேர்வில் பாடவாரியாக 100/100 பெற்ற மெட்ரிக் மாணவர்களின் எண்ணிக்கையில் முன்னணி பெற்றுள்ளதும் (Annexure - III) தெளிவாகத் தெரிகிறது.

+2 அரசுத் தேர்வில் 1000க்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்ற மெட்ரிக் மாணவர்களின் எண்ணிக்கையும் பிறவகைப் பள்ளிகளை விட அதிகம் என்பதும் (Annexure II) தெரிகிறது. இதன் மூலம் மெட்ரிக் மாணவர்களின் தரம் தெள்ளத் தெளிவாய் நமக்கு தெரிகிறது. அதன் தரம் மற்றும் அதன் சுவை கிடைக்காத பிள்ளைகள் பலருக்கு ஏக்கம் இல்லாமல் இல்லை. எனவே, அதற்கேற்றாற்போல் அரசுப் பள்ளிகள் அரசு சார்புப் பள்ளிகளில் மெட்ரிக் பள்ளிகளுக்கு இணையாக அனைத்து வகையிலும் பாடத்திட்டம், உட்கட்டமைப்பு வசதிகள், கற்பிக்கும் திறனை உயர்த்தி சமச்சீர் செய்யலாம்.

மெட்ரிக் பள்ளிகளின் பாடத்திட்டத்தில் Dr. ஞானம் அவர்களின் தலைமையிலான குழுவின் பரிந்துரையின்படி இந்த ஆண்டுகள் 10ம் வகுப்பு அரசுத் தேர்வுக்கு தயாராகி வருகின்றனர். இப்பாடத்திட்டம் தொடர்பாக Dr. ஞானம்

கமிட்டியின் அறிக்கைக்கு முன்னும் பின்னும் பல்வேறு ஆய்வுகள் செய்து கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்களால் பெரிதான விவாதங்களை மேற்கொண்டு உரிய திருத்தங்களுடன் வெளிவந்துள்ளது. எனவே, மெட்ரிக் பாடத்திட்ட முறையில் Dr. ஞானம் கமிட்டி அளித்த எந்தவித மாற்றமும் தேவையில்லை. இந்த பாடத்திட்டத்தை குழந்தைகளுக்கு சுமையென்றோ அல்லது அது தொடர்பாக பெரிய விமர்சனங்கள் இதுவரை எழவில்லை. State Board மாணவர்களுக்கும் இந்தப் பாடத்திட்டத்தை தொடரலாம். (Annexure - IV - V) பார்க்கவும்.

## V. அரசுப் பள்ளிகள் அரசு சார்பு பள்ளிகள் பின்னடைவுக்குரிய முக்கிய காரணங்களும் மற்றும் பரிசீலிக்கப்பட வேண்டிய காரண காரியங்கள்

ஆசிரியர், மாணவர் விகிதாச்சாரமற்ற ஒரே வகுப்பில் 120 அதற்குமேல் மாணவர்கள் எண்ணிக்கை கொண்ட வகுப்புகள் ஆசிரியர்களால் பாடம் நடத்த இயலாத அளவிற்கு இன்று ஒரு சில அரசு சார்பு பள்ளிகளில் (Aided Schools) மாணவர்களின் எண்ணிக்கை உள்ளது. அதே போன்று தனியார் பள்ளிகள் குறிப்பாக ஒரே ஒரு பிரிவு மட்டும் ஆங்கிலவழி கல்வி 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை நடத்திக் கொள்ளலாம் என்பது விதி. ஆனால் தமிழகத்தில் அரசு சார்பு (Aided Schools) பெரும்பாலான பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு A - பிரிவினில் தனியார் பள்ளிகளில் 120 அல்லது 130 மாணவர்கள் பயில்கின்றனர். மாணவர்களின் எண்ணிக்கை ஆசிரியரின் விகிதாச்சாரமற்ற நிலையில் உள்ளன. 6A பிரிவிற்கு பதில் VI-A1, VI-A2, VI-A3, VI-A4 என்று உட்பிரிவு பிரிக்கப்பட்டு விதிகளுக்கு புறம்பாக PTA மூலம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு நடத்தப்படுகின்றனர். மேலும் PTA மூலம் நியமிக்கப்படும் ஆசிரியர்களும், விதிகளுக்குப் புறம்பாக அதாவது ஒரு ஆசிரியர் ஓய்வு பெறும்போது அல்லது திடீரென மரணமடையும்போது புதிய ஆசிரியர்கள் அவாது பணியில் நியமிக்கப்படும் வரை மட்டுமே PTA மூலம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது விதி. ஆனால் அரசு சார்பு உதவி பெறும் பள்ளிகள் (Aided Schools) மாநகராட்சி அரசு பள்ளிகள் எந்த விதிகளுக்கும் உட்படாமல் விதிகளை தவிர்த்து VI-A1, VI-A2, VI-A3, VI-A4 என புதிய பரிணாமத்திற்கு வித்திட்டு மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வராமலும் கல்வியில் அவர்களுக்கு இருக்கும் உரிமைகளையும், ஆதங்கத்தையும் சிதைப்பதால் பெரும்பாலும் திறமையுள்ள மாணவர்கள் இனம் காணப்படாமலும் வாடி வதங்கிய நிலையில் உள்ளனர். இம்மாணவர்கள் விதிமுறைகள்படி 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சாரப்படி நியமனம் செய்யலாம்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் (Aided Schools) ஆங்கில மொழிவழி பாடம் நடத்தும் ஆசிரியர்களே தமிழ் மீடியம் இணைந்து எடுக்கின்றார்கள். இதனால் தமிழ் மற்றும் ஆங்கில மீடியத்தில் கிடைக்கவேண்டிய அதிகபட்ச அறிவு மாணவர்களுக்கு கிடைக்காமல் போய்விடுகின்றது.

தமிழ் மீடியத்திற்கு தனியாகவும், ஆங்கில மீடியத்திற்கு தனியாகவும் ஆசிரியர்கள் நியமனம் செய்வதால் சம்மந்தப்பட்ட பாடத்திட்டங்களில் உரிய அறிவை மாணவர்கள் எளிதாக பெறவும் சமச்சீர் கல்வி வெற்றிபெறவும் அதிக வாய்ப்புள்ளது.

மெட்ரிக்குலேஷன் ஆங்கிலோ இந்தியன் மத்திய அரசுப் பள்ளிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஆங்கில பேச்சுத் திறன் கல்வி முறையை அரசு சார்புப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்தால் அனைத்து மாணவர்களும் பயனடைவார்கள். சமச்சீர் கல்விக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

பொதுவாக தொடக்க கல்வியில் பள்ளி இறுதி வகுப்பு தேர்வு பெற்று ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களே நியமனம் செய்யப்பட்டு பாடம் நடத்தப்படுகிறது. அவர்களுக்கு அதிகமான ஆங்கில பயிற்சி அரசு அவ்வப்போது வழங்க வேண்டும். ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை V-ம் வகுப்பு வரை மட்டும் பாடம் நடத்த நியமனம் செய்ய வேண்டும். யஷ்பால் கமிட்டியின் பரிந்துரைகளில் ஒரு பகுதியில் உள்ள பள்ளிகளில் பாடம் நடத்தும் ஆசிரியர்கள் (குழு அமைத்து) தங்கள் மாணவர்களுக்குத் தேவையான பாடத் திட்டத்தை நிர்ணயிக்கலாம். அது தவிர வெளியில் உள்ள கல்வியாளர்கள் குழுவில் இடம் பெற்று அந்தப் பகுதியில் பாடத்திட்டங்கள், புத்தகங்கள், ஆசிரியர் பயிற்சி போன்றவற்றை நிர்ணயம் செய்யலாம்.

நர்சரி பள்ளிகளையும் மற்றும் ஆங்கிலத்தையும் அரசுப் பள்ளிகளில் கொண்டு வருதல் வேண்டும். ஓர் அரசுக்கு தம் குடிமக்கள் அனைவருக்கும் கல்வி அறிவு கொடுக்க வேண்டுமென்ற கட்டாயம் உள்ளது. அதன் அடிப்படையில் அரசு தனது கடமையை செய்து கொண்டிருக்கிறது. சட்டப்படி 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் கல்வி அறிவு கொடுக்க வேண்டிய நிர்பந்தம் அரசுக்குள்ளது. அதன் அடிப்படையில் ஒருவர் தன் பெயரை மட்டும் எழுதவும் மற்றும் உச்சரிப்பதற்கும் தெரிந்தாலே அவன் கல்வி அறிவு பெற்றவன் என்று அரசுப் பட்டியலில் வந்து விடுகிறான். இதன் அடிப்படையில் குறிப்பாக குறைந்தபட்ச கல்வி அறிவு பெறுவதற்கே நமது அரசு கல்விக்கொள்கை அமைந்துள்ளது.

கல்வித்தரம் (Quality & Excellence) பொதுவாக தனியார் பள்ளிகளில் அனைவருக்கும் கல்வி என்ற கொள்கையில் மாறுபாடு உள்ளதாகவும் மேலும் தரமான கல்வி என்ற நிர்பந்தத்தில் உள்ளன. இதைச் சமம் செய்வதற்கு அரசு பள்ளிகளிலும் அரசு சார்ந்த பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளில் பயிற்றுவிப்பது போன்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2003 டிசம்பர் 19, 20, 21 தேதிகளில் எகிப்தில் கெய்ரோவில் நடந்த 3 நாடுகள் அடங்கிய மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி UNESCO கல்விக் கொள்கையை பரிந்துரையை செய்துள்ளது. அதில் (Early child and Extension)னில் குழந்தைப் பருவம் முதல் கல்வி அளித்தல் வேண்டும். இதனையே உலக மொழி நிபுணரும், சமூக ஆய்வாளரும் உலக புகழ்பெற்ற பேராசிரியர் நாம்சாஸ்கி (Naom Chomsky) அறிவுறுத்தியுள்ளார். இதையே நமது கோத்தாரி கமிட்டி 1964 – 66 (316; 337)ல் கூறியுள்ளபடி குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பக் கல்வியை தரமாகக் கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

மேலும் நீதிபதி மோகன் கமிட்டி தனது பரிந்துரையில் தொடக்கக் கல்வி 3–ம் வகுப்பிலிருந்து ஆங்கில போதனை குழந்தைகளுக்கு போதுமானதாக இல்லை என்று 1999 மோகன் கமிட்டி தனது அறிக்கையில் கூறியுள்ளது. அதை நிவர்த்தி செய்யும் வகையில் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் குழந்தைப் பருவத்திலிருந்து நர்சரி மற்றும் பிரைமரியிலிருந்து உலகத் தரத்திற்கேற்றாற்போல் பாடத்திட்டம் வகுத்து தரமானதாக தமிழகத்தில் நடத்தி வருகின்றன. சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து பள்ளிக்கல்வி இயக்குனரகத்திற்கு மெட்ரிக் பள்ளிகள் மாற்றம் செய்தபோது குறைந்த எண்ணிக்கையுடன் இருந்த பள்ளிகள் இன்று சுமார் 3374 பள்ளிகளாக உயர்ந்த தரத்துடன் இன்று தமிழகத்தில் தனித்தன்மையுடன் விளங்குகிறது. தனித்துவம் அல்லது பொதுவாக கல்வியில் எந்த ஒரு புதிய கொள்கை அல்லது புதிய படிவம், புதிய பாடத்திட்டம் போன்றவற்றை பரிசோதனை செய்து பார்ப்பதே மெட்ரிக் மற்றும் நர்சரி பள்ளிகளில் தான் அந்த சோதனை வெற்றிபெற்ற பிறகு தான் அரசு பள்ளிகள் அல்லது அரசு சார்பு பள்ளிகளில் நடைமுறைப்படுத்தும் பழக்கம் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதுவரை அந்த சோதனை

தோல்வியடைந்ததில்லை. பொதுமக்களும் இதுவரை அது தொடர்பான பாடத்திட்டத்தை விமர்சனம் செய்யவில்லை எல்லாவற்றிற்கும் முன்மாதிரியாக விளங்குகின்றன. சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரித்து பள்ளிக்கல்வி இயக்குனரகத்தில் இணைக்கப்பட்டது. முதல் தொடர்ந்து இன்றுவரை சர்வதேச அரங்கில் மெட்ரிக் பள்ளிகள் முன்மாதிரியாக செயல்பட்டு வருகின்றது.

பொதுவாக முன்காலத்தில் நல்ல கல்விக்கு நமது இளைஞர்கள் வெளிநாடு செல்லவேண்டிய நிர்பந்தம் இருந்தது. நல்ல சம்பளம் பெறுவதற்கு வெளிநாடு செல்ல வேண்டிய நிர்பந்தம் இருந்தது. அதோடு நல்ல படைப்பாளிகளுக்கு உரிய கல்வியை காண்பதற்கு வெளிநாடுகளை நம்பி படையெடுத்த காலம் மாறிப்போய் விட்டது.

நிலைமை தலைகீழாக வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக தமிழகத்தில் கல்விக்காக படையெடுக்கும் நிலை இன்று மாறிவிட்டது. நமது தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகள் மூலமே தொழில் கல்வியல் புரட்சி நடைபெற்று அதன் மூலமாய் தமிழகம் மற்ற மாநிலங்களை விட தலை நிமிர்ந்து நிற்கிற வேளையில், இம்மிகப்பெரிய முன்னேற்றம் பெரும்பங்கு வகிப்பது மெட்ரிக் பள்ளிகள் என்பது அனைவரும் அறிவர்.

தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டுள்ள நம் தமிழகத்தில் இன்னும் புதிதாக 36 மேலை நாட்டு நிறுவனங்கள் வர இருக்கின்றன. இதுவரை பத்தாயிரத்துக்கும் (10,000) அதிகமான வெளிநாட்டினர் நம் தமிழகத்தில் வந்து இங்குள்ள நிறுவனங்களில் பொறுப்புகளில் சேர்ந்து இங்கேயே தங்கள் வீடுகளைக் கட்டி அதில் வாழ்ந்து வருகின்றனர்.

## VI மெட்ரிக் பள்ளிகள் சார்பாக இன்றைய சூழலில் பரிசீலிக்க படவேண்டிய_பொதுவான கருத்துரு 27.02.2007 சமர்பிக்கப்பட்டது

10 ஆண்டுகள் தொடர்ந்து ஒரு பள்ளிக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்கியிருந்தால் அப்பள்ளிக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கவேண்டமென்ற விதி உள்ளது. இதை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும். அங்கீகாரம் நிரந்தரம் பெற்றுள்ள பள்ளிகள் நடைமுறையில் உள்ளபடி கட்டடி உறுதிச் சான்றிதழ், கட்டிட உரிமம், தீயணைப்பு மற்றும் சுகாதார சான்றிதழ் பெற்று தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டும்.

உரிய தீயணைப்பு துறை அதிகாரியிடமிருந்து முதுன்முதலில் ஆய்வு செய்து உரிய வகுப்பு எடுத்து, உரிய தீயணைப்பு சாதனங்கள் உள்ளதா என ஆண்வுசெய்தபின்னே தடையில்லா சான்று வழங்குகின்றனர். ISI பெற்ற நிறுவனங்களிடமிருந்து தீயணைப்பு சாதனங்களை மறு நிரப்பு (Refill) செய்து சான்றிதழ் பெற்றிருந்தால் போதும். மீண்டும் புதியதாக தீயணைப்பு துறைக்குச் சென்று சான்றிதழ் பெறுவதை தவிர்க்கலாம். இந்த மறுநிரப்பு ஆவணங்களை சரிபார்க்கும் பெறுப்பை மெட்ரிக் கல்வி ஆய்வாளர் அவர்கள் கவனிக்க அறிவுரை வழங்கலாம்.

ஆய்வுக்கூட வசதி மாணவர்கள் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப தேவையான அளவு செய்யப்படல் வேண்டும். மேல்நிலைப்பள்ளிக்கு இயற்பியல் (Physics) வேதியியல் (Chemistry) உயிரியல் (Biology) மற்றும் கணினி (Computer) ஆகியவற்றிற்கு தனித்தனியாக ஆய்வுக்கூட வசதி செய்யப்பட வேண்டும். மெட்ரிக் பள்ளிகளுக்க (10ஆம் வகுப்பு வரை) இயற்பியல் மற்றும் வேதியியல் (Physical Science) ஆய்வுக்கூடமும், உயிரியல் (Biology) ஆய்வுக்கூடம் தனித்தனியாக தேவையில்லை.

கல்லூரிகளின் தரத்தை செம்மையாக்க பல்கலைக் கழகங்கள் அரசு கல்லூரிகளுக்கும் தனியார் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி (Autonomous) வழங்கி வருகிறது. அக்கல்லூரிகள் தங்களுக்குரிய பாடத்திட்டங்களை தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் வந்தபோது அவை முதலில் சென்னை பல்கலைக்கழகத்திற்குப் பிறகு அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டிருந்தன.

பின் அவை தனித்தன்மை பெற்ற Deemd University என்ற நிலைக்கு எட்டி தற்பொழுது University என்ற நிலைக்கு மாறியுள்ளது. கல்லூரி கல்வித் தரத்தில் காலத்திற்கேற்ப போட்டியிடும் உலகில் மாற்றங்கள் கொண்டு வந்திருக்கின்றன. மெட்ரிக் பள்ளிகள் இத்தகைய சர்வதேச கல்விக்கு ஈடு கொடுக்கும் வகையில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும்.

## VII ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு வேண்டும்

அண்மையில் குழந்தைகளுக்கு பாடம் நடத்தும் ஆசிரியர்கள் பெரும் தொல்லைகளுக்குள்ளாகின்றனர். மாணவர்களின் குறும்புத் தனம் மற்றும் சொந்த விருப்பு வெறுப்பு காரணங்களால் மாணவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். அதற்கு முக்கிய காரணம் ஆசிரியர்கள் என்று கைது செய்து சிறையில் அடைத்துவிடுகின்றனர். இதனால் ஆசிரியர் சமுதாயம் தங்கள் பணியை செய்ய மிகவும் அச்சப்படுகின்றனர். எனவே முதலில் துறைவாரியான (Departmental Enquiry) விசாரணைக்கு பிறகு காவல் துறையினரை அனுமதிக்கும் குறிப்புரை ஒன்றை சேர்க்கலாம்.

## VIII விளையாட்டு மைதானங்கள்

மாநகராட்சி, நகராட்சி, தவுண் பஞ்சாயத்து, பஞ்சாயத்து விளையாட்டு மைதானங்களில் சுயசார்பு பள்ளி (Self Supporting School) குழந்தைகளை இலவசமாக விளையாட அனுமதித்தல் வேண்டும்.

இப்படிக்கு,

டி. கிறிஸ்துதாஸ்
சமச்சீர் கல்வி கமிட்டி உறுப்பினர்
மற்றும்
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு நர்சரி பிரைமரி மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்
நம்பர். 64, டி.பி. கோயில் தெரு,
திருவல்லிக்கேணி. சென்னை – 600 005.

# ANNEXURE-I

every year from the State of Tamil Nadu. We are afraid, as rightly pointed out by the learned counsel, no one had bestowed their attention (committee or the State) to consider all these important and relevant aspects before taking a decision.

31. Mr.Shanthi Bhushan, learned senior counsel appearing for the State of Tamil Nadu contended that the mother tongue of a child is to be understood for the present issue/purpose as the language which a child is most familiar with. He further submitted that it need not be the mother's tongue or father's tongue. Learned counsel also mentioned that in families, where both mother and father go for work mostly the children are left in the pre-nursery schools. It is common knowledge that in such schools children who come from different sections of communities, speak different languages and in the school they are taught only in English and the children speak only in English. The counsel himself gave one illustration namely suppose a tamilian (man) marries a Telugu or Kannada or Hindi speaking woman and after a child is born, obtains divorce and goes back to her State leaving the child with the husband, it cannot be said that Telugu or Kannada or Hindi respectively has to be the child's mother-tongue. This Court put a pointed question to the learned senior counsel appearing for the State that in that event is it not that only the parents will be the best

persons to say which language a child <u>is most familiar with?</u> The learned senior counsel gave the reply that generally it is so. But, however, Mr. Shanthi Bhushan, learned senior counsel appearing for the State would add that there are some parents, who in their anxiety, compel their children to study in English medium, on a wrong notion that the children who study the subjects in English medium alone will have a bright future, even though those children are not most familiar with that language and are not able to cope up. Again learned senior counsel added by saying that in cases, where the parents so compel their children, the school authorities can find it out in no time. This prompted this Court to put another question, viz., when children are brought to the schools for admission in Ist Standard, many of them out of fear and shyness do not open their mouth and that being so, how can the school authorities find out. Learned senior counsel contended by stating that it could be found out in due course, but however, he did not elaborate. Obviously, the State has not examined the matter in depth. Even if that is true, the State has to find out the proper and reasonable remedial measures. The above discussion would show that there has been a clear departure in the stand of the Government. The committee as well as the Government considered the entire issue on the basis that the tonque of the mother is the mother tongue of the child.

தோல்வியடைந்ததில்லை. பொதுமக்களும் இதுவரை அது தொடர்பான பாடத்திட்டத்தை விமர்சனம் செய்யவில்லை எல்லாவற்றிற்கும் முன்மாதிரியாக விளங்குகின்றன. சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரித்து பள்ளிக்கல்வி இயக்குனரகத்தில் இணைக்கப்பட்டது. முதல் தொடர்ந்து இன்றுவரை சர்வதேச அரங்கில் மெட்ரிக் பள்ளிகள் முன்மாதிரியாக செயல்பட்டு வருகின்றது.

பொதுவாக முன்காலத்தில் நல்ல கல்விக்கு நமது இளைஞர்கள் வெளிநாடு செல்லவேண்டிய நிர்பந்தம் இருந்தது. நல்ல சம்பளம் பெறுவதற்கு வெளிநாடு செல்ல வேண்டிய நிர்பந்தம் இருந்தது. அதோடு நல்ல படைப்பாளிகளுக்கு உரிய கல்வியை காண்பதற்கு வெளிநாடுகளை நம்பி படையெடுத்த காலம் மாறிப்போய் விட்டது.

நிலைமை தலைகீழாக வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக தமிழகத்தில் கல்விக்காக படையெடுக்கும் நிலை இன்று மாறிவிட்டது. நமது தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகள் மூலமே தொழில் கல்வியல் புரட்சி நடைபெற்று அதன் மூலமாய் தமிழகம் மற்ற மாநிலங்களை விட தலை நிமிர்ந்து நிற்கிற வேளையில், இம்மிகப்பெரிய முன்னேற்றம் பெரும்பங்கு வகிப்பது மெட்ரிக் பள்ளிகள் என்பது அனைவரும் அறிவர்.

தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டுள்ள நம் தமிழகத்தில் இன்னும் புதிதாக 36 மேலை நாட்டு நிறுவனங்கள் வர இருக்கின்றன. இதுவரை பத்தாயிரத்துக்கும் (10,000) அதிகமான வெளிநாட்டினர் நம் தமிழகத்தில் வந்து இங்குள்ள நிறுவனங்களில் பொறுப்புகளில் சேர்ந்து இங்கேயே தங்கள் வீடுகளைக் கட்டி அதில் வாழ்ந்து வருகின்றனர்.

## VI மெட்ரிக் பள்ளிகள் சார்பாக இன்றைய சூழலில் பரிசீலிக்க பட_வேண்டிய_பொதுவான கருத்துரு 27.02.2007 சமர்பிக்கப்பட்டது

10 ஆண்டுகள் தொடர்ந்து ஒரு பள்ளிக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்கியிருந்தால் அப்பள்ளிக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கவேண்டமென்ற விதி உள்ளது. இதை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும். அங்கீகாரம் நிரந்தரம் பெற்றுள்ள பள்ளிகள் நடைமுறையில் உள்ளபடி கட்டடி உறுதிச் சான்றிதழ், கட்டிட உரிமம், தீயணைப்பு மற்றும் சுகாதார சான்றிதழ் பெற்று தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டும்.

உரிய தீயணைப்பு துறை அதிகாரியிடமிருந்து முதுன்முதலில் ஆய்வு செய்து உரிய வகுப்பு எடுத்து, உரிய தீயணைப்பு சாதனங்கள் உள்ளதா என ஆண்வுசெய்தபின்னே தடையில்லா சான்று வழங்குகின்றனர். ISI பெற்ற நிறுவனங்களிடமிருந்து தீயணைப்பு சாதனங்களை மறு நிரப்பு (Refill) செய்து சான்றிதழ் பெற்றிருந்தால் போதும். மீண்டும் புதியதாக தீயணைப்பு துறைக்குச் சென்று சான்றிதழ் பெறுவதை தவிர்க்கலாம். இந்த மறுநிரப்பு ஆவணங்களை சரிபார்க்கும் பெறுப்பை மெட்ரிக் கல்வி ஆய்வாளர் அவர்கள் கவனிக்க அறிவுரை வழங்கலாம்.

ஆய்வுக்கூட வசதி மாணவர்கள் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப தேவையான அளவு செய்யப்படல் வேண்டும். மேல்நிலைப்பள்ளிக்கு இயற்பியல் (Physics) வேதியியல் (Chemistry) உயிரியல் (Biology) மற்றும் கணினி (Computer) ஆகியவற்றிற்கு தனித்தனியாக ஆய்வுக்கூட வசதி செய்யப்பட வேண்டும். மெட்ரிக் பள்ளிகளுக்க (10ஆம் வகுப்பு வரை) இயற்பியல் மற்றும் வேதியியல் (Physical Science) ஆய்வுக்கூடமும், உயிரியல் (Biology) ஆய்வுக்கூடம் தனித்தனியாக தேவையில்லை.

கல்லூரிகளின் தரத்தை செம்மையாக்க பல்கலைக் கழகங்கள் அரசு கல்லூரிகளுக்கும் தனியார் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி (Autonomous) வழங்கி வருகிறது. அக்கல்லூரிகள் தங்களுக்குரிய பாடத்திட்டங்களை தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் வந்தபோது அவை முதலில் சென்னை பல்கலைக்கழகத்திற்குப் பிறகு அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டிருந்தன.

பின் அவை தனித்தன்மை பெற்ற Deemd University என்ற நிலைக்கு எட்டி தற்பொழுது University என்ற நிலைக்கு மாறியுள்ளது. கல்லூரி கல்வித் தரத்தில் காலத்திற்கேற்ப போட்டியிடும் உலகில் மாற்றங்கள் கொண்டு வந்திருக்கின்றன. மெட்ரிக் பள்ளிகள் இத்தகைய சர்வதேச கல்விக்கு ஈடு கொடுக்கும் வகையில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும்.

## VII ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு வேண்டும்

அண்மையில் குழந்தைகளுக்கு பாடம் நடத்தும் ஆசிரியர்கள் பெரும் தொல்லைகளுக்குள்ளாகின்றனர். மாணவர்களின் குறும்புத் தனம் மற்றும் சொந்த விருப்பு வெறுப்பு காரணங்களால் மாணவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். அதற்கு முக்கிய காரணம் ஆசிரியர்கள் என்று கைது செய்து சிறையில் அடைத்துவிடுகின்றனர். இதனால் ஆசிரியர் சமுதாயம் தங்கள் பணியை செய்ய மிகவும் அச்சப்படுகின்றனர். எனவே முதலில் துறைவாரியான (Departmental Enquiry) விசாரணைக்கு பிறகு காவல் துறையினரை அனுமதிக்கும் குறிப்புரை ஒன்றை சேர்க்கலாம்.

## VIII விளையாட்டு மைதானங்கள்

மாநகராட்சி, நகராட்சி, தவுண் பஞ்சாயத்து, பஞ்சாயத்து விளையாட்டு மைதானங்களில் சுயசார்பு பள்ளி (Self Supporting School) குழந்தைகளை இலவசமாக விளையாட அனுமதித்தல் வேண்டும்.

இப்படிக்கு,

டி. கிறிஸ்துதாஸ்
சமச்சீர் கல்வி கமிட்டி உறுப்பினர்
மற்றும்
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு நர்சரி பிரைமரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்
நம்பர். 64, டி.பி. கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

ANNEXURE-I

every year from the State of Tamil Nadu. We are afraid, as rightly pointed out by the learned counsel, no one had bestowed their attention (committee or the State) to consider all these important and relevant aspects before taking a decision.

31. Mr.Shanthi Bhushan, learned senior counsel appearing for the State of Tamil Nadu contended that the mother tongue of a child is to be understood for the present issue/purpose as the language which a child is most familiar with. He further submitted that it need not be the mother's tongue or father's tongue. Learned counsel also mentioned that in families, where both mother and father go for work mostly the children are left in the pre-nursery schools. It is common knowledge that in such schools children who come from different sections of communities, speak different languages and in the school they are taught only in English and the children speak only in English. The counsel himself gave one illustration namely suppose a tamilian (man) marries a Telugu or Kannada or Hindi speaking woman and after a child is born, obtains divorce and goes back to her State leaving the child with the husband, it cannot be said that Telugu or Kannada or Hindi respectively has to be the child's mother-tongue. This Court put a pointed question to the learned senior counsel appearing for the State that in that event is it not that only the parents will be the best

persons to say which language a child <u>is most familiar with?</u> The learned senior counsel gave the reply that generally it is so. But, however, Mr. Shanthi Bhushan, learned senior counsel appearing for the State would add that there are some parents, who in their anxiety, compel their children to study in English medium, on a wrong notion that the children who study the subjects in English medium alone will have a bright future, even though those children are not most familiar with that language and are not able to cope up. Again learned senior counsel added by saying that in cases, where the parents so compel their children, the school authorities can find it out in no time. This prompted this Court to put another question, viz., when children are brought to the schools for admission in Ist Standard, many of them out of fear and shyness do not open their mouth and that being so, how can the school authorities find out. Learned senior counsel contended by stating that it could be found out in due course, but however, he did not elaborate. Obviously, the State has not examined the matter in depth. Even if that is true, the State has to find out the proper and reasonable remedial measures. The above discussion would show that there has been a clear departure in the stand of the Government. The committee as well as the Government considered the entire issue on the basis that the tongue of the mother is the mother tongue of the child.

(School Education C2 Department), dated 19-11-1999, it will enure to the benefit of all nursery and primary schools for many reasons though not all and even assuming that G.O.Ms.No.6 (School Education C2 Department), dated 13-1-1999 is still in force.

97. In the result, we hereby quash the impugned Government Order, viz., G.O.Ms.No. 324 (School Education C2 Department), dated 19-11-1999 <u>for each of the following reasons:</u>

1. The impugned G.O. is irrational as while passing the said G.O. the Government failed to take into consideration the relevant factors and took into consideration irrelevant factors. Apart from this, the G.O. is vague;

2. The impugned G.O. is arbitrary and thus violative of Article 14 of the Constitution of India in that, the State while allowing the students, whose mother tongue is not English to study the subjects in Standards I to V in English medium in Anglo Indian and C.B.S.E., Schools, has called upon the students in the Matriculation Schools to study the subjects only in their mother tongue (ie) tongue of the mother.

3. Petitioners/Managements were not given an opportunity of hearing before passing the G.O. This, the Government should have done on the principle of legitimate expectation.

4. The impugned G.O. was passed by virtue of the powers conferred under Article 162 of the Constitution of India. According to Article 26(3) of the Universal Declaration of Human Rights (Convention on the rights of the students), the parents have a prior right to choose the kind of education that shall be given to their children and that has the force of law by virtue of the Government of India's accepting the said Convention on 11th December, 1992. An order passed under Article 162 of the Constitution of India can not have the force of law. In the absence of any local law contratry to the said Article viz., Article 26(3) of the said Convention, it alone prevails.

5. The right to education is a fundamental right, which includes the right to choose the medium of instruction as well and it can be exercised by the parents on behalf of their children. The impugned G.O. infringes such fundamental right.

6. The impugned G.O. infringes the rights of the minorities conferred under Article 30(1) of the Constitution of India as the conditions imposed in the said G.O. amount to restrictions of their choice of selecting the medium of instructions.

The common Judgment of the learned single Judge of this Court dated 7-6-1999 made in W.P.Nos.5313,5748,6066,6590 and 7191 of 1999 is hereby set aside.

All the Writ Petitions and the Writ Appeals are allowed.

However, there will be no order as to costs.

All the connected miscellaneous petitions are closed.

ANNEXURE-II

Page no: 7

# MODEL CLASS ROOM




PLAN OF CLASS ROOM

NOTE –

CLASS ROOM SIZE 17' 0"x 20', 0"

CARPET AREA 340 Sq. Ft

TABLE + BENCH 3'0"x 6' 0"

TOTAL NOS = 50 NOS

PER STUDENT = 6.8 Sq. Ft

9.2 SHEET NO: 1 / SCALE (1:100)

# PERFORMANCE ANALYSIS OF MATRICULATION SCHOOLS (ANNEXURE

| S.No. | SCHOOL | YEAR | APPEARED | PASSED | PERCENTAGE |
|---|---|---|---|---|---|
| 1. | Matriculation | 2001 | 56219 | 52025 | 92.54 |
| 2 | Matriculation | 2002 | 61854 | 58529 | 94.64 |
| 3 | Matriculation | 2003 | 66608 | 60011 | 90.10 |
| 4 | Matriculation | 2004 | 70770 | 63706 | 90.02 |
| 5 | Matriculation | 2005 | 69502 | 63706 | 91.66 |
| 6. | Matriculation | 2006 | 71482 | 65329 | 91.39 |

# HIGHER SECONDARY EXAMINATION

## PERFORMANCE ANALYSIS ON SCHOOL CATEGORY 2001 – 2006

## ANNEXURE - III

| SCHOOL CATEGORY | No. of Candidates = 1000 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
| Matriculation Schools | 16,261 | 22,496 | 20,119 | 22,214 | 22.896 | 17 708 |

# GOVERNMENT HIGHER SECONDARY EXAMINATION (ANNEXURE – III)

## PERFORMANCE OF MATRICULATION STUDENTS

| S.No. | SCHOOL CATEGORY | NO. OF CENTUM IN MAIN SUBJECTS | | | | | | | COMP. SCI. | COMM. | ACC |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | YEAR | PHY. | CHE | BIOLOGY | MATHS | BOT | ZOO | | | |
| 1. | Matriculation | 2001 | 214 | 172 | 19 | 759 | 2 | 2 | 3 | 183 | 52 |
| 2. | Matriculation | 2002 | 602 | 941 | 147 | 1632 | - | 3 | 41 | 351 | 133 |
| 3. | Matriculation | 2003 | 696 | 747 | 107 | 342 | 4 | 1 | 2 | 340 | 89 |
| 4. | Matriculation | 2004 | 366 | 355 | 319 | 834 | 10 | 1 | 161 | 63 | 347 |
| 5. | Matriculation | 2005 | 603 | 875 | 604 | 1337 | 10 | 10 | 5 | 718 | 89 |
| 6. | Matriculation | 2006 | 8 | 68 | 41 | 486 | 8 | - | 17 | 277 | 183 |

# STATISTICS OF THE SCHOOLS AND STUDENTS ANNEXURE -

| S.No. | TYPE OF SCHOOLS | No. OF SCHOOLS | No. OF STUDENTS (LAKSH) |
|---|---|---|---|
| 1. | Primary Schools<br>(Nursery Level) | 9682 | 18.02 |
| 2. | Matriculation Schools<br>(High School Level) | 2053 | 6 17 |
| 3. | Matriculation Hr. Sec. Schools.<br>(High Secondary Level) | 1421 | 11.26 |
| | **Total** | 13156 | 35.45 |

# CURRICULUM AND SYLLABUS

## REVISED FOR MATRICULATION SCHOOLS

A High Level Committee was Constituted by the government for the revision of Matriculation curriculum and syllabus under the chairmanship of Dr. A. Gnanam, Former Chairman, NAAC and Former Vice Chairman, Central University, Pondicherry.

In the G.O. (2D) No. 6, School Education dated: 23.2.2004 and the Board of Matriculation Education, dated: 15.10.2004, the Government ordered the introduction of the revised syllabus in Matriculation Schools in a phased manner from the year 2005 – 2006 as noted below:-

| | |
|---|---|
| 2005 – 2006 : | L.K.G, U.K.G., Standards I, II, VI and IX |
| 2006 – 2007 : | Standards III, IV, VII and X |
| 2007 – 2008 : | Standards V and VIII |

For language "Tamil" the Matriculation Schools for all standards I to X be instructed to follow the State Board of Secondary Education Syllabus for Tamil.

For Environmental Education, the Syllabus and Text books being prepared by State Board of Secondary education based on the National Council for Educational Research and Training Syllabus as approved by the Hon'ble Supreme Court of India be followed in Matriculation Schools.

As regards the preparation of text books for Matriculation Schools the existing system may continue Matriculation Schools are instructed to introduce Computer Science as a subject from stds III to X and also to conduct School level Examination upto Std IX.

The task of the Committee is to revise and update the curricular composition of the entire Matriculation system as a response to the emerging Paradigms in the wake of unprecedented impact of science and technology in the Socio – economic rubric of the Society.

The Curriculum is an academic strategy and plans to achieve the intended outcomes among the learners through a number of well structured academic courses and studies that became a part of the overall curriculum. The challenge was to work at both the level of reformulating the curriculum and restructuring of the contents of the chosen courses so that the matriculation scheme of education is effective, competitive and world – class.

The overall objectives of the School education that spans uniformly for 14 long years, between ¾+ and 16/17+ years practically the world over, is to provide the basic

foundation of literacy in all its dimensions and to equip the students with a strong base of general knowledge without attempting to specialize along with other academic skills, including numeracy, transferable skills and competencies. While empowering the younger generation with these knowledge citizens with the appropriate moral, social, national and global values are an additional objective.

The curriculum is prepared for Pre-primary, Primary, Middle, Secondary and Higher secondary stages each one built over the earlier stage providing seamless transition, keeping the changing content and the unique characteristics of the Matriculation system, The curricular strategy has been worked for each stage in consultation with various stakeholders, through interactive meetings, web based communications and curriculum experts from both Head and Regional offices of NCERT. For the first time the curriculum is included for the Pre-Primary stage and for Higher secondary stage in the Matriculation scheme to smooth seamless transitions between stages.

The major thrust in the revised Curriculums is on "Communication Skill" which is the basis for all learning and the development of their skill is now brought to the real of all teachers and all classes and not restricted to language classes alone.

There has been a conscious effort to reduce the learning load of the students, without lowering the competitiveness of the system as the parents' attitude and aspiration need to the respected.

For an effective curricular transaction, a set of strategies is recommended for adoption to help the matriculation system to achieve the mission of providing effective and competitive education. They include Teacher orientation programmes to the new elements in the curriculum.

- General training programmes to all teachers other than language to trainin the communication skill alone with their expertise in their specialized subject areas.
- Introduction of a common examination system at the end of each stage of matriculation school system to ensure quality and comparability of standards among schools in the state.
- Establishing a State Level quality Assurance to replace the existing inspectorate type of quality control without any extra financial commitment.
- Preparation of Teacher's Handbook / Manual

(b) Composition of the students population below – average, average, poverty line middle class and upper class strength depending upon the position of the parents

© Prove ability of the Teachers, Communication Skill, Orientation Courses attended, interest in extra-curricular and co-curricular activities and updation of the recent technological and teaching methodologies.

(d) Best practices of School

